EISSN 2456-5571

An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 9 | SPECIAL ISSUE 3 | FEBRUARY 2025 | E-ISSN: 2456-5571

## திருநெல்வேலி தெக்ஷிண மாற நாடார் சங்கம் கல்லூரி

தெ. கள்ளிகுளம்

தேசியதர மதிப்பீட்டில் “A” அங்கீகாரம் பெற்றது

தமிழ்த்துறை (S.F) & அகத்தர மதிப்பீட்டுக் குழுவும் வெளியிடும்

பன்னாட்டுக் கருத்தரங்கச் சிறப்பிதழ்

# இலக்கியமும் இயற்கையும்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் அ. சவரிராயம்மாள் | முனைவர் சு. பால்மோகன்



# BODHI

# International Journal of Research in Humanities, Arts and Science


**An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal**

Vol.9 Special Issue 3 February 2025 E-ISSN: 2456-5571

CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

**BIJRHAS**

The **BODHI International Journal of Research in Humanities, Arts and Science** (E-ISSN: 2456-5571) is online, peer reviewed, Refereed and Quarterly Journal, which is powered & published by **Center for Resource, Research and Publication Services, (CRRPS)** India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the fields of humanities, arts and science.

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Research should be at the core and must be instrumental in generating a major interface with the academic world. It must provide a new theoretical frame work that enable reassessment and refinement of current practices and thinking. This may result in a fundamental discovery and an extension of the knowledge acquired. Research is meant to establish or confirm facts, reaffirm the results of previous works, solve new or existing problems, support theorems; or develop new theorems. It empowers the faculty and students for an in-depth approach in research. It has the potential to enhance the consultancy capabilities of the researcher. In short, conceptually and thematically an active attempt to provide these types of common platforms on educational reformations through research has become the main objective of this Journal.

**Dr. S. Balakrishnan**
Publisher and Managing Editor
bodhijournal@gmail.com
www.bodhijournals.com
09944212131

**BODHI INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE**

*An Online, peer reviewed, refereed and quarterly Journal with Impact Factor*

www.bodhijournals.com, bodhijournal@gmail.com, 7540077733

4/27, Achampathu, Madurai-625019, Tamil Nadu, India

## SPECIAL ISSUE EDITORIAL BOARD

**முனைவர் அ. சவரிராயம்மாள்**

(ஒருங்கிணைப்பாளர்)

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)*

*திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

**முனைவர் சு. பால்மோகன்**

*(ஒருங்கிணைப்பாளர்)*

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)*

*திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE
(Re-Accredited by NAAC at an 'A' Grade with a CGPA of 3.09 (II Cycle )
T. KALLIKULAM - 627 113, Tamil Nadu.
E-mail : tdmnsoffice@gmail.com
Office : 04637 - 220250

V.P. RAMANATHAN NADAR M.Com., M.B.A.,
Secretary & Correspondent

Dr. (Major) D. RAJAN M.Sc., M.Phil., Ph.D.,
Principal

Ref.No. : ..........................

Date : 11/01/2025

## வாழ்த்துரை

நாம் நம் வாழ்நாள் முழுவதையும் இயற்கையோடு இயைந்து தான் வாழ்கிறோம். ஆனால் அதன் அழகைப் பற்றி உணர்வது அரிது தான். நம் முன்னோர்கள் இயற்கையைத் தெய்வமாக போற்றினார்கள். ஆனால், இன்று நம்மவர்கள் இயற்கையைச் சீரழித்து வருகின்றனர். அதனால் பருவ நிலை மாறுபாடுகள் ஏற்பட்டு மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்றது. இதனால் நாம் இயற்கையைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வது அவசியமாகிறது. இன்றைய இளைஞர்களிடம் இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக "இலக்கியமும் இயற்கையும்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இயற்கை ஒரு சமுதாயத்தை உருவாக்கும் காரணிகளுள் முதன்மையானது. இயற்கை நம் பாரத நாட்டின் பிரதான வளம் என்பதை எல்லா விதமான மக்களும் உணரும் விதம் தொகுக்கப்பட்டுள்ள 'இலக்கியமும் இயற்கையும்' என்ற இந்த ஆய்வு நூல் சிறக்க வாழ்த்துகிறேன்.

SECRETARY
Tirunelveli Dakshina Mara Nadar Sangam College
T.KALLIKULAM.

**TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE**

(Re-Accredited by **NAAC** at an **'A'** Grade with a CGPA of **3.09** (II Cycle )

(Affiliated to Manonmaniam Sundaranar University)

**T. KALLIKULAM - 627 113**

Tirunelveli District, Tamil Nadu.

**Dr.** (Major) **D. RAJAN, M.Sc., M.Phil., Ph.D.,**
Principal

Off : 04637-220250
E-mail : tdmnscollege@rediffmail.com
tdmnscollege@gmail.com


Date : ........................

## வாழ்த்துரை

இலக்கியமும் இயற்கையும் என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் மக்களிடையே இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. எண்ணங்களைச் சிந்திக்க வைக்கும் புதிய அறிவுகளை எடுத்துக் கொடுக்கின்றது. படிக்கத் தொடங்கியவுடன் ஒரு புதிய உலகிற்கு நம்மை இட்டுச் செல்கின்றது. இலக்கியமும் இயற்கையும் மனிதன் உள்ளத்தின் ஆழங்களை வெளிப்படுத்துகின்றன. தொகுக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் இயற்கையின் அழகும் அதன் வெற்றிடங்களிலும் இலக்கியத்தின் நுணுக்கங்களை நாம் அறிந்ததைத் தாண்டி ஒரு புதிய பார்வையை நமக்கு அளிக்கின்றன. மனிதனின் உள்ளார்ந்த சிந்தனைகளை எழுப்ப ஒரு மாற்றியமைந்த உலகைக் காண்பிக்கின்றன. சூரிய மண்டலத்தில் புதிய ஒரு ஒளியைக் காட்டி ஒவ்வொருவரின் உள்ளத்திற்கும் எளிதாக அணுகும் அழகான ஒரு பயணத்தைத் தருகிறதென நம்புகிறேன். இயற்கையின் புதுமையை இலக்கியத்தின் வளமையை நாடும் அனைவருக்கும் இந்த ஆய்வுக் கட்டுரைகள் ஓர் அர்ப்பணிப்பு மக்களிடையே இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும். ஆய்வுக்கட்டுரைகள் சிறக்க வாழ்த்துக்கள்.

11.1.2025

PRINCIPAL
Tirunelveli Dakshina Mara Nadar Sangam College
T. KALLIKULAM.

# வாழ்த்துரை

‘‘வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு…..’’ அந்தத் தமிழ்நாட்டின் கல்விக் கடவுளாகப் போற்றப்படுபவர் நமது முன்னாள் தமிழக முதல்வராகிய காமராஜர் ஐயா அவர்கள். அவரின் கல்விக் கொள்கைகளை நினைவு கூறும் வகையாக தென் தமிழகத்தின் சிறப்புமிக்க திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள திருநெல்வேலி தெக்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு) மற்றும் அகத்தர மதிப்பீட்டுக் குழுவும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கிற்கு வாழ்த்துச் செய்தி தருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். ‘இலக்கியமும் இயற்கையும்’ என்ற பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு 14.02.2025 இன்று நடைபெறுகின்ற இந்த கருத்தரங்கு வரலாற்றில் பதிக்கப்பட வேண்டிய ஒன்றாக திகழ்கின்றது. ஏனெனில் இக்கருத்தரங்கினை நடத்துவதற்கு இவா்கள் கடந்து வந்த பாதை மிகக் கடினமானது. அந்த வகையில் இவா்களின் வரலாற்றில் 2018ஆம் ஆண்டு ‘‘கோயிற்கலை பன்முகப் பார்வை’’ மற்றும் 2019 ஆம் ஆண்டு ‘‘தென் தமிழகத்தின் அகழாய்வுப் பணிகள்’’ என்ற இரு பயிற்சிப் பட்டறைகளையும் மேலும் 2020இல் ‘‘புறநானூற்றுப் பொருண்மை’’ மற்றும் ‘‘சங்க இலக்கியமே அறிவியலாக’’ என்ற இரண்டு நாள் இணைய வழி கருத்தரங்கினையும் நடத்தியுள்ளது. தமிழ்த்துறை சுயநிதிப் பிரிவானது கிராமியக்கலை இலக்கிய மன்றத்துடன் இணைந்து 2022இல் ‘‘நாட்டுப்புற இயலில் பண்பாட்டுப் பதிவுகள்’’ என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தியுள்ளனர். அக்கருத்தரங்கில் நானும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு திறவுசொல் பேச்சாளராக கலந்ததையிட்டு மனம் பேருவகை கொள்கின்றது. அதனைத் தொடர்ந்து ‘‘வனைதலும் முடைதலும்’’ என்ற தலைப்பில் மாநில அளவிலான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றுள்ளது. 2023ஆம் ஆண்டு ‘‘இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்’’ என்ற தலைப்பில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. 2024ஆம் ஆண்டு கிருஷ்ணாபுரம், ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் ஒருநாள் தொல்லியல் பயிற்சிப் பட்டறையையும் நடத்தியது. இவ்வாறு ஏராளமான கருத்தரங்குகளையும், பயிற்சிப் பட்டறைகளையும் சிறந்த கருப்பொருள்களைக் கொண்டு நடத்திய தன் பயனாகத் தற்போது 2025 ஆம் கல்வியாண்டில் ‘‘இலக்கியமும் இயற்கையும்’’ என்ற பொருன்மையில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்படவுள்ளது. இந்த கருத்தரங்கிலும் நான் திறவுச்சொல் பேச்சாளராகக் கலந்து கொள்வதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கருத்தரங்க குழுவாகக் கூட்டு முயற்சியில் பன்னாட்டுக் கருத்தரங்கை திறம்பட நடத்திக் கொண்டிருக்கின்ற கொடைவள்ளல்களாகிய திருநெல்வேலி தெட்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் தலைவர் திரு.ஆர்.கே.காளிதாசன் நாடார் அவர்களுக்கும், செயலாளர் மற்றும் தாளாளர் திரு.வி.பி.ராமநாதன் நாடார் அவர்களுக்கும், பொருளாளர் திரு.ஏ.செல்வராஜ் நாடார் அவர்களுக்கும், கல்விக்குழு உறுப்பினர் திரு.எஸ்.கே.டி.பி.காமராஜ் நாடார் அவர்களுக்கும், முதல்வர் முனைவர் மேஜர் டி.ராஜன் அவர்களுக்கும், அகத்தர மதிப்பீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஏ.புஷ்பராஜ் அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிபிரிவு)திருமதி சு.கிரிஜா அவர்களுக்கும் இந்த வேளையில் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களாகச் செயற்பட்டு ஆய்வுக்கட்டுரைகளைப் பெற்று அவற்றினைச் சிறந்த முறையில் சரிபார்த்து சிறப்பாகக் கருத்தரங்கை ஒழுங்கு செய்திருக்கின்ற தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்களான முனைவர் அ. சவரிராயம்மாள் மற்றும் அன்பு நண்பர் முனைவர் சு. பால் மோகன் அவர்களுக்கும் கருத்தரங்க

ஆலோசனைக் குழுவைச் சார்ந்த முனைவர் செ. சோனாகிருஷ்டி, முனைவர் சு. முருகவேல் மற்றும் திருமதி.டே.கிரேஸ் புஸ்பா ஜுலியட் ஆகியோருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வளவு அறிஞர்களின் கூட்டுமுயற்சியால் உருவான இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் மிகவும் சிறப்பாக நடைபெறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இவ்வாறே தொடர்ந்தும் திருநெல்வேலி தெட்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் கல்விப்பணி தொடர வேண்டும் அதன் மூலம் தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு) மென்மேலும் ஏராளமான பன்னாட்டுக் கருத்தரங்குகளை நடத்தி தமிழுக்கும் ஆய்வுத்தளத்திற்கும் தங்கள் சேவை தொடர வேண்டும்.

வாழ்க தமிழ், வளர்க தமிழ்ப்பணி.

**முனைவர் சி. சூரியகுமார்.**
முதுநிலை விரிவுரையாளர்,
இசைத்துறை (வாய்ப்பாட்டு),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**Dr.A. PUSHPARAJ Ph.D.,**
Associate Professor & IQAC Coordinator,
Department of Zoology,
T.D.M.N.S.College,
T. Kallikulam - 627 113, Tamil Nadu.

TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE T. KALLIKULAM
TO FOSTER THE DIVINE IN THE HUMAN

Phone : 04637-220250 (Off)
Mobile : +91-9994097004
E-mail : tdmnspushparaj@gmail.com

# வாழ்த்துரை

"தமிழுக்கு அமுதென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத்
தமிழெங்கள் உயிருக்கு நேர்"

என்று உயிரினும் மேலான தமிழ்த்தாயை வணங்கி இலக்கியமும் இயற்கையும் என்றத் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரைகள் தலைமுறை தலைமுறையாக நிலைத்து நிற்கும் தகுதியுடையன. இவ்வுலகில் உள்ள இயற்கை வளங்களை பாதுகாக்கும் நோக்கிலும் சமூகத்தில் உள்ள அனைவரும் **'இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம்'** என்பதை உணரும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இயற்கை வளங்களின் சரியான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். அதற்கு இலக்கியமும் இயற்கையும் என்றத் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் தலைமுறைகளுக்கான பொக்கிஷம்.

முனைவர் அ. புஷ்பராஜ்
(அகத்தர மதிப்பீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர்)

Residence: No: 7, Jeyam Cottage, Karunya Nagar, Vallioor - 627 117, Tirunelveli (Dt.), Tamil Nadu, India.

# வாழ்த்துரை

பயிற்றிப் பல கல்வி தந்து -இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்றான் முண்டாசுக்கவி பாரதி. கல்வி மூலமே சமூகம் உயர்வு காண முடியும் என்பதை அழுத்தமாக பதிவு செய்தவர்.அவர்.அந்த வகையில் எமது திருநெல்வேலி தெ'ண மாற நாடார்சங்கமானது ஏழை மாணவர்களின் கல்வி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இந்த கல்விகூடத்தை களிகையில் ஆரம்பித்தனர். சான்றோர் பெருமக்களால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி. இன்று 53 ஆண்டுகளைக் கடந்து பொன்விழா கண்டு பொலிவுபெற்று திகழ்ந்து வருகின்றது. 2014 - 2015 ஆம் கல்வி ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இளங்கலைத் தமிழ் பாடப்பிரிவானது நிர்வாகம், முதல்வர், அலுவலர்கள், மாணவர்களின் தனித்தன்மையாலும் திறமையாலும் பல்கலைக்கழகமே திரும்பிப் பார்க்கும் வகையில் பல சாதனைகளையும் பாராட்டுகளையும் பெற்று வருகிறது. வருடம் தோறும் பன்னாட்டுக் கருத்தரங்குகள் தேசிய, மாநிலக் கருத்தரங்குகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் கலை இலக்கிய நிகழ்வுகளையும், போட்டிகளையும் நிகழ்த்தி அசத்தி வருகின்றது. பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் வருடம் தோறும் எமது துறை மாணவர்கள் இடம் பெற்று அலங்கரித்து வருகின்றனர். இதுவரை இரண்டு தங்கப்பதக்கங்களும் இருபத்து இரண்டிற்கும் மேற்பட்ட சிறந்த இடங்களையும் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்று கல்லூரிக்கும் துறைக்கும் பெருமை சேர்த்துள்ளனர். கலை இலக்கியப் போட்டிகளிலும் சாதனைகளை பெற்று செம்மாந்து நிற்கிறது, எமது தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் அ.சவரிராயம்மாள் முனைவர் சு. பால் மோகன் ஆகியோர் இலக்கியமும் இயற்கையும் என்ற பொருண்மையில் தலைப்பினை தேர்ந்தெடுத்து கருத்தரங்கினை நடத்த எண்ணம் உதயமாகியது வியப்பிற்குரியது. பாராட்டிற்குரியது. இயற்கை பற்றிய சிந்தனைகள் கட்டுரைகளை எழுதியுள்ளவர்களின் எண்ணங்களில் விதைத்ததே இக்கருத்தரங்கிற்கு கிடைத்த வெற்றியாகும். சங்க இலக்கியங்கள் முதல் இக்காலம் வரை உள்ள இலக்கியங்கள் வரை கருத்துக்களை ஆய்ந்து எடுத்து கட்டுரைகளை எழுதியுள்ளனர். அனைத்துக் கட்டுரைகளும் அருமை. கதம்ப மாலையாகத் தொடுக்கப்பட்டுள்ள இக்கட்டுரைப் பூக்கள் தமிழ்த்தாயினை அலங்கரிக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை

நன்றி!

**திருமதி சு.கிரிஜா**
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப் பிரிவு)
திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்

# தொகுப்புரை

தமிழகத்தின் தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் தாலுகாவில் உள்ள தெ.கள்ளிகுளத்தில், திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரியானது 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்று பொன்விழாவை கடந்து பவள விழாவை நோக்கி பொலிவுடன் நடைபயில்கிறது. 54 ஆண்டுகள் கிராமப்புற மாணவர்களின் மேம்பாடு ஒன்றினையே முதன்மை நோக்கமாகக் கொண்டு கல்விப்பணியை செய்து தேசிய தரமதிப்பீட்டில் ‘A’ பெற்று திகழ்கின்ற எமது கல்லூரியில் 2014-2015 ஆம் கல்வியாண்டில் இளங்கலைத்தமிழ் பாடப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

2018 ஆம் ஆண்டு ‘கோயிற்கலை- பன்முகப்பார்வை’ மற்றும் 2019 ஆம் ஆண்டு ‘தென்தமிழகத்தின் அகழாய்வுப் பணிகள்’ என்ற பயிற்சி பட்டறையும் மேலும் 2020 இல் ‘புறநானூற்றுப் பொருண்மை’, ‘சங்க இலக்கியமே அறிவியலாக’ என்ற இரண்டு நாள் இணையவழி பன்னாட்டுக் கருத்தரங்கத்தினையும் நடத்தியுள்ளது. மேலும் 2022 ஆம் ஆண்டு மே மாதம் ‘நாட்டுப்புற இயலில் பண்பாட்டுப் பதிவுகள்’ என்ற தலைப்பிலும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ‘இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்’ என்ற தலைப்பிலும் இரண்டு பன்னாட்டுக் கருத்தரங்கினை போதி பன்னாட்டு ஆய்விதழுடன் இணைந்து வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

‘இலக்கியமும் இயற்கையும்’ என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற இருக்கிறது. பண்டையத் தமிழ்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர் என்பதை உலக மக்கள் அறியும் நோக்கில் இக்கருத்தரங்கம் நடத்தப்பட உள்ளது. தமிழ்த்துறையோடு கல்லூரி அகத்தர மதிப்பீட்டுக்குழுவும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்ச் சான்றோர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் என பல்வேறு தரப்பினரையும் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

‘இலக்கியமும் இயற்கையும்’ என்ற பொருண்மையில் அமைந்த இந்த பன்னாட்டுக் கருத்தரங்கில் சங்க இலக்கியத்தில் இயற்கை, தொல்காப்பியத்தில் இயற்கை, காப்பியங்களில் இயற்கை, சிற்றிலக்கியங்களில் இயற்கை, பக்தி இலக்கியங்களில் இயற்கை, நீதி இலக்கியங்களில் இயற்கை, நாட்டுப்புற இலக்கியத்தில் இயற்கை, இக்கால இலக்கியங்களில் இயற்கை இது போன்ற பல பொருண்மைகளில் ஆய்வுகளை அமைத்துக் கொள்ள நினைத்தோம். அதனடிப்படையில் தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் ஆய்வை மேற்கொண்டு தரமான 100 ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரைகளை நான்கு தொகுதியாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தமிழ் இலக்கியக் களங்களான இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புற இலக்கியம், நீதி இலக்கியம், நவீன இலக்கியம் என பல்துறையில் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்ட எங்களுக்கு இது மனநிறைவைத் தந்தது. எங்களின் இந்த முயற்சிக்கு ஆதரவு தந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எண் திசையிலிருந்தும் கட்டுரைகளை அனுப்பித் தந்தனர். தமிழ் ஆய்வுலகில் நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிக்கு தொய்வு இல்லை என்று நம்பிக்கையூட்டிய அத்தனை நல் நெஞ்சங்களையும் மனதார வாழ்த்துகிறோம் வணங்குகின்றோம்.

‘இலக்கியமும் இயற்கையும்’ என்ற பன்னாட்டுக் கருத்தரங்கு நடத்துவதற்கு அனுமதித் தந்த கல்லூரி மற்றும் சங்கத் தலைவர் திரு.R.K.காளிதாசன் நாடார், சங்க செயலாளர் திரு.T.ராஜகுமார் நாடார், பொருளாளர் திரு.A.செல்வராஜ் நாடார் மற்றும் கல்லூரி செயலர் & தாளாளர் திரு.V.P.இராமநாதன் நாடார், கல்லூரிக்குழு உறுப்பினர் S.K.T.B.காமராஜ் நாடார், கல்லூரி முதல்வர் முனைவர் மேஜர்.D.ராஜன் ஆகியோருக்கு நன்றியை உரித்தாக்குகிறோம். மேலும் இக்கருத்தரங்கு நடத்த தீர்மானித்தது முதல் விழா நடைபெறுவதற்கு உரிய நாள் வரை பல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கூறிய கல்லூரியின் அகத்தர மதிப்பீட்டுக்குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் A.புஷ்பராஜ் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

இந்த பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறப்புற அமைய உதவிப் புரிந்த தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு) திருமதி.சு.கிரிஜா மற்றும் எமது துறை பேராசிரியர்களுக்கும் நூலாக வடிவமைத்த போதி பன்னாட்டு ஆய்விதழ் நிறுவனர் முனைவர் S.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகின்றோம். மேலும் கருத்தரங்கிற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கிய கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள், அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

மகிழ்வுடன்

**முனைவர் அ.சவரிராயம்மாள்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

**முனைவர் சு.பால்மோகன்**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

# BODHI
## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE
An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

**Vol. 9** **Special Issue 3** **February 2025** **E-ISSN: 2456-5571**


**Aim & Objectives**

Academic Excellence in research is continued promoting in

research support for young Scholars. Humanities, Arts and Science of research is motivating all aspects of encounters across disciplines and research fields in an multidisciplinary views, by assembling research groups and consequently projects, supporting publications with this inclination and organizing programmes. Internationalization of research work is the unit seeks to develop its scholarly profile in research through quality of publications. And visibility of research is creating sustainable platforms for research and publication, such as series of Books; motivating dissemination of research results for people and society.

**Disclaimer**

Contributors are advised to be strict in academic ethics with respect to acknowledgment of the original ideas borrowed from others. The Publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts. All submissions should be original and must be accompanied by a declaration stating your research paper as an original work and has not been published anywhere else. It will be the sole responsibility of the authors for such lapses, if any on legal bindings and ethical code of publication.

**Communication**

Papers should be mailed to bodhijournal@gmail.com

**CONTENTS**


| S. No. | Title | Page No. |
|---|---|---|
| 1 | தொல்காப்பியத்தில் இயற்கை எனும் சொல்லாட்சித் திறம்<br>**முனைவர் தி. ஹேமலதா** | 1 |
| 2 | தமிழ் இலக்கியங்களில் தாவர வகைப்பாடு<br>**முனைவர் அ. சவரிராயம்மாள்** | 8 |
| 3 | சங்க இலக்கியத்தில் வேளாண்மை<br>**முனைவர் ஜா. பீற்றர் ராஜ்** | 13 |
| 4 | முகிலை ராசபாண்டியனின் தேரிமணல் நாவலின் கடற்கரைப் புனைவுகள்<br>**முனைவர் செ. செல்வகுமார் & டே. கிரேஸ் புஸ்பா ஜீலியட்** | 19 |
| 5 | ஊரோடிப் பறவைகள் எஸ் ராவின் சஞ்சாரம் நாவலை முன்வைத்த ஆய்வு<br>**து. வேணி & பா. சாயாதேவி** | 23 |
| 6 | சங்க இலக்கியங்களில் இயற்கை வேளாண்மை<br>**முனைவர் கு. இளங்குமார்** | 26 |
| 7 | சிலப்பதிகாரப் பாத்திரப் படைப்பும் இயற்கையும்<br>**முனைவர் இரா. இராமகுமார்** | 29 |
| 8 | ‘ஆறுகாட்டுத் துறை’ மக்களும் கடலும்<br>**கு. திவ்யா** | 33 |
| 9 | மு. தங்கராசன் கவிதைகளில் இயற்கை<br>**நா. இளமாறன் & முனைவர். பா. சிங்கார வேலன்** | 38 |
| 10 | அகநானூற்றில் இயற்கையோடியைந்த வாழ்வியல்<br>**முனைவர் இரா. செல்வி & இ. செந்தாமரை** | 43 |
| 11 | பஞ்சகாவிய நிகண்டில் தாவர வர்க்கம்<br>**முனைவர் வே. நித்திய கல்யாணி** | 47 |
| 12 | திருக்குறளில் நிலம்<br>**முனைவர் செ. சோனா கிறிஸ்டி** | 51 |
| 13 | மறுவாசிப்புப் புதினங்களில் மகாபாரதத்தில் இயற்கை சித்தரிப்பு<br>**முனைவர் இர. விமல்ராஜ் & து. சுமதி** | 54 |

| | | |
|---|---|---|
| 14 | நற்றிணையில் குறிஞ்சித் திணை சார்ந்த இயற்கைக் கூறுகள்<br>**முனைவர் சி. சுப்ரமணியம் & மா. கோமதி** | 59 |
| 15 | சங்கத் தமிழரின் சொல்லாடலும் இயற்கையும்<br>**முனைவர் த. ஜெஸி** | 64 |
| 16 | விழியோரக் கவிதைகளில் இயற்கை<br>**முனைவர் யா. லலிதா** | 68 |
| 17 | சங்க இலக்கியங்களில் காணப்படும் தாவரவியல் சிந்தனைகள்<br>**சு. கோபாலகிருஷ்ணன்** | 73 |
| 18 | சிலப்பதிகாரத்தில் இயற்கை<br>**முனைவர் தா. லதா** | 78 |
| 19 | சங்க இலக்கியத்தில் இயற்கையின் மேன்மை<br>**முனைவர் செ. சுகவனேஸ்வரன்** | 83 |
| 20 | பரிபாடலில் இயற்கை<br>**முனைவர் கா. சந்தானலெட்சுமி** | 88 |
| 21 | சு.வேணுகோபால் சிறுகதைகளில் இயற்கை செழிப்பும் அழிப்பும்<br>**மா. ரோஹித்குமார்** | 93 |
| 22 | அழகின் சிரிப்பில் இயற்கை<br>**முனைவர் ஜே. மார்க்ரெட்** | 98 |
| 23 | ஐங்குறுநூற்றில் இயற்கை நிகழ்வுகள்<br>**கோ. செ. ஷீலாபெனடிட்** | 101 |
| 24 | சங்க இலக்கியத்தில் மரங்கள்<br>**முனைவர் சு. முருகவேல்** | 104 |
| 25 | வேள்பாரிநாவலில் இயற்கை<br>**முனைவர் செ. சாந்தி** | 109 |

# தொல்காப்பியத்தில் இயற்கை எனும் சொல்லாட்சித் திறம்

**முனைவர் தி. ஹேமலதா**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்*

## தொல்காப்பியம்

தொல்காப்பியம் தமிழ் நூல்களில் கிடைப்பனவற்றுள் முதல் நூல். இதன் காலம் கி.மு ஆறாம் நூற்றாண்டு. தொல்காப்பியம் தமிழ் இலக்கண முதல்நூல். எழுத்து, சொல், பொருள் என்று மூன்று அதிகாரங்களையும் அதிகாரத்திற்கு ஒன்பது இயல் என இருபத்தேழு இயல்களையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. மொழி இலக்கணம் உரைக்கும் நூலாக மட்டுமன்றி தமிழின வாழ்க்கையை உரைக்கும் நூலாகவும் விளங்குகிறது. இந்நூல் நிலத்தின் தன்மை, தட்பவெப்ப இயல், விலங்கு, பறவை, மரம், செடி, கொடி, பயிர் என்னும் சுற்றுச்சூழலை விளக்கும் நூலாகவும் விளங்குகிறது. மேலும் பொருளியல், சமூகவியல், உளவியல், மெய்யியல், தொழிலியல் என அறிவுத் துறைகள் அனைத்திற்கும் மூலமாகவும் திகழ்கிறது. இக்கட்டுரை தொல்காப்பித்தினுள் இடம் பெற்றுள்ள இயற்கை என்ற சொல்லாட்சியின் தன்மையை விளக்குகிறது.

## இயற்கை என்பது

இயற்கை என்பது மனிதனும் பிற உயிரினங்களும் வாழ்வதற்கு அடிப்படையாக உள்ள சூழல் ஆகும். இது ஐம்பூதங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ இவற்றையும் அடிப்படையாகக் கொண்டது. இயற்கை என்பது உயிருள்ள பொருட்களையும் உயிரல்லாத பொருட்களையும் அடிப்படையாகக் கொண்டது என்று கூறலாம். இதற்கு விளக்கமளிக்கும் துரை.சீனிச்சாமி, “**மனிதனை சூழ்ந்திருக்கின்ற அவன் புலன் உணர்வுகளுக்குரிய வெளிப்புற உலகமாக அமைந்திருக்கின்ற Physical Universe என்று ஆங்கிலத்தில் விளக்கப்படுகின்ற உலக மேனியே இயற்கை. இவ்வியற்கை மனிதன் தோன்று முன்பே இருந்து வருவது. இறைவனால் படைக்கப்பட்ட தென்றும் இறைவனால் படைக்கப்படாமல் இயல்பான பொருட்தன்மை கொண்டு இருந்து வருவதென்றும் நம்பிக்கைகளுக்கு ஏற்பக் கருதப்படுவது”**[1] என்று கூறுகிறார்.

## இயற்கை சொற்பொருள்

இயற்கை என்ற சொல்லுக்கு,

> **கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பு**[2]

மனிதனின் கைகளால் செய்யப்படாது இயல்பாகவே இவ்வுலகில் காணப்படும் யாவையையும் இயற்கை என்று வரையறை செய்கிறது திருமுருகாற்றுப்படை.

> **இயல்பான தன்மை, வழக்கம், இலக்கணம், நிலைமை, கொள்கை**[3]

என்று பொருள்விளக்கம் தருகிறது தமிழ் - தமிழ் அகரமுதலி

**ஏது, குணம், சுபாவம், தகுதி, தட்டு, முட்டு, திராணி, பாக்கியம், முறைமை, வரிக்கம் என்று பொருள் விளக்கம் தருகிறது.**[4] நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி.

---

1. துரை.சீனிச்சாமி, இலக்கியத்தில் இயற்கை, அருசா வெளியீடு, மதுரை, முதற்பதிப்பு – அக்டோபர் 1977.
2. திருமுருகாற்றுப்படை – 17, கழகவெளியீடு
2. திருமுருகாற்றுப்படை – 17, கழகவெளியீடு முதற்பதிப்பு, மார்ச் - 1977.
3. தமிழ் - தமிழ் அகரமுதலி – தொகுப்பாசிரியர், மு.சண்முகம்பிள்ளை, ப-114 தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், முதற்பதிப்பு – சூன் 1985.
4. நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, பக்கம் 223. சாரதா பதிப்பகம், முதற்பதிப்பு, மார்ச் 2003.

**மெய்யின் இயற்கை புள்ளியொடு**
**நிலையல் (தொல்-எழுத்து–15)**

மெய்யெழுத்துக்களின் இயல்பு புள்ளியொடு பொருந்துவதாகும்.

**எகர ஒகரத்து இயற்கையும் அற்றே**
**(தொல்-எழுத்து-16)**

எகர ஒகரக் குறில் எழுத்துக்களும் இயல்பாகப் புள்ளி பெற்றே வரும்.

**பெயரும் தொழிலும் பிரிந்தொருங் இசைப்ப**
------ ----------- ---------- -------------
**சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது**
**இடைநின்று இயலும் சாரியை இயற்கை**
**உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒடுங்கும் (தொல்-எழுத்து-132)**

வேற்றுமை உருபு தொக்கு வரும் இடத்தும் சாரியை இடம் பெறும்.

இச்சாரியை பெரும்பாலும் சொற்களின் இடையில் இயல்பாகவே வரும்.

**கசதப முதலிய மொழிமேல் தோன்றும்**
**மெல்லெழுத்து இயற்கை சொல்லிய முறையான் (தொல்-எழுத்து-143)**

கசதப முதலிய எழுத்துக்களை முதலாக உடைய வருமொழிகளின் முன் மெல்லெழுத்துக்களை ஈறாக உடைய சொற்கள் புணரும் இயல்பைக் கூறின் வேற்றுமை, அல்வழி ஆகிய இரண்டிடத்திலும் இயல்பாக புணரும்.

அவற்றுள்,

**மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார்**
**சொல்லிய தொடர் மொழி இறுதி யான**
**(தொல்-எழுத்து-145)**

மேற்கூறியபடி மெல்லெழுத்தின் இயல்பானது இயல்பாதலே அன்றி உறழ்ந்தும் முடிதலும் உண்டு.

**வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்து அல்வழி**
**மேற்கூ றியற்கை ஆவியி னான.**
**(தொல்-எழுத்து-148)**

வேற்றுமைப் புணர்ச்சிக் கண்ணும் வல்லெழுத்து அல்லாதவிடத்து, மேற்கூறியபடி இயல்பாக முடியும்.

**மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்**
**வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்**
**இயற்கை மருங்கின் இயற்கை தோன்றலும்**
**உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலும்**
**சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்**
**சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும்**
**சாரியை இயற்கை உறழத் தோன்றலும்**
------- ------------- --------------- ------------
**அஃறிணை விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையலும்**
**மெய்ப்பிறிது ஆகிடத்து இயற்கை ஆதலும் (தொல்-எழுத்து-157)**

இயல்பாக வேண்டிய இடத்து மிகுதலும் சாரியை இயல்பாக அமைய வேண்டிய இடத்தில் வல்லெழுத்து உறழ்ந்து அமைதல் மெய் வேறாகும் இடத்தில் இயல்பாதல்

**உகரமொடு புணரும் புள்ளி இறுதி**
**யகரமும் உயிரும் வருவழி இயற்கை**
**(தொல்-எழுத்து-163)**

உகரத்தை இறுதியாகப் பெற்ற சொற்களில் உள்ள இகரமும் யகரமும் உயிர் எழுத்து வரும் போது இயல்பாகும்.

**புரைவது அன்றால் சாரியை இயற்கை**
**(தொல்-எழுத்து-165)**

அரை என்று வரும் பாதி அளவை குறிக்கும் சொல் ஏ' சாரியினைப் பெறாது இயல்பாகவே வரும்.

**குறைஎன் கிளவி முன்வரு காலை**
**நிறையத் தோன்றும் வேற்றுமை இயற்கை**
**(தொல்-எழுத்து-166)**

இகர ஐகார இறுதியை உடைய அளவுப் பெயர்கள் குறை என்று சொல்லோடு பொருந்தும் போது வேற்றுமை புணர்ச்சிக்குரிய ஒற்று மிகுதலை இயல்பாகவே பெறும்.

**நும்மென் இறுதி இயற்கை ஆகும்.**
**(தொல்-எழுத்து-187)**

நும் என்னும் சொல்லின் இறுதி, சாரியை பெறாது இயல்பாகும்.

**அன்எ்ன் சாரியை ஏழன் இறுதி**
**முன்னர் தோன்றும் இயற்கைத்து என்ப**
**(தொல்-எழுத்து-197)**

மேற்குறித்த குற்றியலுகர ஈறுகள் இரட்டிக்கும் போது சாரியை பெறாது இயல்பாகும்.

அவைதாம்,

**இயற்கைய வாகும் செயற்கைய வென்ப**
**(தொல்-எழுத்து-197)**

மேற்குறித்த குற்றியலுகர ஈறுகள் இரட்டிக்கும் போது சாரியை பெறாது இயல்பாகும்.

**ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்**
**சாரியைக் கிளவி இயற்கையு மாகும்**
**ஆயின் வயின் இறுதி மெய்யெடும்**
**கெடுமே (தொல்-எழுத்து-201)**

ஏழாம் வேற்றுமை உருபிற்கு முன் திசைப்பெயர் வரும்போது சாரியை வருதலும் உண்டு. சாரியை இன்றி இயல்பாதலும் உண்டு.

**வல்லெழுத்து இயற்கை உறழத்**
**தோன்றும் (தொல்-எழுத்து-215)**

மேற்கூறிய பல சில என்னும் இரண்டிற்கும் அகர ஈற்றுப் பொதுவிதியில் கூறிய வல்லெழுத்து மிகுதியது இயல்பு மிகுதலும் மிகாமையும் ஆகிய ஊறழ்ந்து வருதலும் தோன்றும்.

**சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே**
**(தொல்-எழுத்து-238)**

இகர ஈற்றுச் சுட்டின் இயல்பு இயல்புகணம் வரும் வழியும் உயர்க்கணம் வரும் வழியும் அகர ஈற்றுச் சுட்டிற்குச் சொல்லப்பட்ட தன்மைத்தாம்.

**நீஎன் பெயரும் இடக்கர்ப் பெயரும்**
**நீ என மரீஇய இடம்வரை கிளவியும்**
**ஆவயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்**
**(தொல்-எழுத்து-250)**

'நீ' என்னும் பெயரும் 'பீ' என்னும் இடக்கச் சொல்லும் 'மீ' என்னும் இடம் குறித்து சொல்லும் இயல்பாய் முடியும்.

**நீஎன் ஒருபெயர் உருபியல் நிலையும்**
**ஆவயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்**
**(தொல்-எழுத்து-253)**

நீ என்னும் முன்னிலை ஒருமைப்பெயர் உருபு புணருமாறே புணரும் அவ்விடத்து வல்லெழுத்து மிகாமல் இயல்பாகும்.

---------- ------------- ------------ --------------------

**அம்மின் மகரம் செருவயின் கெடுமே**
**தம்மொற்று மிகூஉம் வல்லெழுத்து**
**இயற்கை (தொல்-எழுத்து-260)**

வம்முச்சாரியையது ஈற்றின் மகரம் செரு என்னும் சொல்லிடத்துக் கெட்டு முடிவும். வல்லெழுத்தாகிய இயல்பை உடைய தமது ஒற்று மிக்கு முடியும்.

**சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்**
**ஒற்றிடை மிகாஅ வல்லெழுத்து இயற்கை**
**(தொல்-எழுத்து-263)**

சுட்டெழுத்துச் சொற்களின் இறுதி, உருபியலில் கூறிய வண்ணம் அன்சாரியை பெறவும் உகரம் கெடவும் அமையும். இவ்விடத்து வல்லெழுத்து மிகாது இயல்பாய் அமையும்.

**தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்**
**மேற்கூறிய றியற்கை வல்லெழுத்து**
**(தொல்-எழுத்து-273)**

தேற்றப்பொருளிலும் சிறப்புப் பொருளிலும் வருக எகர ஒகரங்கள் மேற்குறித்தவாறு வல்லெழுத்தல் மிகாமல் இயல்பாக முடியும்.

**மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்**
**கூறிய வல்லெழுத்து இயற்கை ஆகும்**
**(தொல்-எழுத்து-275)**

எதிர்மறை எச்சம், வினா, எண் ஆகியவற்றில் எகார ஈறு வல்லெழுத்துப் பெறாது இயல்பாக வரும்.

**மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்**
**கூறிய வல்லெழுத்துப் இயற்கை ஆகும்.**
**(தொல்-எழுத்து-290)**

எதிர்மறை எச்சம், வினா, ஐயம் ஆகிய பொருள்களில் வரும் ஓகாரம் வல்லெழுத்துப் பெறாமல் இயல்பாக முடியும்.

**இல்லோடு கிளப்பின் இயற்கை ஆகும்**
**(தொல்-எழுத்து-293)**

இல் என்பதன் முன் ஓகாரம் வரும்போது இயல்பாக முடியும்.

**உருபியல் நிலையும் மொழியுமா ருளவே**
**ஆவயின் வல்லெழுத்து இயற்கை ஆகும்.**
**(தொல்-எழுத்து-294)**

ஓகார ஈற்றுச் சொற்களில் உருபியலில் கூறப்பட்டது போல ஒன் சாரியை பெறுவனவும் உள்ளன. அவ்விடத்து வல்லெழுத்து மிகாது இயல்பாகும்.

**வெரிந்என் இறுதி முழுதும் கெடுவழி**
**வருவிடன் உடைத்தே மெல்லெழுத்து இயற்கை (தொல்-எழுத்து-300)**

வெரிந் என்னும் சொல்லின் இறுதி முழுவதும் கெட அங்கு மெல்லெழுத்து மிகுவதே இயல்பாகும்.

**ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை (தொல்-எழுத்து-303)**

ஆண் பெண் என்னும் பெயர்கள் உயர்திணை அஃறினை இரண்டனுக்கும் உரியன. இவை அஃறிணைப் பெயர் முடிந்தது போலவே வேற்றுமையிலும் இயல்பாய் முடியும்.

**வேற்றுமை அல்வழி எண்என் உணவுப்பெயர்**
**வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்தே (தொல்-எழுத்து-308)**

அல்வழிப் புணர்ச்சியில் எள் என்னும் உணவுப் பெயர் வேற்றுமை புணர்ச்சியின் இயல்பை ஒத்து டகாரமாகும்.

**அல்லது கிளப்பின் இயற்கை ஆகும் (தொல்-எழுத்து-321)**

அல்வழிப் புணர்ச்சியில் அவை இயல்பாகும்.

**அல்லதன் மருங்கின் சொல்லுங் காலை**
**---------- ------------- ------------- ----------------**
**அப்பான் மொழிவயின் இயற்கை ஆகும் (தொல்-எழுத்து-326)**

நும் என்னும் பெயர், அல்வழிப் புணர்ச்சியில் உகரம் கெட நகரமெய்யின் மீது ஈ வர இகரம் இடையிலே பொருந்த, இறுதியில் ரகரமெய் நிற்றல் வேண்டும். வருமொழியிடத்து அம்மொழி தான் இவ்வாறு திரியாது இயல்பாதல் வேண்டும்.

**சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்**
**அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப (தொல்-எழுத்து-334)**

சுட்டெழுத்தை முதலாக உடைய வயின், எகரத்தை முதலாக உடையவயின் ஆகிய இரண்டும் றகர இறுதியை பெறுவது இயல்பாகும்.

**குயின்என் கிளவி இயற்கை யாகும் (தொல்-எழுத்து-335)**

குயின் என்னும் சொல் இயல்பாக முடியும்

**ஏனை எகினே அகரம் வருமே**
**வல்லெழுத்து இயற்கை மிகுதல் வேண்டும் (தொல்-எழுத்து-337)**

பறவைப் பெயராக வரும் எகின் நிலைமொழிக் கண் அகரத்துடன் வந்து முடியும். அவ்விடத்து வருமொழி வல்லெழுத்து இயல்பு மிக்கு மிடிதல் வேண்டும்.

**சிறப்பொடு வருவழி இயற்கை ஆகும் (தொல்-எழுத்து-349)**

இயற்பெயர்கள் சிறப்பைக் காட்டும் அடைமொழியோடு வரும்போது இயல்பாகும்.

**தாய்என் கிளவி இயற்கை ஆகும் (தொல்-எழுத்து-358)**

தாய் என்னும் சொல் வல்லெழுத்து மிகாது இயல்பாகும்.

**இல்லென் கிளவி இன்மை செப்பின்**
**வல்லெழுத்து மிகுதலும் ஐ இடை வருதலும்**
**இயற்கை ஆதலும் ஆகாரம் வருதலும் (தொல்-எழுத்து-372)**

இல்லை என்னும் பொருளில் வரும் இல் என்னும் சொல் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகுதல் ஐ இடை வருதல், இயல்பாதல், ஆகாரம் தோன்றல் ஆகியவை நிகழ அமையும்.

**வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்**
**தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே (தொல்-எழுத்து-409)**

வல்லெழுத்துத் தொடர்மொழி வல்லெழுத்து வரும் இடத்தில் முன்பு கூறிய இயல்பின் படியாக நிற்றலும் உரித்து.

**அல்லது கிளப்பின் எல்லா மொழியும்**
**சொல்லிய பண்பின் இயற்கை யாகும் (தொல்-எழுத்து-425)**

அல்வழியைச் சொல்லும் ஆறு ஈற்று குற்றியலுகரமும் மேற்ச்சொல்லிய பண்பினை உடையதாய் இயல்பாய் முடியும்.

**சுட்டுச்சினை நீடிய மென்தொடர் மொழியும்**

**யாவினா முதலிய மென்தொடர் மொழியும்**
**ஆயியல் திரியா வல்லெழுத்து இயற்கை**
**(தொல்-எழுத்து-427)**

சுட்டெழுத்து நீண்ட மென்தொடர் மொழியும் யா என்னும் வினாவை முதலிலே உடைய மென்தொடர்க் குற்றியலுகரமும் வல்லெழுத்து பெறுதல் இயல்பாகும்.

**யாவினா மொழியே இயல்பும் ஆகும்**
**(தொல்-எழுத்து-428)**

யா என்னும் வினா மொழி இயல்பாகவும் முடியும்.

**ஒன்று முதல் ஒன்பான் இறுதி முன்னர்**
---------- -------------- ------------ --------------
**வந்து இடை நிலையும் இயற்கைத் தென்ப**
**கூறிய இயற்கை குற்றிய லுகரம்**
**(தொல்-எழுத்து-437)**

எண்ணுப் பெயர்களில் ஒன்று முதல் ஒன்பது வரை பத்து என்பதனோடு புணரும் போது பத்தின் இடைநின்ற தகர ஒற்று கெடும். அவ்விடத்தில் ஆய்த எழுத்து நிலைபெறும் இயல்பை உடையதென்று சொல்லுவர் புலவர். ஆறு என்னும் ஈறு அல்லாத இடத்து குற்றியலுகரம் மேற்கூறிய இயற்கையாய் மெய்யோடும் கெட்டு முடியும்.

**மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும்**
**தோன்றிய வகரத்து இயற்கை ஆகும்**
**(தொல்-எழுத்து-456)**

மூன்று நான்கு ஐந்து எண்ணும் பெயர்கள் உயிர் முதல் மொழியோடு புணரும் கால் மேற்கூறிய வகரத்தோடு புணர்தலே இயல்பாகும்.

------ -------------- --------------- --------------

**நூறென் கிளவி நகார மெய்கெட**
**ஊஆ ஆகும் இயற்கைத் தென்ப**
------------- -------------- ---------
**(தொல்-எழுத்து-463)**

வருமொழியில் உள்ள நூறு என்பதில் நகரமெய் கெடும். ஊ என்பது ஆ ஆதலே இயற்கை ஆகும்.

**நூறா யிரமுன் வரூஉம் காலை**
**நூறென் இயற்கை முதனிலைக் கிளவி**
**(தொல்-எழுத்து-471)**

நூறாயிரம் என்னும் அடையடுத்த மொழி ஒன்று என்னும் எண் நூறு என்னும் சொல் அவ்வொன்றனொடு முடிந்த விகார இயற்கை எய்தி முடியும்.

**அளவும் நிறையும் ஆயியல் திரியா**
**குற்றிய லுகரமும் வல்லெழுத்து இயற்கை**
**(தொல்-எழுத்து-474)**

அளவைப்பெயர்கள் முன் நூறு என்னும் சொல் வரும்போது குற்றியலுகரம் நிற்றலும், வல்லெழுத்தின் இயல்பாக மிகுதலும் முன் கூறிய இலக்கண விதிப்படியே நிகழும்.

**முதநிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்**
**ஞநமத் தோன்றினும் யவ வந்து இயையினும்**
**முதநிலை இயற்கை என்மனார் புலவர்**
**(தொல்-எழுத்து-478)**

முதனிலை எண்ணாகிய ஒன்று என்பதன் முன் வல்லெழுத்து வரினும், ஞ,ந,ம,வ முதன்மொழிகள் வரினும், ய,வ முதன்மொழிகள் வரினும் ஒன்று முதல் ஒன்பது என்னும் எண்ணு பெயர்கள் புணர்ந்த இயல்பின் படியே புணரும்.

**கிளந்த அல்ல செய்யுளள் திரிநவும்**
------------ -------------- -------------- ------------
**விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின் (தொல்-எழுத்து-483)**

மேலே இவ்வதிகாரத்துக்கு கூறப்பட்டவை அல்லாது, செய்யுளில் திரித்து வரக்கூடியனவும் வழக்கில் மரூஉ முடிவாக வருவனவும் இங்குக் கூறிய இலக்கணத்தில் வேறுபடத் தோன்றினால் செய்யுள் வழக்கு பேச்சு வழக்கு என்னும் இரண்டிற்கும் பொருந்த ஆராய்ந்து அவற்றிற்குரிய இலக்கணத்தை மேற்கொள்க என்பார் புலவர்.

**இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் (தொல்-சொல்-19)**

இயற்கைப் பொருளைக் கூறுங்கால் காரணமும் ஆக்கமும் கூறாமல் இத்தன்மைத்து எனக் கூறுக.

**சுட்டுமுதலாகிய காரணக் கிளவியும்**
**சுட்டுப்பெயர் இயற்கையின் செறியத்**
**தோன்றும் (தொல்-சொல்-40)**

சுட்டெழுத்தை முதலாக உடைய காரணச் சொல்லைச் சொல்லும் பொழுது அது சுட்டுப் பெயரின் இயல்பை ஒத்தே அமையும்.

**சிறப்பினாகிய பெயர் நிலைக் கிளவிக்கு**
**இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்**
**(தொல்-சொல்-41)**

சிறப்புப்பெயர், இயற்பெயர் இரண்டும் ஒரு பயனிலை பெறும்போது அங்கும் இயற்பெயரினை முன்னதாக கூறார். முதலில் சிறப்புப் பெயரும் பின்னர் இயற்பெயரும் வரும்.

**கூறிய முறையின் உருபுநிலை திரியாது**
**ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப**
**(தொல்-சொல்-69)**

வேற்றுமை உருபுகள் பெயரின் இறுதியில் நின்று பயனிலையை கொள்ளும் இயல்பினை உடையன

**இயற்கையின் உடைமையின்**
**முறைமையின் கிழமையின்**
**செயற்கையின் முதுமையின் வினையின்**
**என்றா (தொல்-சொல்-80)**

இயற்கை முதலாகப் பதினேழு பொருண்மைகளை உடையது ஆறாம் வேற்றுமை உருபு.

**விளியெனப் படுப கொள்ளும் பெயரோடு**
**தெளியத் தோன்றும் இயற்கையை என்ப**
**(தொல்-சொல்-118)**

விளி எனப்படுவது தன்னை ஏற்கும் பெயரோடு தோன்றும் இயல்பை உடையது.

**ஆளபெடை மிகூஉம் இகர இறுபெயர்**
**இயற்கைய ஆகும் செயற்கைய என்ப**
**(தொல்-சொல்-125)**

ஆளபெடையாக வரும் இகரத்தை இறுதியாக உடைய பெயரில் இ, ஈ, ஆகாது இயல்பாய் நிற்கும்.

**அண்மைச் சொல்லே இயற்கை யாகும்**
**(தொல்-சொல்-127)**

நான்கு ஈற்று அண்மைச் சொல்லும் இயல்பாய் விளி ஏற்கும்.

**ஆனென் இறுதி இயற்கை ஆகும்**
**(தொல்-சொல்-132)**

ஆன் என்பதன் னகர, ஈறு இயல்பாய் விளியேற்கும்.

**அயல்நெடி தாயின் இயற்கை யாகும்**
**(தொல்-சொல்-145)**

ஈற்றயல் எழுத்து நெடிலாயின் இயல்பாய் விளியேற்கும்.

**முன்னிலை காலமும் தோன்றும் இயற்கை**
**எம்முறை சொல்லும் நிகழும் காலத்து**
**மெய்ந்நிலை பொதுச்சொல் கிளத்தல்**
**வேண்டும் (தொல்-சொல்-240)**

மூன்று காலத்தில் இருக்கக்கூடிய இயல்புடைய எப்பொருளையும் நிகழும் காலத்துச் சொல்லால் கூறுதல் வேண்டும்.

**வாரக் காலத்து வினைச்சொற் கிளவி**
**இறப்பினும் நிகழ்வினும் சிறப்புறத்**
**தோன்றும் இயற்கையும் தெளிவும்**
**கிளக்கும் காலை (தொல்-சொல்-245)**

எதிர்காலத்தில் நிகழப்போகும் ஒரு செயலை அது இயல்பாதலையும் உறுதியாக நிகழ்வதையும் தெரிவிக்கும் வகையில் இறந்தகாலச் சொல்லாலும் நிகழ்காலச் செர்லாலும் புலப்படக் கூறுதல் வேண்டும்.

**அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்று**
**ஆயிரண் டாகும் இயற்கைத் தென்ப**
**(தொல்-சொல்-267)**

அந்தில் என்னும் சொல் ஆங்க, அசைநிலை என்னும் இரண்டு பொருளில் வருதல் இயல்பாகும்.

**ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை**
**ஆயிரண் டாகும் இயற்கை என்ப**
**(தொல்-சொல்-272)**

ஏ குரை என்பன இசைநிறை, அசைநிலை ஆகிய இரண்டாகவும் வருதல் இயல்பாகும்.

**வண்ணத்தின் வடிவின் அளவின்**
**சுவையினென்று**
**அன்ன பிறவும் அதற்குணம் நுதலி**
**இன்னது இதுவென வரூஉம் இயற்கை**
**(தொல்-சொல்-416)**

பண்புத்தொகை என்பது வண்ணம் வடிவவம் அளவு சுவை இவை போன்ற

பிறவும் ஆகிய பண்புகளை உணர்த்தி இப்பொருள் இத்தன்மையது எனக் கூறும் இயல்புடையதாகும்.

**நேர்ஈற்று இயற்சீர் நிரையும் நிரையும்**
**சீர் ஏற்று இறூஉம் இயற்கை என்ப**
**(தொல்-பொருள்-384)**

நேர் ஈற்று இயற்சீர் முன்வரும் வெண்பாவில் இறுதிச்சீர் நிரை நிரைபு என்னும் சீர் பெற்ற முடிதலே இயல்பாகும்.

**சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை**
**புல்லிய கிளவி எச்சம் ஆகும்**
**(தொல்-பொருள்-514)**

பாட்டில் சொல்லப்பட்டது அல்லாமல் வேறொரு குறிப்போடும் வேறொரு சொல்லோடும் முடிவு கொள்ளும் இயற்கையைப் பொருந்தியது எச்சம் ஆகும்.

## நிறைவுரை

தொல்காப்பியர் இயற்கை என்ற சொல்லை அறுபத்திநான்கு இடங்களில் பயன்படுத்தியுள்ளார். எழுத்ததிகாரத்தில் நாற்பத்தாறு முறையும் சொல்லதிகாரத்தில் பதினாறு முறையும் பொருளதிகாரத்தில் இரண்டு முறையும் இயற்கை என்ற சொல் இடம்பெற்றுள்ளது.

அச்சொல், இயல்பு, மிகுதி, இலக்கணம், வழக்கம், முறைமை ஆகிய பொருண்மைகளில் பயின்று வந்துள்ளது.

எழுத்ததிகாரத்தில் புணர்ச்சி இலக்கணம் கூறும்போது தொல்காப்பியர் இயற்கை என்ற சொல்லை அதிகம் கையாண்டுள்ளார்.

சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம், வேற்றுமையியல், வெளிமரபு, வினையியல் ஆகிய அதிகாரங்களில் இயற்கை என்றச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

பொருளதிகாரத்தில் செய்யுளியலில் இயற்க்கை என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இச்சொல் எழுவாய், வேற்றுமைத் தொகை, வேற்றுமையணி, ஆக்கப்பெயர், ஒட்டுஅடி ஆகிய இலக்கிய வகைமைகளில் இடம்பெற்றுள்ளது.

## உசாத்துணை நூல்கள்

1. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரையுடன் அழக வெளியீடு, பன்னிரண்டாவது பதிப்பு ஏப்ரல் 2004.
2. தொல்காப்பியம் மூலமும் உரையும் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருள் அதிகாரம், கு.வெ.பாலசுப்பிரமணியன் என்.சி.பி.ஹெச் வெளியீடு மூன்றாம் பதிப்பு பிப்ரவரி 2022.
3. தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம், தமிழ்மண்பதிப்பகம், சென்னை – 17, முதற்பதிப்பு – 2003.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம், தமிழ்மண்பதிப்பகம், சென்னை – 17, முதற்பதிப்பு – 2003.

# தமிழ் இலக்கியங்களில் தாவர வகைப்பாடு

**முனைவர் அ. சவரிராயம்மாள்**
*உதவிப் பேராசிரியை*
*தமிழ்த்துறை, தி.தெ.மா.நா.ச.கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

**ஆய்வுச்சுருக்கம்**
*தமிழர்களின் அறிவியல் நுணுக்கங்களைப் போன்று எதுவும் அமைந்து விடப்போவதில்லை. மனிதன் தோன்றிய காலம் முதல் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை தான் தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதற்கு சான்றாக பல்வேறு இலக்கண இலக்கியங்கள் தோன்றியுள்ளன. தமிழர்களை விட தாவரங்களை வேறு யாரும் அவ்வளவு எளிதாக பகுத்து பிரித்து கூறி விட முடியாது என்பதற்கு சான்றாக தொல்காப்பியம் முதல் சங்க இலக்கியம் வரை தாவரங்கள் குறித்த தகவல்கள் மிகுதியாக காணக்கிடைக்கின்றன. அவற்றை வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

## ஆய்வு முன்னுரை

சங்க இலக்கியங்கள் பழையனவற்றைப் பாதுகாக்கின்ற ஆவணங்களாக விளங்குகின்றன. பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்து அதன் முழுமைத் தன்மையைச் சிதைத்து விடாமல் மிக நுணுக்கமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு இந்த இலக்கியங்கள் மிகச்சரியான சான்றுகளாக விளங்குகின்றன. தமிழர்களின் இந்த நுணுக்கம், வானியல், தாவரவியல், விலங்கியல், உளவியல், மொழியியல் போன்ற பல்துறைப் புலமை இவைகளெல்லாம் பல நூற்றாண்டுகள் காடு, மலை, கடல், விலங்கு, பறவை, வானம் என்ற இயற்கையின் எல்லா நிலைகளையும் அதன் ஆழ அகலங்களில் நுழைந்து அனுபவித்து வாழ்ந்ததன் மூலம் பெற்ற பட்டறிவின் வெளிப்பாடே என்று சொல்லலாம். இயற்கையின் பிரிவுகளை வகைப்படுத்தி வெளிப்படுத்தும் விதத்தில் இக்கட்டுரை அமைகிறது.

## தமிழர்களின் அறிவியல் நுணுக்கங்கள்

தமிழிலக்கியத்தில் இருக்கக்கூடிய தாவர அறிவியல் உண்மைகள், தாவர மேலாண்மை, சுற்றுச்சூழல் அல்லது இயற்கை மீதான முழுமையான அன்பு இவைகளைப் பார்ப்பதற்கு முன்னால் தமிழர்களின் உயிர்க்கொள்கையைச் சற்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காரணம், அந்த உயிர்க்கொள்கையே மிக அற்புதமானது. மேலைநாட்டு அறிஞர் பெருமக்கள் உயிர்க்கொள்கை, தாவரம் சார்ந்த கொள்கை இவைகளைப் பதிவுசெய்தது 19ஆம் நூற்றாண்டு. ஆனால் ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாக இலக்கிய இலக்கண நூல்களின் வாயிலாகப் பல்வேறு அறிவியல் நுணுக்கங்களைத் தமிழர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

> **“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
> இரண்டறி வதுவே அவற்றோடு நாவே
> மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே
> நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே
> ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே
> ஆறறி வதுவே அவற்றோடு மனனே”
> (தொல்.மர.1526)**

என்று உயிர்களை அதன் அறிவின் தன்மைக்கேற்ப வகைப்படுத்துகிறார் தொல்காப்பியர். கரோலஸ் லின்னேயஸ் உலக உயிர்களை இரண்டு பிரிவாக பிரித்தார். ஒன்று தாவர உலகம், மற்றொன்று விலங்கு உலகம். தொல்காப்பியர் சுட்டும் ஓரறிவு உயிர் தாவர உலகம். ஏனைய நான்கு உயிர்களும் விலங்கு உலகத்தைச் சார்ந்தது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்களின் அறிவுகளை வைத்தே உயிர்களின் வகைப்பாட்டியலைத் தொல்காப்பியர் முன்வைக்கிறார். ஆறாவது

புலனாக மனத்தைச் சுட்டியே மனத்தின் ஆற்றல் பயன்படுத்தப்படுகிற உயிராக மனித விலங்கை அடையாளப்படுத்துகிறார். அதுமட்டுமின்றி மனிதனை உயர்திணை என்று பிரித்துக்காட்டி, மனிதனைத் தவிர்த்த ஏனைய உயிர்களை அல்திணை என்றார் அவர். ஹிப்போகிரேட்டஸ், அரிஸ்டாடில், தியோ.ஃ.பரஸ்டஸீம், ப்ளைனி த எல்டர், ஜான்ரே, கரோலஸ் லின்னேயஸ், அகஸ்டின் பாரமஸ்டின் கண்டோல் ஆகிய இவர்களெல்லாம் உயிரினம் தொடர்பாகவும், தாவரத்தின் வகைப்பாடுகள் தொடர்பாகவும் விதியைப் படைத்தவர்கள்.

**தாவர வகைப்பாடு**

மேலை நாட்டு அறிஞர் பெருமக்கள் உயிர் இயங்குதல் அல்லது திசுக்களின் அடிப்படையில் பிரிக்கிறார்கள். 19-ஆம் நூற்றாண்டில் வார்மிங் நீர்வாழ் தாவரங்கள், இடைனிலைத் தாவரங்கள், வறள்நிலத் தாவரங்கள் என்று மூன்றாகப் பிரித்தார். தாவர வகைப்பாடு என்பது அதன் வளரும் தன்மையை வைத்துத்தான் பிரிக்கப்படுகிறது. தாவரங்கள் வளரும் இடம், அதன் சூழல் எது என்பதை வைத்து அதன் தன்மையைப் பிரிக்கிறார்கள் அறிவியலாளர்கள். தமிழர்களின் தாவர வகைப்பாடு வளர்நிலை அடிப்படையில் இருந்தது, மேலை நாட்டு வகைப்பாடும் வளர்நிலை அடிப்படையில் இருந்தபோதும் 18-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு நுண்ணோக்கி கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாகத் தாவரங்களின் இனப்பெருக்க உறுப்பு அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டது. தமிழில் இத்தகைய செயல்முறை அறிவியல் வளர்ச்சி இல்லை.

மேனாட்டு அறிஞர்களின் பார்வையில் தாவரங்கள் தாலோபைட்டா, பிரையோபைட்டா, டெரிட்டோபைட்டா என்று மூன்று பெரும்பிரிவாகப் பார்க்கப்படுகிறது. தாலோபைட்டாவை தகட்டுத் தாவரங்கள் என்றும் பிரையோபைட்டாவை பாசத் தாவரங்கள் என்றும் டெரிட்டோபைட்டாவை குழாய்த் தாவரங்கள் என்றும் தமிழில் அழைப்பர். குழாய்த்தாவரம் என்னும் அமைப்பில் தான் பெரும்பாலான புல், மரம், செடி, கொடி ஆகிய அனைத்தும் அடங்கும். மேலும் விதைமூடிய தாவரம் விதைமூடாத தாவரம் என்றும் சுட்டுவர். விதை மூடியது ஆஞ்சியோஸ்பெர்ம் என்னும் பொதுவானது. விதை மூடாதது ஜிம்னோஸ்பெர்ம். இது குளிர் பகுதிகளில் வளரக்கூடியதாகும்.

**தொல்காப்பியரின் வகைப்பாடு**

இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்று அறிஞர்கள் கருதும் தொல்காப்பியர் ஓரறிவு உடையது என்று தாவரத்தையே சுட்டுகிறார். **“புல்லும் மரனும் ஓரறி வினவே”(தொல்.மர.1527)** என்கிறார். இந்த இடத்தில் புல் என்றும், மரம் என்றும் தாவரத்தை இரண்டாக பிரிக்கிறார். புறக்காழ் உடையது புல், அகக்காழ் உடையது மரம், காழ் என்பதை வைரம் என்று பேச்சு வழக்கில் கூறுவார்கள். இந்த வகைப்பாடு உள்ளீடு அடிப்படையிலானது. உலகில் உள்ள அனைத்துத் தாவரங்களையும் இந்த வகைப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்பது தொல்காப்பியரின் எண்ணம். புறவயிர்ப்பு உடைய புல்லின வகைத் தாவரத்திற்குரிய உறுப்புகளைக் குறிப்பதற்கென்று தனியே பெயர் வழக்குகள் உள்ளன என்பதை தொல்காப்பியர்,

> **“தோடே மடலே ஓலை என்றா**
> **ஏடே இதழே பாளை என்றா**
> **ஈர்க்கே குலையென நேர்ந்தன பிறவும்**
> **புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்” (தொல்.மர.1586)**

என்று குறிப்பிடுகிறார். புல்லினத்தின் இலை தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்னும் பெயர்களால் வழங்கப்படுகிறது. அவற்றின் பூவுறுப்பு பாளை எனப்படுகிறது. பழம் கொத்தாகத் தோன்றுவதால் அவை குலை என்று பெயரிட்டுக் கூறப்படுகிறது. நீண்ட இலையின் மைய நரம்புகள் ஈர்க்கு என்று அழைக்கப்படுகிறது.

அகவயிர்ப்பு உடைய மரவகைத் தாவரத்திற்கு உரிய உறுப்புகளைக் குறிப்பதற்கு தொல்காப்பியர்,

**"இலையே முறியே தளிரே தோடே**
**சினையே குழையே பூவே அரும்பே**
**நனையே உள்ளுறுத்த அனையவை எல்லாம்**
**மரனோடு வரூஉம் கிளவி"**

**(தொல்.மர.1587)** என்கிறார். புல்லினம் மரஇனம் என்ற இரண்டிற்கும் பொதுவான உறுப்புகளைச் சுட்டிக் காட்டுவதற்கு,

**"காயே பழமே தோலே செதிளே**
**வீழோடு என்றாங்கு அவையும் அன்ன"**

**(தொல்.மர.1588)**

என்கிறார். தென்னையும் கமுகு என்னும் பாக்கும் புல்வகையைச் சார்ந்தது இதன் காய் தேங்காய் கமுகங்காய் எனப்படுகிறது. வேம்பு மருதம் இவ்விரண்டும் மரவகையைச் சார்ந்தது. இதன் காய் வேப்பங்காய் மருதங்காய் எனப்படுகிறது. பழத்திற்கும் இதையே கூறுவர். பனை புல்வகையைச் சார்ந்தது வேம்பு மரவகையைச் சார்ந்தது. இவ்விரண்டிற்கும் பனந்தோல், வேப்பந்தோல், பனஞ்செதில் வேப்பஞ்செதில் என்பன பொதுவாக உள்ளன. புல் மரம் என்ற பகுப்பு அதன் உள்ளீடு தொடர்பானது.

## வளரியல்பு நோக்கில் தாவரங்கள்

தமிழில் வளரியல்பு நோக்கில் தாவரம் வகைப்படுத்தப்படுகிறது. அவை மரத்தாவரம், கொடித்தாவரம், நிலத்தாவரம், நீர்த்தாவரம் என்பனவாகும். இந்த வகைப்பாடு பூவை முன்னிலைப்படுத்தியே பிரித்துப் பார்க்கப்படுகிறது. இந்த அடிப்படையில் பூவை மரத்தில் பூக்கக்கூடிய கோட்டுப்பூ, கொடிப்பூ, செடி அல்லது புல்லினங்களில் பூக்கக்கூடிய நிலப்பூ, நீர்ப்பூ என்று நான்காக வகைப்படுத்தப்படுகிறது.

**"கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப் பூவொடு**
**புதல்பூ என்று இவை நால்வகைப் பூவே"**

**(பிங். நிகண்.2781)**

என்கிறது பிங்கல நிகண்டு. இந்த நான்குவகை அடிப்படையில் பல்வேறு சான்றுகளைத் தாங்கி நிற்கிறது சங்க இலக்கியங்கள். கோங்க மரத்தின் பூந்தாதினைச் சொல்லும்பொழுது அகநானூற்றில் **"சினைப் பூங் கோங்கின் நுண் தாது" (அகம்.25)** என்று இடம்பெற்றிருக்கிறது. சினை என்பது மரத்தாவரத்தின் உறுப்புப்பெயர். வண்டுகள் மாலை நேரத்தில் கூம்பும் இயல்புடைய நீர்ப்பூக்களில் இருந்து விலகி மரத்தின் பூக்களைப் போய்ச்சேர்ந்தன என்னும் செய்தியை அகநானூற்றின் ஒரு பாடல் வழியே பெறமுடிகிறது.

அதாவது,

**"வண்டினம் சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர"**

**(அகம்.71)**

என்று சுட்டுகிறது.

## சங்க இலக்கியங்களில் தாவர வகைப்பாடு

சங்க இலக்கியத்தில் இருக்கக்கூடிய வகைப்பாடுகளை எடுத்துக் கொண்டால், மரம், கொடி, புதல், செடி, பூண்டு, பயிர், நீர்த்தாவரம், புல், பாசி, காளான், நார், புலன் உணர்வுத் தாவரங்கள், விரிவாக எடுத்துக் கொண்டால் அதில் மரங்கள் வளரியல்பு அடிப்படையில் எடுத்தாளப்படுகிறது. மரம் என்ற சொல் திராவிட மொழிகளில் மரம், மரனு, மர, மேன், மர்ம், மாக், மக் என்று ஒரே பொருளை உணர்த்தியும் ஒலித்திரிபு அடைந்தும் வழங்கப்படுகிறது. மரவழிபாடுதான் மிகப்பழமையான வழிபாடாகும்.

சங்க இலக்கியம், வாவல் பழுமரம் (குறுந்.172), காடே நிழல் கவின் இழந்த அழல் கவர் மரத்த (நற்.256), மரம் தலை மணந்த நனந்தலை கானத்து (நற்.246) என்று மரவகையைச் சுட்டி நிற்கிறது. மரவகைக்கு மேலை நாட்டு அறிவியல் அறிஞர்கள் கூறும் நெறிமுறைகள் சங்கத்தமிழில் நிறைந்து காணப்படுகிறது. பராரை (அகம்.69) என்னும் அதன் திண்மையுடைய வைரம் அகநானூற்றில் குறிப்பிடப்படுகிறது. மீமிசைச்சாந்து (நற்.1), வான் பொரு

நெடுஞ்சினை (நற்.3) என்ற நற்றிணைப்பாடல் வரிகள் மரம் உயர்ந்து வளரக்கூடியது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

**“குறவர் கொன்ற குறைக் கொடி நறைப் பவர் நறுங்காழ் ஆரம் சுற்றுவன அகைப்ப”**

**(நற்.5)**

என்கிறது நற்றிணைப்பாடல். இது தமக்கு உரிய உணவைத் தயாரித்துக் கொண்டு மீதமுள்ள உணவுக்கு ஏனைய தாவரங்களில் இருந்து எடுத்துக்கொள்ளும். புல்லுருவி வகை என்பது உண்டு. இது தமக்கு உரிய உணவைத் தாமே தயாரிக்கும் ஆற்றல் இல்லாமல் பிற தாவரம் அல்லது உயிர்களைச் சார்ந்து அவற்றிலிருந்து உணவைப் பெறுபவை ஆகும். இதைப் புல்லுருவி அல்லது சாறுண்ணி என்று அழைப்பர்.

அடுத்து கொடிவகைகள் நீண்டு வளரக்கூடியவை. ஆனால் தாமாகவே தனித்து நிற்கும் ஆற்றல் இல்லாமல் பிறவற்றைச் சார்ந்து நிற்கக்கூடியது. இவற்றின் தண்டுப்பகுதி மிக மெல்லியவை. கயிறு போன்று இருக்கக்கூடியவை. வேர்க்கொடி, படர்க்கொடி, பற்றுக் கம்பிக்கொடி, சுற்றுக்கொடி, பெருங்கொடி என்று ஐந்து வகையாகக் கொடியைப் பிரிப்பர். கொடியின் மெலிந்த தன்மையை நுண்கொடி (அகம்.237), புன்கொடி (மலைபடு.101), மென்கொடி (குறுந்தொ.186) என்பனவும், பரூஉக்கொடி (மலைபடு.216) தண்டின் பருத்த தன்மையைக் காட்டுகிறது. நெடுங்கொடி (ஐங்குறு.6), மாக்கொடி (குறுந்தொ.256) என்பன கொடியின் வளமான தன்மையை எடுத்துக்காட்டுகிறது. வெண்கொடி (ஐங்.456), கருங்கொடி (மலைபடு.521), செங்கொடி (ஐங்குறு.25), பைங்கொடி (பெரும்பாண்.337) என்பன கொடியின் நிறத்தை உணர்த்துகிறது. நறுங்கொடி தாமலம் (நற்.292) என்பது மணத்தைக் குறிக்கிறது. இவர் கொடிப்பீரம் (ஐங்.464), இவர்ந்த அதர்கொடி அதிரல் (அகம்.159), இவர்ந்த பைங்கொடி அவரை (குறுந்தொ.240), தவழ்கொடி (கலி.102), நெடுங்கண் ஆரத்து அலங்குசினை வலந்த பசுங்கேழ் இலைய நறுங்கொடித் தாமலம் (நற்.292), குறவர் கொன்ற குறைக்கொடி நறைப்பவர் நறுங்காழ் ஆரம் சுற்றுவன (நற்.5) என்னும் இடங்கள் எல்லாம் படரியல்பு அடிப்படையில் படர்கொடி இதனை ஆங்கிலத்தில் கிரீப்பர் என்பர், ஏறுகொடி என்பதை ஆங்கிலத்தில் கிளைம்பர் என்பர். இவ்வகை கொடிக்கு இவை சான்றாக அமைகின்றன. கொடிக்கு பவர் என்னும் பெயரும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புதர் வகையை எடுத்துக் கொண்டால் செடி என்றும் பொருள் கொள்ளலாம். ஏனெனில் இது நிலத்தில் புதர் புதராய் மண்டி வளரக்கூடியது. சிறு செடிகளையும், குற்று மரங்களையும் செடி என்று வழங்குவர். செடியை அவற்றின் வாழ்நாள் அடிப்படையில் ஒரு பருவச்செடி, இருபருவச்செடி, பல பருவச்செடி என்று மூன்றாகக்கொள்வர். ஒரு பருவச்செடி ஒரு குறிப்பிட்ட பருவத்தில் தோன்றிச் சிலவாரம் அல்லது மாதங்களில் இலையும், பூவும் கனியும் உண்டாகி விதைமுற்றி அப்பருவத்திலேயே பட்டுப்போகும்.

இருபருவச் செடியில் முறையே சேமித்தல் முதல்பருவத்திலும் அவ்வுணவைக் கொண்டு பூவும் கனியும் உண்டாக்குதல் இரண்டாம் பருவத்திலும் நிகழும். இரண்டாம் பருவத்தின் முடிவில் அத்தாவரம் முழுமையும் பட்டுப்போகும். பல பருவச்செடியில் ஒருமுறை செடி தோன்றியபின் அது வளர்ந்து பூ, கனிகளை உண்டாக்கியதும் மேற்புறமிருக்கும் தண்டுக்கிளை மட்டுமே அழிந்து போகும். நிலப்பரப்பின் உட்புறம் உள்ள கிழங்கு அல்லது மட்டத்தண்டுக்கிழங்கு முதலியவற்றிலிருந்து புதிய தண்டுக்கிளை முளைத்து வளரும் இத்தகைய வளர்ச்சி முறை மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் வரை நிகழும். இந்த பகுப்பை வைத்துப் பார்த்தால் பலபருவச்செடி என்பது குறுமர வகுப்பு அல்லது பதலை குறிப்பதாகும். இருபருவ வாழ்விகளை செடி என்று கொள்ளலாம். ஒரு பருவ வாழ்விகளைப் பூடு என்று அழைக்கலாம்.

அணிலின் வால்போல் கதிர்கொண்ட ஊகம்புல், மணமிக்க புல்லாகிய நரந்தம், பசும்புல், நுண்புல் முற்றா இளம்புல், முளிபுல் என்று ஊகம்புல்லும், நரந்தம்புல்லும், பொது நிலையில் புல்லின் வளரி இயல்பும் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

**"விழுந்தோர் மாய்க்கும் குண்டு கயத்து அருகா**
**வழும்பு கண் புதைத்த நுண்ணீர்ப் பாசி**
**அடிநிலை தளர்க்கும் அருப்பம்"**
**(மலைபடு.220)**

என்ற மலைபடுகடாம் வரிகள் பாசித் தாவரத்தின் வழுக்கும் இயல்பை வழும்பு என்ற சொல்லால் குறிக்கிறது. பாசியின் வழுக்கும் தன்மைக்குக் காரணம் மியூக்கஸ் என்னும் நெய்ப்புத் தன்மையுடைய ஒரு திரவம்தான். அந்த மியூக்களை வழும்பு என்ற சொல்லால் சங்க இலக்கியம் குறித்து வைத்திருக்கிறது.

**"கிடங்கில் அன்ன இட்டுக் கரைக் கான்யாற்று**
**கலங்கும் பாசி நீர் அலைக் கலாவ"**
**(நற்.65)**

என்று நீரின் அலையால் பிரிந்தும் சேர்ந்தும் பரவும் தன்மைக்கொண்ட பசிய நிறமுடைய பச்சைப்பாசியை குறிக்கிறது., இவை அன்றி இழைப்பாசி, கொட்டைப்பாசி ஆகியனவும் காட்டப்படுகிறது. பசுங்கனிகங்கள் பொருந்தித் தம் உணவைத் தாமே தயாரித்துக் கொள்ளும் இயல்பால் அமைந்த இதைத் தாவரமாக உணர்ந்து பாசி என்று பெயரிட்டு அழைத்திருக்கின்றனர் சங்கக்கவிஞர்கள். சங்க இலக்கியங்களில் மட்டும் 210 மரம் செடிகொடிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு அசைவையும் இயற்கையின் விதியை மீறாமல் நடத்தியிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

## ஆய்வு முடிவுரை

தமிழ் இலக்கியங்களில் தாவர வகைப்பாடு என்ற இக்கட்டுரையானது நிலம் ஐவகையாக பிரிக்கப்பட்டு, மக்கள் வாழ்ந்த பகுதிகள் அவர்கள் பயன்பாட்டில் அன்று முதல் இன்று வரை இருந்து வரும் தாவரங்களை தொல்காப்பியர் முதல் இலக்கண இலக்கிய நூலாசிரியர்கள் உயிரி அடிப்படையில் பிரித்து, அதன் தரத்தை உற்றுநோக்கி, அவற்றை உயிரிகளாக கணக்கிட்ட தன்மையினையும், இலக்கண இலக்கியங்களில் காணப்பட்டதாவரங்களின் வகைப்பாட்டையும், அவற்றின் தன்மையினையும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது. புல் முதல் மரங்கள் வரை உள்ள தாவரங்கள் பல இன்று இல்லாமல் போனாலும் சங்க கால மக்கள் இயற்கையோடு கொண்ட உறவினையும், அவற்றை பேணிப் பாதுகாத்த தன்மையினையும் இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

## மேற்பார்வை நூல்கள்


1. முனைவர் பா.லெட்சுமி, தமிழ் இலக்கியங்களில் தாவரங்கள், கவிதா பிரசுரம், படப்பை, சென்னை.
2. செல்வி. துர்காதேவி, தமிழரின் இயற்கை வாழ்வும், மரபும், பிரவின் பிரிண்டர்ஸ், சேலம். முதல் பதிப்பு – 1998.
3. கவிஞர்.மணிகண்டன், இலக்கியங்களில் செடி கொடி வகைகள், காவ்யா பதிப்பகம், தூத்துக்குடி. மூன்றாம் பதிப்பு – 2015.
4. பேரா. அந்தோணியம்மாள், தொல்காப்பியமும் இயற்கையும், வாசகர் பதிப்பகம், தஞ்சாவூர்.
5. பேரா. செல்வராஜன், சங்க இலக்கியத்தில் செடி கொடிகள், அஜெய் பிரிண்டர்ஸ், திருப்பூர். ஐந்தாம் பதிப்பு – 2021.
6. முனைவர் சரண்யா, அறிவியல் அடிப்படையில் தாவர வகைப்பாடு, சுகின் பிரிண்டர்ஸ், வடபழனி, சென்னை.

# சங்க இலக்கியத்தில் வேளாண்மை

**முனைவர் ஜா. பீற்றர் ராஜ்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*தி.தெ.மா.நா.ச.கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியத்தில் வேளாண்மை என்பது முக்கிய தொழிலாக கருதப்பட்டது. மக்கள் வாழ்ந்த நிலங்களின் அடிப்படையில் பயிர்களை பயிரிட்டும், செடி கொடிகளை வளர்த்தும், வேளாண்மையில் பல்வேறு தொழில் நுட்பங்களை மேற்கொண்டு வேளாண்மையை வளர்த்தும் காத்தும் வந்தனர். உலக அளவில் இன்றளவும் பேசப்பட்டு வரும் வேளாண்மை தமிழர்களின் தலையாய தொழில் ஆகும். இக்கட்டுரையானது சங்க இலக்கியத்தில் வாழ்ந்த மக்கள் மேற்கொண்ட வேளாண்மையை பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது.*

**ஆய்வு முன்னுரை**

**சங்கம் வளர்த்த தமிழர்கள்**
**இலக்கியம் கண்ட தமிழர்கள்**
**இலக்கணம் கண்ட தமிழர்கள்**
**காப்பியம் கண்ட தமிழர்கள்**
**- வேளாண்மை**
**இவர்களின் முதுகெலும்பு**
**உலகம் போற்றும் தமிழர்கள்**
**இவர்களின் விவசாய நுட்பங்கள்**
**தரணியில் இன்றளவும் பேசப்படுகிறது..!!!**

சங்க காலத்தில், தமிழர்களின் வாழ்க்கையின் முதன்மைப் பகுதியாக வேளாண்மை இருந்தது. வேளாண்மை என்பது வாழ்க்கைக்கு அவசியமான ஒன்றாக கருதப்பட்டது, அனைத்து தொழில்களையும் விட வேளாண்மை முதன்மையான இடத்தில் தலைநிமிர்ந்து இன்றளவும் நிற்கிறது. பண்டைத்தமிழ்களின் விவசாய நுட்பங்களினால் உழவர்கள் சமூக நிலையில் உயர்ந்த நிலையில் காணப்பட்டனர். பண்டைத் தமிழர்கள் விவசாயம் என்ற ஒன்றை மையமாக வைத்து உணவு தானிய உற்பத்தியாளர்களாக இருந்ததால், சமூகத்தில் தனிச் சிறப்புடனும் சுய மரியாதையுடனும் வாழ்ந்தனர். சங்க காலத்தின் ஆரம்பம் முதலே வேளாண் தொழில் பழமை மிக்கதாக காணப்பட்டது. அவ்வகை சிறப்புமிக்க சங்ககால மக்களின் வேளாண்மை நுட்பங்களை இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

**சங்க இலக்கியமும் மக்களும்**

பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய இலக்கியம் சங்க இலக்கியமாகும். இவ்விலக்கியமானது பண்டைத் தமிழர்களின் வாழ்வியலை நம் கண்முன்பாக கொண்டு வந்து நிறுத்துகிறது. மனிதன் குழுக்களாக வாழத் தொடங்கிய காலம் முதல் அவன் தன்னுடைய நிலப்பகுதியை முன்னிலையாக கொண்டு வாழ்ந்த காலங்களிலும், சங்க காலங்களில் வாழ்ந்த மக்கள் உணவுக்காக யாரிடமும் கையேந்தி நின்றதில்லை. தனக்குத் தேவையான உணவுப் பொருட்களை அவனே பயிரிட்டும், விதைத்தும் அறுவடை செய்து தனக்கு மட்டுமில்லாமல் மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்ந்து வந்ததை சங்க இலக்கியம் எடுத்துரைக்கிறது எனலாம்.

தமிழின் மிகப்பழமையான நூலான தொல்காப்பியம் சங்க காலத்தில் மக்கள் வாழ்ந்த நிலப்பகுதியினை ஐந்திணைகளாக பிரித்துள்ளது.

**மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி**
**காடும் காடு சார்ந்த இடமும் முல்லை**
**வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம்**
**கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல்**
**மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை.**

நிலத்தினை ஐவகையாக பிரித்ததோடு மட்டுமில்லாமல் அந்தந்த பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கை முறை, உணவு பழக்க

வழக்கங்கள், அங்கு வாழும் செடி கொடிகள், விலங்குகள், கடவுள்கள் என அனைத்தையும் விவரித்துள்ளனர். விளை நிலங்களை அதன் தன்மைக்கு ஏற்பவும் பிரித்துள்ளனர்.

**நிலங்களும் வேளாண்மையும்**

பண்டைத்தமிழக மக்கள் ஒவ்வொரு நிலங்களின் அமைப்புக்கேற்ப விவசாய முறையினை மேற்கொண்டு வந்தனர். நிலங்களின் தன்மைக்கேற்ப நிலங்களை சீர்செய்தும், பயிரிட்டும் தங்களுடைய வேளாண்மையை மேம்படுத்தி வந்தனர் என்பதை பின்வரும் சங்க இலக்கியப் பாடல்கள் நமக்கு எடுத்துரைக்கிறது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய இந்நானிலங்களும் வன்புலம், மென்புலம் என்ற இரு பிரிவில் அடங்குகின்றன. மண்வளமும், நீர்வளமும் குறைந்த பகுதியாகிய குறிஞ்சியும், முல்லையும் வன்புலத்திலும் மண்வளமும், நீர்வளமும் நிறைந்த பகுதியாகிய மருதமும், நெய்தலும் மென்புலத்திலும் அடங்குகின்றன. தினை, வரகு முதலிய புன்செய் பயிர் விளையும் நிலங்களைப் **'புன்புலம்'** என்றழைத்தனர். இதை ஒரு ஐங்குறுநூற்றுப் பாடல் இவ்வாறு சுட்டுகிறது.

**"புன்புலம் வித்திய புனவர் புணர்த்த"**
**(ஐங்,பா.246)**

குறிஞ்சி, முல்லை பகுதிகளில் உள்ள நிலப்பகுதி கரடுமுரடாகவும் நீர் குறைந்து இருப்பதாலும் அவற்றை சங்க இலக்கிய வேளாளர்கள் வன்புலம் என்றனர்.

**"வன்புலக் காட்டுநாட் டதுவே"**
**(நற்றிணை, பா.59)**

நீர்வளம் அதிகமாக இருப்பதாலும், வேளாண்மை செய்ய ஏற்ற நிலமாக இருக்கும் மருத நிலத்து மண்ணை மென்புலம் என்றும் அழைத்தனர்.

**"மென்புல வைப்பின் நன் நாட்டுப் பொருந"**
**(புறம்,பா.42-15)**

இயற்கையாக நீர்ப்பாசன வசதியில்லாமல், செயற்கையாக மனிதனால் பாசன வசதி ஏற்படுத்தப்பட்ட நிலத்தினை புன்புலம் என்று அழைத்தனர்.

**"புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்"**
**(பதிற்றுப்பத்து, பா.58-15)**

இதைத்தவிர, எந்தவித வேளாண்மை பயன்பாட்டிற்கும் உதவாத நிலத்தினை களர்நிலம் என்றனர். உப்பு அதிகமாக இருந்த நிலத்தினையும் களர்நிலம் என்று அழைத்தனர். புறநானூறு இதனை புறங்காடு என்றும் குறிப்பிடுகிறது.

**"களர்படு கூவல் தோண்டி, நாளும்**
**புலைத்தி கழீஇய தூவெள் அறுவை"**
**(புறநானூறு, பா.311-11,12)**

**வேளாண்மையை மேம்படுத்தும் உத்திகள்**

வேளாண்மையை மேம்படுத்தும் விதமாக பண்டைத் தமிழர்கள் பல்வேறு உத்தி முறைகளை கையாண்டு வந்தனர். அவர்கள் பயன்படுத்தி வந்த உற்பத்தி முறைகள் இன்றளவும் பேசப்பட்டு வருகின்றன. வேளாண்மைத் தொழிலுக்கு நிலமும், நீரும் இன்றியமையாதவையாகும். மலைப் பகுதியில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் வேளாண்மைத் தொழிலுக்கு ஏற்றவாறு நிலத்தை வெட்டிச் சீர்செய்து, பயிர் செய்துள்ளனர். மேலும் மலைப் பகுதியிலுள்ள காடுகளை அழித்தும், மரங்களை வெட்டியும் விளைநிலங்களை உருவாக்கியுள்ளனர்.

விளைநிலங்களுக்காக வெட்டப்பட்ட மரங்களைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். மரங்களை வெட்டிச் சுட்டெரித்துச் சீர்திருத்தப்பட்ட புனம் **'சுடுபுனம்'** என்றழைக்கப்பட்டது. மரங்களை எரித்ததால் மண் நன்கு சுடப்பட்டு பயிர்கள் நன்றாக வளர உதவுகின்றது.

மரங்களை எரித்ததனால் கிடைக்கக்கூடிய சாம்பல் உரமாகவும் பயன்பட்டிருக்கிறது. தீயினால் காட்டினைத் திருத்தி எரிக்கப்பட்ட கொல்லை **'எரிதின் கொல்லை'** என்றழைக்கப்பட்டது. குறவர்கள் காடுகளிலுள்ள அகில், சந்தனம் போன்ற மரங்களை

வெட்டியழித்து விளைநிலத்தை உருவாக்கிய செய்தி காணப்படுகின்றது.

**"சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்படுகிளி**
**கடியுங் கொடிச்சிகைக் குளிரே"**
**(குறுந்,பா.291)**

**"நறையகில் வயங்கிய நளிபுன நறும்புகை" (குறுந்,பா.339)**

**"எரிதின் கொல்லை யிறைஞ்சிய ஏனல்"**
**(அகம்,பா.288)**

வேளாண்மைத் தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலப்பகுதிகள் அதனியல்பு கருதி வெவ்வேறு பெயர்களில் வழங்கப்பட்டதைச் சங்கப் பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது. குறிஞ்சி நிலத்துப் புன்செய் நிலம் **'துடவை'** என்றும், பழமையான விளைநிலம் **'முதைபுனம்'** என்றும், மரங்களை வெட்டியெரித்து உருவாக்கிய நிலம் **'சுடுபுனம்'** என்றும் வழங்கப்பட்டுள்ள செய்திகள் இலக்கியங்களில் காணப்படுகிறது.

காடுகளை அழித்து விளை நிலமாக்கப்படும் புதிய நிலம் **'இதை'** என்று வழங்கப்பட்டுள்ளது. **'புனம்'** என்பது மலைச்சார்பான கொல்லையாகும்.

**"புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை" (குறுந்,பா.105)**

**"முதைபுனங் கொன்ற ஆர்கலி உழவர்"**
**(குறுந்,பா.155)**

### நிலத்தை பதப்படுத்தப்படுத்துதல்

நிலத்தை பதப்படுத்தி அதனை விவசாயத்திற்கு தயார் செய்தும், விவசாயத்தை மேம்படுத்துவதில் தமிழர்கள் கைத்தேர்ந்தவர்களாக இருந்தனர். நிலத்தின் தன்மையை அறிந்து அதற்கு ஏற்ற செயல்பாடுகளில் ஈடுபட்டும் வேளாண்மையை மெருகேற்றி வந்தனர். நிலத்தை ஏரினால் உழுவதின் மூலம், மண்ணில் காற்றோட்டம் அதிகமாக கிடைக்கும் என்ற தன்மையினை அறிந்து அதற்கேற்ற முறையில் பயிர் வளர்ச்சியை அதிகப்படுத்தி வந்தனர். நிலத்தை செப்பனிடுவதற்காக பல்வேறு உத்தி முறைகளை கையாண்டு வந்துள்ளனர்.

உழுத வயலின் மேடு பள்ளங்களை சரிசெய்ய தளம்பு என்ற கருவியை பயன்படுத்தியதாக இந்த புறநானூற்று வரி சுட்டுகிறது.

**"மலங்குமிளிர் செறுவின் தளம்புதடிந் திட்ட'' (புறம், பா.61-3)**

**"காஞ்சித் தாது உக்கன்ன தாது எருமன்றத்துத்'' (கலித்தொகை, பா.108)**

உழுத நிலங்களில் கால்நடைகளின் சாணத்தையும் இலை தழைகளையும் எருவாக பயன்படுத்தினர் என்ற செய்தியையும் அறிய முடிகிறது.

### இயற்கை உரமும் கருவிகளும்

இயற்கை உரங்களை மட்டுமே சங்ககாலத்தில் மக்கள் பயன்படுத்தி வந்தனர் என்ற செய்தியையும் இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. உழவிற்கு முன்னும் பின்னும் வயல்களில் இயற்கை உரங்கள் பயன்படுத்தி வந்தனர். கால்நடைகளின் கழிவுகள், பசுந்தாள் உரங்கள் இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருவதை காணமுடிகிறது. அது மட்டுமில்லாமல் பசுந்தாள் உரப்பயிரான தக்கைப்பூண்டு, அகத்தி, சணப்பை, பில்லி, அவுரி போன்ற உரங்களும் பண்டைத் தமிழர்கள் விவசாயத்திற்கு பயன்படுத்தி வந்துள்ளனர்.

நடுகைக்கூரிய வயல்களில் உழவு வேலைகள் தொடங்கும் முன்னரும் உழவு வேலைகள் முடிந்த பின்னரும் நிலத்திற்கு வளம் சேர்க்க இயற்கை உரங்களைப் பயன்படுத்தியுள்ளனர். உழவுப்பணியை மேற்கொள்வதற்கு முன்னர் வேளாண் பெருங்குடி மக்கள் தங்கள் வயல்களில் ஆட்டுகிடையும், மாட்டுகிடையும் வைத்து தங்கள் வயல்களைத் தயார்படுத்தினர். உழும்போது பசுந்தழை உரம்போட்டு நிலத்திற்கு வளம் சேர்த்தனர். இதனை,

**‘ஆடு பயிர்காட்டும் ஆவாரை நெல்காட்டும்’**

**‘கார் ஆடு பிசானம் குழை’**

போன்ற பழமொழிகள் எடுத்துக்காட்டுகிறது. உரமிடுதலில் கிடைவைத்தல் என்னும் கால்நடைக் கழிவுகளைப் பயன்படுத்தி வந்த செய்தியையும் அறிய முடிகிறது. வயல்கள் எருதுகளின் உதவியுடன் உழப்பட்டு செம்மைப்படுத்தப்பட்டு வந்தன. வயல்களில் தழைகளை விவசாயிகள் தங்கள் கால்களை வைத்து மிதித்து மூழ்கடித்தனர். நாற்றுகள் வளர்ந்தபின் அவற்றை இடம் மாற்றி நட்டனர் என்ற செய்தியையும் அறிய முடிகிறது.

விவசாயத்தின் அடிப்படை கருவியான ஏரை – மெலி, நாஞ்சில், கலப்பை என்றும் அழைத்தனர். **“பயிரிடும் நிலத்தை சமப்படுத்த பரம்பு கருவி பயன்படுத்தப்பட்டது என்றும், பள்ளியாடுதல் என்பது களை எடுக்கவும் பயிர்களுக்கு உள்ள நெருக்கத்தை குறைக்கவும் பயன்படுத்தப்பட்டது என்றும் கிணறுகளில் இருந்து நீர் எடுக்க கமலை என்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தினர் என்றும் ஏற்றம் என்ற கருவியில் மாடுகளை சட்டத்தில் பூட்டி நீரை இறைத்தனர் என்றும், பறவைகள் விலங்குகள் பயிர்களை சேதப்படுத்தாமல் இருக்க, கவண் மற்றும் கவண்வில்லைக் கொண்டு அவற்றை விரட்டினர் என்றும், அறுவடை அரிவாள் கொண்டு நடத்தப்பட்டது”** என்ற கருத்துகளை நம்மாழ்வாரின் வரிகள் மூலமாக அறிய முகிறது.

## விதையினை தேர்வு செய்தலும் பயிர் பாதுகாப்பும்

பண்டைத் தமிழர்கள் ஒவ்வொரு நிலங்களின் தன்மைக்கேற்ப விதைகளை தேர்வு செய்தும், தேர்வு செய்த விதைகளை பயிரிட்டும், பயிரினை பல்வேறு முறைகளில் பாதுகாத்தும் வந்தனர் என்ற செய்தியினை சங்க இலக்கியப் பாடல்கள் எடுத்துரைக்கிறது.

வேளாண்மையில் விதைகளை தேர்வு செய்வதும் அவற்றை எவ்வாறு பூச்சிகள் தாக்காமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை தமிழர்கள் அறிந்திருந்தனர். அவை,

**“குறித்து மாறு எதிர்ப்பை பெறா அமையின்**

**குரல் உணங்கு விதைத்திணை’’**

**(புறம், பா.333)**

இந்த பாடலில், விதையை காயவைத்து விதைக்கப் பயன்படுத்தியது குறித்து விளக்கப்பட்டுள்ளது.

பண்டைய தமிழகத்தில் நெல், கரும்பு, சிறுதானியங்கள், பருப்பு வகைகள், தென்னை, அவரை, பருத்தி, வாழை, புளி, சந்தனம் முதலியன பயிரிடப்பட்டுள்ளன என்ற செய்திகளும் இலக்கியங்களில் காணப்படுகிறது. நெல் பண்டைத் தமிழர்களின் முக்கியப் பயிராக இருந்து வந்துள்ளது. வீடுகளில் பலா, தென்னை, பாக்கு போன்ற மரங்களை வளர்த்து வந்துள்ளனர். வீட்டின் முன் புறம் மஞ்சளும் பின்புறம் பூந்தோட்டமும் வைத்து பராமரித்து வந்தனர் என்ற செய்தியும் காணப்படுகிறது. பயிர்பாதுகாப்பு குறித்து திருக்குறள் பின்வருமாறு எடுத்துரைக்கிறது.

**“செல்லான் கிழவ நிருப்பின் நிலபுலந்து**

**இல்லாளின் ஊடி விடும்’’** (குறள் 1039)

கணவன் தன்னிடத்து வந்து தனக்கு வேண்டிய கடமையைச் செய்யாமல் போனால், மனைவி எப்படி ஊடுவாளோ அதைப்போல நாள்தோறும் நிலத்திற்கு சென்று பயிர்பாதுகாப்பு செய்யாதவனை நிலமும் ஊடும் என்கிறார் வள்ளுவர். பூச்சிகளும் கால்நடைகளும் தாக்காத வண்ணம் பயிரை காத்தல் வேண்டும் என்கிறார்.

## வேளாண்மையும் நீர்பாய்ச்சுதலும்

வேளாண்மையின் வெற்றி, நீர்ப்பாசனத்தைப் பொறுத்து அமைகிறது. நீரின்றி அமையா உலகு என்பதை நீரின்றி அமையா உழவு என்று கூறின் மிகையன்று. நீரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் நீர் நிர்வாகம் பற்றிய புரிதல் உழவர்களுக்கு ஊட்டப்படுகிறது. பயிர் விளைவதற்கு நீர் இன்றியமையாதது என்பதை, அன்னையின்

கடுஞ்சொல்லை நீராகக் கொண்டு காம நோய் என்ற பயிர் வளர்ந்தது என்பதை **'அன்னை சொல் நீராக நீளும் இந்நோய்' (குறள்1147)** என்று உவமை நயம்பட வள்ளுவர் குறிப்பிடுகிறார். பாசனத்துக்குத் தேவையான ஆற்று நீர் வாய்க்கால் வழியாக ஓடி வயல்களில் பாய்ச்சப்படுகின்ற அறிவுத் திறம் தமிழர்களுக்குப் பழைமையானது என்பதை, **'நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி'** என்ற ஔவையாரின் வாக்குப் புலப்படுத்துகிறது.

வாய்க்கால் வழியாக ஓடுகின்ற நீரைத் தேவைப்படும் இடங்களில் வாய்க்கால்களின் குறுக்கே சிறு தடுப்புகளை ஏற்படுத்தி நீர்ப் பாய்ச்சுகின்றப் போக்கை அகநானூறு மிக அழகாகச் சித்திரிக்கிறது. உழவர்கள் நெற்பயிரை உடைய தம் வயல்களில் காஞ்சி மரத்தின் சிறு துண்டுகளை நட்டு, இனிய சுவைமிக்க கரும்பின் சிறந்த பல கழிகளைக் குறுக்கே நெருக்கமாக வைத்து அடைத்து அணையாகக் கோலி, அப்பள்ளங்களில் நீரைத் தேக்கிப் பாய்ச்சுவர். இக்காட்சி,

**"......கலிமகிழ் உழவர்**
**காஞ்சிஅம் குறுந்தறி குத்தி, தீம்சுவை**
**மென்கழைக் கரும்பின் நன்பல மிடைந்து**
**பெருஞ்செய் நெல்லின் பாசவல் பொத்தி**
**வருத்திக்கொண்ட வல்வாய்க் கொடுஞ்சிறை**
**மீதுஅழி கடுநீர் நோக்கி..........."**

**(அகம்,பா. 346)**

என்று அகநானூற்றில் அழகுறக் காட்டப்பட்டுள்ளது. இப்பாடல் வாயிலாக நீர் நிர்வாகம் பற்றிய புரிதல் பழந்தமிழர்களிடையே இருந்ததை அறிய முடிகிறது.

## வேளாண்மையும் வாழ்க்கையும்

மக்களின் வாழ்க்கையோடு ஒன்றி போனது விவசாயம் ஆகும். **'அகல உழுதலின் ஆழ உழுதல் நன்று'** என்பது பழமொழியாகும். மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. பழங்கால மனிதர்கள் காட்டில் கிடைக்கும் பழங்கள், பயறுகள் போன்றவற்றை உண்டு வாழ்ந்துள்ளனர். மக்கள் தொகை பெருகப் பெருக உணவின் தேவையும் பெருகியது. உணவுக்காக நிலங்களைப் பயன்படுத்திப் பயிர் செய்துள்ளனர். மனிதன் தோன்றிய போதே வேளாண்மையும் தோன்றியது எனலாம். உணவுப் பொருளின் இன்றியமையாமையை உணர்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டனர். எனவே வேளாண்மைத் தொழில் தலைமைத் தொழிலாக, உயிர்த் தொழிலாகப் போற்றப்பட்டதோடு மட்டுமல்லாமல் தமிழகத்தில் மக்களின் உயிர்நாடியாக மாறிப்போனது என்றே கூறலாம்.

## ஆய்வு முடிவுரை

மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதனை விட எப்படி வாழக் கூடாது என்ற வாழ்வியலையும் மற்றும் அனுபவ அறிவியலையும் கற்றுக் கொடுத்த தமிழரின் சிந்தனைகளையும் உயர்வான எண்ணங்களையும் பல்வேறு சமூகங்கள் அடியொற்றி வருகின்றன. பண்பட்ட மண்ணில் தான் செடிகளும் கொடிகளும் துளிர்விடும். அதுபோல இந்தச் சமூகம் பண்பட வேண்டும் என்றால் நல்ல வாழ்வியலும் பண்பாடும் இருக்க வேண்டும் என்பதனை தமிழினம் இத்தரணிக்குக் கற்று கொடுத்திருக்கிறது. வேளாண்தொழிலின் முக்கியத்துவத்தையும் அதன் மகத்துவத்தையும் தமிழர்கள் எவ்வாறு கருதினர் என்பதை திருக்குறளில் வள்ளுவர் அழகாக **"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்"** என்கிறார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கைப்பிடி உணவை உண்ணுவதற்கு அதில் ஒவ்வொரு விவசாயிகளினுடைய உழைப்பு தங்கியிருக்கும். ஆதலால் தான் உலகத்தில் பல தொழில்கள் இருந்தாலும் உழவுத் தொழில் தலைசிறந்த தொழிலாக கருதப்படுகிறது. இதுவரைக்கும் விளம்பரம் செய்யப்படாத ஒரே தொழில் விவசாயம் தான். ஏனென்றால் விவசாயம் தொழில் அல்ல எமது உயிர்நாடி. உலகத்தின் ஒவ்வொரு உயிருக்கும் பசி

என்ற உணர்வு இருக்கும் வரை விவசாயம் அழியாது. தமிழர்களின் வேளாண்மையும் உத்திகளும் இன்று மட்டும் அல்ல தமிழர்கள் உள்ள வரையிலும் தலைசிறந்து நிற்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்பதை இக்கட்டுரை தெளிவுப்படுத்துகிறது.

## மேற்பார்வை நூல்கள்


1. புலவர் கா.கோவிந்தன், ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப்பண்பாடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 522,டி.டி.கே.சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை 600018. பதிப்பு 1999.
2. மறைமலையடிகள், வேளாண் நாகரிகம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 522,டி.டி.கே.சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை 600018. பதிப்பு 1923
3. க.வெள்ளைவாரனார், சங்ககாலத் தமிழ் மக்கள் (கட்டுரைகள்), நாம் தமிழர் பதிப்பகம், 6-16,தோப்பு வெங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600005. பதிப்பு 2015.
4. ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம் இளம்பூரணர் உரை (எழுத்து - சொல் - பொருள்), மரபியல், மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் - 605001. பதிப்பு 2009.
5. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள், கங்கை புத்தக நிலையம், 23 தீனதயாளு தெரு, பாண்டி பஜார், பார்த்தசாரதி புரம், தி.நகர், சென்னை-600017. பதினொன்றாம் பதிப்பு 2017.
6. பரமசிவானந்தம், அ.மு., சமுதாயமும் பண்பாடும், தமிழ்க் கலைப் பதிப்பகம், சென்னை, 1972, இரண்டாம் பதிப்பு.
7. பதிப்பாசிரியர் குழு, அறிவியல் களஞ்சியம், தொகுதி 5, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988
8. நாராயணசாமி ஐயர், நற்றிணை மூலமும் உரையும், சைவ வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை பட்டணம், 1915
9. நாராயணசாமி ஐயர், குறுந்தொகை மூலமும் உரையும், சைவ வித்தியாநுபாலனயந்திரசாலை, சென்னை பட்டணம், 1915
10. நாராயணசாமி ஐயர், புறநானூறு மூலமும் உரையும், சைவ வித்தியாநுபாலனயந்திரசாலை, சென்னை பட்டணம், 1915
11. நாராயணசாமி ஐயர், அகநானூறு மூலமும் உரையும், சைவ வித்தியா நுபாலனயந்திரசாலை, சென்னை பட்டணம், 1915

# முகிலை ராசபாண்டியனின் தேரிமணல் நாவலின் கடற்கரைப் புனைவுகள்

**முனைவர் செ. செல்வகுமார்**
*தமிழ்துறைத் தலைவர்*
*நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி*

**டே. கிரேஸ் புஸ்பா ஜீலியட்**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி*

**முன்னுரை**

விலங்குகளோடு காடுகளில் வாழ்ந்த மனிதன் தனது நாகரிக வளர்ச்சியின் விளைவாகத் தனக்கென ஓர் இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொண்டான். அதுவே மக்கள் நிலம் சார்ந்து சேர்ந்து வாழ்வதற்கு முன்னோடி எனலாம். மனிதன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அறிவை பெருக்கிக் கொண்டதன் மூலம் பல முன்னேற்றங்களை அடைந்தான். நாகரீக வளர்ச்சியும் பெற்றான். அவன் நிலம் சார்ந்து அமைத்துக் கொண்ட வாழ்க்கை முறையும், வாழ்க்கை சூழலும் அன்று முதல் இன்று வரை இலக்கியங்களில் பதிவுச் செய்யப்பட்டுள்ளன.

மனிதன் நாகரிகம் அடைவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே கூடி வாழும் இயல்புடையவனாய் இருந்துள்ளான். இக்கூடி வாழும் இயல்பினால் விளைந்த நன்மைகள் பல மக்களினம் பல கிளைகளாக வளர்ச்சி அடைவதற்கும் அது வழிவகுத்தது. மனித இனம் பல்வேறு குழுக்களாக பிரிவதற்குப் பேசும்மொழி. செய்யும் தொழில் போன்று வாழும் இடமும் முக்கிய பங்காற்றுகிறது. அதனை கருத்தில் கொண்டுதான் நம் முன்னோர் ஐவகை நிலப்பாகுப்பாட்டினை வகுத்துள்ளனர் போலும். சங்க காலம் தொட்டு இன்று வரையிலும் இதே போன்ற கடற்கரை புனைவுகள் பல இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. ஆய்வுக்கு எடுத்துள்ள தேரிமணல் நாவலிலும் கடற்கரை சார்ந்த நிகழ்வுகள் காணப்படுகின்றன. இந்நாவலின் ஆசிரியர் முகிலை இராசபாண்டியன் சிறுகரை, கவிதை, நாவல், நாடகம் திறனாய்வு, உரை என இலக்கியத்தின் பல்வேறு தளங்களிலும் தடம் பதித்து வருபவர். அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ள அவரின் தேரிமணல் என்னும் நாவலில் இடம் பெற்றுள்ள கடற்கரைப் புனைவுகளே இங்கு எடுத்தாளப்படுகிறது.

**நிலப்பாகுபாடு**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலப்பாகுபாட்டினை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர். இவற்றில் பாலை என்பது குறிஞ்சியும், முல்லையும் முறைமையில் திரிந்ததே என்பதால் பாலைக்கென தனிநிலம் இல்லை எனலாம். இதனை,

> **“முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
> **நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
> **பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”** **(சிலப்பதிகாரம் காடுகாண் கதை அடி 64 – 66)**

என்று சிலப்பதிகாரமும் எடுத்துரைக்கிறது. தொல்காப்பியம்

> **“மயோன் மேய காடுறை உலகமும்**
> **சேயோன் மேய மைவரை உலகமும்**
> **வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
> **வருணன் மேய பெருமணல்**

**உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும்படுமே”**
**(தொல்காப்பியம் - அகத்திணை இயல் நூற்பா : 951)**

என்று இந்நிலப் பாகுபாடுகளைப் பற்றி கூறுகிறது. 'வருணன் மேய பெருமணல் உலகமும்' என்னும் அடி நெய்தல் நிலத்திற்குரிய கடவுள் வருணன் என்பதையும், பெருமணல் மிகுந்த கடற்கரை நிலம் நெய்தல் என்பதையும் கூறுகிறது.

இலக்கியங்கள் வாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாகும். கடலும் கடல் சார்ந்த நிலமாகிய நெய்தல் நிலத்திற்கு ஏற்ற நிகழ்வுகளும் அவ்வகையில் இலக்கியங்களுள் இடம்பெற்றுள்ளன. சங்க காலம் தொட்டு இன்று வரையிலும் இதே போன்ற கடற்கரைப் புனைவுகள் பல இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. ஆய்வுக்கு எடுத்துள்ள தேரிமணல் நாவலிலும் கடற்கரை சார்ந்த நிகழ்வுகள் காணப்படுகின்றன.

## கடலில் ஆறு கலக்கும் கழிமுகப்பகுதி

ஆற்றுவெள்ளம் பெருக்கெடுத்து வரும்போது அதனைக் கடலுக்குள் பாயவிடாவிட்டால் அது பக்கத்தில் உள்ள ஊர் பகுதிக்குள் புகுந்துவிடும். ஆற்றுத் தண்ணீரைக் கடலுக்குள் வெட்டி விடுவதைப் பொழிவெட்டுவது என்று கூறுவர். அந்த பொழிவெட்டும் பிரச்சனையில் இருந்துதான் தேரிமணல் நாவல் தொடங்குகிறது. “பொழி முகத்துக்குப் போன சின்னத்துரையும் மற்றவர்களும் எந்த இடத்தில் மணலை வெட்டினால் கழி வெள்ளம் கடலுக்குள் போகும் என்று பார்த்தார்கள். நேரம் இன்னும் விடியாமல் இருட்டாகவே இருந்தது. கன்னியாகுமரியில் இருக்கும் லைட்ஹவுசின் வெளிச்சத்தில் கடல் மணல் ஓரளவு தெரிந்தது. பொழி வெட்டுவதற்கான இடத்தைப் பார்த்த சின்னத்துரை, கடலை எட்டிப்பார்த்தார் கடல் அடி அதிகமாக இருந்தது.

**“ஏண்ணே.....! நாம பொழியை வெட்டி விட்டாலும் கடல் அடச்சி ஏத்திடும் போல இருக்கே ......” என்றான் பண்டாரக்குட்டி “ஆமோடே ...... அடிச்சி ஏத்தும் போலத்தான் இருக்கு. ஆனா, கழி தெவங்கி நிற்கறதால இழுத்துக்கிட்டு ஓடிவிடும் ..... நீ வெட்ட ஆரம்பி ......” என்றார் சின்னத்துரை.**

பண்டாரக்குட்டியும் மற்றவர்களும் மண்வெட்டியால் வெட்டத் தொடங்கினார்கள். மணக்குடி ஊரின் நடுவில் இருந்தது அந்தக் கழி. கழிக்குக் கிழக்கே இருப்பதைக் கீழ மணக்குடி என்றும் மேற்கே இருப்பதை மேல மணக்குடி என்றும் சொல்லுவார்கள். பழையாறு என்னும் கடலில் சேரும் இடம்தான் அந்தக் கழிமுகப் பகுதி. பொழி ஓடிவிட்டால் கீழ மணக்குடிக்காரர்கள் மேல மணக்குடி நடந்து போக முடியாது. வெள்ளத்தில் தான் போன முடியும்” என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இது வர்ணனைகள் இல்லாத காட்சிப்படுத்துதலாகவே அமைந்துள்ளது.

கடற்கரையில் உள்ள கழிமுகத்தை வாசனுக்கு அறிமுகம் செய்யும் வகையில் மட்டுமே இப்பகுதியானது உள்ளது. சீறிவரும் அலைகளுக்கு மத்தியில் கடலில் குளிப்பது சுகமானது. அவ்வாற கடலில் குளிப்பதைக் கண்முன்னே கொண்டுவரும் வகையில் நாவலில் காட்சிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

## கடலில் குளிப்பது எப்படி

மண்டைக்காட்டுக் கோவில் திருவிழாவினை ஒட்டி விழாவிற்கு வரும் மக்கள் கடலில் குளிப்பது வழக்கம். அது தொடர்பான செய்திகளை குறிப்பிடும் போது மக்கள் கடலில் குளிப்பதுக் குறித்து.

“ஒன்பது மணிக்கெல்லாம் கடலில் சிலர் குளித்துக் கொண்டிருந்தார்கள். சீறிவரும் அலையை எதிர்கொண்டு அவர்கள் நின்றார்கள் அலை அடிக்கும் நேரத்தில் அதன்மேல் தாவிக் குதித்ததால் கடலை ஜெயித்த

பெருமிதம் அவர்களின் முகத்தில் தெரிந்தது. எதிர்த்து வரும் அலையில் கட்டுமரத்தை முன்னே தள்ளிக் கொண்டு நின்றார்கள் சில மீனவர்கள். அலை அடி அதிகமாக இருந்ததால் அவர்கள் கட்டுமரத்தை முன்னே தள்ளிக் கொண்டு போகும் போதெல்லாம் அது திருப்பிக் கொண்டு நின்றது. பெரிய அலையின் வருகைக்காக அவர்கள் கொஞ்ச நேரம் பொறுமையாக நின்றார்கள். சின்னச் சின்ன அலைகள் தான் தொடர்ந்து வந்தன. அந்த அலைகளின் அடி வேகமாகத்தான் இருந்தது. கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பது போல் அலைகள் அளவில் சிறயவைகளாக இருந்தாலும் வேகத்தில் குறைவு இல்லை. சின்ன அலைகளில் தாவிக் குதித்துக் கொண்டிருந்த இளைஞர்களுக்கு மகிழ்ச்சி அதிகமாக இருந்தது. திடீரென்று ஒரு பெரிய அலை வந்தது. அந்த அலையை எதிர்ப்பார்க்காததால் சின்ன அலையில் தாவியதைப் போலவே இந்த அலையிலும் தாவினார்கள். கடல் அலையில் அதுவும் அரப்பிக்கடல் அலையில் குளிப்பதற்கு ஒரு லாவகம் வேண்டும். சின்ன அலை என்றால் மேலே தாவி அலையின் பின்பக்கம் பாயவேண்டும். மிகவும் சின்ன அலை என்றால் குதிக்க வேண்டும். பெரிய அலை என்றால் தரையோடு தரையாக மூச்சைப் பிடித்துக் கொண்டு படுத்துக் கொள்ள வேண்டும். மிகப் பெரிய அலையின் போது குனிந்தாலும், படுத்தாலும் அலை நம்மை கடந்து போய் தரையில் அடிக்கும், பெரிய அலையின் மேல் தாவிக்குதித்தால் அது நம்மையும் சுருட்டிக் கொண்டு தரையில் அடிக்கும். சில சமயங்களில் சின்ன அலைகளின் மேல் தாவும் போது கூட காலைப் பிடித்து இழுக்கும் வேகமாக பாய்ந்தால் தப்பிக் கொள்ளலாம். (முகிலை இராச பாண்டியன், தேரிமணல் 2018, ப:44-45) என்கிறார்.

**வள்ளம்**

வள்ளம் என்று கூறும்போது நீரில் பயணிக்க, மீன்பிடிக்க பயன்படும் ஒரு நீரூர்தி ஆகும். இது பாய்மரம் படகு என்று அழைக்கப்படுகிறது. வள்ளம் பற்றி நாவலில் அழகாக காட்சிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

“வள்ளம் என்று கூறும்போது நீரில் பயணிக்க, மீன்பிடிக்க பயன்படும் ஒரு நீரூர்தி ஆகும். இது பாய்மரம் படகு என்று அழைக்கப்படுகிறது. வள்ளம் பற்றி நாவலில் அழகாக காட்சிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

“வள்ளம் புறப்படும் நேரத்தில் ஒருவர் ஓடிவந்தார். “ஏ…நிறுத்துடே……நானும் வாறேன்… என்று அவர், காலில் கிடந்த செருப்பை ஒரு கையிலும் குடையை ஒரு கயிலும் வைத்துக்கொண்டு கழியில் நின்ற தண்ணீரில் இறங்கினார். தண்ணீர் ஆழமாக இருந்ததால் வள்ளத்தைக் கொஞ்சம் கரைக்குக் கொண்டுவரச் சொன்னார்.

வேண்டா வெறுப்பாக வள்ளத்தை கரைக்கு இழுத்தார்கள். கழை போடுபவன் மூங்கிலை வள்ளத்தின் குறுக்காகப் போட்டுவிட்டு நின்றான். ஓடி வந்து ஏறியதால் கழை போடுபவருக்கு அருகே நின்று கொண்டு வந்தார் பாலையா. வள்ளத்தில் ஏறியதும் கையிலிருந்து செருப்பை மீண்டும் காலில் போட்டுக் கொண்டார். கரையில் நின்று காசு வசூலித்தவன் வள்ளத்தைத் தள்ளிக் கொண்டே வந்தான். முழங்கால் அளவு தண்ணீருக்குள் வந்ததும் தாவி வள்ளத்தில் ஏறிக் கொண்டான்.

கழை குத்துபவன், கழையை தண்ணீருக்குள் வேகமாக இறக்கினான். அது தரையைத் தொட்டதும் கழையை அப்படியே தரையில் அழுத்தினான். அந்த அழுத்தத்தால் வள்ளம் தண்ணீரில் முன்னோக்கி நகர்ந்தது. கழையைத் தண்ணீருக்கு வெளியே எடுத்தான். அதன் அடியில் ஒரு அடி நீளத்திற்கு சேறு இருந்தது. மீண்டும் மீண்டும் கழையைத் தண்ணீருக்குள் செலுத்தி வள்ளத்தை நகர்த்தினான். ஆடாமல் அசையாமல் கழியின் குறுக்காக வள்ளம் சென்றது. (முகிலை ராசபாண்டியன், தேரிமணல் 2018, பக்:10-11) என்று நாவலில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**மணல் தேரிகள்**

கடற்கரையில் சுழன்று அடிக்கும் காற்றால் மணல் சிறிய குன்றுபோல் உயர்ந்திருக்கும் அதனை மணல் தேரிகள் என்பர். அந்த மணல் தேரிகளை, காற்றாடி மரங்கள் நிறைந்த அந்தப் பகுதியைத் தாண்டி விட்டால் மணல் தேரிகள், அந்த மணல் தேரிகளை கடந்துவிட்டால் கடல்தான். மரங்களின் இடையில் வந்த தங்கக்கண்ணை யாரும் பார்க்கவில்லை. தேரிமணல் காட்டுக்குள் வந்தால் யாரும் பார்க்க முடியாது. ஒரு பனை உயரத்திற்கு இருக்கும். அந்த தேரிமணலுக்கு இடையே நடந்து சென்றால் கூட யாருக்கும் தெரியாது" (முகிலை இராசபாண்டியன், தேரிமணல் 2018, பக்:13) என்று நாவலில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்த மணல் தேரிகளைக் குறிக்கும் தேரிமணல் என்னும் சொல்தான் நாவலின் பெயராக அமைந்துள்ளது.

**முடிவுரை**

கடலில் குளிப்பது எப்படி என்பதை அறிந்து கொள்ளலாம், அந்த அளவிற்கு அனுபவித்து ரசனையோடு எழுதியுள்ளார் நாவலாசிரியர். இப்பகுதியில் கட்டுமரத்தைக் கடற்கரையில் இருந்து கடலுக்குள் இறக்குவதையும் காட்சிப்படுத்தியுள்ளார். இத்தகைய கடற்கரை புனைவுகளை கொண்ட படைப்புகளில் காணப்படுகின்ற நெய்தல் சார்ந்த செய்திகளைத் தொகுத்து ஆராயும் போது அந்நிலம் சார்ந்த பதிவுகளையும் பண்பாட்டு வழக்காறுகளையும் குறித்தான புரிதல் மேலோங்கும் என்பதை அறிய முடிகிறது.

# ஊரோடிப் பறவைகள் எஸ் ராவின் சஞ்சாரம் நாவலை முன்வைத்த ஆய்வு

**நெறியாளர் து. வேணி**
*இணைப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை, பெரியார் கலைக்கல்லூரி, கடலூர்*

**பா. சாயாதேவி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை, பெரியார் கலைக் கல்லூரி, கடலூர்*

## முன்னுரை

தற்காலத் தமிழ் புனை கதை எழுத்தாளர்களுள் இன்றியமையாதவர் எஸ் ராமகிருஷ்ணன் ஆவார். அவர் பல்வேறு சிறுகதைகள், நாவல்களள், கட்டுரைகள், மொழிபெயர்ப்பு நூல்கள், சிறார் இலக்கியங்கள் போன்றவற்றை தமிழில் அளித்துள்ளார். அவருடைய நெடுங்குறுதி நாவலுக்கு 2003 ஆம் ஆண்டு ஞான வாணி விருதும், யாமம் நாவலுக்கு 2010 ஆம் ஆண்டு தாகூர் இலக்கிய விருதும், சஞ்சாரம் நாவலுக்கு 2018 ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருதும் வழங்கப்பட்டது.

## ஆய்வுநோக்கம்

எஸ் ராமகிருஷ்ணன் தன்னுடைய படைப்புகளில் ஆண்கள் பெண்கள் சிறார்கள் மற்றும் பல்வேறு இயற்கை நிகழ்வுகளையும் சித்தரித்துக் காட்டியுள்ளார். எஸ்.ரா இயற்கை அடிப்படையாக கொண்ட ஊரோடிப் பறகைளின் வருகையில் கரிசல்குளம் கிராமத்தில் மழையின் வருகையை சஞ்சாரம் நாவலில் படம் பிடித்துக் காட்டியுள்ளதை ஆராய்வ்தே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கருதுகோள்

பழங்காலத்தில் எல்லாம் பறவைகளின் வருகையை வைத்தை நேரம் காலம் அறிதல் மழையின் வருகையை அறிதில போன்றவை இயற்கையின் வழியில் ஊரோடிப் பறவைகளின் வருகையில் மழை வருவதே ஊரோடிப் பறவைகளின் வருகையில் மழை வருவதே இக்கட்டுரையின் கருதுகோள் ஆகக் கொள்ளப்படுகிறது.

## கரிசக்குளமும் பறவைகளின் வருகையும்

கரிசக்குளத்தில் எல்லா நிலத்தையும் போலவே காலம் தவறாமல் மழை பெய்து கொண்டுதானிருக்கிறது. அதற்கு காரணம் ஊரோடிப் பறவைகளின் வருகை அவை கொக்குகள் போல வெண்ணிறமாகவும் ஆனால் கொக்கைவிடவும் நீண்ட அலகு கொண்டிருந்தன. அது போன்ற பறவையை கரிசல் வாசிகள் முன்னொரு போதும் கண்டதே இல்லை. ‘‘ஊரோடி’’ என அப்பறவையை மக்கள் அழைத்ததார்கள்.

ஊரோடிகள் யாவும் ஒரே குடும்பம் போல ஒன்றாகப் பறந்து ஒன்றாகவே தரையிறங்கக் கூடியவை அவை வானில் பறப்பது வெண்புகை மிதப்பது போலவே இருக்கும். இப்பறவைகள் எங்கிலிருந்து வருகின்றன எனத் தெரியாது. இப்பறவைகள் ஒவ்வொரு நாளும் ஒரு ஊரில் தரையிறங்கின. மற்ற பறவைகள் போல இவற்றிற்கு பயம் கிடையாது இவற்றை யாராலும் பிடிக்க முடியாது. இப்பறவைகள் வானிலிருந்து தரையிறங்கும் போது

> **“ஊராரே! ஊராரே! மண்ணு வேணுமா பொன்னுவேணுமா” எனக் கேட்டன (சஞ்சாரம் :49)**

‘‘மண்ணு’’ என்று சொன்ன ஊர்களில் மட்டுமே தரையிறங்கின.

மேலும் சம்சாரிகள் கொடுத்த நெல்லைத் தின்றுவிட்டு அந்த ஊரோடிகள் மரக்கிளையில்

நடனமாடுவதும் பாடுவதுமாக இருந்த பறவைகள் மாலையில் இவை கிளம்பிப் பறக்கையில் ''இடி இடிக்கபோகுது மழைவரப் போகுது'' என சப்தமிட்டபடியே பறந்துபோயின (சஞ்சாரம்:49)

அதன் மறுநாள் ஊரில் மழைகொட்டித் தீர்த்தது கண்மாய் கிணறுகள் நீர் நிரம்பி வழிந்தன. இவை தேவலோகத்துப் பறவைகள் என்றும் கரிசல் மக்கள் மீது அன்புகொண்டு அது பூமிக்கு வருகிறது என்றார்கள்.

இப்பறவைகள் எப்போது ஊருக்கு வரும் எனகரிசல் வாசிகள் வானத்தை அண்ணார்ந்து பார்த்த படியே அதன் குரல் கேட்கும் உண்மையில் அது ஒரு விசித்திர சங்கிதம் மெல்லிசையை பரவ விட்டபடியே தான் பறந்தன.

ஒவ்வொரு முறைவானில் இருந்து தரையிறங்கும் போது அவை ''ஊராரே! ஊராரே! மண்ணுவேணுமா பொன்னு வேணுமா? எனக்கேட்டன.

**''மண்ணு'' என ஊர்வாசிகள் ஒன்று திரண்டு சப்தமிடுவார்களா;'' (சஞ்சாரம்:50)** மண்ணு என்று கூறிய ஊர்களில் மட்டுமே அவை தரையிறங்கின.

கரிசலில் விளைச்சல் பெருகி விளைந்த கம்பும் சோளமும் பருத்தியும் நெல்லும் ஊரை வளமாக்கிவிடவே ஊர் மக்களின் இயல்பு நிலைமாற ஆரம்பித்து வறுமையில் இருந்த நாட்களைவிட வசதி வந்தவுடன் அதிகம் சண்டையிடவும் பொறமை கொள்ளவும் செய்தார்கள் வல்லடி வாக்கு வாதங்களும் பெருகின. ஆடுமாடுகள் மந்தை மந்தையாகப் பெருகியிருந்தன. கரிசல் பொங்கி வளர்ந்திருந்தது.

அதே ஊரோடிப் பறவைகள் திரும்பவும் பறந்து வந்தன. அவற்றை பெரியோர்கள் யாரும் கண்டுக்கொள்ளவேயில்லை. சிறார்கள் மட்டுமே பார்த்திருந்தனர்.

செழித்து உயர்ந்திருக்கும் கரிசலில் ஊரோடிகள் மீண்டும் வந்து ''ஊராரே! ஊராரே! மண்ணு வேணுமா பொன்னு வேணுமா'' எனக் கேட்டன சம்சாரிகள் அனைவரும் ''பொன்னுதான் வேண்டும்'' என்றார்கள் (சஞ்சாரம்:50)

ஊரில் ஒருவர் கூட மண்ணு வேண்டும் என்று கேட்கவே இல்லை. இப்பறவை மற்றும் மனிதர்களின் நிலையை உளவியல் நோக்கில் பார்க்கும் போது ''உளவியலால் நாம் பெறக்கூடிய வாழ்க்கைப் பயன்களை ஓரளவு விலக்கிவிட்டுப் பார்த்தாலுங்கூட உளவியல் ஒரு சிறந்த அறிவியல் பிரிவு என்பது புலப்படும். மனிதன் பறவைகளைப் போல் வானில் பறக்கும் திறனும் மீனினங்கைளப் போன்று ஆழ்கடலுக் கடியில் நீந்தும் திறனும் இன்று பெற்றிருந்தாலும் பிற மனிதர்களுடன் பூசல்களின்றிக் கூடிவாழும் திறனைமட்டும் இன்னுமும் முழுமையாகப் பெறவில்லை என்று கூறப்படுகிறது'' (எஸ் சந்தானம் வி.கணபதி:37:2019)

மேலும் ஊரோடிகள் ஊரின் மரத்தில் நினற் படியே ''பசிக்கு ஒரு நெல் வேணும்'' என்றன. ஊர் மக்கள் மணியில்லாத சாவி நெல் கொடுத்தார்கள். அந்த நெல்லைக் கொத்தி ஏமாந்த ஊரோடிகள் பறக்கும் போது ''இடி இடிக்காது மழைபெய்யாது'' என சொல்லியபடியே பறந்து போயின (சஞ்சாரம்:51)

ஆத்திரம் அடைந்த சம்சாரிகள் ஊரோடிகளைக் கல்லை எறிந்து விரட்டினார்கள். ஊரோடிகள் மறைந்துபோன பிறகு கரிசல் கிராமங்களுக்கு மழை வருவது நின்று போனது. ஒரு சொட்டு மேகம் கூடவில்லை பூமி வறண்டு வெடிக்க ஆரம்பித்தது. கிணறுகள் உலர்ந்து போயின. கையில் இருந்த தானியங்களை விற்றுத் தின்ற சம்சாரிகள் பிடிதானியம் இல்லாமல் கரையான் புற்றுகளைத் தோண்டி அரிசி தேடினார்கள். ஊரோடிகள் திரும்ப எப்போது வரும் என எதிர்பார்த்து வானை நோக்கி சம்சாரிகள் நின்று கொண்டிருந்தார்.

ஊரோடிகள் திரும்ப வரவே இல்லை. ஒவ்வொரு நாளும் சம்சாரிகள் காத்துக் கிடந்தார்கள். கரிசல் கிராமங்கள் நீரற்று

வெக்கையைவாறி இரைத்தது காற்று ஊர் மக்களின் நிலை உளவியல் அடிப்படையில் “ஹோப் என்பவர் ஒருவருடைய உள்ளத்தில் உள்ளுக்குள் கொண்டிருக்கும் உண்மையான குறிக்கோளையும் எதிர்பார்ப்புகளையும் குறிப்பதே அவாவு நிலை என்று கூறுகிறார்” (அ.மீனாட்சிசுந்தரம்:207:2014)

இப்படி இருக்கையில் திடிரென்று ஓர் ஊரோடி வானில் பறந்ததை பார்த்த செல்லையா ஆசாரிகை கூப்பி வணங்கி தரையிறங்கும்படி வேண்டினார். ஊர் சம்சாரிகளும் மன்றாடி தரையிறங்கும் படி வேண்டினார்கள் அப்பறவை மெல்லிய குரலில் “ஊராரே! ஊராரே! மண்ணு வேணுமா பொன்னு வேணுமா எனக்கேட்டது. “மண்ணுதான்” என்றார்கள் அது தரையிறங்கியது. அதன் முன் ஒரு பிடி நெல்லைவைத் தார்கள் கொத்தி தின்றுவிட்டு “பசியில் என்னோட இருந்த அறுபத்து மூன்று ஊரோடிகளும் இறந்து விட்ட மன. “நான் இப்ப ஒற்றை உசிரு” என்னாலே மழையைக் கொண்டுவர முடியாது. ஆனால் ஊருக்கு ஒரு சொட்டு கண்ணீரைத் தர முடியும் இதை வச்சுப் பிழைச்சிக் கோங்க என்றது”.

ஊரோடி உடனே பறந்துபோய் தன் ஒரு சொட்டு கண்ணீரை காய்ந்து நின்ற வேம்பில் விட்டது.

## முடிவுரை

ஊரார்கள் யாரும் எதிர்பாரதபடி வேம்பு துளிர்க்க ஆரம்பித்தது. அடுத்த மூன்று மாதங்களில் கிளை பரப்பி காற்றுவீச ஆரம்பித்தது. வேம்பின் காற்று எங்கிருந்தோ மழையைக் கொண்டு வந்து அவர்களைக் காப்பாற்றியது. வேம்புக் காற்றின் சிலுசிலுப்பால் கரிசலில் மழைபூமியில் இறங்கியது. ஊரோடிகளின் குரல் அந்த மண்ணில் திரும்ப கேட்கவேயில்லை ஆனால் யாரோ ஒருவயசாளி இன்னும் மண்ணு வேணுமா பொன்னு வேணுமா என்று கேட்கிற பறவையை தன் நினைவை கூறுகையில் மூதுரையில்

> **“நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்**
> **புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்-தொல் உலகில்**
> **நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு**
> **எல்லார்க்கும் பெய்யும் மழை“**

நெற்பயிருக்குப் பாய்ச்சுகின்ற நீரானது வாய்க்கால் வழியாக ஓடி அங்குள்ள புல்லுக்கும் பயன்படுகிறது. அதுபோல இந்த உலகில் நல்லவர் ஒருவர் வாழ்ந்தால் அவரை வாழ வைக்கப் பெய்யும் மழையானது ஏனைய எல்லோரையும் வாழவைக்கும் என்ற கருத்து ஊரோடி பறவைகளின் வழி புலனாகிறது (எம்.ஏ.கீர்த்தி:118:2019)

## துணைநூல் பட்டியல்

**முதன்மைச்சான்று**

1. ராமகிருஷ்ணன் எஸ்.2023 தேசாந்திரி பதிப்பகம் சாலிக்கிராமம் சென்னை சஞ்சாரம் நாவல்.

**துணைமைச் சான்று**

1. சந்தானம் எஸ்.கணபதி.வி சாந்தா பப்பளிஷர்ஸ் இராணிப்பேட்டை சென்னை கல்வி உளவியல்
2. கீர்த்தி எம்.ஏ.2019 அருணா பப்ளிகேஷன்ஸ் வடக்கு ஜெகநாத தெரு வில்லிவாக்கம் சென்னை நீதி நூல்கள்.
3. மீனாட்சிசுந்தரம் அ.2014 காவ்யமாலா பதிப்பகம் S.S.நகர் சின்னாளம்பட்டி திண்டுக்கல் கற்றல் மற்றும் மனித வளர்ச்சி உளவியல்.

# சங்க இலக்கியங்களில் இயற்கை வேளாண்மை

**முனைவர் கு. இளங்குமார்**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*இணைப்பேராசிரியர், விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி*

சங்க காலத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வையும், இயற்கையைப் பொருளாதாரப் பெருக்கத்திற்கு ஏற்பவும் மாற்றியமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். சங்க கால மக்கள் வேளாண்மையோடு இணைந்த வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதினை இலக்கியப் பதிவுகள் எடுத்துரைத்துள்ளன. சங்க இலக்கியங்களில் வேளாண்மைக்குரிய நிலமாக வன்புலம், மென்புலம் என்று இரண்டாய்ப் பாகுபடுத்தப் பட்டுள்ளன. சங்க இலக்கியத்தை ஆய்ந்த ஆய்வுகளின் தொடர்ச்சியாக அவற்றின் அடித்தளத்தில் சடங்குமுறைகள், வேளாண்மை, வேளாண்வரி அறம் உள்ளிட்டவைகளை எடுத்துரைக்கும் போக்கில் மேம்பட்டத் தன்மைகளை அறிந்து கொள்ளலாகிறது.

**வேளாண்மை**

சங்கம் மருவிய கால இலக்கியங்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என அழைக்கப்படுகின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காணப்படும் அறநூல்களான நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது. பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி ஆகியவற்றில் ஆறு இடங்களில் வேளாண்மை என்ற சொல் பயின்று வந்துள்ளது. மேலும் இனியவை நாற்பதில்,

> **"ஏருடையான் வேளாண்மை தான் இனிது"**
> **(இனிய:3.3)**

என வரும் அடிகளும்

> **"எருது தொழில் செய்யாது ஓட விடும் கடன் வேளாளர்க்கு"**

என வரும் பரிபாடல் அடிகளும் வேளாண்மை என்ற சொல்லுக்குப் "பயிர்த்தொழில் செய்தல்" என்ற பொருளினைத் தருதல் குறிப்பிடத் தக்கதாகும். சிறுபஞ்சமூலத்தில்,

> **"வையடக்கி நாளும் நாள் ஏர்போற்றி நன்புலத்து ஐந்தடக்கி (சிறு: 58:1)**

என்ற பாடல் மூலம் வேளாண் நுட்பத்தை அறிந்தவனே உழவன் பட்டம் பெறத் தகுதியுடையவன் என்று கூறுவதைக் காணலாம்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளில் உழவியலைக் குறிக்கும் "வேளாண்" என்ற சொல் வள்ளுவரால் கையாளப்படுகிறது. "உழவு" என்னும் தனி அதிகாரம் படைக்கப் பட்டிருப்பதில் இருந்து வேளாண்மையின் சிறப்பை நன்கு அறிய முடிகிறது. திருக்குறளில் நான்கு இடங்களில் வேளாண்மை என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளன.

> **"தாளாற்றித் தந்தபொருளெல்லாம் தக்கார்க்கு**
> **வேளாண்மை செய்தல் பொருட்டு"**
> **(குறள் : 613)**

என்ற குறள் வேளாண் பற்றிக் கூறுகிறது.

**சங்ககால வேளாண்மை**

சங்க காலத்தில் உணவுதேடும் முயற்சியுடைய வாழ்க்கை முறைகள் அடிப்படையாக இருந்துள்ளன. மாறிய உணவு உற்பத்தி முறைகளில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்ட காலமாக இருந்ததால், இதனால் உருவான நிலைத்தக் குடியிருப்புகளை வாழ்வியல் அறங்களை சங்கத்திணைச் சமுதாய வாழ்வு முறைகளினை எடுத்தியம்பியுள்ளன. வேளாண் பொருளாதார அசைவினை மையமாகக் கொண்டு ஒவ்வொரு திணைச் சமூதாயமும் செயல்பட்டுள்ள தினை இலக்கியப் பதிவுகள் சுட்டியுள்ளன. இவற்றில் மருத நிலம் வேளாண் சார்ந்த அறத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்தமையை பெரும்பாணாற்றுப்படை,

> **"தொல்பசி அறியாத்துளங்கா இருக்கை மல்லற் பேரூர்" (பெரும்: 253 )**

என்னும் அடிகளில் பசி அறியப்படாத ஊராக மருதநிலம் காணப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

> **"வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**
> **இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"**
> **(தொல்.பொருள் : 1579)**

என்னும் தொல்காப்பிய அடிகள் மக்களுக்கு உழுது வித்தலும், உண்பித்தலும் தவிர பிறதொழில்கள் அவர்களுக்கு இல்லை என்றுரைக்கிறது. இதன் மூலம் வேளாண் அறம்

போற்றுவதில் வேளாண மாந்தர்களுக்கு நிகர், எவரும் இல்லை என்பதை உணரலாம்.

**நீர்வளம் பெருக்குதல்**

குடபுலவியனார் என்னும் புலவர், காவிரி பாயும் சோழ நாட்டின் மன்னனான சோழன் நலங்கிள்ளியிடம் விதைத்து விட்டு வான் மழையை எதிர்நோக்கும் புன்செய் நிலமாயின் அரசன் முயற்சிக்குப் பயன்படாது. அதனால் போரை விரும்பும் செழியனே! நான் சொல்வதை ஏளனம் செய்யாமல் நிலம் நெளிந்து பள்ளமாய்க் கிடக்கும் இடங்களிலெல்லாம் நீர்நிலை பெருகும்படி தடுத்து நிறுத்தியவர் இவ்வுலகில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டவர் ஆவர். அவ்வாறு நீரைத்தடுத்து நிறுத்தாதவர் இவ்வுலகில் பதியாதவர் ஆவார். நீர் நிலைகளைப் பெருகச் செய்து உன்னை இவ்உலகில் நிலை நிறுத்திக் கொள்க என அறிவுறுத்துகிறார்.

**நிலன் நெளிமருங்கில் நீர்நிலை பெருகத்**
**தட்டோர் அம்ம, இவண்தட்டோரே;**
**தள்ளாதோர் இவண்தள்ளா தோரே**
**(புறம். 18)**

காவிரி பாயும் மருத வளநாடாகச் சோழ நாடு இருந்ததற்கு முதன்மைக்காரணம் நீர்வளம் பெருக்கியதே ஆகும். சோழ நாட்டின் பகுதிகளில் காடு திருத்தி நாடாக்கும் முயற்சிகளும், நீர்வளப் பெருக்க முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டதை,

**"காடு கொன்று நாடாக்கி**
**குளந்தொட்டு வளம்பெருக்கி**
**பிறங்கு நிலைமாடத்துறந்தை போக்கிக்**
**கோயிலொடு குடிநிறீஇ" (பட்: 283 -286)**

என்னும் பட்டினப்பாலை அடிகள் தெளிவாக்கியுள்ளன. குடிகள் அறம் ஓங்குவதற்கு அடிப்படையாக அமைவது நீர்வளப்பெருக்கமே என்பதை இதன்மூலம் அறிய முடிகிறது.

**வேளாண் சடங்குகள்**

பிறப்பு முதல் இறப்பு வரையில் வாழ்வின் எல்லா நிகழ்வுகளும் சடங்குடன் பின்னிப் பிணைந்துள்ளன என்பதினை மறுப்பதற்கில்லை. வாழ்வின் அடிப்படைத் தேவையான உணவைத் தரும் வேளாண் விளைபொருட்களும் வேளாண்மையுடன் சடங்குகளும் சடங்குடன் இணைந்துள்ளன.

**மழைச்சடங்கு**

மக்கள் சிறந்த அறத்துடன் வாழவேண்டுமெனில் நாடு செழிப்படைதல் வேண்டும். நாடு செழிப்படைய மழை வேண்டும். சங்க இலக்கிய நூல்களில் மழைக்காக பல்வேறு பலிகள், வழிபாடுகள் நடந்திருப்பதை அறிய முடிகிறது.

**அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது**
**பணைத்துபகழிப்போக்குநினைந்துகானவன்**
**அணங்கொடு நின்றது மலைவான் கொள்களனக்**
**கடவுள் ஓங்குவரை (நற்.165)**

என்ற நற்றிணை பாடலில் வானம் பொழிய வேண்டும் என அணங்குத் தெய்வத்தைத் (கொற்றவையை) வழிபட்டதை அறியலாகிறது.

**குன்றக் குறவனார்ப் பினெழிலி**
**நுண்பலழி துளிபொழியுநாட**
**நெடுவரைப் படப்பை நும்மூர்க்**
**கடுவரலருவி காணினு மழுமே(ஐங் : 251)**

எனும் ஐங்குறு நூற்றுப் பாடலிலும் மழை வேண்டிய வளச்சடங்கு பாடப்பட்டுள்ளது. குறவன் மழை வேண்டிக் கடவுளை வழிபட்டு ஆரவாரித்த போது மேகம் மழைபொழிந்த செய்தியை இப்பாடல் வாயிலாக அறியலாம்.

**தினைசடங்கு**

ஒவ்வொரு திணை நிலைச் சமுதாயத்திற்கும் ஒரு அடிப்படையான உணவுப்பொருள் உண்டு. தினை குறிஞ்சியிலும், வரகு முல்லையிலும், நெல் மருதத்திலும் அடிப்படை உணவுப் பொருள்கள் ஆகும். இந்த அடிப்படை உணவுப் பொருட்கள் அந்தந்த நிலத்தின் வளக்குறியீடுகளாக கருதப்பட்டுள்ளன.

**"மென்தினையாணர்த்துநந்துங்கொல்லோ"**
**(புறம்:119:4)**

**"வருந்தாயாணர்த்து நந்துங்கொல்லோ"**
**(புறம். 120:16)**

எனத் தினை புது வருவாயாகக் காட்டப்பட்டுள்ளது. இத்தினை சடங்குச் சூழல்களில் இடம் பெற்றுள்ளது. திருமுருகாற்றுப் படையில்,

**உருவப்பல் பூத்தூஉய், வெருவரக்**
**குருதிச் செந்தினை பரப்பி, குறமகள்**
**முருகுஇயம் நிறுத்து, முரணினர் உட்க,**
**முருகு ஆற்றுப்படுத்த உருகெழுவியல் நகர்**
**(திருமுருகு. 241- 244)**

என்னும் அடிகளில் தினையை இரத்தத்துடன் கலந்து தூவி வழிபட்ட முறைகாட்டப் பட்டுள்ளது. இரத்தம் உயிர்ச்சக்தியின் அறிகுயாகும். இரத்தத்தில் விதை நனைக்கப்பட்டால் வளரும் என்பது அக்கால மக்களின் நம்பிக்கையாக இருந்துள்ளது.

**நெல் வழிபாடு**

தினையைப் போலவே நெல்லும் சமுதாய வழிபாடுகளில் ஒருவளக் குறியீடாக இடம் பெற்றுள்ளது.

**"நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே"**

**(புறம். 335:12)**

என்னும் புறப்பாடல் புன்செய் வேளாண் சமுதாயக்குரல் மருதநிலச் சமுதாயத்தில் நெல், வழிபாட்டில் இடம் பெற்றதைக் காட்டுகிறது.

**வேளாண் வரி**

நிலம் சங்ககால அரசின் நிர்வாகத்திற்கான அடிப்படை ஆதாரமாக இருந்துள்ளது. நிலவரிகள் பற்றியகுறிப்புகள்புறநானூற்றில்

**படுவது உண்டு, பகல்ஆற்றி,**
**இனிது உருண்டசுடர் நேமி**
**முழுது ஆண்டோர் வழிகாவல! (புறம். 17:6 - 8)**

என்று பாடப்பட்டுள்ளதை அறியலாம். மக்களை சிறந்த அறத்தோடு வழிநடத்தவும், நாட்டை சிறந்த முறையில் ஆட்சி செய்யவும் வேளாண் வரிவிதித்தல் முறை சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது.

**அறிவுடைவேந்தன்நெறியறிந்துகொளினே**
**கோடியாத்து நாடு பெரிது நந்தும்**

**(புறம் 184:5 - 6)**

என்ற புறப்பாடலின் வாயிலாக அரசன் வரிதிரட்ட வேண்டிய நெறியைப் பிசிராந்தையார் அறிவுறுத்தியுள்ளார். அறிவுடைய அரசன்வரி திரட்டும் முறை தெரிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு கோடிக்கணக்கில் பொருள்களைப் பெற்றுத் தழைக்கும். அரசன் அறிவில் குறைந்தவனாகி, முறை அறியாத சுற்றத்தாரோடு ஆரவாரமாக அன்பு கெடுமாறு, நாள்தோறும் வரியைத்திரட்ட விரும்பினால், யானை புகுந்த நிலம்போலத் தானும் பயனடையாமல் உலகமும் (தன்நாடும்) கெடும்.

பழந்தமிழர் அடிப்படைத் தேவைகளுள் முதலாவதான உணவின் தேவைக்கு, அதனைச் சார்ந்த வேளாண் தொழிலைச் சிறந்த முறையில் பயன்படுத்தினர் என்பது தெளிவாகிறது. மேலும், வேளாண் குடியைக் காத்தல், இயற்கை மூலதனங்களாகிய மழை வளம் காத்தல் மற்றும் நீர்வளம் பெருக்குதல் வேளாண் விளைநிலங்களின் விரிவாக்கம் என வேளாண் மேலாண்மையில் அவர்கள் சிறந்து விளங்கியதும் இதன் வழி அறியப்படுகிறது. வேளாண் தொழிலே உலகத்துத் தொழில்களில் தலைசிறந்த தொழிலாகும். வேளாண் தொழில் மூலமே நாட்டின் செல்வ வளத்தினை பெருக்க முடியும் என்பதை பல்வேறு சங்க இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிந்துகொள்ள முடிகிறது. சங்க கால மக்கள் வேளாண்மைக்கு அதிக மதிப்புக் கொடுத்து சிறந்த அறத்தோடு நல்ல தெளிந்த மனசிந்தனையுடன் நல்வாழ்வு வாழ்ந்தமையை இலக்கியங்கள் தெளிவாக நமக்கு எடுத்துரைக்கின்றன.

# சிலப்பதிகாரப் பாத்திரப் படைப்பும் இயற்கையும்

**முனைவர் இரா. இராமகுமார்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம், கன்னியாகுமரி*

ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம் முதலாவதாக வைத்துப் போற்றப்படுகிறது. இதனை இயற்றிய இளங்கோவடிகள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பினும், இளமையிலேயே துறவு மேற்கொண்டவர். இயற்கையான வாழ்க்கையில் ஈடுபாடு மிகுந்தவர்களாக விளங்கிய அக்காலத் தமிழர்கள் மக்களுக்குரிய இயல்பான தன்மைகளைப் போற்றினர். எனவே அக்கால இலக்கியமும் இயற்கை நெறிக்கால இலக்கியமாக அமைந்திருந்தது. வட இந்தியச் சமயங்கள் புகுந்த பின் இச்சூழல் மாறிவிட்டது எனலாம். இவ்வாறு வாழ்க்கை முறை ஒரு நிலையிலிருந்து மாறி வந்த காலத்தில் எழுந்த நூலே சிலப்பதிகாரம் ஆகும். வாழ்க்கை முறை தத்துவங்கள் மாறி வந்தாலும், அக்காலத்தில் முடியாட்சி முறையே நிலவின. இச்சூழ்நிலையில் இளங்கோவடிகள் சிலப்பதிகாரப் பாத்திரப் படைப்பில் இயற்கையைக்கட்டமைக்கும் விதத்தினை ஆராய்ந்தறிவது தேவையானதாகும்.

### இயற்கை அழகுகள்

சிலப்பதிகாரத்தில் அழகுக் காட்சிகளைத் தனித்தனி ஓவியங்களாக இளங்கோவடிகள் காட்சிப்படுத்தியுள்ளார். இவ்வாறு இயற்கையைப் படைத்துக் காட்டுவதன் தன்மையைக் காப்பிய நோக்கிலிருந்து பிரித்து விட இயலாதெனினும், இயற்கை அழகினைக் கவிஞர், ஒரு சில தொடர்களில் ஒரு சில சொற்களில் கூறி தன்கற்பனைத் திறத்தை ஆங்காங்கே காட்டியுள்ளார். இவ்வாறு அவர் கற்பனைப்படக் கூறியவற்றை காப்பிய நோக்கினின்று தனிப்பட்ட நிலையிலும் காண முடிகின்றது. இவையாவும் இயற்கையை அழகுணர்ச்சியோடு நோக்கியிருக்கும் தன்மை பற்றிய பகுதி எனலாம்.

**மடல் அவிழ்கானல் கடல்விளை**
**(கடலாடுகாதை : 113)**

**தாது அவிழ்பூம்பொழில்இருந்துயான்கூறிய**
**(கடலாடுகாதை : 68).**

**புன்னை நீல் புதுமணல் பரப்பில்**
**(கடலாடுகாதை :168)**

**குயில் பொதும்பர் நீழல் குருக**
**(கனாத்திறம் உரைத்தக் காதை : 26)**

**காரணிபூம் பொழில் காவிரிப்பேர் யாற்று**
**(நாடுகாண்காதை :214)**

இவ்வாறு இயற்கையின் அழகுக்கோலப் படிமத்தை ஒன்றாக எடுத்துரைப்பது காப்பியத்தின் வளர்ச்சி நிலைக்கு உதவியுள்ளன.

### அரிஸ்டாட்டிலின் முழு உயிரி

கண்ணகியின் கற்பு மேம்பாடு, அவளுக்குக் கோயிலமைத்த செங்குட்டுவனின் வீரம், மாதவியின் காதல், கோவலனின் பண்பு, ஆகியவற்றை அடிப்படைகளாகக் கொண்டு,

**“பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்**
**தெய்வம்தெளிமின்தெளிந்தோர்ப்பேணுமின்**
**பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்**
**ஊனூண் துறமின் உயிர்க்கொலைநீங்குமின்**
**தானம் செய்ம்மின் தவம் பல தாங்குமின்**
**செய்ந்நன்றிகொல்லன் மின்தீநட்பிகழ்மின்**
**பொய்க்கரி போகன் மின்பொருண்மொழி நீங்கன் மின்**
**அறவோர்அவைக்களம்அகலாதுஅணுகுமின்**
**பிறவோர்அவைக்களம்பிழைத்துப்பெயர்மின்**
**பிறர்மனைஅஞ்சுமின்பிழையுயிர்ஓம்புமின்**
**அறமனைகாமின் அல்லவை கடிமின்**
**கள்ளும் களவும் காமமும் பொய்யும்**
**வெள்ளைக்கோட்டியும் விரகினில் ஒழிமின்**
**இளமையும்செல்வமும்யாக்கையும்நிலையா**
**உளநாள் வரையாது ஒல்லுவதொழியாது**
**செல்லும்தே எத்துக்குறு துணை தேடுமின்**
**(வரந்தருகாதை: 186 -201)**

என்ற பண்பாட்டு நோக்கோடும் காப்பியம் அமைத்துச் செல்வதால், தனிமனித வாழ்வின் இன்ப துன்பங்களும், சமூக நீதியும், பிணைந்த ஒரு உயிர்ப்பிண்டமாக சிலப்பதிகாரம் அமைந்துள்ளது. எனவே இதன் கண்ணுள்ள ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று உறுப்புப் பிணைப்பால் பிரிக்க முடியாத நிலையில் அரிஸ்டாட்டிலின் மொழியில் குறிப்பிட்டால் ஒரு முழு உயிரியாக அமைந்துள்ளது.

**பாத்திரப் படைப்பிற்கு இயற்கை துணையாதல்**

அகத்திணை, புறத்தினைக் கொள்கைக்கு ஏற்ப காப்பியம் படைக்கப்பட்டு, பின்னர் அறத்திற்குட்பட்டும் வந்த இயற்கை நவிற்சி காப்பியக்கதை நோக்கால் மேலும் வளர்ச்சி பெற்று நிற்கிறது இயற்கைப் புனைந்துரைகளைக் காப்பியக்கதைப் போக்கிற்கேற்ப அமைக்கின்ற வாய்ப்பு இளங்கோவிற்கே முதலில் வாய்த்தது என்னும் பேராசிரியர் இரா. சாரங்கபாணி கூற்றினை மறுப்பதற்கில்லை. இவ்வாறு அமைப்பது தவிர்க்க இயலாதது என்பதே வெள்ளிடை மலை. ஏனெனில் கவிஞன் காப்பியம் என்ற நிலையில் சில குறிக்கோள் நிலைகளோடு சென்று கொண்டிருக்கும் போது அவன் சொற்கள் எவையும் அவன் நோக்கிலிருந்து முற்றிலும் தனித்து விடுவதில்லை என்பதே நிதர்சனமாகும்.

காப்பியத்தின்வெற்றியானது பாத்திரங்களைக் கற்பனையாகப் படைத்து, அவற்றை நிலைநிறுத்திக் காட்டும் கவிஞனின் ஆற்றலைத் தான் சார்ந்துள்ளது என்பது காப்பியத்திறனாய் வாளர்களின் கருத்தாகும். பாத்திரப் பண்புகளை நிறுத்திக் காட்டும் ஆற்றலுக்குத் துணை செய்யும் தன்மையில் தான் இளங்கோவடிகளும் இயற்கையை எடுத்தாண்டுள்ளார்.

**கண்ணகி – அழகுப் படிமம்**

கண்ணகியின் சிறப்பினை எடுத்துரைக்கும் காப்பியமாதலின் அவளுடைய மேம்பாட்டை விளக்கும் நிலையிலேயே இயற்கையை இயற்கையை எடுத்தாளுகின்றார். அழகான, இனிய மங்கையே அவளும் என்ற ஒரு கருத்தினை நமக்கு உணர்த்த வேண்டி மனையறம் படுத்த காதையில் கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரையைத் தந்துள்ளார். அதில், மயிலினும் சிறந்த சாயலுடையவள் அன்ன நடையினும் மென்னடையாள், கிளியினும் இனிய மழலையாள் என்றும்' கோவலன் கூறுகிறான். மேலும் "மலையிடைப் பிறவாத மணி" என்று கூறுகிறான். இவ்வாறு கண்ணகியும் "எழில் நிறைந்தவளே என்று அவளுடைய அழகுப் படிமத்தைக் காட்டும் தம் கவிதை நோக்கிற்கேற்ப, இயற்கைப் பொருட்களைக் கையாண்டுள்ளார். "போதிலார் திருவினாள்" என்று முதல் காதையில் அறிமுகம் செய்து வைத்தவர் அடுத்த நிலையில் இவ்வாறு அழகுப் படிமத்தைக் காட்டுகிறார். அழகும் கற்பும் உடையவளாக அவளை அறிமுகப் படுத்திய பின் அடுத்த காதையில் அழகுப் படிமத்திற்கான வர்ணனையில் இயற்கைப் பொருட்களை உவமையாகக் கையாண்டுள்ளார். அவள் துயரம் சூழ்ந்த நிலையில் இருக்கின்ற பொழுது,

**திங்கள் வாள்முகம் சிறுவியர்ப்பு இரியச்**
**செங்கயல் நெடும்கண் அஞ்சனம் மறப்ப**
**(அந்திமாலைச் சிறப்புச் செய்காதை : 52-53)**

என்கிறார். அவள் அழகிழந்து கிடக்கும் அலங்கோலத்தை விளக்கும் போது நிலவையும் மீனையும் ஒத்தமுகமும் கண்களும் என்று அடைமொழி கொடுத்தே கூறுகிறார். இத்தகைய துயர்நிலையில் இருக்கும் கண்ணகி, கணவன் கூறியவுடன் மதுரைக்கு உடன் எழுந்தவள் வழியில் நடந்து செல்லுகின்றாள். அவள் எத்தகையவள் என்பதை விளக்க, கவிஞன், இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறான்; இயற்கையைத் துணைப்படுத்திக் கொள்கிறான்.

**"பாடகச் சீறடிபரல்பகை உழவா''**
**(நாடுகாண்காதை : 52)**

**"வெயில் நிறம் பொறாஅ மெல்லியல்"**
**(நாடுகாண் காதை : 66)**

**"படிந்தில சீறடிபரல் வெம் கானத்து''**
**(புறம்சேரி இறுத்தகாதை :4)**

**"வண்ணச்சீறடி மண்மகள் அறிந்திலள்"**
**(அடைக்கலக் காதை :138)**

இவ்வாறு கல்லையும் வெயிலையும் மண்ணையும் காட்டி அவள் மெல்லியலையும் காட்டுகிறார். இது தவிர கண்ணகியைத், தவக்கொழுந்து என்றும் கூறுகிறார். கண்ணகியின் அழகு, மெல்லியல், கற்பு மேம்பாடு ஆகிய பண்புகளை விளக்குகின்ற நோக்கில் இயற்கையையும் பயன்படுத்தியுள்ளார் இது மட்டுமல்லாது, அவளுடையளுடைய கண்களை மலருக்கும், மீனுக்கும், உவமிக்கிறார். கொடி போன்றவள் என்றும் கூறுகிறார். இவை சாதாரணமாக சிறப்பான குறிப்பு எதுவுமின்றி வந்துள்ளன.

கண்ணகியின்இயல்பைவிளக்கிடமட்டுமின்றி மதுரையை எரித்தது விட்டு உணர்ச்சிப் புயலாகச் செல்லும்போது,

**"அவல என்னாள் அவலித்து இழிதலின்**
**மிசைய என்னாள் மிசை வைத்து ஏறலின்"**
**(கட்டுரைகாதை :186 -187)**

என்று மேடு பள்ளங்களில் அவள் உணர்ச்சி வேகத்தில் ஓடுவதைக் காட்டுகிறார். மேடு பள்ளங்களில் ஓடுவதையும் அவள் துயரத்தையும் ஒருங்கே காட்டுகிறார். கண்ணகியின் கற்புக் கனலின் போக்கினை விளக்குவதிலும் இளங்கோவடிகள்இயற்கையைக்கையாண்டுள்ளார்

**மாதவி - கொடி**

அழகான, மெல்லியல் கற்புக் கனலி என மாதவியை அறிமுகம் செய்யுமிடத்து, முதலாவது அவளுடைய கண்கள், நீண்ட மலர்க்கண்கள்,

**"மாமலர் நெடுங்கண் மாதவி"**

என்று இளங்கோவடிகள் உரைக்கிறார். இத்தொடர் காப்பியத்தில் ஐந்துமுறை வந்துள்ளன. விடுவிக்க முடியாத ஆற்றலுடைய நீண்ட பெரிய கண்கள் மாதவியின் கண்கள் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

**விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்**
**வடுநீங்குசிறப்பின்தன்மனையகம்மறந்தென்**
**(அரங்கேற்றுக்காதை : 174 - 175 )**

என்று தான் கூறுவதை உறுதிப்படுத்தவே, இவ்வாறு கூறுவதன் பொருளை நாம் நன்குணரவே மாமலர் நெடுங்கண் என்கிறார். இங்கும் நெடுங்கண்ணோடு இணைந்து வரும் மாமலர், (அல்லது குவளை) கவிஞனின் படைப்புக்கு நன்கு துணை செய்கிறது. மாதவியின் கைகளை, "காந்தள் மென்விரல்'' என்று இரண்டு இடங்களில் கூறுகிறார். மாதவியின் கற்பு மேம்பாட்டைக் காட்டவும் இயற்கைப் பொருளைக் கையாளுகிறார். அதுவும் மாதவிக் கொடியையே கையாள்கிறார்.

**கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய**
**மாமலர் நெடும் கண்மாதவி போன்றிவ்**
**அருந்திறல்வேனிற்குஅலர்களைந்துஉடனே**
**வருந்தினை போலும் நீ மாதவி என்றோர்**
**பாசிலைக் குருகின் பந்தரில் பொருந்திக்**
**கோசிக மாமணிகூறக் கேட்டே**
**(புறம்சேரி இறுத்தகாதை :48 - 53)**

புறஞ்சேரியிறுத்த காதையில் வரும் இப்பாடலடிகளில், மாதவிக் கொடியைக் காட்டி மாதவியின் பெருமையை இளங்கோவடிகள் எடுத்துரைக்கிறார். கண்ணகி, மாதவி பாத்திரப்படைப்புக்களில் பெரும்பாலும் இயற்கையை உவமைகளாக அடைமொழித் தன்மையோடே கையாண்டுள்ளார்.

**கோவலன் - தென்றல்**

"மண் தேய்த்த புகழினான்" என கோவலனை இளங்கோவடிகள் அறிமுகம் செய்கிறார். அவன் புகழ் மண்ணுலகில் பரந்திருந்தது என்பதையும், அவனுடைய நகரில் அவன் மிகவும் பிரபலமானவன் என்பதையும் விளக்கவே மண் தேய்த்த என்று கூறுகின்றார். அவன் கலையுள்ளம் படைத்தவன் என்பதையும் உணர்ச்சி வயப்படும் போக்கினன் என்பதையும் காட்டிட, மனையறம் படுத்த காதையில் வரும் "குறியாக் கட்டுரை"யில் இயற்கைப் பொருட்களை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். கோவலனின் தன்மையை நன்கு விளக்கிட,

**காதல் கொழுநனைப் பிரிந்து அலரெய்தா**
**மாதர்க் கொடுங்குழை மாதவி தன்னோடு**
**இல்வளர் முல்லை மல்லிகை மயிலை**
**தாழிக் குவளைசூழ் செங்கழுநீர்**
**பயில்பூங்கோதைப்பிணையலில்பொலிந்து**
**காமக்களி மகிழ்வு எய்திக் காமர்**
**பூம்பொதிநறுவிரைப்பொழிலாட்டுஅமர்ந்து**
**நாள்மகிழ் இருக்கை நாளங்காடியிற்**
**பூமலி கானத்துப் புதுமணம் புக்குப்**
**புகையும் சாந்தும் புலராது சிறந்து**
**நகைஆடு ஆயத்துநன் மொழிதிளைத்துக்**
**குரல்வாய்ப்பாணரொடுநகரப்பரத்தரொடு**
**திரிதருமர பின்கோவலன் போல**
**இளிவாய்வண்டினொடுஇன்இளவேனிலொடு**
**மலயமாருதம் திரிதருமறுகில்**
**(இந்திர விழவு ஊர் எடுத்தகாதை :189 - 203)**

கோவலன் போல மலயமாருதம் என்று கூறுவதன் மூலம், அவனுடைய இயல்பை மிகத்தெளிவாக்கி விடுகிறார் கவிஞர்.

**நிறைவுரை**

படைப்பிற்கு அழகுணர்ச்சி தருவது இயற்கைப் புனைவுகளாகும்இப்புனைவுகள்படைப்பாளர்களின் வாழ்வியலையும் அழகுணர்ச்சியையும் சார்ந்து பிறக்கின்றன. சமூகங்கள் தங்களது நெறிமுறைகளை நிர்ணயித்துக் கொள்வதற்கான வரைவு எல்லைகளாக இயற்கைப் புனைவுகள் விளங்குகின்றன. புனைவுகள் என்பவை காலத்தின் பிடியிலிருந்து விடுபட முயலும் கனவுகள் ஆகும் என்பர். ஆகவேதான் புனைவுகள், கற்பனையான நம்பிக்கைகள் மனதில் ஒரு வித உணர்வாகிய அதிர்வலைகளை ஏற்படுத்துகின்றன என்பர். தமிழ் இலக்கிய மரபில் இயற்கைக் காட்சிகளின் மீது ஏதேனும் பொருள்பட புனைந்து பாடுவது ஒரு மரபாக விளங்கி வந்தக் காலக் கட்டத்தில் இளங்கோவடிகள் இயற்கை நிகழ்வுகள் மீது குறிப்பேற்றிப் பாடுவதை ஒரு இலக்கண அணியாகவேக் கொண்டு காப்பியத்தைப் படைத்தளித்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ஆறு, மலை, மண், பறவைகள், தாவரங்கள் முதலானவற்றின் மீது தமது கற்பனையை

உருவாக்குகிறார். அடிகள் தமது காப்பியத்தின் முடிவையும், பாத்திரங்களின் உணர்வையும் கூட இயற்கை நிகழ்வுகளின் மீது ஏற்றியுள்ளார். இளங்கோவடிகள் சிலம்பில் எத்தனையோ கதை மாந்தர்களை அறிமுகம் செய்திருப்பினும் கோவலன், கண்ணகி, மாதவி என்னும் தலைமை மாந்தர் பாத்திரப் படைப்பிற்கு இயற்கையின் துணைகொண்டு சுவைபட எடுத்துரைத்துள்ளமையை அறிய இயலுகிறது. இயற்கை வனப்பில் சிலப்பதிகார முதன்மை கதைமாந்தர்கள் காப்பிய அணிகளாக மிளிர்ந்துள்ளனர்.

# ‘ஆறுகாட்டுத் துறை’ மக்களும் கடலும்

**கு. திவ்யா**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*5/1 பால்பண்ணைத்தெரு, பள்ளபட்டி (அஞ்சல்), நிலக்கோட்டை, திண்டுக்கல்*

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழகத்தின் எல்லையை முதன்முதலில் வரையறை செய்து கூறியவர் பனம்பாரனர். அவர் வடக்கே வேங்கட மலையும் தெற்கே குமரிக்கடலையும் எல்லைகளாகக் கூறியுள்ளார். அதேபோல் இந்தியாவும் மூன்று பக்கம் கடலாலும் ஒரு பக்கம் நிலப்பரப்பாலும் சூழப்பட்ட பகுதி என்று கூறுகின்றனர். எனவே கடலே எல்லைகளில் அதிக இடத்தைப் பெற்றுள்ளது. அக்கடலைச் சார்ந்து வாழக்கூடிய மக்களைப் பரதவர், பரத்தியர், உமணர்கள், சேர்ப்பன், நுழைச்சி, நுழையன் என்றெல்லாம் சங்க இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர். அம்மக்கள் கடலோடு ஒன்றியே வாழ்க்கையை நடத்திவருகின்றனர். இவர்கள் வீணாகப் பொழுதைக் கடற்கரையில் கழிப்பது போல தெரியும் ஆனால் அவர்கள் கடலின் அருகாமையில் அமர்ந்து கொண்டே கடலின் நிறம், காற்றின் தன்மை, எந்தத் தூண்டிலில் எந்த மீன் மாட்டும் என்று ஒவ்வொரு சிறிய விசயத்தையும் கணித்துக்கொண்டே இருப்பார்கள். மேலும் அவர்களின் வாழ்க்கையில் அனைத்து நிகழ்வுகளும் கடலின்றி எதுவும் நடைபெறுவதில்லை. கடலைத்தாயாகவும் தெய்வமாகவும் மதிக்கும் குணம் ஆறுகாட்டுத் துறை மக்களிடம் இருக்கும் விதத்தை விளக்கும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.*

**முன்னுரை**

தொல் தமிழர் வரலாற்றில் குறிஞ்சிக்கு அடுத்த நிலையில் நெய்தல் நிலம் பேசப்பட்டது. குறிஞ்சி நிலமக்கள் விலங்குகளை வேட்டையாடியது போல, நெய்தல் நிலமக்களும் சுறா மீன் போன்ற மீன் வகைகளை வேட்டையாடினர். இந்நெய்தல் நிலத்தையும், அங்கு வாழும் மக்களின் செயல்கள் பற்றியும் சங்க காலத்தில் அதிகமாக எழுதப்பட்டன. அதற்குப்பின் வந்த காலங்களில் குறைவாக எழுதப்பட்டு நவீன காலத்தில் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளன. கடல்சார் மக்களின் வாழ்வியலைச் சமவெளி மக்களுக்கு எடுத்துக்காட்டும் விதமாகப் பல புதின ஆசிரியர்கள் தங்கள் படைப்பைப் படைத்து அம்மக்களின் இன்னல்களையும் வேதனைகளையும் கடலோடு பின்னிப் பிணைந்திருக்கும் வாழ்க்கையையும் எடுத்துக் காட்டுகின்றனர். அவ்வகையில் எழுதியதே சு.தமிழ்ச்செல்வியின் ‘ஆறுகாட்டுத் துறை’ புதினம். இவர் தற்பொழுது எழுதிக்கொண்டிருக்கும் பெண் எழுத்தாளர்களில் ஒருவர். ஆறுகாட்டுத்துறை மக்கள் கடலோடு இணைந்து வாழ்க்கை நடத்துவதை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

**இயற்கை சொல் விளக்கம்**

இயற்கை என்பது இயல்பானது. மனித சக்தியில்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும். இதைத் தொல்காப்பியம்,

> **“நிலம் நீர் தீ வளி விசும்பொடு ஐந்தும்**
> **கலந்த மயக்கம் உலகம்”[1]**
>
> **(தொல். மரபு.90)**

இவ்வைந்தும் இணைந்தது உலகம் என்கிறார் தொல்காப்பியர். இவர் நிலமும், பொழுதும் முதற்பொருள் என்கிறார். இவ்விரண்டின் கலப்பும் இயற்கை என்று கருதுகின்றனர்.

**கடல்**

நெய்தல் நிலமென்பது கடலும் கடல்சார்ந்த இடமும் என வரையறை செய்துள்ளனர். “கடல் என்றவுடன் நம் நினைவுக்கு வருவது என்ன? நீலப் பரப்பு, அலை, மணல்வெளி, மீன்.... மீனை உணவாகவும் கடலைக்

கேளிக்கை இடமாகவும் மட்டுமே நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்......... கடல் அனைத்துத் திணைநிலங்களின் இணைப்பான். உலகப் பருவநிலையின் ஆதார சுருதி. வெப்பச் சக்தியின் சேகரம். உலகுக்கே அமுதூட்டும் தாய். பயிர்த்தொழில், வணிகம், வழித்தடம், உலகப் பொருளாதாரம் அனைத்துக்கும் அடித்தளம். கடற்கரைகள் உலக நாகரீகத்தின் தொட்டில்கள். உலகின் 60 விழுக்காடு மக்கள் கடற்கரைப் பகுதிகளில் வாழ்பவர்கள். பெருங்கடல்களின் விந்தை மிகுந்த போக்குகளாக இங்கு நான் மூன்று பண்புகளைக் குறிப்பிட்டுச் சொல்வேன். ஒன்று அதன் பிரம்மாண்டம், இரண்டு, அதன் கணிப்புக்கு அப்பாற்பட்ட தன்மை. மூன்று, அதன் சமத்துவம் பேணும் சலனம்." [2] (1000 கடல் மையல், பக்.28,29, வறீதையா கான்ஸ்தந்து) கடலில் இருந்து மீனவர்களைப் பிரிக்கமுடியாது. கடல் அன்னையின் மடியில் தவழ்ந்து கொண்டுயிருக்கும் குழந்தைகள் மீனவர்கள். மேலும் கடலுக்குச் சமுத்திரம் என்று பெயர் உண்டு. சமுத்திரத்தை வேண்டி குழந்தைப் பிறந்ததால் இப்புதினத்தில் ஒரு கதைமாந்தருக்குச் 'சமுத்திரவல்லி' என்று பெயர் வைத்தனர்.

## புதின அறிமுகம்

சு.தமிழ்ச்செல்வி தான் பிறந்து வளர்ந்த மண்ணிற்கு அருகில் உள்ள கடலோர கிராமம் 'ஆறுகாட்டுத் துறை'. அவ்வினக்குழு மக்களிடம் காணப்படும் நிர்வாக அறம், சமுத்திரவல்லி எனும் அக்குலமகளின் இல்வாழ்க்கை அறத்தையும் இணையாக விவரிக்கும் இப்புதினம். சமவெளி மக்களுக்குப் பெரும் ஆபத்தாக மட்டுமே காட்டப்பட்ட 'கடல்' அம்மக்களின் எண்ண உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவுள்ளது. சோகம், துக்கம், மகிழ்ச்சி என்று அவர்களின் உணர்வுகளுக்கு ஏற்றார் போல கடலில் அலை வருதாகவும் வருணிக்கப்படுகிறது. மேலும் இம்மக்களுக்குக் கடல் தாயாகவும் தெய்வமாகவும் விளங்கக் கூடியது என்று ஆசிரியர் பதிவுசெய்கிறார்.

## கடலைத் தாயாக எண்ணுதல்

கடல் சார்ந்து வாழும் மீனவ மக்கள் தம் வாழ்விற்கும் சாவிற்கும் அடிப்படையாகக் கடலையே நம்புகின்றனர். அவர்களின் வாழ்வில் நன்மை, தீமை ஆகியவற்றை எதிர்கொள்ள கடல் எப்பொழுதும் துணையிருக்கும் என்றும் நம்புகின்றனர். இப்புதினத்தில் குழந்தைக்காக வேண்டிய நாட்டார், "பல ஊர்கோயில்களுக்கும் சென்று சுற்றி வர அடுத்து குழந்தை பிறக்கும் என்று நாட்டாருக்கு நம்பிக்கை இல்லை, அவருக்கு அப்போது கண்கண்ட தெய்வமாய் எதிரே நின்றிருந்தவள் கடல்தாய் தான்" (ஆ.கா.ப.41) மேலும் "என்னக்கிம் எங்களக் கைவிடாத தாயாருந்தா யாம் பொண்டாட்டி வயித்துல ஆணோ, பெண்ணோ ஒரு புள்ளய குடு" என்று மனமுருக வேண்டிக் கொண்டார். பெண்டாட்டியுடன் கடலில் மூழ்கி எழுந்து வந்தார்." (ஆ.கா.ப.41) நாட்டார் மனைவி அடுத்த மாதமே கருவுற்றாள் என்பதிலிருந்து கடலைத் தெய்வமாகக் கருதும் இவர்களுடைய மனநிலை வெளிப்படுகிறது. மேலும் "தாயே... நீ குடுத்தபுள்ள யாம் பெண்டாட்டி வயத்துக்குள்ள. யாம் பெண்டாட்டிய எனக்குக் குடுத்துரு. ஓம் புள்ளய நீ பாத்துக்க என்றவாறே கரையில் கிடந்து புரண்டாள்." (ஆ.கா.து.ப.42) நாட்டார் மனைவிக்குப் பிரசவ வலி வரவும் அனைத்து மருத்துவச்சிகளும் கைவிட்டனர். அவளைக் கடல் தாயிடம் கொண்டு வந்து சேர்த்தார். "எழுந்து வரும் அலைகள் அதிர்ந்து நிற்கும் விதமாக ஒருமுறை கத்தினாள் அவள் குழந்தை பிறந்து கடல் மடியில் விழுந்து அழுதது. பிள்ளையும் பெண்டாட்டியும் பிழைத்துவிட்ட சந்தோசத்தில் கூத்தாடினர் நாட்டார். அவரோடு சேர்ந்து இன்னும் நான்கைந்துபேர் கடலை வணங்கி கன்னத்தில் போட்டுக் கொண்டனர்." (ஆ.கா.து.ப.42) இதிலிருந்து கடல் அவர்களுக்கு வேண்டுவதைக் கொடுக்கக் கூடிய அமுதசுரபியாகவும் அன்னையாகவும் தெய்வமாகவும் காட்சியளிக்கிறது.

சமுத்திரவல்லி சாமுவேல் காதல் செய்யும்போது ‘‘சமுத்திரவல்லி, என்றவாறே அவள் கையைப் பற்றினான். எப்போதென்று காத்திருந்தவளைப் போல அவன் தோள் சாய்ந்தால் சமுத்திரவல்லி. அவர்களை ஆசிர்வதிக்கும் விதமாக அலை மேலேழுந்து வந்தது.’’ (ஆ.கா.து.ப.34) இதிலிருந்து அலைகளின் உணர்வும் அவர்களின் உணர்வும் ஒன்றியிருப்பதை அறியமுடிகிறது. சாமுவேல் வேளா மீன் வேட்டைக்குச் செல்லவிடாமல் சமுத்திரவள்ளி தடுத்தாள். ‘‘கடல் தாயிக்கிட்ட கையேந்துனா அவ அள்ளி அள்ளிக் குடுப்பா. ஆனா பழிவாங்குற எண்ணத்தோட எறங்குனா நம்பள காவு வாங்கிடமாட்டாளா? …… கடல் தாயோட எண்ணத்துக்கு மாறா இன்னொரு தடவ சிந்திக்காத’’ (ஆ.கா.ப.43) கடல் தாம் எண்ணத்தின் வெளிப்பாடாக இருப்பதைப் புதினம் எடுத்தியம்புகிறது.

சமுத்திரவல்லி சாமுவேலை திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்று நாட்டார் வீட்டை விட்டு வந்துவிட்டாள். அப்போது தான் செய்தது தவறே என்று நினைக்கும் போது “கடல் அவளின் பெயரைச் சொல்லி கூப்பிடுவதுபோல கேட்டது அவளுக்கு. கடலின்மீது அளவுக்கதிமான வாஞ்சையும் ஒரு வித பாசமும் ஏற்பட்டது. நம்மை ஊரில் உள்ள எல்லோரும் கைவிட்டாலும் இந்தக் கடல்தாய் கைவிட மாட்டாள் என்று தோன்றியது.” (ஆ.கா.து.ப.126) மேலும் “அம்மா தாயே சமுத்திரதேவி என்னைக் காப்பாத்தம்மா’ என்று மனமுருக வேண்டிக்கொண்டாள்.” (ஆ.கா.ப.127) சமுத்திரவல்லிக்குக் குழந்தை பிறந்தவுடன் ‘‘சமுத்திரவல்லியை நாட்டாரும், ஊரும் சேர்த்துக் கொண்டதால் சமுத்திராதேவி குளுந்து போய் அள்ளிக்கொடுத்ததாய் இன்னும் சிலர் பேசிக் கொண்டார்கள்.’’ (ஆ.கா.ப.193) ஊர்விலக்கம் செய்த சமுத்திர வல்லியை அனைவரும் ஏற்றுக்கொண்டதால் கடல் மகிழ்ச்சியடைந்து அம்மக்களுக்கு வேண்டுவனவற்றைத் தந்து மகிழ்வித்தது என்று எண்ணத்தின் வெளிப்பாடாக ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

### கடல் மேல் சத்தியம்

சாமுவேல் ‘‘நான் இந்த கடல் தாயி மேல சத்தியம் பண்ணி ஒரு விஷயத்தச் சொல்லுறன் கேட்டுக்கிடுங்க மாமா. …….. நான் சமுத்திரவல்லியைத் தவிர இந்த ஜென்மத்தல வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்கிட மாட்டன்’’ (ஆ.கா.பக்.98,99) என்று கூறுகிறான். சமுத்திரவல்லி சாமுவேலைக் காதலித்ததைப் பற்றி பிறர் கூறுவதைக் கேட்டு, ‘‘நீங்க சொல்லுறது மட்டும் உண்மயாருந்தா நாம் பொறந்த ஆயா அப்பம் மேல சத்தியமா, இந்த ஆறுகாட்டுத்தொற மேல சத்தியமா பொங்கிவர்ற இந்த சமுத்திராதேவி மேல சத்தியமா சொல்லுறன். மீனு கீறுற இந்த அம்முகத்தியாலயே கொத்தி கூறுபோட்டு கடல்சுறாவுக்கு எறயாப் போடுறனா இல்லயா பாருங்க’’. (ஆ.கா.ப.106) என்று ஆவேசமடைகிறார் நாட்டார். சமுத்திர வல்லியின் நடத்தை மீது கொண்டிருக்கும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு அவர் இவ்வாறு சத்தியம் செய்கிறார். ‘‘கடல்தாயி மேல சத்தியமாச் சொல்லுறன் மாமா. இனிமே சமுத்திரவல்லிய கண்ணு கலங்கவுடாம பாத்துக்குவன். எனக்கு அதுதான் முக்கியம் என்றான்.’’ சாமுவேல் (ஆ.கா.ப.292) என்று தன்னை நம்பி வந்த பெண்ணைக் காப்பாற்றுவதாகத் தன் மாமாவிடம் உறுதியளிக்கின்றான் சாமுவேல்.

### உணவுப்பழக்கம்

கடல் சார்ந்த மக்களிடம் மீன் உணவு முதன்மையாகக் காணப்படுகிறது. கடலிலிருந்து பெறப்படும் மீனும் கருவாடும் மீனவர்களின் வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கிறது. மீனவர் வாழ்வில் ‘‘சைவ உணவு அதிகம் இடம் பெறுவதில்லை. இவர்களின் கடின உழைப்பிற்கு மீன் வகை உணவே அவசியமாக அமைகிறது’’

(கிருஷ்ணமூர்த்தி, மீனவர் வாழ்வியல், ப.104,) என்று கிருஷ்ணமூர்த்தி கூறுகிறார். இப்புதினத்தில் சுப்பு, வீரா, சாமுவேல், கடலுக்குப் போயிருக்கும் போது “ வீரா கஞ்சிக்கலயத்த எடுத்தா ஆளுக்கு நாலு திம்பம் என்றார் சுப்பு. நான்கு பேருக்கும் போதுமான சாப்பாடு வீரன் வீட்டிலிருந்து வந்திருந்தது. தண்ணீர் ஊற்றிய சோறும் தொட்டுக்கொள்ள புளி ஊற்றி அவித்த மீனுமாய் எடுத்துக் கொண்டு வந்திருந்தான்.” (ஆ.து.ப.47) இதேபோல் தாங்கள் சமைத்த உணவினை வருகின்ற விருந்தினர்களும் கொடுத்து மகிழ்ந்தனர். சங்கஇலக்கியத்தில் நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணற்றுப்படை.

**“பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்**
**கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற்**
**கோமான்......**
**றளையவிழ் தெரியற் றகையோற் பாடி**
**யறற்குழற் பாணி தூங்கி யவரொடு**
**வறற்குழற் சூட்டின் வயின்வயிற்**
**பெறுகுவிர்.”** [3] **(சிறு.பா. அடி. 160-163)**

மீனவர்கள் தங்கள் பிடித்து வந்த மீன்களை விற்கும் போது பெண்கள் ஏலமெடுப்பர். ஏலமெடுத்த மீனவப் பெண்கள் தலைச்சுமடாகத் தூக்கிச் சென்று சமவெளி மக்களிடம் மீனைவிற்று பண்டமாற்றாகத் தானியங்கள், அரிசி இவற்றைப்பெற்று வருவர்.

**மீன் மருத்துவம்**

மீன் உணவாக மட்டும் பயன்படுத்தாமல் மருந்தாகவும் பயன்படுத்துகின்றனர். சமுத்திரவல்லி கர்ப்பிணியாக இருந்தபோது “வெள்ளை வெள்ளையாய் பெரிய சௌவரிபோல இருந்தது மீன் முட்டை. இதுபோன்ற சினை முட்டைகள் பெரிய கெளுத்தி மீன்களில் மட்டும் தான் இருக்கும். மற்ற மீன்களின் சினை மஞ்சளாய் ரவையைப் போலிருக்கும். பிள்ளைத்தாச்சிப் பெண் இதுபோன்ற முட்டை சாப்பிட்டால் உடம்புக்கு வலுவென்று கூறி சுப்புவின் பெண்டாட்டி கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போயிருந்தாள்.” (ஆறு.கா.ப.161) உடலுக்கு வலுச்சேர்க்கும் விதம் பற்றி தெரிந்து கொள்ளமுடிகிறது.

**படையல் போடுதல்**

‘ஆறுகாட்டுத்துறை’ புதினத்தில் புதுப்படகு வாங்கி அதற்குப் படையல் போட்டுக் கடலுக்கு அனுப்பும் பழக்கம் இருந்து வந்ததை “படகுகளுக்கு முன்னதாகவே சந்தனப் பொட்டு வைத்து வண்ண வண்ண தாள்களையும் ஒட்டி அழகு செய்திருந்தார்கள். படகின் உச்சியில் ஏழு வண்ணத்துணிகளிலும் கொடி தைத்துப் பறக்கவிட்டிருந்தனர்”. (ஆ.கா.து.ப.51) “சனங்களெல்லாம் கூடியிருக்கும் கரையில் படையலைப் போடச் சொன்னார் நாட்டார்...... தொழிலுக்கு எடுத்து போகும் வலைகளையும் கஞ்சி கலயங்களையும் வைத்து பெரிதாய் படையல் போட்டார்கள்.” (ஆ.கா.து.ப. 51) மேலும் புதுப்படகை அலங்கரித்துச் சாம்பிராணி போட்டுத் தேங்காய் உடைத்துக் கற்பூரம் ஏற்றி, மாலை அணிவித்தார்கள். ஆறுகாட்டுத் துறையில் ராசியான பெண் என்று நம்பக் கூடிய சமுத்திரவல்லியை அழைத்து ஒவ்வொரு படகிலும் ஏறச் சொல்கிறார்கள். அப்பொழுது அனைத்துப் படகிலும் அதிக மீன்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

**அடப்பங்கொடியில் மீன்பிடி**

மீன்பிடித்தல் தொழிலில் ஈடுபடுவோரில் கடற்கரை சார்ந்த பகுதிகளில் வந்து குடியேறி அத்தொழிலில் ஈடுவோராக ‘ஆறுகாட்டுத் துறை’ புதினத்தில் படையாச்சி சமூகத்தினர் குறிக்கப்படுகின்றனர். “படையாச்சிங்க மீன் புடிக்கிறவங்க இல்லதான? அப்பறம் எப்படி இந்தத் தொழிலுக்கு வந்தியளாம்” (ஆறுகாட்டு, .ப.73) என்று கேட்கும் சாமுவேலுக்குச் சுப்பு படையாச்சிகளின் சொந்த ஊர் வேதாரண்யம் பக்கம் என்றும் அச்சமூகத்தினர் உணவுக்காக

மீன் பிடித்து அதைத் தின்று ருசி கண்டதால் மீன்பிடித்து பழக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. வலை வைத்து மீன்பிடிப்பதற்கு முன்னால் அடப்பங்கொடியை (நெய்தல் திணைக்குரிய கொடி) வைத்து மீன்பிடிக்கின்றனர். ''வலகில எதுவுமில்லாம மீன் புடிக்க முடியுமா காட்டுல கெடந்த அடப்பங்கொடிய புடுங்கியாந்து போட்டு மீன் புடுச்சாய்ங்களாம்'' (ஆறுகாட்டு. ப.75) முதன் முதலில் இயற்கையில் கிடைத்த கொடிகளை வைத்து மீன் பிடிக்க கற்றுக் கொண்ட செய்தியினை அறியமுடிகிறது.

## முடிவுரை

ஆறுகாட்டுத் துறையில் மீன் பிடித்து வாழும் மக்கள் கடலோடு இணைந்தே வாழ்கின்றனர். தங்களின் சுகதுக்கங்களைக் கடல் பிரதிபலிப்பதாக நம்புகின்றனர். ஆரம்பத்தில் இயற்கையில் கிடைக்கக்கூடிய செடி கொடிகளில் மீன்பிடித்துப் பழகிய மக்கள் நவீன காலங்களுக்கு ஏற்ப தங்கள் தொழிற்கருவிகளை மாற்றிக்கொண்டு வருகின்றனர். நெய்தல் நில வாழ்வுக்கு நேற்றை நினைத்து வருத்தமும் இல்லை. நாளை நினைத்து பயமும் இல்லை. இன்றைய பொழுதை முழுமையாய் வாழ்ந்து விடுவது மட்டுமே மீனவனது இலக்கு. இயற்கையோடு ஒன்றியே வாழக்கூடிய மனிதர்களாக அனைவரும் இருந்தாலும் கடலோடிகள் வாழ்வு கடல் என்ற பேரெல்லையைச் சார்ந்தே வாழ்வதாக அமைகிறது என்பதை 'ஆறுகாட்டுத் துறை' புதினம் சித்தரிக்கிறது.

## துணைநூற்பட்டியல்

1. சுப்பிரமணியன்.ச.வே.சு, சங்கஇலக்கியம், பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 600021, முதற்பதிப்பு 2010.
2. தமிழண்ணல், தொல்காப்பியம், மீனாட்சி புத்தக நிலையம், 48 தானப்ப முதலி தெரு, மதுரை 025001, முதற்பதிப்பு 2008.
3. வறீதையா கான்ஸ்தந்தின், 1000 கடல் மைல் கடல் பழங்குடிகளும் ஒக்கிப் பேரிடரும், தடாகம் கடல்வெளி, 112, திருவள்ளுவர் சாலை, சென்னை 600041, முதற்பதிப்பு 2018.

# மு. தங்கராசன் கவிதைகளில் இயற்கை

**நா. இளமாறன்**
*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)*
*அரசு கலைக்கல்லூரி மேலூர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

**முனைவர். பா. சிங்கார வேலன்**
*இணைப் பேராசிரியர்*
*தமிழ்த்துறைத் தலைவர், அரசு கலைக்கல்லூரி மேலூர், மதுரை*

**ஆய்வுச் சுருக்கம்**

*மு. தங்கராசன் அவர்களின் கவிதைகளில் உள்ள இயற்கைக் கூறுகளை ஆராய்வதே ஆய்வின் முக்கிய நோக்கமாகும். வான்மழை பற்றியும், அதன் விளைகள் பற்றியும், அதனை நாம் எவ்வாறு மாசுபடுத்தாமல் பாதுகாப்பது என்பதை பற்றியும் ஆராயப்படுகிறது. சூரியன் அதன் தன்மைகள் எவ்வாறு உள்ளது. காற்று மற்றும் காற்றின் தன்மைகள் காற்றுக்கும் மனிதனுக்குமான தொடர்பு பற்றியும் இயற்கையோடு இணைந்த வாழ்வை வாழ வேண்டும் என்று இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளது.*

## முன்னுரை

**“இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம்”** என்பது இயற்கைப் பற்றிய அழகிய பொன்மொழி. இப்பூமியானது இயற்கையின் கொடைகளால் நிறைந்துள்ளது. இயற்கை இல்லாமல் மனிதனால் வாழ முடியாது. நாம் அருந்துகின்ற நீரில் இருந்து உண்ணுகின்ற உணவு வரை அனைத்தும் இயற்கையில் இருந்தே கிடைக்கிறது. அதாவது இயற்கை உணவு, இயற்கை விவசாயம், இயற்கை மருத்துவம் போன்றவற்றினைப் பயன்படுத்துவதையும் காணலாம். இயற்கையின் சிறப்பையும் அதனை காக்க வேண்டியதின் அவசியத்தையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இயற்கையின் இனிமை

பரந்து விரிந்த இந்த பூமி நான்கு பக்கங்களாலும் சூழப்பட்ட கடல், பச்சை பசேல் என அடர்ந்த காடுகள், சல சல என ஓடிக்கொண்டிருக்கும் நதிகள் மற்றும் விலங்குகள், பறவைகள் இவை அனைத்து வாழ்வதற்குத் தேவையான பஞ்ச பூதங்களான நீர், காற்று, நிலம், தீ, ஆகாயம் போன்றவற்றினையும் இந்த இயற்கை நமக்கு அள்ளித் தருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இதனை தொல்காப்பியர்,

**“நிலம், நீர், தீ, வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்.”**

**(தொல்காப்பியம், பொருள் அதிகாரம், மரபியல் : 91)**

என்று மரபியலில் ஐம்பூதங்களின் கலவையே உலகம். இந்தக் கருத்தை எந்த அறிவியலும் இல்லாத காலத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட தொல்காப்பிய இலக்கண நூலில் நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்ற ஐந்தும் கலந்த மயக்கமே உலகம் என்று தொல்காப்பியர் கூறுகிறார். இவ்வளவு சிறப்புமிக்க இயற்கையை நாம் பாதுகாக்கிறோமா? நாம் இன்று இயற்கையை விடுத்து செயற்கைக்கு மாறி பல இன்னல்களை அனுபவித்து வருகிறோம். மரங்களை அழித்து விட்டு மனைகளாக ஆக்கிவிட்டு மரம் வளர்ப்பு பற்றி பாடம் எடுக்கிறோம். இதனைச் சாடிய கவிஞர் மு. தங்கராசன்,

**“செயற்கையில் உறைந்து தோய்ந்து**
**சிதைந்திடும் பண்பு மாய்ந்து**
**இயற்கையாய்ச் சூழ்ந்து மேவும்**
**எழில்மிகு காட்சி கண்டு**
**இயற்கையில் படிந்து நெஞ்சம்**
**இணைந்திடும் இயல்பை கொண்டால்**
**வயப்படும் அமைதி சூழும்”.**
**(மு. தங்கராசன், உதயம், பக்: 26)**

இவ்வாறு இயற்கையோடு இயைந்த வாழ்வை நாம் மேற்கொண்டால் எழில்மிகு காட்சிகள் நம் மனதில் எழும். நெஞ்சம் அமைதி கொள்ளும், வாழ்வு மேம்படும் என்று கவிஞர் தம் உதயம் என்ற கவிதை நூலில் அழகாக எடுத்தியம்புகிறார்.

**இயற்கையும் மனிதனும்**

அண்டத்தில் உள்ள அனைத்து பல்பொருள் ஆற்றல்கள் உயிரினங்கள், மனிதன் மற்றும் அவனுடைய செயல்பாடுகள் உள்ளிட்ட அனைத்திற்கும் உரிய ஒரு பொதுவான சொல் **‘இயற்கை’**. இயற்கைக்கு தொடக்கம் முடிவு என்பது இல்லை. ஆனால் மனிதனுக்கோ தொடக்கமும் முடிவும் உண்டு. இவ்வுலகில் பிறப்பு என்ற ஒன்றுக்குப் பின் இறப்பு என்பதும் நிச்சயமாக உண்டு என்பதை கவிஞர்,

**“பிறப்பென்றால் இவ்வுலகில் பிறந்து வந்த**
**பிறப்புயிர்கள் என்றேனும் பிரிந்து செல்லும்”.**
**(மு. தங்கராசன் மாதுளங்கனி, பக்: 138)**

என்று, கவிஞர் தன்னுடைய வரிகளால் இயற்கைத் தன்மையை ஆழமாக வலியுறுத்துகிறார்.

**உள்ளதும் உருவாவதும்**

மனித மனத்தில் இயல்பாகக் கிளர்ந்தெழும் உணர்வுகளே இருப்பதாகும் அவ்வாறு எழும் உணர்வுகளில் நல்லவனற்றை மட்டும் பெருக்கி அல்லாதனவற்றை நீக்கி நல் மனிதனாக மாற்றம் பெறுவது உருவாவதாகும். கருவிலே திருப்பெற்றுக் கனிவாருமுண்டு காலத்தால் படிப்படியாய்க் கனிந்திடுவாருமுண்டு, இதனைக் கவிஞர் இயற்கையின் மூலம் தெளிவுறுத்துகிறார்.

**“ஒரு செடியில் பூத்தவிரு மலர்கள் ஒன்றாய்**
**உருவாக்கம் பெற்றிங்கு உறைந்தாலுந்தன்**
**உறுமலரைப் “பறிக்கின்றான்” ஒருவன் மற்றும்**
**ஒருமலரைக் “கொய்கின்றான்” ஒருவன் என்றால்**
**திருவுடனே கிள்ளியெடுத்திட்ட பூவே**
**தெய்வத்தின் திருவடியில் சேரக் காண்போம்**
**செறுக்குற்றார் கைப்பிடியில் செறிந்து தோய்ந்த**
**செழுமலர்ச்சி அழிந்தமலர் சேற்றுக் கேகும்!”**
**(மு. தங்கராசன், உதயம், பக்: 145)**

என்று ஒரு செடியில் பூத்த மலர்களே கடவுள் வழிபாட்டிற்கும் கழிசாக்கடைக்கும் போகின்ற விசித்திரத்தை, தம் உதயம் என்ற கவிதை நூலில் மலரைக் கொண்டு வெளிப்படுத்தியிருப்பதைக் காண முடிகின்றது.

**காற்றும் மனிதனும்**

**“தெற்கிலிருந்து வீசும் காற்றுக்குத் தென்றல்”** என்று பெயர். வடக்கிலிருந்து வீசும் காற்றுக்கு வாடை என்று பெயர். தென்றல் இதமாக இருக்கும். வாடைக் காற்று உடல்நலக் குறைவை உண்டாக்கும். இதே போல் மனிதன் அறம், ஒழுக்கம் என்ற நிலைகளில் இருந்து பிறழும் போது, பல தீங்குகளை இச்சமுதாயத்திற்கு உண்டாக்குகின்றான் என்பதை

**“தெற்கிலிருந்து வீசுகின்ற தென்றற் காற்று**
**திசைமாறித் தவழ்ந்திடுபோ தென்ன வாகும்**
**நற்சுகமாய் அமைந்திடுமோ? நாடாத் தேற்றம்**
**நனிவாடைக் குளிராகும் நலத்துக் கூற்றம்!”**
**(மு. தங்கராசன், உதயம் பக் : 144)**

என்று கவிஞர் காற்றின் மூலம், உதயம் என்ற கவிதை நூலில் எடுத்தியம்புகிறார்.

**இயற்கை ஒருமைப்பாடு**

மனிதன் இயற்கையை அழிக்காமல் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தால்

மட்டுமே இவ்வுலகம் நிலைபெறும், மக்களின் வாழ்க்கை வளம்பெறும். பல்வகை உயிரினத் தன்மை இப்பூமியில் நிலைபெறும். மக்களின் மனங்களில் அமைதி சூழும். மகிழ்ச்சி பெருகும் என்பதை,

**"இயற்கையில் படிந்து நெஞ்சம்**
**இணைந்திடும் இயல்பைக் கொண்டால்**
**வயப்படும் அமைதி சூழும்"**

**(மு. தங்கராசன் உதயம் பக் : 26)**

என்று கவிஞர் மு. தங்கராசன் தனது எளிய வரிகளில் அழகாக எடுத்துரைக்கிறார். நீருக்கும் மீனுக்கும் உள்ள தொடர்புதான் மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பு. நீர் மாசுபட்டால் மீன் இனம் அழிந்து போகும். இயற்கை மாசுபட்டால் மனித இனம் மறைந்து போகும். அவ்வாறில்லாமல் எல்லா உயிர்கள் மீது அன்பு கொண்டு வாழ வேண்டும். இதனை வள்ளலார்,

**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்"** என்று உரைத்துள்ளார்

**(இராமலிங்க அடிகள், திருவருட்பா, (பக் : 62) தமிழ் இணைய கல்விக்கழகம்)**

இக்கருத்தினை பாரதியும்,

**"மண்மீதுள்ள மக்கள் பறவைகள்**
**விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்**
**யாவும்மென் வினையால் இடும்பை தீர்த்தே**
**இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே**
**செய்தல் வேண்டும் தேவ தேவா"**

**(பா. சரவணன், பாரதி வியத்தகு ஆளுமை பக் : 105)**

என்று ஓரறிவு முதல் ஆறறிவு உள்ள உயிர்கள் வரை அனைத்தும் இன்பமாக வாழ வேண்டும் என்று நினைக்கும் மனதைக் கொண்டு நாம் அனைவரும் வாழ்ந்தால் இவ்வுலகில் அன்பு பெருகும், அமைதி சூழும், அறம் தழைக்கும் என்று மகாகவியும் விரும்புகிறார்.

**நீரின்றி அமையாது உலகு**

மனிதன் வாழ இன்றியமையாதது தண்ணீர் ஆகும். தண்ணீர் இல்லாத ஒரு நாளை யோசித்துப் பாருங்கள்! எவ்வளவு கொடுமையானது அந்த நிலை. நம் உடலைத் தூய்மையாக்கவும், நம் உயிர் ஆற்றலுக்கும், உணவு விளைவிக்கவும் இன்றியமையாததாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சோழ மன்னன் கரிகாலனைப் பற்றி நாம் இன்றும் நினைத்துப் பார்க்கிறோம் என்றால், அவர் கட்டிய கல்லணைதான் அதற்குக் காரணம் ஆகும். இதிலிருந்து நீரின் இன்றியமையாமையை நாம் உணர்ந்து கொள்ள முடியும், பன்முகக் கவிஞர் மு. தங்கராசன் அவர்களும் நீரின் மேன்மையை தனது கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

**"வான்மழை பெய்தால் ஈரம்**
**வளர்புவி தழைக்கக் காண்போம்.**
**கான்மழை ஈரம் தானும்**
**கனிவிளை வாகப் போமோ!"**

**(மு. தங்கராசன் பனித்துளிகள் பக் : 96)**

என்று இவ்வுலகிற்கு வான்மழை எவ்வளவு முக்கியம் என்றும் அதனால் தான் இப்புவி தழைத்து வாழ்கிறது என்றும் காய்கனிகள் விளைகின்றன என்றும் விளக்குகிறார். இதனையே புறநானூற்றுப் புலவர் குடபுலவியனார் உணவு எனப்படுவது, நிலத்துடன் நீரைத் தருவதே ஆகும் என்கிறார். நிலையான புகழைப் பெற விரும்பும் அரசன் நீர் நிலைகளைப் பெருக்கச் செய்ய வேண்டும் என்றுரைக்கிறார்.

**"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!"**
**உணவெனப்படுவது நிலத்தொடு நீரே**
**நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசினோரே!"**

**உரை, மாணிக்கவாசகர், புறம், - (18-23) பக் -31**

என்று புறநானூற்றில் தனது ஆழமான வரிகளால் குடபுலவியனார் விளக்குகிறார்.

### இயற்கைப் பேரின்பம்

சூரியனின் இளங்கதிர்கள் இவ்வுலகம் முழுவதும் பொழிந்து இவ்வுலக உயிர்கள் அனைத்திற்கும் அமைதியான வளர்ச்சியைத் தந்து இவ்வுலக மனங்களை மகிழ்ச்சியாய் அமைப்பது சூரியன். அதன் இயற்கைத் தன்மையை மு. தங்கராசன் அவர்கள்,

**"அத்தமிக்கும் சூரியனின்**
**அந்தகாரப் பொன்னமைதி**
**இத்தரைக்கும் இணைந்து வந்து**
**இயற்கை தரும் பேரின்பம்"**

**(மு. தங்கராசன், மாதுளங்கனி பக் - 14)**

என்று ஞாயிற்றின் தன்மையை எளிமையாக விளக்குகிறார். முதற்காப்பியமான சிலப்பதிகாரத்தில் கடவுள் வாழ்த்தாக இயற்கையைப் போற்றலே அமைந்துள்ளது.

**"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றதும்"**

என நிலவை வாழத்தியும்

**"ஞாயிறு போற்றதும் ஞாயிறு போற்றுதும்"**

**(சிலப்பதிகாரம், உரை - ந.மு. வேங்கடசாமி நாட்டார் பக் : 21)**

என சூரியனைப் போற்றியும், இளங்கோவடிகள் புகார்க் காண்டம், மங்கல வாழ்த்துப் பாடலில் இயற்கையை வாழ்த்திப் பாடியுள்ளார்.

### இயற்கைக் கவிஞர் மு. தங்கராசன்

மலர்களைப் பிடிக்காதவர் இவ்வுலகில் எவருமில்லை. மலர்களில் தான் எத்தனை! மணங்கள் எத்தனை! எத்தனை, வண்ணங்கள், சங்கப்புலவர் கபிலர் தம் குறிஞ்சிப் பாட்டு என்ற நூலில் 99 வகையான மலர்களைச் சுட்டியுள்ளார். ஆசிரியர் மு. தங்கராசன் அவர்கள் ஒரு பன்முகப் படைப்பாளர். அவர் எழுதிய கவிதை நூல்கள், சிறுகதை நூல்கள், நாடக நூல்கள் என அனைத்திற்கும் மலர்களின் பெயரையும் இயற்கையின் பெயரையுமே தலைப்பாகச் சூட்டியுள்ளார். இயற்கை மீது அளவில்லாப் பற்றுக் கொண்டவர் நம் கவிஞர் மு. தங்கராசன். அவரின் படைப்புகளின் தலைப்புகள் சில,

- மகரந்தம்
- பொய்கைப் பூக்கள்
- நித்திலப் பூக்கள்
- வாகைப் பூக்கள்
- சூரியகாந்தி
- பனித்துளிகள்

இவை ஆசிரியரின் கவிதை நூல்களாகும்.

- பூச்செண்டு
- சாதனைப் பூக்கள்
- மலர்க்கொத்து
- மலர்க்கூடை
- மணங்களும் பூக்கள்
- கற்பனை மலர்கள்
- மணக்கும் மல்லிகை

இவை ஆசிரியரின் சிறுகதை நூல்களாகும்.

- தாழம்பூ
- தாமரைப்பூ இவை ஆசிரியரின் கட்டுரைத் தொகுப்பாகும். இதிலிருந்து கவிஞர் இயற்கை மீது கொண்டுள்ள ஆர்வமும், பற்றும் நம்மை வியக்கச் செய்கின்றன.

### முடிவுரை

இயற்கை பற்றியும் இயற்கை மூலங்கள் பற்றியும், விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் இயற்கை மூலங்களான நீர், காற்று போன்றவற்றை நாம் மாசு படுத்தாமல் தூய்மையான வாழ்க்கையை, நோய்கள் அற்ற வாழ்க்கையை வாழ்ந்து, தூய்மையான இயற்கையை நமது சந்ததிகளுக்கும் வழங்குவோம் என உறுதியேற்போம்.

### தொகுப்புரை

இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம், இயற்கையானது பன்முக வடிவங்களில் நமக்கு பயன்பட்டு வருகிறது. நாம் உண்ணும் உணவு, பருகும் நீர், சுவாசிக்கும் காற்று என அனைத்தும் இயற்கை நமக்கு ஈந்த கொடையே அக்கொடைகளை அழிக்காமல் பாதுகாத்து அடுத்த

தலைமுறைக்குக் கடத்துவதே நம் தலையாயக் கடமையாகும் என்பது இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. மு. தங்கராசன் அவர்கள் கூறிய இயற்கைச் சான்றுகள் மூலம் இயற்கையை பாதுகாப்பதன் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது. மேலும் உதவிக்காக சிலப்பதிகாரம், புறநானூறு, திருவருட்பா, போன்றவற்றில் உள்ள செய்திகளும் எடுத்தாளப்பட்டு இயற்கையின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்பு**


1. தொல்காப்பியம், ச. திருஞான சம்பந்தம், பக் : 381, நூற் : 635 ஜீன் - 2020, கதிர்பதிப்பகம், திருவையாறு.
2. உதயம், மு. தங்கராசன், பக் : 26, 1988 – விஜயா சபரி பதிப்பகம் சென்னை – 96
3. மாதுளங்கனி, மு. தங்கராசன், பக் : 138, 1989 – தமிழ் வேள் நாடக மன்றம், சிங்கப்பூர் - 2776
4. திருவருட்பா, இராமலிங்க அடிகள், பக் : 62, தமிழ் இணைய கல்விக்கழகம்.
5. பாரதி வியத்தகு ஆளுமை, ப. சரவணன், பக் : 105, ஆது Publication House, திருச்சி – 1.
6. பனித்துளிகள், மு. தங்கராசன், பக் : 96, 1992 – பூவழகி பதிப்பகம், சென்னை – 14
7. புறநானூறு, உரை. ஞா. மாணிக்கவாசன், பக் : 31, பா : (18-23) ஜீலை, 2019 – உமா பதிப்பகம், சென்னை – 1.
8. சிலப்பதிகாரம், உரை - ந.மு. வேங்கடசாமி நாட்டார், பக் : 21, பா : 1, ஆகஸ்டு – 1958 – திருநெல்வேலி தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்பக் கழகம், திருநெல்வேலி.

# அகநானூற்றில் இயற்கையோடியைந்த வாழ்வியல்

**முனைவர் இரா. செல்வி**
*இணைப்பேராசிரியர்*
*பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோவை*

**இ. செந்தாமரை**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோவை*

**ஆய்வுச்சுருக்கம்**

*பண்டைத் தமிழ்ச் சமூக மக்கள் தங்களின் இரண்டு கண்களாக வீரம் மற்றும் காதலை எண்ணி வாழ்ந்து வந்தனர். அகவாழ்வின் சொல்லோவியமாகக் காதல் வாழ்வை எடுத்துக் கூறும் இயல்புடையது அகநானூறு. இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நம் கண்முன்னே படம் பிடித்துக் காட்டுகிறது. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் மனிதனுக்கு அத்தியாவசியம். உண்ணும் உணவுகள், உண்ணப் பயன்படுத்தும் பொருட்கள், உண்கலம், அரிசியைக் குத்தும் திரிகை பற்றியும், தொழில்சார் கருவிகள் பற்றியும் இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.*

## முன்னுரை

மனிதச் சமூகத்தினுடையப் பரிணாம வளர்ச்சியினையும் அவ்வளர்ச்சியினூடாக அமைவு பெறும் பண்பாட்டு எழுச்சியினையும் சமூக அறிவியல் அடிப்படையில் ஆராயும் ஒரு இயலே அறிவுசார் துறையே ‘மானிடவியல்’ என்பதாகப் பொருள் கொள்ளப்படுகின்றது. பண்பாட்டு உயிரியான மனிதனை அறிவார்ந்து ஆராய்தல் மானிடவியல் ஆகும். அகநானூறு பாடல்களில் காணலாகும் உணவுமுறை, உண்ணப் பயன்படுத்தும் கலன்கள், தொழில்சார் கருவிகளான தோணி, கலப்பை, களைபறித்தல் துளர், உணவு சேகரிக்கும் குதிர், தொடுகூடு பற்றி இக்கட்டுரை விளக்கமுற்படுகிறது.

## உழுந்து

> **“உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை**
> **பெருஞ்சோற் றமலை நிறப”**
> **(அகம்: 86: 1-2)**

நெய்யோடு கலந்த உழுந்து சோற்றினைச் சங்ககால மக்கள் உண்டனர். மேலும் உழுந்து சேர்த்து சமைத்த உணவைப் பண்டைத் தமிழர் திருமணத்தின் போது கொடுத்ததற்கு இப்பாடல் சான்றாக அமைகிறது.

## சேம்பங்கிழங்கு

> **“நீலத் தன்ன அகலிலைச் சேம்பின்**
> **பிண்டம் அன்ன கொழுங்கிழங்கு மாந்தி**
> **…..” (அகம் : 178: 4-5)**

நிலத்தினுள் கிடைத்த சேம்பங்கிழங்கினைப் பண்டைய மக்கள் பயன்படுத்தியதை இப்பாடலடி குறிப்பிடுகிறது. இன்றளவும் மக்கள், மரவள்ளிக் கிழங்கு, சேப்பங்கிழங்கு, சேனைக்கிழங்கு, சீனிக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகள் விரும்பி உண்கின்றனர்.

## வாழைப்பழம்

வாழைமரமும், வாழைப்பழமும் ஒவ்வொரு சுபநிகழ்ச்சிகளிலும் இன்றளவும் பயன்படுத்தப்படுகிறது. இறப்பு சடங்குகளில் ஒற்றை வாழைமரமும், சுப நிகழ்ச்சிகளில் இரட்டை வாழை மரமும் கட்டப்படுகின்றன. “சுவை கருதி கல்யாணமாகி முதன்முறை வீட்டுக்கு வந்து இறங்குகின்ற தம்பதியர்க்கு முதலில் கொடுப்பது வாழைப்பழமும் பாலும்

தான். விருந்து சாப்பிட்டாலும் வாழைப்பழம் கட்டாயமாகப் பரிமாறப்படுகிறது".[1]

**"கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலை**
**ஊழுறு தீங்கனி……"(அகம் - 2 : 1-2)**

**தேக்கிலை**

தேக்கு இலை இன்றளவும் உண்ணும் உணவிற்குப் பயன்படுத்தப்படுகிறது. மழைவாழ் மக்கள், கோயிலில் படையலிடும் இடங்களில் தேக்கிலை இன்றளவும் பயன்படுத்தப்படுகிறது.

**"சேக்குவள் கொல்லோ தானே தேக்கின்**
**அகலிலை குவித்த புதல்போல் குரம்பை**
**ஊன்புழுக்கு அயரும் முன்றில்"**
**(அகம் 315 : 15-17)**

**ஆம்பல் இலை**

ஆம்பல் இலையில் சங்ககால மக்கள் வெஞ்சோற்றுடன் இனிப்புக் கூட்டிய புளிப்பான பழத்தை ஆம்பலிலையில் வைத்துக் கொடுத்தாள் தலைவி.

**"ஆம்பல் அகலிலை வமலை வெஞ்சோறு**
**தீம்புளிப் பிரம்பின் திரள்கனி பெய்து,**
**விடியல் வைகறைஇடூஉம் ஊர!"**
**(அகம்.196: 5-6)**

**மூங்கில் குழாய்**

கோவலர்கள், மூங்கில் குழாய்களில் இனிய புளிச்சோற்றை இளைய எருதுகளின் கழுத்தில் தொங்கவிட்டு எடுத்துச் செல்வர். இதனைப் பசியால் வரும் வழிப்போக்கர்களுக்குத் தேக்கினால் வைத்து பசியாறக் கொடுத்தனர்.

**"வருவழி வம்பலர்ப் பேணி கோவலர்**
**மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி**
**செவியடை தீரத தேக்கிலைப் பகுக்கும்"**
**(அகம்.311 : 9-11)**

**மண்டை**

மண்டை என்பதற்கு உண்கலம் என்று பெயர். பாணர், விறலியர், கூத்தர்கள் போன்றோர் ஊர் தோறும் சுற்றி வள்ளல்களையும், மன்னர்களையும் நாடி பரிசில் பெற்றனர். அவர்கள் கையில் உணவு பெறுவதற்குப் பாத்திரம் காணப்பட்டது. அதற்கு மண்டை என்று பெயர். இதனால் அவர்கள் மண்டைப்பாணர் என்றழைத்தனர். இந்த மண்டை என்ற பாத்திரம் பொதுமக்களிடம் கள் வைக்கவும், பால் கறக்கவும், மீன் வைப்பதற்கும் பயன்பட்டது.

**"நறவுஉண் மண்டை நுடக்கலின்"**
**(அகம் 96-1)**

**திரிகை**

அரிசி முதலிய தானியங்களைப் பொடி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கருவி திரிகை. சங்ககாலப் பெண்கள் அரிசியைத் திரிகையில் பயன்படுத்தினர்.

**"…. …. ….. மனையோள்**
**ஐது ணங்கு வல்சி பெய்துமுறுக்கு உறுத்த**
**திரிமரக் குரலிசைக் கடுப்ப….."**
**(அகம்.224.11-13)**

தேர்ச்சக்கரமானது அரிசியைத் திரிகையில் இடிப்பது போல சத்தம் கேட்டது. தற்போது அரிசியை அரைக்க மிக்சி போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றனர். சில மக்கள் அரவை மில்லிற்குச் சென்று அரைக்கின்றனர். சிலர் காலச்சூழலுக்கேற்ப வேகமாக வேலையைச் செய்து முடிக்க வேண்டுமென்பதற்காக அரிசி, கோதுமை மற்றும் தானிய வகைகள் பொடி செய்யப்பட்டு கவரில் விற்பனை செய்வதை வாங்கி பயன்படுத்துகின்றனர்.

**வான்கேழ் வட்டம்**

வான்கேழ் வட்டம் என்பது வெள்ளை நிறக் கல்லால் வட்டமாக உருவாக்கப்பட்ட அம்மியாகும். இது வடநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டது. இதனைச் சந்தனக்கல் என்றும் கூறுவர்.

**"வடவர் தந்த வான்கேழ் வட்டம்**
**குடபுல உறுப்பின் கூட்டுபு நிகழ்த்திய**
**வண்டு இமிர் நறுஞ்சாந்து அணிகுவம்….."**
**(அகம்.340 :16-18)**

சந்தனம் அரைக்கச் சங்ககால மக்கள் பயன்படுத்தினர்.

**"வடவர் தந்த வான்கேழ் வட்டம்**
**தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்பு"**
**(நெடுநல் :51-52)**

**உரல்**

தினை, நெல் போன்ற தானியங்களின் தோலை நீக்குவதற்கு உரலில் இட்டு உலக்கையால் இடிப்பர். மரம், கல் போன்றவற்றாலும் உலக்கை அமைக்கப்படுவதுண்டு. உலக்கை துணைமைக் கருவி ஆகும். உலக்கையின் அடியில் இரும்பு கவசம் போர்த்தப்பட்டுள்ளது. இதற்கு 'பூண்' என்று பெயர். பூண்கள் பொருந்திய உலக்கைகளைக் கொண்டு உரலில் பொருட்களைக் குற்றும் போது உலக்கைப் பாட்டுப் பாடுவர். அப்பாடலின் ஒலி மலைச் சாரலில் ஆந்தையின் ஒலியோடு மாறி மாறி ஒலிக்கும். இந்நிகழ்வை

**"கொடுநுண் ஓதி மகளிர் ஓக்கிய**
**தொடிமாண் உலக்கைத் தூண்டுவரல் பாணி**
**நெடுமால் வரைய குடிஞையோடுஇ ரட்டும்"**
**(அகம். 9 : 11-13)**

இன்றளவும் உரல் மற்றும் உலக்கையின் பயன்பாடு நகர்புறங்களில் காணப்படவில்லை. கிராமங்களில் உண்டு.

**தொழில்சார் கருவிகள்**

சங்ககால மக்கள் வேளாண்மை, வணிகம், மீன்படித்தல், வேட்டையாடல் என தன் நிலத்திற்குத் தகுந்தாற் போல பல தொழில்களைச் செய்துள்ளனர். தொழில் செய்ய தொழிற் கருவிகள் மிகவும் இன்றியமையாதவை, இவைகள் தொழில்சார் கருவிகள் எனப்பட்டன.

**தோணி**

மீனவ மக்கள் மீன்பிடிப்பதற்காகப் பயன்படுத்திய சிறிய அளவிலானப் படகு தோணி எனப்படும்.

**"கடல்பாடு அவிந்து, தோணி நீங்கி….."**
**(அகம்.50-1)**

**கலப்பை**

வேளாண்மைத் தொழிலில் முக்கிய கருவியாக விளங்குவது கலப்பை, நிலத்தைப் பண்படுத்துவதற்குப் பயன்படுத்துகின்றனர். நாட்டுப்புற மக்கள் நிலத்தை உழுவதற்குக் கலப்பையினைப் பயன்படுத்தியுள்ளனர். "கலப்பை விவசாயிகளின் முக்கியமான சாகுபடிக் கருவி. நிலத்தை உழுவதற்கும், எருவை மண்ணுடன் சேர்ப்பதற்கும் தெளிந்த விதையை மூடுவதற்கும், துவரை போன்றவற்றின் கால்களுக்குப் பத்தியிலுள்ள அகன்ற இடைவெளிகளில் கூடுசாகுபடி செய்வதற்கும், கம்பு போன்ற சில முரட்டு பயிர்களைக் கலைப்பதற்கும் கலப்பை உபயோகமாகிறது"[2] (1958 : ப. 177) என்று சுப்பையா குறிப்பிட்டுள்ளார். உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட கலப்பையை ஏர், கலப்பை, நாஞ்சில் என்னும் பெயர்களால் அழைத்தனர். கலப்பைகளில் எருதுகளைப் பூட்டி உழுதமையை,

**"பகடுபல பூண்ட உழவுறு**
**செஞ்செய்……." (அகம்.262-2)**

**களைப்பறித்தல் துளர்**

வயல்களில் தேவையில்லாமல் வளரும் தாவரங்களைக் களை என்பர். இவை தாவரங்களின் வளர்ச்சியைப் பாதிப்பவை. இதனைக் கையினாலோ களைக் கொட்டு எனப்படும் கருவியைக் கொண்டோ பிடுங்கி எறிவர். துளர் என்னும் கருவியை,

**"கோடுடைக் கையர், துளர்எறி**
**வினைஞர்……" (அகம்.184-13)**

பழங்கால மக்கள் பயன்படுத்தியதை இப்பாடலில் அறியலாம்.

**குதிர், தொடுகூடு**

பண்டை மக்கள் உலர வைக்கப்பட்ட தானியங்களைப் பாதுகாத்து வைப்பதற்கு தொடுகூடு மற்றும் குதிர் போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளனர்.

**“கருங்கால் வேங்கைச் செஞ்சுவல் வரகின்**
**மிகுபதம் நிறைந்த தொகு கூட்டு ஒருசிறை…..” (அகம்.397 : 6-7)**

இன்னும் மக்கள் தானியங்களைப் பாதுகாக்கச் சுடுமண்ணால் செய்யப்பட்ட பெரிய குலுக்கைகளையும், பெரிய பானைகளையும் பயன்படுத்துகின்றனர்.

## முடிவுரை

மானிடவியல் கூறுகளுடன் மிகச் சரியாகப் பொருந்துகிற நிலையில் அகநானூற்றுப் பாடல்கள் முழுவதும் வந்து நிற்கின்றன. அகநானூறு பாடல்களுடன் பொருந்துகிற பண்பாட்டு மானிடவியல் கூறுகளாக, உணவுமுறை, தொழில்சார் பகுப்பு முறை என்பன பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

## அடிக்குறிப்புகள்

1. தமிழர் உணவு – சே.நமசிவாயம் - உலக தமிழாராய்ச்சி நிறுவனம்
2. விவசாய சாஸ்திரம், சுப்பையா முதலியார்- (1958) அமுதநிலையம், தேனாம்பேட்டை.

# பஞ்சகாவிய நிகண்டில் தாவர வர்க்கம்

**முனைவர் வே. நித்திய கல்யாணி**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை*

**ஆய்வுச் சுருக்கம்**
*பஞ்ச காவிய நிகண்டில் உள்ள தாவரங்களுடைய குறிப்புகள் நமது பாரத நாட்டின் பல்லுயிர் பெருக்கம் (Biodiversity) பற்றி அறிய மிகவும் உறுதுணையாக உள்ளது. இன்று மருத்துவத் துறையில் தாவரம் மற்றும் விலங்கினங்களின் (Ethnobotany and ethnozoology) உடல் உறுப்புகளில் இருந்து உருவாகும் பல உயிர் வேதியியல் பொருட்களை (Secondary metabolites) அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் பல மருந்துகளின் செயல்திறனை, மருத்துவப் பண்பை நிகண்டு தெளிவாகக் கூறுகிறது.*

*இக்கட்டுரையில் கூறப்படும் மருத்துவ குணமுடைய தாவரங்களை எளிதாக அடையாளம் கண்டு அவைகளில் இருந்து மருந்து தயாரிக்க மிகவும் பயனுடையதாக பஞ்ச காவிய நிகண்டு அமைகின்றது. நிகண்டில் கூறப்பட்டுள்ள சில தாவரங்களின் பிறப்பிடம் மேலை நாட்டில் இருந்து வந்தது என தோன்றினாலும் அகத்தியரின் காலத்தில் அவைகள் இந்தியாவில் இருந்தது என்பது தெளிவாகத் தெரிகின்றது. அதன்பின்பே, வெளி நாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்பு, பல காலம் கழித்து இந்தியாவிற்கு வந்து இருக்கலாம் என்ற அறிவியல் கருத்தை ஆராய நிகண்டில் காணப்படும் தாவரங்கள் உதவுகிறது.*

**முன்னுரை**

இறைவன் மனிதனுக்கு உணவு கொடுக்க, உற்சாகம் கொடுக்க, இணைந்து வாழ இன்பமுடன் சுகிக்க, நிலம் நீர் ஆகாயம் எனப் படைக்கும் போது அதில் தாவரம் மற்றும் விலங்குகள் என ஜீவ வர்க்கங்களைப் படைத்தார். தாவரங்களில் பலவகைகள் உள்ளன. இவை சூரிய ஒளியில் இருந்து ஆற்றலைப் பெற்று அதை உணவாக மாற்றி சேமித்து மனிதனுக்கு இலை, காய், கனி, வித்து, உணவு என பயன்படும் பல பொருட்களை வழங்குகிறது. இந்த தாவர இனத்தைச் சார்ந்து வரும் விலங்குகள் மனிதனுக்குப் பல வகைகளில் பயன்படுகிறது. இந்த ஜீவ வர்க்கங்களில் இருந்து உணவு, உடை, உறைவிடம் முதலிய தேவைகளுக்கான பயன்தரும் பொருட்களை மட்டுமல்லாமல், மனிதனின் உடல்நலம் பேணும் பல மருத்துவ தன்மையுடைய தாவரங்களையும் விலங்கினங்களையும் அகத்தியர் கண்டறிந்து உலகத்திற்கு வெளிப்படுத்தினார்.

காட்டில் வாழும் விலங்குகள் தாவரங்களை உண்ணும் போது, அவைகளுக்கு இயற்கையாகவே உணவு வழி மருத்துவத் தன்மையுடைய வேதியியல் பொருட்கள் உடலை அடைகின்றது. இவ்விலங்குகள் உடல் உபாதைகளிலிருந்து விடுதலைப் பெறுவதைப் பார்த்த மனிதன், அதனைத் தானும் பயன்படுத்தலாம் என்று நினைத்தான். மேலும், மருத்துவ மூலிகைகளை உண்ணும் விலங்கினங்களில் இருந்து மனிதன் வேறு பல மருத்துவ பொருட்களையும் பெறலாம் என்பதை சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி போன்ற மருத்துவ முறைகள் எடுத்து கூறுகின்றன. சித்தமருத்துவத் துறையின் முன்னோடியான அகத்தியர் இம்முறையை நன்கு கண்டறிந்து, மருந்து மற்றும் பயன்தரும் தாவர – விலங்கினங்களை தனது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். மேலும் பண்டைய மருத்துவர்கள் தாவரம் மற்றும் விலங்குகளுக்கு பல பெயர்களைக் கூறி அழைத்ததால், இந்தப் பலபெயர் முறை ஒருவேளை மற்றவர்களுக்குத் தெரியாது இருக்க வேண்டும் எனப்

புனைப்பெயர்களில் அழைத்திருக்கலாம். அந்தப் பெயர்களையெல்லாம் தொகுத்து வழங்கப்பட்டது போல் பஞ்ச காவிய நிகண்டில் தாவர, விலங்கினங்களின் பல்வேறு பெயர்கள் கூறப்பட்டுள்ளது.

பஞ்ச காவிய நிகண்டு வழி தாவர-விலங்கினங்களின் பிற பெயர்கள் மட்டுமல்லாமல் அவைகளின் பயன்களும் எடுத்துக் கூறப்பட்டுள்ளதால் இந்நிகண்டில் கூறப்படும் அனைத்துத் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றிய குறிப்புகள் இலக்கியப் பார்வையில் மட்டுமல்லாமல், மருத்துவக் கண்ணோடத்திலும் அமைந்துள்ளது. அக்குறிப்புகளைக் வெளிக் கொண்டு வரவேண்டும் என்றக் காரணத்திற்காக இவ்வியல் ஆராயப்பட்டுள்ளது. இவ்வியலின் முதல் பகுதியில் தாவரங்கள் பற்றிய ஆய்வும் இரண்டாம் பகுதியில் விலங்கினங்களைப் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**உயிரினங்களின் வகைப்பாடும் பஞ்ச காவிய நிகண்டும்**

உயிரினங்களை கி.மு.3-ஆம் நூற்றாண்டு முதல் கி.மு.4-ஆம் நூற்றாண்டுகளில் அரிஸ்டாட்டில் என்ற அறிஞர் தாவரஇனம், விலங்கின இனம் எனப் பாகுபாடு செய்தார். இவரைப் போன்று இந்தியாவின் ஆயுர்வேத மருத்துவத்தின் தந்தை சாராக் என்பார் பல தாவரம் மற்றும் விலங்கினங்களை அறிந்து இருந்தார்.


கிப்போகிரேட்டஸ் என்பவர் கி.மு.460-377-இல் மருத்துவத்தின் தந்தை எனப் போற்றப்பட்டார். இவரும் பயன்தரும் பல மருத்துவ தாவர, விலங்கின உயிரினங்களை அறிந்திருந்தார். இவரது மாணவர் தியோபிரட்டசு என்பவர் கி.மு.370-282-இல் மருத்துவத் தன்மை அல்லாமல் வாழிடம் மற்றும் உணவுத் தன்மையின் அடிப்படையில் உயிரினங்களை வகைப்படுத்தினார். அதன்பின் பிளைனி மற்றும் எல்டர் என்பவர்கள் தனது "Historia Naturals" என்ற புத்தகத்தில் செயற்கை உயிரினப் பாகுபாடு பற்றிக் குறிப்பிடுகின்றார். இவருக்குப் பின் ஜான் பிரபு என்பவர் முதன் முதலாக உயிரினங்களுக்குச் சிற்றினம், பேரினம் என்ற வகைப்பாட்டினை வகைப்படுத்தினர்.

சில ஆண்டுகளுக்குப் பின் 18-ஆம் நூற்றாண்டில் சுவீடன் நாட்டைச் சார்ந்த கரோலஸ் லின்னேயஸ் என்பவர் முதன்முதலாக எல்லா உயிரினங்களுக்கும் இரட்டைப் பெயரிடும் முறையை அறிமுகப்படுத்தினார். இவர் "Species Planetarium" என்னும் தான் எழுதிய புத்தகத்தில் 1753-ல் 5900 வகை தாவரம் மற்றும் தனது System Natural (1758) என்ற நூலில் 4200 விலங்கினங்களைக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பல்லுயிரின தன்மைகள் பற்றிய குறிப்புக்கள் இருந்தாலும் இவைகளை அகத்தியர் அறிந்திருந்ததோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு உயிரினத்திற்கும் பல்வேறு பெயர்களைக் குறிப்பிடுவது அவரின் இறைஞானத்தை எடுத்து இயம்புகின்றது.

**பஞ்ச காவிய நிகண்டில் இடம்பெறும் உயிரினங்கள்**

பஞ்ச காவிய நிகண்டில் இடம்பெறும் உயிரினங்களை விலங்கினம், தாவர இனம் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.




ஐவகை நிலங்களான குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை என்ற நில அமைப்புடையத் தமிழகத்தில் வாழ்ந்த உயிரினங்களின் பெயர்களை பஞ்ச காவிய நிகண்டு குறிப்பிடுவதால், இந்நிகண்டை ஆக்கிய அகத்தியர் தமிழகத்தின் எல்லா நிலப்பரப்பையும் நன்றாக அறிந்தவர் எனவும் அதில் வாழ்ந்த உயிரினங்களை மருத்துவத்திற்குப் பயன்படுத்தும் தன்மையையும் கண்டறிந்தவர் எனவும் அறியமுடிகின்றது.

பஞ்ச காவிய நிகண்டின் ஆசிரியராகிய அகத்தியர் இயற்கையுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தவர் என்பது இந்நிகண்டால் தெளிவாகின்றது. நவீன வகைப்பாடுகளின் தந்தை எனப் போற்றப்படும் கரோலஸ் லின்னேயஸ் என்பார் தனது ஆய்வு நூலில் 5900 வகையான தாவரங்களையும் 4200 வகையான விலங்கினங்களையும் குறிப்பிடுகின்றார். இருப்பினும் ஆதித் தமிழ்க்குடியைச் சார்ந்த அகத்தியரோ பல ஆண்டுகளுக்கு முன்பே தனது நிகண்டில் பல்லுயிரினங்களின் பெயர்களைச் சுட்டியிருப்பதோடு மட்டுமல்லாமல் அதன் புனைப்பெயர்களைக் குறிப்பிடுவது பழந்தமிழர்களின் அறிவியல் ஞானத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

இத்தகையத் தொன்மையான உயிரின வகைப்பாடுகள் பற்றியக் குறிப்புக்கள் இன்றையத் தலைமுறையினருக்குச் சரியாகச் சென்றடையாதது வருத்தத்தை அளிக்கின்றது. பரந்து விரிந்த தமிழகத்தில் ஓர் உயிரினத்திற்குப் பல்வேறு வகையானப் பெயர்கள் குறிப்பிடப்படுவதிலிருந்து பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு விதமாக பயன்படுத்தி உள்ளனர் எனத் தெரிகின்றது. ஆதித் தமிழனின் கலாச்சார, மொழிப் பயன்படுத்துதலின் வேற்றுமை, பழக்கவழக்கங்களின் வேறுபாடுகள் போன்றவை பல்வேறு இன மக்கள் வாழ்ந்தனர் என்பதும் அவர்கள் ஒவ்வொருவரும் ஓர் குறிப்பிட்ட உயிரினத்தை வெவ்வேறு பெயர்களில் அழைத்தனர் என்பதும் தெளிவாகின்றது.

### நிகண்டில் கூறப்படும் தாவர வர்க்கம்

வைத்திய காண்டம் என்னும் நான்காம் காண்டத்தில் காட்டில் வளர்ந்துள்ள மூலிகைகளின் அறிவியல் பெயர், அது சார்ந்துள்ள தாவர இனம் பற்றிய அறிவு பல புதிய மருந்துகள் தயாரிக்கப் பயன்படும் மூலக்கூறுகளைப் பெறுவதற்கு உதவியாக இருக்கின்றது.

இந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் பரிபாஷைச் சொற்கள் ஆகும். ஏறத்தாழ குழூஉக்குறிச் சொற்கள் ஆகும். சித்தர் கூட்டத்தினருக்கு மட்டுமே இச்சொற்களின் உண்மையான பொருள் புரியும் என்று நம்பத் தோன்றுகின்றது.

**“பதனமதாய் வைத்து, சிவபூசையது செய்து**
**பண்புடையவே, வேதாந்தப் பரிபூரண எண்ணூரில்**
**பதனமதாய், வைத்துத்தரிசிப்பாய், புலத்தியனே**
**பரிவான, பஞ்சகாவியம், சவுமியமும்**
**பதனமதாய் வைத்து, எண்ணூறு பணிந்துவிடுவீராகில்**
**பராபரமாய், எந்நாளும் பாவித்து, வாழ்வாய்**
**பதனமதாய், நாலாவதிந்த காண்டமதைச் சொன்னோம்**
**பாடினோம், வன மூலி, பரிபூரண முற்றே”**[1]

**(பஞ்ச காவிய நிகண்டு, பாடல் 514)**

நான்காம் காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூலிகைகளின் பெயரும் அதன் சரியான தாவரவியல் பெயரும் தொகுத்துக் கீழே அட்டவணையாகத் தரப்பட்டுள்ளது. தாவரங்களின் பெயர்கள் இன்றைய தாவரவியல் அடிப்படையில் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்ற குறிப்புடன் விளக்கப்பட்டுள்ளது. பஞ்ச காவிய நிகண்டில் 95 வகையான தாவரங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தாவரங்கள் பெரும்பாலும் மூலிகைகளாக உள்ளன. இன்றும் கூட அகத்தியர் குறிப்பிட்ட மூலிகைகள் மருந்திற்காகப் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்தத் தாவரங்கள் நவீன மருத்துவத்துக்கும் ஆய்வாளர்களுக்கும் புரியும் வண்ணம் ஆங்கில மொழிபெயர்ப்பு மற்றும் தாவர வகைப்பாடுகளுடன் ஆய்வு செய்து பயன்தரும் முறையில் விளக்கப்பட்டுள்ளது.

## முடிவுகள்

மருத்துவ குணமுடைய மரங்களான வேம்பு, அத்தி, ஆல், அரசு போன்றவைகளைப் பற்றிய குறிப்புகள் இல்லை. இக்கருத்தின் அடிப்படையில் அகத்தியர் மரங்களைக் காட்டிலும் செடி கொடிகளையே தம் மருத்துவத்திற்கு அதிகமாகப் பயன்படுத்தியுள்ளது தெரிகின்றது.

சித்த மருத்துவ குறிப்புகளில் காணப்படும் மருத்துவ குணமுடைய தாவரங்கள் நிகண்டிலும் இடம்பெற்று இருப்பது, அகத்தியர் குறிப்பிடும் தாவரங்களின் மருத்துவ தன்மையை உறுதிபடுத்தும் விதமாக அமைந்துள்ளது.

## பார்வை நூல்கள்

1. முனைவர்.ச.அரங்கராசன், பஞ்ச காவிய நிகண்டு, தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம், தஞ்சாவூர், 2008

# திருக்குறளில் நிலம்

**முனைவர் செ. சோனாகிறிஸ்டி**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த் துறை (சு.நி.பி), திதெ.மா.நா.ச.கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

வேளாண்மை செய்வதற்கு அடிப்படையானது நிலம். தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் அந்நிலத்தை நான்காக வகைப்படுத்தி வாழ்த்தினா தமிழர் என எடுத்து இயம்புகின்றன. இந்நிலப்பாடே திருவள்ளுவர் காலத்திலும் இருந்தது என்பதை குறிப்பாகவும் வெளிப்படையாகவும் உணர்த்தியுள்ளார்.

**நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்**
**(குறள் 959)**

மனித இனம் தோன்றி வளர்ந்து நாகரிகம் பெற்ற வரலாறும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன தமிழன் கண்ட இந்நிலப் பாகுப்பாட்டிலே அடங்கியுள்ளது. ஒவ்வொரு நிலத்திற்குரிய காலம், கருப்பொருட்கள், மக்கள் வாழ்வியல் ஒழுக்கம் என்பன அப்பாகுபாடுகள். வுள்ளுவா திருக்குறளை இப்பாகுபாட்டின் அடிப்படையிலே வகுத்துள்ளார். இதனை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது

## குறிஞ்சி

**குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று**
**உண்டாகச் செய்வான் வினை**
**(குறள் 758)**

**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடையதுஅரண் (குறள் 748)**

என்ற குறள்கள் குறிஞ்சி நிலமாகிய மலையைக் குறிக்கின்றன. இந்நிலம் சமமான நிலபகுதியை விட உயர்ந்த பகுதியாகும். இடையிடையே குண்டுக் கற்களும் நல்ல வழமான மண்ணும் கலந்த பகுதியாகும். இக்குறளின் வழி குறிஞ்சிநிலச் சிந்தனை வெளிப்படுகிறது.

## முல்லை

காடும் காடு சா்ந்க பகுதியும் முல்லையாகும்.

**"அழல் போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்**
**குழல் போலும் கொல்லும்படை**
**(குறள் 1228)**

என்னும் குறள் முல்லையின் முதற்பொருளாகிய மாலை நேரத்தையும் முல்லை நில ஆண் மகட்குரிய பெயாாகிய ஆயன் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

## மருதம்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதமாகும்

**"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லதளின் ஊடிவிடும்" (குறள் 1039)**

நிலத்துக்கு உரிமையிடையவன் நாள்தோறும் சென்று நிலத்தைப் பாராமல் இருப்பாளாயின் அந்நிலமானது அவனால் அன்பு செலுத்தப்படாத மனைவியைப் போல் பயன்தராமல் போய்விடும் நிலம் என்று பொதுப் படையாக கூறினாராயினும் ஊடுதல் என்ற உரிப்பொருள் சொல்லால் மருத நிலத்தையே குறித்துள்ளாா் என்பது குறிப்பாகும்.

## நெய்தல்

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தலாகும் வள்ளுவா்

**"வேண்டற்கவென்றிடினும்**
**சூதினைவென்றதுஉம்**
**துண்டிற்பொன் மீன்விழுங்கியற்று"**
**(குறள் 931)**

**"உப்பமைந் தற்றால் புலவிஅதுசிறிது**
**மிக்கற்றால் நீளவிடல்" (குறள்1302)**

என உப்பு விளைவிப்பதும் மீன் பிடிப்பதும் நெய்தல் நிலமக்களின் தொழில்கள், இதனைக் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

**பாலை**

பாலை என்ற ஒருநிலம் தமிழகத்தில் தனியாக இல்லை. எந்தநிலம் வளங்குன்றி வறுமையடைகின்றதோ அதனையே பாலை எனக் கொண்டனர் பெரும்பாலும் முல்லையும் குறிஞ்சியும் கோடையில் வறட்சியால் தாக்குண்டு பாலை எனப் பெயர் பெறுவதுண்டு

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்**
**(சிலம்பு 84- 86)**

என்னும் சிலப்பதிகார அடிகள் பாலை என்பது தனிநிலம் அல்ல என்பதைத் தெளிவாக விளக்குகின்றன எனவே நானிலப் பாகுபாடே தமிழர் கொண்ட நிலப்பாகு பாட்டு முறை என்பது தெளிவான கருத்தாகும்.

வள்ளுவர் பாலை நிலத்தைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவர் கூறும் பாலை முல்லையும் குறிஞ்சியும் திரிந்த நீரில்லாப் பாலையே அன்றி சகாராப் பாலைவனம் போல் மணல் வெளியல்ல.

**அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கைவன் பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று (குறள் 78)**

என்ற குறளில் வன்பால் சொல்லுக்குப் பரிமேலழகர், மணக்குடவர், காளிங்கர் முதலிய உரையாசிரியர்கள் அனைவரும் வன்மையான நீர் வளமற்ற நிலம் என்று பொருள் கூறியுள்ளனர். எனவே நீர் வளமற்ற பகுதியே பாலை என்பது கருத்தாகும். மேலும் திருவள்ளுவர் நிலத்தை மனித வாழ்வியலோடு ஒப்புமைப்படுத்தி உவமைப் படவும் கூறியுள்ளார்.

**நிலமும் வாழ்க்கையும்**

வாழ்க்கைக்கு வழிகாட்ட வாழ்வியலைச் செம்மையாக்க இயற்கையை கையாண்டுள்ளார்.

**நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்**
**(குறள் 959)**

என்னும் குறளில் நிலம் பயிர்கள் வளர்வதற்கிடமாகும். அது பலவகையான வளமையுடையது. நிலத்தின் இயல்பை அதனிடத்தே முளைத்த முளையானது காட்டிவிடும். அதுபோலவே, ஒருவன் வாயிலுண்டாகும் சொற்கள் அவன் பிறந்த குலத்தின் இயல்பைக் காட்டிவிடும் என உவமைப்படுத்தியுள்ளார்.

**நிலமும் பொறுமையும்**

நிலம் கடினத் தன்மையுடையது. இக்கடினத் தன்மையைப் 'பொறுமை' என்ற பண்பின் மேல் ஏற்றிக் கூறுகிறார். தம்மை இகழ்வாரைக் கூடப் பொறுக்கவேண்டும் என்று அறிவுறுத்துமிடத்து நிலத்தினியல் போடு இணைத்துப் பார்க்கிறார்.

**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வாரைப் பொறுத்தல் தலை**
**(குறள் 151)**

நிலம் தன்மேல் நின்று தன்னைத் தோண்டுகின்றவரையும், குடைபவரையும் வெட்டுவாரையும் தாங்கி நிற்கிறது. அதைப்போல் ஒருவர் தமக்கு பிறர் ஒரு காரணம் பற்றியோ, அறியாமையாலோ தவறு செய்யினும் அதனையும் தாங்கிக்கொண்டு தானும் அவர்க்குத் தண்டனைக் கொடுக்காது. அவரை இகழாது, பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று பொறுமையின் தன்மையினைக் கூறியுள்ளார்.

**நிலமும் அன்பும்**

தலைவன் தலைவிக்குள் நடக்கும் அன்பொழுக்கங்களில் ஒன்றான 'அன்பு பாராட்டலில்' நிலத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

**புலத்தின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தோடு**
**நீரியைந் தன்னாரகத்து (குறள் 1323)**

நிலத்தோடு நீர் சேர்ந்தாற் போல ஒற்றுமையுடையவரிடத்துப் பிணங்குதலை விட இன்பம் தேவருலகத்திலும் இல்லை. நிலமும் நீரும் கலக்கும் பொழுது அவை பிரிக்க முடியாதபடி ஒன்றுபட்டு விடுவதைக் காதலர்களின் மனவொற்றுமைக்கு உவமையாக கூறியுள்ளார்.

**நிலமும் இனமும்**

இனத்தினைத் தேர்ந்தெடுப்பதற்கு நிலத்தினைக் குறிப்பிட்டுள்ளார். இதனை,

**நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றதாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல் பதாகும் அறிவு (குறள் 452)**

நிலம் தன்னுடன் கலந்த நீரைத் தன்னிறமாகவும் தன் சுவையாகவும் ஆக்கிக்கொள்வது போல ஒருவன் இனத்தியல்பாக மாறி விடுவான். நிலம் தண்ணீர் சேர்த்த இயல்புக்கு ஏற்ப மாறுபட்டு நிற்கும் அதுபோல மக்களின் அறிவும் தாம் சேர்ந்த இனத்தின் தன்மைக்கேற்ப மாறுபடும் ஒருவன் தேர்ந்தெடுக்கும் இனத்தினைப் பொருத்தே அவன் அறிவு அமையும் என்கிறார்.

**நிலமும் அதன் தன்மையும்**

நிலம் உலகிலுள்ள உயிர் இறந்த பிறகும் தாங்கும் உயிரோடுயிருக்கும் உடலையும் தாங்கும் என்பதை,

**வசையிலாவண் பயன் குன்றும் இசையிலா**
**யாக்கை பொறுத்த நிலம் (குறள் 239)**

இக்குறளின் புகழ் இல்லாதவனின் உடம்பைச் சுமந்த நிலம் குற்றமற்ற பயனான புகழ் இல்லாமல் குறைந்துவிடும் என எடுத்துரைக்கிறார்.

**நிலமும் சினமும்**

மனித உறவுகளுக்குள் விரிசல் ஏற்படுவதற்குச் சினமும் ஒரு காரணியாகும். சினத்தின் மூலம் ஏற்படும் விளைவை நிலத்தினைக் கொண்டு விளக்கியுள்ளார்.

**சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**
**நிலத்தறைந்தான் கைபிழையா தற்று**
**(குறள் 307)**

என்ற குறளில் தனது வலிமையைக் காட்டுவதற்குச் சினத்தைக் கருவியாகக் கொண்டவன் அவ்வலிமையை இழந்து விடுவான். கையை நிலத்தில் அறைந்தவன் துன்பம் அடைதல் தவறாதது போன்றதாகும் என சினத்தின் வலிமையை எடுத்துரைக்கிறார்.

**நிலமும் கொடுங்கோலும்**

மன்னன் செங்கோல் தவறாது ஆட்சி செலுத்தவேண்டும். அவ்வாறில்லாத மன்னனை நிலமகளும், மக்களும் வெறுத்தொதுக்குவர். 'கொடுங்கோல்' புரிகின்ற வரை நிலம் சுமையாகக் கருதுகின்றது என்கிறார் வள்ளுவர். இதை,

**கல்லாப் பணிக்கும் கடுங்கோல் அதுவல்லது**
**இல்லை நிலைக்குப் பொறை**
**(குறள் 570)**

கொடுங்கோல் புரியும் மன்னன் கல்வியறிவி லிலாதவரைத் தனது செயல்கள் செய்வதற்குச் சேர்த்துக் கொள்வான். அவர்களைத் தாங்குவதை விட அதிக பாரம் இந்நிலத்திற்கு இல்லை என நிலத்திற்குச் சுமையாக இருப்பவரைக் குறிப்பிட்டுள்ளார்.

**நிலமும் குணமும்**

கொடுங்கோல் புரிகின்ற வரை மட்டும் அல்லாது 'குணங்களால் நிறைந்தவர்' தம் தன்மையில் குன்றின் நிலம் தன் சுமையைத் தாங்காது என்பதை கீழ்க்கண்ட குறளின் வழி அறிவுறுத்துகிறார்.

**சான்றவர் சான்றாண்மை குன்றின் இரு நிலத்தான்**
**தாங்காது மன்னோ பொறை (குறள் 990)**

என குண நிறைவுடையவர் தமது தன்மையில் குறைவு படுபவராக நடந்தாரெனில் அது அவர் வாழும் பூமியினைப் போய் தாக்குதலுக்கு உட்படுதும் என மனிதனின் குணத்திற்கும் நிலத்திற்கும் உள்ள தொடர்பைத் தெரிவிக்கின்றார்.

**நிறைவுரை**

இவ்வாறு ஐந்து நிலப் பாகுபாடு மற்றும் கருப்பொருள், உரிப்பொருள் சிந்தனைகள் திருக்குறளில் வெளிக்காட்டப் பட்டுள்ளன. மேலும் நிலத்தை மக்களின் வாழ்வியலோடு பலவாறு ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

# மறுவாசிப்புப் புதினங்களில் மகாபாரதத்தில் இயற்கை சித்தரிப்பு

**முனைவர் இர. விமல்ராஜ்**
*இணைப் பேராசிரியர்*
*தமிழாய்வுத்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர், நாமக்கல்*

**து. சுமதி**
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை*
*கந்தசாமிக்கண்டர் கல்லூரி, வேலூர், நாமக்கல்*

**ஆய்வுச் சுருக்கம்**
*இக்கால இலக்கியங்களில் இயற்கை என்னும் தலைப்பில் புதினத்தில் எவ்வாறு இயற்கையைப் பற்றி வர்ணிக்கப்பட்டுள்ளது என்பதையும் இக்கட்டுரையில் காண்போம். புதினத்தின் அமைப்பு, புதினத்தின் வகைகள், இதிகாச புராணத்தில் மகாபாரதத்தில் இயற்கையின் கதாப்பாத்திரம் சித்தரிக்கப்பட்டுள்ளது, அப்பாத்திரங்களில், கங்கை நதி, சூரிய தேவன், நில அமைப்பு பற்றியும் கூறப்பட்டுள்ளது. வியாசரின் மகாபாரதம் பேராசிரியர் N.G. மணி அவர்களின் நூலிலும், வில்லிபுத்தூரார் பாரதம் வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் நூலிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*"இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம்" என்பது இயற்கையைப் பற்றிய அழகிய பொன்மொழியாகும். மகாபாரதத்தில் இயற்கையைப் பற்றிய சித்தரிப்பையும், மக்களுக்கு உதவிய குணத்தையும் பற்றி இந்த ஆய்வு நூலில் காண்போம்.*

## முன்னுரை

நாவல் என்றாலும் புதினம் என்றாலும் ஒன்றே Novellus என்ற இலத்தீன் சொல் Novel என்னும் ஆங்கில சொல்லாகியது. புதுமை நவீனம் என்னும் தமிழ்ச் சொல்லாகியது மேலை நாட்டவர் தொடர்பால் தமிழில் செழித்த இலக்கியமே நாவல் இலக்கியம். மேனாட்டவர் வருகை இப்புதின இலக்கியத்திற்குப் புத்துயிரூட்டியதன்றே இது மேனாட்டவரால் புகுத்தப்படாததன்று. மேனாட்டவர் வருகைக்கு முன்பே இது தமிழகத்திற்கு அறிமுகமான ஒன்று. ஏற்கனவே சொல்லப்பட்ட கதையை மீண்டும் மீண்டும் படித்து அக்கதை மாந்தர்கள் பேசிய, பேசாமல் விட்ட கதைகளை வைத்து அக்கதையை ஒட்டி வேறொரு கதையை எழுதுவது மறுக்கூறல் அல்லது மறு வாசிப்பு என அழைக்கப்படுகிறது.

## மறுவாசிப்பு புதினத்தின் அமைப்பு

காலங்காலமாக மனிதனால் படைக்கப்படும் படைப்புகள் மாற்றமடைவது இயல்பு. புதினத்தின் நிகழ்வுகள், சம்பவங்கள் எங்கேயாவது ஒரு இடத்தில் ஒரு காலத்தில் நிகழ்ந்ததாக இருந்திருக்கும். நம் முன்பே அறிந்த கதையை நம் சந்ததிகளுக்கு அப்படியே கூறாமல் அந்த கதையைப் பற்றிய புதிய கோணத்திலும் புதிய பரிமாணத்திலும் தன்னுடைய கருத்தினைக் கூறி எழுதுகின்ற நாவல்கள் தான் மறுவாசிப்பு நாவல்கள் அல்லது மறு வாசிப்பு புதினம் எனப்படுகிறது

## புதினத்தின் வளர்ச்சியும் வகைகளும்

காப்பியங்களும், இதிகாச புராணங்களும் பல்வேறு வளர்ச்சி நிலை அடைந்தது போல புதினங்களும் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி அடைந்துள்ளன

## சமூக புதினங்கள்

நாள் முழுவதும் குறைவில்லாமல் நிறைவாகி பெருகி வரும் மக்களின் வாழ்வியல் நடைமுறைகளை கருவாகக் கொண்டு படைக்க பெறுவது தான் சமூக புதினங்கள் ஆகும். மக்களின் வாழ்வியலில் உள்ள குறைகளை மாற்றங்களை வற்புறுத்தும் நோக்குடன் இப்புதினங்கள் படைக்கப் பெறுகின்றன.

**வரலாற்று புதினங்கள்**

தமிழக வரலாற்றை கதைக்களமாகக் கொண்டு பலரும் வரலாற்று புதினங்களை படைத்துள்ளனர் சாண்டியலின் தமிழக உரோம வரலாறு நீண்ட தொடர்களின் கதை மாந்தர்களை பெருமளவில் புனைந்து சிறந்த இடத்தை பெற்றுள்ளது எனலாம்

**மொழிபெயர்ப்பு புதினங்கள்**

பிற மொழிகளில் படைக்கப்பட்ட சிறந்த புதினங்களை தமிழில் பலரும் மொழியாக்கம் செய்துள்ளனர். எஸ்.எல். பைரப்பா எழுதிய பருவம் புதினத்தை தமிழல் பாவணன் என்பவர் மொழியாக்கம் செய்துள்ளார். அயல் மொழியில் வெளிவந்த புதினங்களை தழுவி தமிழில் பலர் புதினமாக படைத்துள்ளனர்

**கங்கையும் சாந்தனனும்**

இயற்கையின் படைப்புகளில் மிக புனிதமானதும், வழிபாட்டுக்குரியதாகவும் விளங்குவது கங்கை ஆறு. இன்றளவும் இயற்கை வழிபாட்டில் இந்து மக்கள் கங்கை ஆற்றை வழிபட்டு வருகின்றனர் அப்படிப்பட்ட புனித நதியான கங்கையின் சிறப்பினை மகாபாரதத்தில் காண்போம்.

சந்திரகுல வம்சத்தின் மன்னனான சாந்தனு ஒரு நாள் கங்கை நதிக்கரை ஓரம் வந்து கொண்டிருந்தார். அப்பொழுது கங்கை நதி அழகிய பெண்ணாக உருமாறி அங்கே நின்றாள். அப்பெண்ணைக் கண்ட சாந்தனு அவளது அழகில் மயங்கினார். "பெண்ணே! நீ யாராக இருந்தாலும் சரி! நீ என் மனைவியாக வேண்டும்" என்று சாந்தனு கூறினார்.

அதற்கு கங்கை நதி நான் உன் மனைவியாகின்றேன். ஆனால் நீங்களும் சரி மற்றவர்களும் சரி என்னைப் பற்றி அறிய முற்படக் கூடாது. நல்லதோ, கெட்டதோ, நான் என்ன செய்தாலும் அதை தடுக்கக் கூடாது. எக்காரணம் கொண்டும் என்னிடம் சினம் கொள்ளக்கூடாது. இதற்கு மாறாக தாங்கள் நடந்து கொண்டால் அடுத்த நொடியே நான் உங்களை விட்டு பிரிந்து சென்றிடுவேன். அதற்கு சம்மதமா! என்று கேட்டாள்.

சாந்தனு கங்காதேவியிடம் "நீ என் மனைவியாக வேண்டும்" என்று கூறிய போது கங்கை விதித்த நிபந்தனையைப் பற்றி வில்லிபுத்தூரார்

**"இரிந்து மெய் நடுங்கிட யாது யாது நான்**
**புரிந்து பொறுத்தியேல்புணர்வல் உன் புயம்**
**பரிந்தெனை**
**மறுத்தியேல்பரிவொடுஅன்றுனைப்**
**பிரிந்து அகன்றிடுவேன் இப்பிறப்புமாறியே"**[1]

என்கிறாள்.

சாந்தனுவிடம் கங்காதேவி "நான் உன் மனைவியாக வேண்டுமானால் எச்செயலை செய்தாலும் அதனை நீங்கள் பொருத்துக் கொள்ள வேண்டும் அப்படி பொருத்துக் கொண்டால் நான் உங்களை மணந்திடுவேன்" இச்செயலுக்கு மாறாக நடந்துகொண்டால் அப்போதே மன வருத்தத்துடன் உங்களை விட்டு பிரிந்து செல்வேன் என்று கூறினாள்.

சாந்தனு கங்காதேவி மீது கொண்ட மோகத்தால் பின்விளைவுகளை எண்ணாமல் "அப்படியே செய்கிறேன், இது சத்தியம்" என்று வாக்களித்தார். சாந்தனு கங்கா தேவியும் சேர்ந்தமையால் அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தன. அந்த பிறந்த குழந்தையை நதியில் போட்டுவிட்டு புன்னகையில் வீடு திரும்பினாள்.

கங்காதேவி நடவடிக்கைகளைக் கண்ட சாந்தனும் அவளிடம் கோபம் கொள்ள முடியாமல் தவித்தான். கங்காதேவிக்குச் செய்துகொடுத்த சத்தியத்தையும் வாக்குறுதியை எண்ணி இதைப் பற்றி எப்படி கேட்பது என்று தனக்குள்ளே வருந்தினான்.

நாட்கள் கடந்தன கங்காதேவி தனக்குப் பிறந்த ஏழு குழந்தைகளையும் நதியில் போட்டுக் கொன்றாள். எட்டாவது குழந்தையும் பிறந்தது, அதையும் நதியில் வீசிக்கொல்ல கங்காதேவி சென்றாள். அதனைப் பார்த்து

தாங்கிக் கொள்ள முடியாத சாந்தனு “நில் குழந்தையை நதியில் வீசாதே! பாவமான இச்செயல்களை செய்யாதே? இக்குழந்தையை கொல்ல நான் உனக்கு அனுமதி தர மாட்டேன்” என்று கூறி அவளைத் தடுத்தான்.

ஏழு பிள்ளைகளைக் கொல்லும் போது தடுத்து நிறுத்தாத சாந்தனும் இப்போது தடுத்து நிறுத்தியதைக் கண்ட கங்கா தேவி தாங்கள் எனக்கு செய்து கொடுத்த சத்தியத்தையும், வாக்குறுதியையும் காப்பாற்றவில்லை. எனவே நான் தங்களை விட்டுப் பிரிகிறேன் என்றும், எட்டாவதாக பிறந்த குழந்தையைக் கொல்ல மாட்டேன். அவனை நானே வளர்த்துப் பல வித்தைகளையும் கற்றுக் கொடுத்து நானே உன்னிடம் ஒப்படைப்பேன். என் மகனை நான் உனக்கு தானமாகத் தருகிறேன் பெறுவாய்! எனக் கூறிவிட்டு குழந்தையுடன் மறைந்தால் கங்காதேவி.

இயற்கை சீற்றங்களால் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டவர்கள். அந்த இயற்கை சீற்றங்களில் நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வீடுகளையும் வயல்வெளிகளையும் சேதப்படுத்தும். அப்படிப்பட்ட நதி ஒரு பெண் உருவம் எடுத்து ஒரு மகனைப் பெற்று அவனுக்கு பல வித்தைகளையும் தர்மத்தையும் கற்றுக் கொடுத்து அனுப்புகிறாள் என்று இதிகாச புராணத்தில் கங்கையின் சிறப்பினை கூறி இருக்கிறது.

## சூரிய தேவனும் குந்திதேவியும்

சூரிய தேவன் என்பவர் தொன்மவியலின் அடிப்படையில் இந்து கடவுள்களில் நவகிரகங்களில் முதன்மையானவர் ஆவார். இதிகாச புராணங்களான இராமாயணம் மற்றும் மகாபாரதத்தில் சூரியதேவன் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறார். மகாபாரத்தில் சூரியதேவனின் பங்கு சிறப்பு வாய்ந்ததாகும். சூரியதேவனின் அருளினால் கர்ணன் பிறந்தான் கர்ணன் மிகச் சிறந்த வீரன் மற்றும் தாராளக்கொடை வள்ளல் ஆவார்.

மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர்களின் தாயான குந்திதேவி தன்னுடைய சிறுவயதில் துர்வாச முனிவருக்குப் பணிவிடைகள் செய்து பூஜித்து வந்ததால் மனமகிழ்ந்து துர்வாச முனிவர் குந்திதேவிக்கு ஓர் அறிய மந்திரத்தை உபதேசித்து அருளினார். குந்திதேவி எந்த கடவுளை நினைத்து மந்திரத்தை வேண்டினாலும் அந்தக் கடவுளின் குழந்தை பிறக்கும் என்பது அம்மந்திரத்தின் சிறப்பாகும். குந்திதேவி இந்த மந்திரத்தை சோதித்துப் பார்ப்போம் என பகலவனை மனதில் எண்ணி மந்திரத்தை ஜெபித்தாள்.

குந்திதேவி மந்திரத்தை ஜெபித்த அடுத்த நொடியே வானத்தில் மேகங்கள் திரண்டு அழகிய ஒளியுடன் சூரிய பகவான் குந்திதேவி முன்பு தோன்றினார். நீ யார்! என்று சூரியனைப் பார்த்து வியப்பில் வினாவினாள் குந்திதேவி. அதற்கு சூரிய பகவான் நான் இப்போ உலகம் பிரகாசமாய் இருக்க காரண கர்த்தாவான சூரிய தேவன் என்றார் நீ புத்திர பாக்கியம் வேண்டும் என என்னை நினைத்து மந்திரம் ஜெபித்தாய் அதனால் நான் உன் முன்பாகத் தோன்றினேன்! என்றார். அதைக் கேட்ட குந்தி அஞ்சி நடுங்கினாள். “சூரிய தேவனே! என்ன கூறுகிறீர்கள்? நான் ஒரு கன்னிகை எனக்குத் துர்வாச முனிவர் அளித்த மந்திரத்தைச் சோதித்துப் பார்க்கவே இவ்வாறு செய்தேன் ஏதாவது தவறு செய்து இருந்தால் என்னை மன்னித்துப் பொறுத்தருள வேண்டும்” என்று பகலவனிடம் வேண்டினாள்.

பகலவன் குந்திதேவியைப் பார்த்து “அரசகுமாரியே! பயம் கொள்ள வேண்டாம் என்னுடைய அனுகிரகத்தால் உனக்கு எந்த குற்றமும் உண்டாகாது என்னை விட்டு நீ பிரிந்ததும் முன்பு போலவே கன்னியாக மாறி விடுவாய் என்றார். உலகிற்கு ஒளியையும் உயிர்பையும் தரும் சூரிய பகவான் குந்திக்குக் கர்ப்பத்தை தந்தருளினார். அதன் விளைவாக ஆயுதம் தரித்தவர்களில் சிறந்த வீரனும் சூரியனைப் போன்று பேரொளியும், பேரழகும் பொருந்திய உடலுடன் கவச குண்டலத்துடன் கர்ணனைப் பெற்றெடுத்தாள்

குந்திதேவி. குழந்தை பிறந்ததும் சூரியதேவன் கூறியபடி மீண்டும் கன்னித்தன்மையை பெற்றால் குந்திதேவி.

குந்திதேவி கர்ணனைச் சூரிய பகவானின் அருளால் பெற்றெடுத்த நிகழ்வை வில்லிபுத்தூரார் கீழ்க்கண்டவாறு விவரிக்கின்றார்

**“தினகரன் சுடர் வடிவமும் அமிர்து எழு**
**திங்களின் வடிவாகத்**
**தனதடம் திரு மார்பு உறதழிஇயபின்**
**தையல் தன் நினைவு எய்த”**[2]

**“மனம் மகிழ்ந்ததும் வந்தது மணந்ததும்**
**வரம் கொடுத்ததும் எல்லாம்**
**கனவெனும்படி கரந்தனன் பெருந்தகை**
**கண்ணியும் கரு கொண்டாள்”**[3]

**“அந்தி ஆர் அழல் எனப்பரிதியின் ஒளி**
**அடைந்த பின்னணி மாடக்**
**குந்தி பூசநன் மாட மகள் எழில் நலம்**
**கொண்ட கொள்ளை யழகி”**[4]

**“இந்திராதியர் அவரவர் முகம் மலர்ந்து**
**இரந்தனதரத்தக்க**
**மைந்தன்னவன் ஒருவனைப் பயந்தனள்**
**மாசிலாமணியென்ன.”**[5]

என்று கர்ணனின் பிறப்பை வில்லிபுத்தூரார் விவரிக்கிறார்.

**சூரியனிடம் தன்னிடரை போக்குமாறு திரௌபதி வேண்டுதல்**

**“துரங்கமோரேழுடன்சோதிக்கோர் மணி**
**கரங்களோ ராயிரங்கவினத்தோன்றினாய்**
**வரங்கொள் வேனின் னையான்மரபு**
**பொன்று மென்று**
**இரங்குது மென்கைத் திடரைநீக்குவாய்”**[6]

ஏழு குதிரைகளுடன் ஒளிமிக்க அழகிய ஆயிரம் கிரணங்கள் விளங்கும்படி உதித்துள்ளானே! உன்னிடத்தே பின்வருமாறு நான் வரம் பெறுவேன் நீ எனக்கு ஒரு வரம் தர வேண்டும் என் குலத்தின் பெருமை கற்பு நெறி கேடாத்தன்மை அனைவருமே என்று வருந்துகின்ற என் மனதில் உள்ள துன்பத்தைப் போக்குவாயாக என்று திரௌபதி சூரியனிடம் வேண்டினாள்.

**பஞ்சபாண்டவர்கள் திரௌபதியோடு மச்சநாட்டை அடைதல்**

**“கல்கெழு குறும்புச் சாரலங்கிரியுங்**
**கடிகமழ் முல்லையும் புறாவும்**
**மல்கு நீர் பண்ணை மருதமும் கடந்து**
**வன்னியர் பிறந்த மாமயிலும்**
**வில்கெழுதடக்கையினை ஒருந்தானும்**
**விடார் கோன்றனிக்குடைநிழலில்**
**பல்குல மாக்கள் வாழ்வு கூர்வள**
**நாட்டைந்தனன் பாண்டவர˙தலைவன்”7**

குறிஞ்சியும் முல்லையும் திரிந்தது பாலையாகும்மாதலின் இங்கு பாலை நிலத்தை ‘கல்கெழுக்குறும்பு’ என்றெண்ணலாம். புறவு முல்லையை சார்ந்த நிலம். முதல் இரண்டு அடிகளில் நெய்தல் தவிர மற்ற நான்கு நிலங்களும் கூறப்பட்டன.

**சூரிய தேவன் யுதிஷ்டருக்கு அட்சய பாத்திரம் வழங்குதல்**

**“சூரிய தேவன் யுதிஷ்டருக்கு அட்சய**
**பாத்திரம் வழங்குதல்”8**

பாண்டவர்கள் வனவாசம் சென்ற போது அவர்களுடன் பல பிராமணர்களும் வனவாசம் சென்றனர் பிராமணர்களுக்கு எவ்வாறு உணவளிப்பது என்று தர்மர் கவலைப்பட்டார். பின்னர் அவர் சூரிய தேவனிடம் பிரார்த்தனை செய்தார் சூரியதேவன் தருமருக்கு ஒரு பாத்திரத்தை கொடுத்தார். அதில் திரௌபதி அந்த பாத்திரத்தில் இருந்து சாப்பிடும் வரை உணவு நிறைந்திருக்கும் என்று வாக்களித்தார். பாண்டவர்களின் வனவாசத்தின் போது அவர்களுக்கு உணவு பற்றக்குறை ஏற்படாமல் இருக்க இந்த அட்சய பாத்திரம் பெரிதும் உதவியது.

**சூரிய தேவனின் கோபம்**

சூரிய தேவன் மகாபாரதத்தில் கோபம் கொண்டு அதிக வெப்பத்தையும் கொடுத்தார். சூர்யா தேவன் மகன் கர்ணன் அவமானங்களை சந்திக்கும் போதெல்லாம் சூரியன் கோபம் கொண்டு அதிக வெப்பத்தை தருவார். திரௌபதியின் சுயம்வரத்திற்கு எல்லா நாட்டு மன்னர்களும் போயிருந்தனர்.

வில்லை தூக்கிக் குறி பார்த்து மீனை கொல்பவருக்கே தன்மகள் திரௌபதியை மணம் முடித்து தருவதாக அவர் தந்தை குந்தி போஜன் கூறியிருந்தார். ஒருவரால் கூட அந்த வில்லை தூக்க முடியவில்லை. ஆனால் கர்ணன் அந்த வில்லை தூக்கினார். அம்பை விடப் போகும்போது தாழ்ந்த குலத்தில் பிறந்தவரைத் திருமணம் செய்ய மாட்டேன் என்று திரௌபதி சொல்லும் போது சூரிய பகவான் அதிக கோபம் கொண்டு வெப்பத்தை காட்டினார். இயற்கை கடவுளான சூர்யா தேவன் குளிர்ந்த மனம், கோபம் கொண்ட குணம், உதவும் மனம் என அனைத்து இயற்கை நிகழ்வுகளையும் மகாபாரதத்தில் காண்கிறோம்.

## முடிவுரை

இறைவனின் அற்புதபடைப்பான இயற்கையைப் பாதுகாத்து நம்முடைய எதிர்கால சந்ததியினருக்கு நாம் உயிர்ப்போடு வைத்திருந்து அளிப்பது நம் அனைவரின் கடமையாகும். நீரின் தேவையை அறிந்து அதை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். நீரை மாசுபடுத்தக் கூடாது, போன்ற விழிப்புணர்வுகளை நம் சந்ததியினருக்கு அறிவுறுத்த வேண்டும். இயற்கையை பாதுகாப்போம் என உறுதிக்கொள்வோம்.

## தொகுப்புரை

இக்கால இலக்கியங்களில் இயற்கை என்னும் தலைப்பில் புதினத்தின் அமைப்பு அதன் வகைகள் மற்றும் வளர்ச்சியை கண்டோம். இலக்கியங்களில் இயற்கை பற்றிய சிறப்புகளையும் கூறப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் கங்காதேவியின் சிறப்புகளையும், அதன் சீற்றங்களையும் கண்டோம். சூரிய தேவன் மனம் குளிர்ந்ததால் கர்ணன் பிறந்தார். கர்ணன் அவமானங்களை சந்திக்கும் பொழுதெல்லாம் சூரிய தேவன் கோபம் கொண்டார். பஞ்ச பாண்டவர்களுக்கு சூரிய தேவன் உதவியும் செய்தார். இவ்வாறு கங்காதேவியும் சூரிய தேவனின் சிறப்புகளும் மகாபாரதத்தில் சிறப்பாக கூறப்பட்டுள்ளது. பண்டைய கால மக்கள் இயற்கையை வழிபட்டது போல நாமும் நம்முடைய தலைமுறையினரும் இயற்கையை வழிபட்டு இயற்கையை பாதுகாக்க வேண்டும்.

## அடிக்குறிப்பு

1. நூற்பெயர் : வியாசரின் மகாபாரதம்.
2. ஆசிரியர் பெயர் : பேராசிரியர். N.G. மணி, ப. எண்: 13
3. மேலது ப. எண் : 51
4. மேலது ப. எண் : 53
5. மேலது ப. எண் : 53
6. மேலது ப. எண் : 53
7. நூற்பெயர் : வில்லிப்புத்திரரார் இயற்றிய மகாபாரதம். ஆசிரியர் பெயர் : வில்லிப்புத்திரரார், ப. எண்: 50, பதிப்பு ஆண்டு : 1960, முகவரி : வை.மு. நரசிம்மன், வை.மு. கோபாலகிருஷ்ண மாச்சாரியர் கம்பெனி, 17, தெளிசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கோணி, சென்னை - 5.
8. மேலது ப. எண் : 6, பதிப்பு ஆண்டு : 2024, முகவரி : மேலது
9. நூற்பெயர் : வெண்முரசுப் புதினம் ஆசிரியர் பெயர் : ஜெயமோகன், ப. எண் : 25, பதிப்பு ஆண்டு : 2014, முகவரி : நற்றிணை பதிப்பகம்

# நற்றிணையில் குறிஞ்சித் திணை சார்ந்த இயற்கைக் கூறுகள்

**முனைவர் சி. சுப்ரமணியம்**
*இணைப் பேராசிரியர்*
*தமிழாய்வுத்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர், நாமக்கல்*

**மா. கோமதி**
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்*
*கந்தசாமிக்கண்டர் கல்லூரி, வேலூர், நாமக்கல்*

**ஆய்வுச்சுருக்கம்**
*சங்க இலக்கிய நூல்கள் பெரும்பாலும் இயற்கை சார்ந்தே அமைகிறது. குறிஞ்சித்திணையில் இயற்கைக் காட்சி, அருவியில் தலைவனும், தலைவியும் நீராடுதல், தினைப்புனம் காத்தல், மலர் பறித்துப் பாறைகளில் குவித்தல் போன்ற இயற்கைக் காட்சி அமைந்த பகுதியாக உள்ளது. குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல்கள் மலை, நீர், மரம் ஆகியவை ஒன்றோடு ஒன்றாக குறிஞ்சித் திணை இயற்கை சார்ந்த பாடல்களில் வாழ்வியல் கூறுகளை இயற்கையோடு இணைந்தே காணப்படுகிறது. இயற்கையை மையப்படுத்தி வாழும் சூழலுக்கு ஏற்ற முறையில் வாழ்க்கையை நடத்தினர். பல வருடங்களாக பூக்கள் தமிழர்கள் நுகரும் தன்மையாக இருக்கிறது. பூக்களின் விற்பனை பற்றி நற்றிணையில் இடம்பெறுகிறது. ஒவ்வொரு நிலத்திருக்கும் மலரை அடையாளப்படுத்தி பெயர் சூட்டினர்.*

**முன்னுரை**

சங்க இலக்கிய நூல்கள் தமிழ் மக்களுக்கு இயற்கையின் மேல் இருந்த அன்பும், ஈடுபாடும் பாடல்களுக்கு முக்கியத்துவம் அளித்தது. எட்டுத்தொகை நூல்களில் இயற்கையின் பங்கு ஆழமாக இருக்கிறது. காதல், வீரம், கொடை, நட்பு இவை மட்டுமில்லாமல் இயற்கை வளமும் வருணனைகளும் என பல இயற்கைக் காட்சிகளைப் புலவர்கள் பல பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். சங்க காலப் புலவர்கள் பாடியுள்ள பாடல்களில் நற்றிணை குறிஞ்சித்திணையில் இயற்கை சார்ந்த கூறுகள் பற்றியும் அருவியின் எழில் மிக்க காட்சியை எடுத்துக் கூறும் பகுதியாக இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இயற்கை காட்சியும் அருவியும்**

சங்க இலக்கிய நூல்களான நற்றிணையில் தலைவனின் ஆற்றாமையை வெளிப்படுத்தும் இயற்கை காட்சிகள் காலை பொழுதில் வர்ணனையாக மேகத்தை ஒப்பிட்டு தலைவி நற்றாயிடம் பசலை படிந்த மேனியை தன் அன்னையிடம் எடுத்து கூற முடியாத மன நிலைக்கு ஆற்றாமையின் வெளிப்பாடாக இப் பாடல் உணர்த்துகிறது.

> **“நாண் மழை தலைஇய நன்னெடுங் குன்றத்து**
> **மால் கடற் நிரையி னிழிதரு மருவி”[1] (117)**

என்ற பாடலடிகள் உணர்த்துகிறது.

உயிரினங்கள் அனைத்திற்கும் உரியகாலத்தில் மழை பொழிந்து உலகை வளம் பெறுவது நீர் இயற்கையாக காட்சி தரும் அருவியில் இருந்து வரும் நீரும் காடுகளுக்கு சென்று வயல்களுக்கு செழிப்பை தருவதும் நீர் தான்.

> **“யான்.˙. தஞ்சினென் கரப்பவுந் தான்**
> **தறிந்தனள் கொல்லோ வருளினள் கொல்லோ**
> **வெவன்கொறோழியன்னை கண்ணியது”.[2] (53)**

ஆற்றிலே வெள்ளமானது அருவிகள் போல் அடித்து வரும் வெள்ளத்தில் சென்று நீங்கள் இருவரும் நீராடி விட்டு குளிர்ந்த

நீரை பருகியும், இயற்கை காட்சியினைக் கண்டுகளித்தும் வரச்சொன்னால் நம் அன்னை அது தலைவியின் நோய்க்குப் பசலை நோய்க்கு மருந்தாகவும் நீர் விளையாட்டு இருந்தது. மலைநாட்டு தலைவன் குறித்த நேரத்தில் வராத காரணத்தினால் அவனை நினைத்தேன் அப்போது அயல் வீட்டு பெண்ணொறுத்தி அவன் கூடிய விரைவில் வருவான் என நல்ல நிமித்தம் வேறு ஒருவருடன் பேசினாள். அதனால் தலைவன் விரைவில் வருவான் நீ வருந்த வேண்டாம். அந்த நிமித்த மொழிகளைக் கூறிய அயல் வீட்டுப் பெண் அமிர்தத்தைப் பெற்று இப்பொழுதே உண்பாயாக என்ற கூற்று இங்கு இடம் பெறுகிறது. காற்றாற்று வெள்ளம் கலங்கிய பாசி அடைந்த நீரானது வெள்ளிய ஒளிபொருந்திய அருவி கொட்டும் நீர் துறையிடத்தில் சேர்ந்து கலந்தால் எப்படி இருக்குமோ அதைப்போன்று ஒப்பிடுவதாகக் குறிப்பிடுகிறார்.

**"கலங்கும் பாசி நீரலைக் கலாவ**
**வொளிறுவெள் ளருவி யொன்டுறை மடுத்துப்"[3] (65)**

இளமங்கையர்கள் விளையாடுகின்ற தோழியர் கூட்டத்தோடு ஓரையாடமல் வீட்டில் இற்செறிக்கப் பெற்றிருப்பது என்பது அறமாகாது. இல்லத்தில்செல்வமும் குறைந்து போகும் இயற்கை எல்லாம் நம் அன்னையிடம் சென்று வணங்கிச் சொல்லுபவர் குன்றம் ஒளியை எங்கும் வீசும் வலிமைமிக்க இடி முழங்குகின்ற இருட்பொழுதில் அதாவது நடுயாமத்தில் கொடி அசைவதைப் போன்ற மின்னலை, ஒத்ததாகவும் மழை பொழிகிறது என்பதை நற்றிணை பாடல்,

**"விளையா டாயமொடோரை யாடா**
**திளையோ ரில்லிடத் திற்செறிந் திருந்த**
**லறனு மன்ற யாக்கமுந் தேய்ம் மெனக்**
**குறுநுரை சுமந்து நறுமல் ருந்திப்**
**பொங்கி வருபுதுநீர் நெஞ்சுண வாடுகம்"[4]**

இப்பாடலின் மூலம் ஓரை விளையாடுதல் பற்றியும் கூறுகிறார்கள்.

அடம் பிடித்துக் கேட்டால் மட்டும் தாய் வெளியில் செல்ல விடுவாளா என்ன? என்று தோழி தலைவியிடம் கேட்கிறாள் புதுப்புனலில் நீராடி வருகிறோம். என்று கூறினாலும் நம் அன்னை விடமாட்டாள். தலைவி கட்டுக்காவலில் இருக்கிறாள் என்பதை தலைவன் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறினாள். சங்க காலத்தில் பெண்கள் ஒன்று கூடி ஓரை என்னும் விளையாட்டு இருந்தது என்பதையும் இப்பாடல் மூலம் அறிகிறோம்.

**"சினைதொறுந் தூங்கும் பயங்கெழு பலவின்**
**சுளையுடை முன்றின் மனையோள் கங்கு**
**லொலிவெள் ளருவி யொலியிற் றுஞ்சி"[5] (77)**

சிவந்த வேர்களை உடையதாக அமைந்த கிளைகள் தோறும் சுளைகளை உடைய பழங்களைக் கொண்ட பலாமரங்கள் அதிகமாகக் காணப்படும் இடத்தில் தலைவியானவள் இரவு நேரத்தில் அருவியில் விழுகின்ற ஒலியைக் கேட்டு இன்னும் உறங்காமல் இருப்பாள் தலைவியின் ஏக்கத்தின் வெளிப்பாடக இப்பாடல் அமைந்திருக்கிறது.

**மலர்கள்**

இயற்கையில் பூக்களுக்கு அதிக நறுமணம் கொண்டவை பல வகையான பூக்கள் சங்க இலக்கியத்தில் ஒன்றான நற்றிணையில் காண முடிகிறது. பூக்கள் நம் வாழ்க்கையில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் வண்ணத்துப்பூச்சிகள், பறவைகள், தேனீக்கள் போன்றவை பூக்களை உணவாக எடுத்துக் கொள்கின்றன. மலையும் மலை சார்ந்த இடத்தை குறிஞ்சி என்றும் அழைக்கிறோம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலையில் பூக்கும் பூ, பழந்தமிழர்கள் இயற்கையில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதை அறியப்படுகிறது. தலைவியும் தோழியும் ஒன்பது வகையான மலர்களைப் பறித்து வந்து மாலையாகக் கட்டி அணிந்தனர் என்பதைக் கபிலர் கூறுகிறார்.

**"கடவுட் கற்சுனை யடையிந் தவிழ்ந்த**
**பறியாக் குவளை மலரோடுகாந்தட்**
**குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்**
**பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மக"6 (34)**

மலையில் உள்ள சுனையில் மலர்ந்து இருக்கும் குவளை மலர்களைப் பறித்து அவற்றோடு குறுதி போன்ற நிறத்தில் இருக்கும் காந்தல் மலர்களை அதனுடன் மாறுபட தொடுத்துக் கட்டினர் என்பதையும் கார்காலத்தில் தலை நிமிர்ந்து மலர்ந்து நிற்கும் நறுமணம் கொண்ட கடம்ப மாலையை சூடி மகிழ்ந்தனர் என்பதையும் அறிய முடிகிறது. சங்க கால மகளிர் இயற்கையில் கிடைக்கும் மலர்களில் தமிழ் மக்களுக்கு இணைப்பிரியாத உறவாக உள்ளது என்பதை சங்ககாலத்தில் இருந்தே வாழ்வியலோடு ஒன்று இணைவது மலர்கள் ஆகும் மனிதர்களின் முகமலர்ச்சிக்கு மலர்கள் பெரிதும் துணை செய்கின்றன.

**"சுனைப்பூக் குற்றுந் தொடலை தைஇய**
**மலைச்செங் காந்தட் கண்ணி தந்துந்**
**தன்வழிப் படுஉ நந்நயந் தருளி"7 (173)**

மலையில் மலர்ந்த மலர்களைப் பறித்து மாலையாகக் கட்டி மலையில் இருக்கும் முருகவேல் கடவுளை வழிபடுவோம். அப்படிச் செய்தால் இறைவனின் அன்பு நமக்குக் கிடைக்கும் என்று சங்ககால மக்கள் நினைத்தனர். மனிதர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை பல நிலைகளில் தமிழர்களுக்கு முக்கியமாக இருப்பது மலர்கள்தான் ஒவ்வொரு மலரும் அடையாளமாகவே பார்க்கப்படுகிறது.

காந்தள் மலரின் அழகைக் கருதி மகளிர் ஆடவரும் இதனை விரும்பி சூடிக்கொண்டனர். முருகப்பெருமானுக்கு அடையாளப்பூ காந்தள் மலர் தான் பண்டிகை, திருமணம் போன்ற நிகழ்வுகளில் மகளிர் பூக்களை சூடுவது வழக்கம். இதனால் மகளிர் அழகாக தோன்றுவதுடன் அவர்களின் கூந்தல் நறுமணம் கொண்டதாக இருக்கும் மேகம் மழையைப் பொழிவித்த உயர்ந்த குன்றத்திலேயே கருமையான காம்பினுடைய வலிமையில்லாத மென்மையாக இருக்கும் குறிஞ்சிப்பூ பூத்துக் குலுங்கும் இம்மலையில் வசிக்கும் வேட்டுவரின் இல்லங்களில் ஓவியம் வரைந்தது போல் பூக்கள் காட்சி அளிக்கும். இதனை,

**"சூருடை நனைந்தலைச் சுனைநீர் மல்க**
**மால்பெய நலைஇய மன்னெடுங் கூன்றத்து**
**கருங்காற் கூறிஞ்சி மதன் இல் வான் பூ"8 (268)**

குறிஞ்சி பூவின் தேனை மிகவும் அரியதாகக் கருதுவர். ஏனெனில் பிற தேனை விட குறிஞ்சித்தேன் சுவை மிகுந்தது. பிற பூக்களின் தேன் கலப்பதில்லை ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு அடையாளமாக இருப்பது.

தமிழகத்தில் ஒவ்வொரு மலரை தங்கள் அடையாளமாகவே அணிந்தனர் பாண்டிய மன்னர்கள் வேப்பம்பூவையும் சேர அரசர்கள் பனம் பூவையும் சோழ வேந்தர்கள் அத்திப் பூவையும் அணியும் வழக்கம் கொண்டிருந்தனர். வேந்தர்கள் தங்களுக்கு இடையே வேறுபாடு தெரிவதற்காக இந்த மலர்களை சூடிக்கொண்டார்கள். போரின் வெவ்வேறு பிரிவுகளுக்கும் வெவ்வேறு அடையாள பூக்களை கையாண்டனர். காந்தள் மலர், கொன்றை மலர், வெற்றி மலர் போன்ற மலர்களை அவர்களின் நிலத்திற்கு ஏற்ப அணிந்து கொண்டனர். பக்திக்கும் இறை வழிபாட்டிற்கும் மிக முக்கியத்துவம் பெறுகிறது. இன்றும் மலர்கள் அணியும் வழக்கம் பெண்களிடத்தில் அதிகம் காணப்படுகிறது.

**மரங்கள்**

சங்க இலக்கியங்களில் சில மரங்கள் கடவுள் மரங்களாகக் காட்டப் பட்டிருக்கின்றன. கிராமங்களில் அரசமரமும் வேப்பமரமும் சேர்ந்து வளர்ந்த இடங்கள் வழிபாட்டுத்தலமாக போற்றப்படுகிறது. அரசமரம் மணமகனாகவும் வேப்பமரம் மணமகளாகவும் போற்றப்படுகிறது. இம்மரத்தின் கீழ் நாக உருவங்கள் பதிக்கப்பட்டு இருப்பதை நாம் காணலாம்.

**அத்தி மரம்**

அத்தி மரத்தில் இருக்கும் இலை, பழம், பட்டை அனைத்தும் மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

அத்திப்பழத்தை தினமும் உணவில் சேர்த்துக்கொண்டால் எவ்வித நோயும் வராது. அத்திப் பழத்தில் அதிக அளவு இரும்புச்சத்து உள்ளது எல்லா பழங்களை விட அதிக சத்துக்கள் இருக்கிறது. சங்க காலத்தில் அத்தி மரத்தை ''அதவமின்றி'' அழைத்ததாக நற்றிணையில் கூறப்படுகிறது.

> **"அதவந் தீங்கனி அன்ன செம்முகத்**
> **துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்க"[9]**
> **(95)**

அத்திப்பழம் போன்ற சிவந்த முகத்தையும் பஞ்சு போன்ற மயிருடைய தலையை கொண்ட குரங்கின் குட்டியானது வயிற்றில் தொங்கிகொண்டு இருக்கும் இக்கோலத்தை பார்க்க பெரிய பாறையின் அருகில் வளர்ந்திருக்கும் மூங்கிலை வளைத்து அதன் மீது ஏறி மகிழ்ச்சியாக குறவர்கள் விளையாடினர். அத்தி மரங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறது. அதனை அதிகரிக்க அடுத்த தலைமுறையினருக்கு அத்தி மரத்தை பற்றி கூறுவது நமது கடமையாகும்.

**சந்தன மரம்**

சந்தனம் குறித்து சங்க இலக்கியங்கள் பல்வேறு நூல்களில் கூறியுள்ளது. இதன் அடிமரத்தில் துளையிட்டு நடுத்தண்டு பகுதியை ஆய்வு செய்யும்போது சந்தன எண்ணெய் அதிக வாசமாக இருப்பதைக் காண முடிகிறது.

> **"மரல்நார் உடுக்கை மனையுறை குறவர்**
> **அறியாது அறுத்த சிறியிலைச் சாந்தம்**
> **வரனுற்று ஆர முருக்கிப் பையென**
> **மரம்வறி தாகச் சோர்ந்து உக் காங்கு**
> **என்"10 (64)**

சந்தனம் மலைகளில் காணப்படுகிறது. மலைவாழ் குறவர்கள் சிறிய இலை கொண்ட சந்தன மரத்தின் மேல் பட்டையில் இருக்கும் பொருள் மருத்துவ குணம் என்று அறியாது மரத்தை அறுத்தனர். நீரில்லாமல் வற்றி காயத் தொடங்கியது சந்தனம் சிறந்த நறுமணத்தை தரும் என்று மக்கள் தெரிந்திருந்தனர். சந்தனத்தை நறுமணத்திற்காக பூசி கொள்வதைப் பற்றி சங்கப் பாடல்கள் பல கூறியுள்ளன. சங்க கால மகளிர் மார்பில் பூசிக் கொள்வது வழக்கமாக இருந்தது சந்தனம் புகையை கூந்தலுக்குக் காட்டினர்.

**வேங்கை மரம்**

வேங்கை மரப்பட்டை நல்ல மருந்து பொருளுக்கு உதவுகிறது. வேங்கை மரம் சுற்றுச்சூழல் வெப்பத்தை கட்டுக்குள் கொண்டு வருகிறது. மேசை, நாற்காலி, கட்டில் போன்றவற்றை தயாரிப்பதற்கு வேங்கை மரம் பயன்படுகிறது. வேங்கை மரத்தைப் பற்றி சங்க இலக்கிய நூல்கள் கூறுகின்றன.

> **"யாங்குச் செய் விங்கொ றோழி பொன்வீ**
> **வேங்கை யோங்கிய தேங்கமழ் சாரற்"11**
> **(259)**

பொன் போன்ற பூக்களை கொண்ட வேங்கை மரங்கள் உயர்ந்து வளர்ந்து மணம் வீசும் மலைச்சாரலில் எதுவாகும் தலைவனும் தலைவியும் முன்பு சந்தித்தனர். வேங்கை மரத்திற்கு அடியில் நின்று பேசிக் கொண்டிருந்தனர். அதனை நினைவு கூறும் வகையில் வேங்கை மரம் இருந்தது என்பதை நமக்கு சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. வேங்கை மரம் நிழலிற்கு மட்டுமல்லாமல் நல்ல மருத்துவ குணம் உள்ள பொருளாக இருக்கிறது.

**முடிவுரை**

இயற்கையில் படைப்பில் ஒரு பருவம் ஒருவருக்கு இன்பம் என்றால் மற்றவருக்கு துன்பம், இயற்கையைப் பேணிக்காப்பது நம் அனைவரின் கடமையாகும். இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழ வேண்டுவது அவசியமானதாகும். சங்க இலக்கியம் உலக மக்களின் வாழ்க்கையைப் பற்றி பேசுகிறது. தலைவன் தலைவியிடம் காதலை வெளிப்படுத்தும் இடமான வேங்கை மரம், சந்தனமரம், அகில் போன்ற இடங்கள் வெளிப்படுத்தினர். நீர் மற்றும் மலர்கள் முன்னிலை காட்டும் அளவிற்கு முக்கியத்துவம்

கொடுத்தனர். நற்றிணையில் காட்டும் அருவியானது முழுவதும் இயற்கையைக் காட்சிகளை முன்னிலைப்படுத்துவது போன்றவை வளர்ச்சியடைந்துள்ளது.

### தொகுப்புரை

சங்க இலக்கியத்தின் இயற்கை எழில்மிகு காட்சியின் வருணையினை எடுத்துச் சொல்லும் ஓவியமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. குறிஞ்சித்திணையில் தலைவி, தோழி, திணைப்புனம் காக்கச் சென்ற காட்சியை ஓவியம் தீட்டியது. எழில்மிகு அழகினை அருவியின் மலைச் சாரலின் காட்சியைப் புனையா ஓவியமாகக் காட்சிப்படுத்தப்பட்டது. மலர் பறித்த காட்சிகள், மரத்தின் இலை தழைகளை ஒடித்து மாலையாகச் சூடிக்கொண்டு ஆடி மகிழ்ந்தது போன்ற காட்சிகள் வருணைகளை எடுத்துச் சொல்வனவாக உள்ளது.

### அடிக்குறிப்பு

1. நூற்பெயர்: சங்க இலக்கிய உரைவேறுப்பாட்டுக் களஞ்சியம் நற்றிணை - தொகுதி – 1, ஆசிரியர் பெயர் : முனைவர் க. பாலாஜி, ப. எண் : 190, பதிப்பு ஆண்டு: 2024, முகவரி : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41, பி - சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை - 600 050.
2. மேலது ப. எண் : 180
3. மேலது ப. எண் : 208
4. மேலது ப. எண் : 214
5. மேலது ப. எண் : 239
6. மேலது ப. எண் : 136
7. மேலது : நற்றிணை - தொகுதி -2, ஆசிரியர் பெயர் : முனைவர் க. பாலாஜி,
   ப. எண் : 439, பதிப்பு ஆண்டு : 2024, முகவரி : மேலது
8. மேலது : நற்றிணை - தொகுதி -2, ப. எண் : 630
9. மேலது: நற்றிணை - தொகுதி -2, ப. எண் : 283
10. மேலது: நற்றிணை - தொகுதி -2, ப. எண் : 205
11. மேலது: நற்றிணை - தொகுதி -1, ப. எண் : 612

# சங்கத் தமிழரின் சொல்லாடலும் இயற்கையும்

**முனைவர் த. ஜெஸி**

*உதவிப் பேராசிரியர்*

*தமிழ்த்துறை, விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்*

## ஆய்வுச்சுருக்கம்

*இயற்கை என்பது அழகின் பிறப்பிடம் கற்பனையின் ஊற்று கருத்தின் உறைவிடம் எனப் பலவாறாகக் கூறலாம். இவ்வியற்கையின் எழிலில் ஈடுபடாதவர்களே உலகில் இல்லை. அவ்வகையில் தமிழர்கள் இயற்கையோடு இணைந்த சிறந்த வாழ்வினை உடையவர்கள். அருவியின் ஓசையினில் மகிழ்ந்தனர். பறவைகள் எழுப்பும் ஒலியின் அளவுகோலினை நுண்ணுணர்ந்தவர்களாக இருந்துள்ளனர். யானைகுருகின் ஓசை பேரோசை உடையது என்பதையும் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளனர். இவை அனைத்தையுமே சொல்லாடலும் இயற்கையும் என்னும் கட்டுரையின் வாயிலாக விளக்கியுள்ளனர்.*

## முன்னுரை

இயற்கை வழித்தோன்றி இயற்கையை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்தவன் மனிதன். வாழும் நாட்களில் இயற்கையை போற்றியும் துதித்தும் அதனோடு இணைந்தும் இன்பமடைந்தான். அதற்கு சிறந்த சான்றாக சங்க பாடல்கள் விளங்குகின்றன. இயற்கையின் ஒவ்வொரு நுணுக்கமான செயல்பாட்டையும் ஆராய்ந்து அதனை வாழ்வுடன் பொருத்தி வெளிப்படுத்தி உள்ளான். சங்கத் தமிழர்களின் சொல்லாடல்கள் அவனுடன் ஊடாடிக் கிடந்த இயற்கையை எவ்வண்ணம் பிரதிபலிக்கின்றன என்பதைக் காண்போம்.

## இயற்கையும் தமிழரின் சொல்லாடலும்

மனிதவள சிந்தனை வெளிப்பாட்டுக் கருவியாக விளங்கும் சிறந்த கருவி மொழியாகும் இம்மொழியானது மனித உணர்வின் புரிதலுக்கு வடிகாலாக அமைகிறது. இதன்வழி இயற்கையை படைக்கும் செயலினில் தமிழன் விளைந்தான். இயற்கையின் சிறுசிறு ஒலிக்குறிப்புகளும் இதில் அடங்கும்.

- முழவு இசை வெள்ளருவி
- நுளம் பின்புலம்பல் ஒலி
- பல்லியின் அழைப்பொலி
- ஏனல் காவலரின் கவணிசை
- வாகைவெள் நெற்று ஒலித்தல்
- வற்றல் ஆர்ப்பிசை
- யானைக் குருகின் ஓசை

மேற்கண்ட இசையினைப்போல் தமிழர்கள் பல ஒலியினைக்கண்டும் கேட்டும் அதனை பதிவு செய்தும் உள்ளனர்.

## முழவு இசை வெள்ளருவி

தலைவன் தலைவி மீது கொண்டுள்ள காதல் குறித்து பாங்கன் உரை நிகழ்த்தும் பொழுது

அருவியின் இனிய ஓசையை கூறுகிறான். பெரிய மலையில் இருந்து வீழும் அருவியின் ஓசையானது இசை அறிவினில் தேர்ந்தோரின் உழவிற்கு இணையாக உள்ளது என்கிறான்.

**“பெருவரை மிசையது நெடுவெள்ளருவி**
**முதுவாய்க் கோடியர் முழவிற்றதும்பி**
**சிலம்பினிழி தருமிலங்கு மலைவெற்ப**
**நோதக்கன்றே காமம் யாவதும்**
**நுற்றெனவுன சார் மாட்டும்**
**சென்றே நிற்கும்**
**பெரும்பேதை மெத்தே” 1**
**குறுந்தொகை -78**

காட்டப்பட்ட பாடல் வரிகள் அருவியின் ஓசையின் தன்மையை உரைக்கிறது. மேலும் மதுரைக்கதக் கண்ணன் எனும் புலவன் அருவியினை ஒலிக்கின்ற அருவி என்றும், பாறைகளின் மீது வீழும் அருவியின் ஓசை குறித்து குறிஞ்சிக் கபிலர் கூறுகிறார்.

**"ஒலங்கு வெள்ளருவியோங்கு மலை நாடன்**
**சிறுகட் பெசரங் களிறுவயப்புலி தாக்கித்**
**தொன் முசண்சோருந் துன்னருஞ் சாரல்**
**நடுநாள் வருதலும் வருஉம்**
**வடுநாணலமே தோழி நாமே"**
**2 குறுந்தொகை -88**

எடுத்துக்காட்டப்பட்டுள்ள பாடல் வரிகள் அருவியின்தனி ஒலித்தன்மையைவிளக்குகின்றன

**நுளம் பின்புலம் பல் ஒலி**

தலைவனின் பிரிவை ஆற்றாலாகிய தலைவி நள்ளிரவில் தூங்காமல் விழித்திருக்கிறாள். அவளுக்கு அந்நேரம் ஒலிக்கும் சிறு உயிர்களின் ஓசையும் துன்பத்தினை விளைவிக்கின்றது.

மழைக் காலத்தில் வரும் நுளம்பு, மாட்டுஈ ஓசை எழுப்புவது துன்பம் தர அதனை விரட்ட காளை தலையை ஆட்ட, அதன் கழுத்தில் உள்ள மணி ஆனது ஒலிக்கின்றது. ஈயின் சிறு ஓசையும் உற்றுநோக்கும் திறன் பெற்றவர்களாக தமிழர்கள் இருந்தனர் என்பதை பாடல் வரி உணர்த்துகின்றது.

**பல்லியின் அழைப்பொலி**

தலைவியை பிரிந்த தலைவன் செல்லும் பாலை உயிரிகளின் அன்பு கண்டவன் விரைவில் வருவான் என்ற பாடல் உயிர்களின் ஓசை இன்பத்தினை அறியச் செய்கின்றது.

**"உள்ளார் கொல்லோ தோழிகள்வர் தம்**
**அங்காற் கள்ளியங்காடி றந்தோரே"**
**குறுந்தொகை -54**

வேட்டுவர் அம்பை உகிர் நுதியால் தீண்டும்போது உண்டாகும் ஓசையானது பல்லி தன் துணையை அழைக்கும் ஒலிக்க நிகராக உள்ளது. இதன்வழி பல்லியின் புணர்ச்சி ஒலியை கண்டுணர்ந்த சிறப்பிற்குரியவர் நம் தமிழர் என்பது விளங்கும்.

**ஏனல் காவலரின் கவணிசை**

தலைவன் மீது கொண்ட அன்பால் தலைவி இழந்ததன் பெண் நலன் இயற்கை புணர்ச்சி நிகழ்ந்த இடத்தின் கண்தொலைந்ததை தலைவி வருத்தத்தோடு தோழியிடம் உரைக்கிறாள். இதில் கவணின் ஓசை சிறப்பிக்கப்பட்டுள்ளது.

**"யானேயீண்டையே னேயென்னலனே**

**ஏனல் காவலர் கவணொளி வெரீஇக்**

**கானயானை கைவிடு பசுங்கழை**

**மீனேறறி தூண்டிலினிவக்கும்**

**கானக நாடனொடாண் டொழிந்தன்றே"**

கானகர்களின் கவண் ஒலியினை கேட்டு மூங்கிலை உண்ண வந்த யானை அத்தொழிலை ஒழித்து நீங்கியது. கவண் ஒலி மூங்கிலை அடையும்பொழுது உண்டாகும் பேரோசை யானைக்கு தரும் அச்சத்தினை அறிந்து செயல்படுபவராக தமிழர்கள் உள்ளனர்.

**வாகை வெள்நெற்று ஒலித்தல்**

இயற்கை புணர்ச்சியின்போது கண்ட தலைவியின் அழகினை பாங்கனிடம் உரைக்கும் தலைவனின் மனநிலை இங்கு எடுத்துரைக்கின்றது.

**"வில்லோன் காலன கழலே தொடியோள்**

**மெல்லடி மேவுஞ்சிலம்பே நல்லோர்**

**யார் கொலளியர்கால் பொரக் கலங்கி**

**கயிறாடு பறையறை கால்பொரக் கலங்கி**

**வாகை வெண்ணெற் றொலிக்கும்**

**வேல் பயிலழுவ முன்னியோரே"**

**3 குறுந்தொகை -7**

கடம்ப மரத்தில் கட்டப் பட்ட கயிற்றில் ஆரியர்கள் கூத்தினை நிகழ்த்தும் பொழுது வீசிய காற்றினால் அவர்கள் தடுமாற கயிறு மரத்தில் உராய ஒலி எழும்புகிறது.

**வற்றல் ஆர்ப்பிசை**

தலைவியைப் பிரிந்து பாலை வனம் நோக்கிச் சென்ற தலைவனின் வழியின் கொடுமை குறித்து தலைவி வருந்தி கூறிய பாடலில் பசுமையற்ற காய்களின் ஓசை சிறப்பாக குறிக்கப்படுகிறது.

**"வெந்திறற் கடுவளி பொப்கர்ப் போந்தென**

**நெற்று விளையுழிஞ்சில் வற்றலார்க்கும்**

**மலையுடைய ருஞ்சுர மென்பநம்**

**முலையிடை முனிநர் சென்றவாறே"**

**குறுந்தொகை-39**

தலைவன் செல்லும் வழியில் அதிகமாக சூறைக்காற்று வீசுகின்றது. அதனால் அங்குள்ள வாகை மரத்தின் நெற்று வற்றல் (பசுமையற்றகாய்) ஒலி எழுப்புகின்றது. மரத்தின் சினையாக விளங்கும் காயின் ஒலி குறிப்பை அறிந்து உரைக்கும் தமிழரின் திறன் வியப்பிற்குரியது ஆகும்.

**யானைக் குருகின் ஓசை**

தலைவன் தலைவியின் களவினை அலர் தூற்றிய ஊர் மக்கள் தலைவன் தேர் ஏறி வந்து தலைவியை மணந்து கொள்ள வருகிறான் என்ற செய்தியினை கேட்டு மகிழ்ந்தனர். இதனை தோழி தலைவி இடம் உரைக்கும் பாடல் யானைக் குருகின் ஓசை வன்மையினை கூறுகின்றது.

**“ஒறுப்பவோ வலர் மறுப்பத் தேறலர்**

**குழல் விளங்காய் நுதற்கிழவனு மவனே”**

**குறுந்தொகை -34**

தோழி தலைவனின் ஊரினை சிறப்பித்துக் கூறும் பொழுது யானையைப் போன்று ஒலி எழுப்பும் யானைக்குருகின் கூட்டம் வெற்றி முரசின் ஓசையை கேட்டு அஞ்சுகிறது. இதன் மூலம் யானைகுருகானது நீண்ட நெடிய பேராசையை உடையது என்பது விளங்கும்.

**தொகுப்புரை**

- தமிழர்கள் இயற்கையோடு இணைந்த சிறந்த வாழ்வினை உடையவர்கள். சொல் வன்மையால் அதனை பாடலில் புகுத்தினர்.
- அருவியின் ஓசையினில் மகிழ்ந்து இன்பம் துய்த்தனர்.
- உயிரிகளின் மெல்லிய ஒலியினையும் ஆராயும்போக்கு கொண்டவர்கள்.
- பறவைகள் எழுப்பும் ஒலியின் அளவுகோலினை நுண்ணுணர்ந்தவர்களாக உள்ளனர்.

**அடிக்குறிப்புகள்**

1. முனைவர்கு. வெ. பாலசுப்பிரமணியன் குறுந்தொகை ப - 192
2. மேலதுப- 215
3. மேலதுப -25

# விழியோரக் கவிதைகளில் இயற்கை

**முனைவர் யா. லலிதா**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை, புனித அல்போன்சா கலை அறிவியல் கல்லூரி, சூசைபுரம்*

**ஆய்வுச்சுருக்கம்**

***'விழியோரக் கவிதைகளில் இயற்கை'*** *என்னும் கட்டுரையானது, கவிஞர் ஜோ.வென்ஸ் எழுதிய விழியோரக் கவிதைகள் என்னும் நூலில் அவர் இயற்கையை எவ்வாறு வர்ணித்து எழுதியுள்ளார் என்பதை ஆராய்ந்து சில தலைப்புகளை எடுத்து விளக்கி ஆராயப்பட்டுள்ளது. இவர் 'தன்னுடைய கவிதைகளில்' சமுதாயத்தை தொல்லை செய்யும் அநீதிகள் முதற்கொண்டு, இயற்கைக்கு மெருகூட்டும் இன்பக் காட்சிகள் வரை நுட்பமாக கவனித்து கவிதையாக்கியிருக்கிறார் என்பதே இக்கட்டுரையின் சுருக்கமாகும்.*

## முன்னுரை

"விழியோரக் கவிதைகள்" என்னும் கவிதைத் தொகுப்பானது கவிஞர் ஜோ.வென்ஸ் என்பவரால் எழுதப்பட்டது. இவர் முழுக்கமுழுக்க இயற்கையை ரசித்து அனுபவித்த விசயங்களையே கவிதையாக அரங்கேற்றியுள்ளார். முனித சக்தியில்லாமல் தோன்றிய பொருட்கள் அனைத்தும் இயற்கை எனப்படும். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தால் ஆனது தான் உலகம் என தொல்காப்பியம் கூறுகிறது. இவர் தன்னுடைய கவிதைகளில் சமுதாயத்தை தொல்லை செய்யும் அநீதிகள் முதற்கொண்டு, இயற்கைக்கு மெருகூட்டும் இன்பக் காட்சிகள் வரை நுட்பமாய் கவனித்துக் கவிதையாக்கியிருக்கிறார். இவருடைய கவிதைகள் வாசிக்கும் போது, மேலைநாட்டுக் கவிஞர் ஷெல்லி போன்று இயற்கையோடு இயைந்து கவிதை புனைந்திருப்பதாக தோன்றுகிறது. இக்கட்டுரையானது இவர் விழியோரக் கவிதைத் தொகுப்பில் இயற்கையை எவ்வாறு ரசனையோடு வெளிப்படுத்தியிருக்கின்றார் என்று ஆராயப்படுகிறது.

## இயற்கையும் தொல்காப்பிய விளக்கமும்

இயற்கை என்பது இயல்பாக இருக்கும் தோற்றப்பாடு என்னும் பொருள் கொண்டது. இயல்பாக மனித சக்தி இல்லாமல் தோன்றி மறையும் பொருட்கள், அவற்றின் இயக்கம் அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகிய அனைத்தையும் இணைத்து இயற்கை எனலாதம்.

> **"நிலம் தீநீர்வளி வீசும் போடைந்தும்**
> **கலந்த மயக்கம் உலகம்"[1]**

என்கிறார் தொல்காப்பியர். உலகமானது நிலம், நெருப்பு, நீர், வளி, வானம் என்னும் ஐந்தும் அவந்நின்கண் விளங்கும் பொருளும் கலந்து வேற்றுமையின்றி நிற்கின்றது என்று கூறுகிறார்.

## இயற்கையும் பாரதிதாசனும்

பாரதிதாசன் இயற்கையைப் பற்றியதம் பாடல்களில், இயற்கையிலே அமைந்திருக்கும் காட்சிகள் பலவற்றை இடம்பெறச் செய்துள்ளார். அவற்றில் குறிப்பாக மலையைப் பற்றிய காட்சி, மழை தரும் காட்சி, இடையறாது ஓடிக் கொண்டிருக்கும் ஆறு வழங்கும் காட்சி, சோலையின் வனப்பு ஆகியவற்றை மிகவும் சிறப்பாக பாடியுள்ளார்.

> **'விரிந்தவானே, வெளியே—எங்கும்**
> **விளைந்த பொருளின் முதலே,**
> **திரிந்த காற்றும், புனலும் - மண்ணும்**
> **செந் தீயாவும் தந்தோய்**
> **தெரிந்தககதிரும் நிலவும் - பலவாச்**
> **செறிந்த உலகின் வித்தே,**
> **புரிந்த உன்றன் செயல்கள் - எல்லாம்**
> **புதுமை! புதுமை! புதுமை![2]**

என்று பாரதிதாசன் உலகில் காணப்படுகின்ற இயற்கையை, அதன் அழகை, அதன் தனித்துவத்தை வர்ணித்துதம் கவிதையில் பாடியுள்ளார்.

**கவிஞர் ஜோ வென்சும் இயற்கையும்**

கவிஞர் வென்ஸ் அவர்கள் இயற்கைக்கு மெருகூட்டும் இன்பக் காட்சிகளை நுட்பமாய் கவனித்து கவிதையாக்குவதில் வல்லவர். இவர் 'இயற்கை' என்றும் தலைப்பில் இயற்கையைப் போற்றி பாடும்போது

**"தவழும் தென்றல் காற்று.**
**தலைகவிழும் பயிர் நாற்று**
**தளதளக்கும் தென்னங் கீற்று**
**தலைசிறந்த இயற்கையை போற்று"**[3]

என்று இயற்கையைப் போற்றி பாடியுள்ளார்.

**கவிஞர் ஜோ. வென்ஸின் நிலா தரும் இன்பம்**

நிலா என்பது இரவு முழுவதும் உலகிற்கு வெளிச்சம் தருகின்ற இயற்கை படைப்பாகும். இந்த நிலவு இல்லாவிட்டால் விண்மீன்களும் ஒளிராது. அத்தகைய பெருமை வாய்ந்தது நிலவு அவர் பாடும் போது இவ்வாறு பாடுகிறார்.

**"நீ மட்டும்**
**என் முற்றத்திற்கு**
**நித்தம்**
**வருவதாய் இருந்தால்**
**வாசலிலே காத்திருக்க**
**ஆயுசுக்கும்**
**நான் தயார்"**[4]

இக்கவிதை மூலமாக நிலவோடு அவர் பேசுவது. மட்டுமல்லாமல், அதனோடு ஐக்கியமாவதையும் கண்டு ரசிக்க முடிகிறது. வானத்தில் தோன்றுகின்ற இதே நிலாவை கவிஞர் தி.பா. சுரேத்திரன் பாடும் போது இவ்வாறு பாடுகிறார்

**"நட்சத்திரங்கள் எல்லாம்.**
**அணி வகுத்தன**
**பிறை நிலவே**
**உன்னை வெல்ல"**[5]

இதே வானத்தில் தோன்றுகின்ற நிலாவை கவிஞர் பெ. சுவாமிதாஸ் வர்ணித்து பாடும் போது இவ்வாறு பாடுகிறார்

**"ஆகாய தேவதையின்**
**நெற்றிதனில் மங்களத்**
**திலகமாய் ஒளிரும்**
**வட்ட திலா!"**[6]

என்று நிலாவை ஆகாய தேவதையின் நெற்றியில் ஒளிர்கின்ற மங்கள திலகம் என்று பாடுகிறார் ஒவ்வொரு கவிஞனும் ஒவ்வொரு விதமாக பாடும்போது கவிஞர் தமிழினியன் இவ்வாறு பாடுகிறார்.

**"இருளைக் கிழிக்கும் ஒளியில் நிறைந்து**
**துயிலைத் தொலைக்கச் செய்யும்**
**வெண்மதியே"**[7]

இவ்வாறு வானில் தெரிகின்ற நிலாவை ஒவ்வொரு கவிஞனும் ஒவ்வொடு விதமாய் வர்ணித்து பாடுகிறான்.

**மேகம்**

கவிஞர் ஜோ வென்ஸ் அவர்கள் இயற்கையாகத் தோன்றுகின்ற மேகத்தைக் குறித்து வர்ணிக்கும் போது இவ்வாறு பாடுகிறார்

**"கதிரவக் கதிர்களின்**
**வெப்பம் தணிக்கும்.**
**கருப்புக் இடையே**
**மேகம்"**[8]

மிகவும் வெப்பம் தரக் கூடியதாக அமைகின்ற சூரியனுடைய கதிர்களின் வெப்பத்தை தணிக்கும் கறுப்புக்குடை என்று வர்ணித்துப் பாடுகிறார். ஒவ்வொரு கவிஞனும் ஒவ்வொரு விதமாக பாடும் போது கவிஞர் சுரேந்திரன் அவர்கள் இவ்வாறு பாடுகிறார்.

**"அந்தி வானில்**
**அதிர வைக்கும்**
**மாக்கோலம்**
**வெண்மேகம்"**[9]

மாலை நேரத்தில் வானில் தோன்றுகின்ற மேகமானது மாவினால் போடப்பட்ட கோலம் போன்று காட்சியளிப்பதாக பாடுகிறார்.

**விண்வெளி**

கவிஞர் ஜோ.வேன்ஸ் அவர்கள். இயற்கையாக தோன்றுகின்ற விண்வெளியைப் பற்றி கூறும் போது,

**"இருண்ட வானில் மின்னி**
**இருலட்சம் ஒளி ஆண்டுத் தொலைவில்**
**இருக்கின்ற**
**இயற்பியல் வானியல் தாண்டி**
**இயற்கையாய் நாளும்**
**இயல்பாகமிக இயல்பாக**
**இயங்கிக் கொள்ளும் உங்களை**
**இயக்குவது யாரோ?"**[10]

என இயற்கையாக தோன்றுகின்ற விண்வெளியை பற்றி பாடும் போது இயற்பியல் வானியலைத் தாண்டி இயற்கையாகவும் இயல்பாகவும் இயங்குகின்ற விண்வெளியைக் குறித்து உங்களை இயக்குவதுயாராக இருக்கலாம் என கேட்பதாக அமைகிறது. ஏனென்றால் அந்த அளவிற்கு அதிசயமாக காணப்படுவதை அவர் வர்ணிக்கிறார்.

**வெண்மை நிறம்**

வெண்மை நிறம் என்பது இயற்கையானது அது தூய்மையானது, அனைவராலும் விரும்பப்படுவது. போர், சண்டை என்று வரும் போது சண்டை மாறி சமாதானம் அடைய வேண்டுமென்றால் வெள்ளை நிறகொடியை காட்டுவார்கள். சண்டை மாறி சமாதானம் ஆகும். தேவதையின் உடை வெண்மை நிறமுடையதாகும். அதுபோல பெண்ணின் மனதும் தூய்மையாகவும் வெண்மைநிறம் கொண்டதாகவும் இருப்பதாக பாடுகிறார்.

**"சிறப்பானவை சில**
**வெண்மைமாய் இருக்க**
**வெண்மையான பல**
**சிறப்பாய் இருக்கின்றன– உன் மனசைப் போல்"**[11]

என்று பாடுகிறார்.

**கன்னியாகுமரி**

கன்னியாகுமரியைப் பற்றி கவிஞர் பாடும் போது விலையில்லா இயற்கை விசித்திரம் என்கிறார். கன்னியாகுமரியின் இயற்கை எழில் கொஞ்சும். இயற்கை காட்சியை காண்பதற்காக உள்நாட்டிலிருத்தும், வெளிநாடுகளிலிருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்காண மக்கள் வருகிறார்கள். கடல் நடுவில் 133 அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கிற திருவள்ளுவரின் சிலையை காண்பதற்கு படகில் செல்கிறார்கள், விவேகானந்தர் மண்டபம் சென்றால் மனஅமைதி கிடைக்கும் என்ற நம்பிக்கை. இன்னும் கடலில் நீராடி மனநிறைவு பெறுதல் பலவகையான வியாபாரக் கூடங்கள் போக்குவரத்து நெரிசல்கள் என எல்லாமே மனதைக் கொள்ளைக் கொள்பவனவாகக் காணப்படுகிறது. இதனையே,

**"கன்னியாகுமரியின்**
**கண்கவர். கவின் அழகு**
**கண்டுகளிக்க நிறைவானது**
**கனவல்ல கனவல்ல**
**இது நிஜமானது"**[12]

**கண்ணீர்**

கண்ணீர் என்பது உயிர் வாழ்கின்ற எல்ல உயிர்களின் கண்களிலிருந்தும் வடிகின்ற தூய்மையான நீர். இந்த நீரானது ஒன்றில் மிகுந்த சந்தோஷப்படும் போது கண்களிலிருந்து கண்ணீராக வருகிறது அல்லது மிகுந்த வருத்தப்படும் போது கண்களிலிருந்து கண்ணீராக வடிகின்றது. அதிகமாக ரொம்ப கவலைப்படும் போதுதான் இந்த கண்ணீர் அதிகமாக வெளிப்படுகிறது. கண்ணீர் என்பது மிகுந்த கவலையின் வெளிப்பாடு ஆகும். இதனை
கவிஞர் ஜோ.வென்ஸ் கூறும்போது

**"கண்ணீர் என்பது**
**இல்லாதிருந்தால்**
**என்**
**விழிகளில்**
**என்றைக்கோ**
**இரத்தம்**
**வழித்திருக்கும்"**[13]

என்கிறார்

**மல்லிகை மலர்**

மலர் என்றால் எல்லோரும் விரும்புவார்கள் அதிலும் மல்லிகை மலர் என்றால் விரும்பாதவர்களே இருக்க மாட்டார்கள் மலருக்கென்று தனி இடம் உண்டு. பெண்கள் கூந்தலில் சூடுவதற்காக அதிகமாக விரும்புவதும் மல்லிகை மலர்தான். இங்கு ஜோ-வென்ஸ் அவர்கள் மல்லிகை மலரைப் பற்றி கூறும் போது.

**“ம லர்களில் ம ல்லிகை ம கத்தானது**
**ம மணந்தனில் ம ல்லிகை ம ங்கலமானது**
**ம னிதர் ம னசிலது ம யக்கமாகும்**
**ம களிர் ம யிரிலது ம குடமாகும்”[14]**

என்று மல்லிகையின் சிறப்பை மகத்தானது. மங்கலமானது, மயக்கம் தருவது மகுடமாக விளங்குவது என்று பாடுகிறார்.

**பிறப்பு இறப்பு**

ஒரு மனிதன். உலகில் பிறந்துவிட்டால் என்றைக்காவது ஒரு நாள் இவ்வுலகைவிட்டு இறந்து மறுவுலகத்திற்கு போவது என்பது இயற்கை. யாருமே இவ்வுலகில் எவ்வளவு தான் செல்வம் சேர்த்து வைத்தாலும், அதிக நண்பர்களைக் கொண்டிருந்தாலும் அவன் ஒருநாள் இவ்வுலகைவிட்டு இறப்பு என்ற பந்தத்திற்குள் செல்ல வேண்டும் என்பதை கவிஞர் கூறும் போது,

**“இறப்பு நோக்கிய வாசலின்**
**திறப்பு என்பதே**
**பிறப்பு ஆகும்”[15]**

என்று பிறப்பு இறப்பு என்பது இயற்கையானது என்று கூறியுள்ளார். திருவள்ளுவர் பிறப்பு இறப்பு பற்றி கூறும் போது “உறங்குவது போலும் சாக்கா(டு): உறங்கி விழிப்பது போலும் பிறப்பு” என்கிறார்.

**முடிவுரை**

கவிஞர் ஜோ.வென்ஸ் அவர்கள் தன்னுடைய வழியோரக் கவிதைகள் என்னும் நூலில் இயற்கையைப் பற்றி பல கவிதைகள் எழுதியுள்ளார். அவற்றில் முக்கியமான தலைப்புகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. மேகம், விண்வெளி, நிலவு, மல்லிகை, வெண்மை நிறம் என பலதலைப்புகள் இயற்கையின் அருமையை ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. இவர் மேலைநாட்டு கவிஞர் ஷெல்லியைப் போன்று இயற்கையோடு இயைந்து கவிதை பாடியுள்ளார் என்று அறிய முடிகிறது.

**தொகுப்புரை**

**‘விழியோரக் கவிதைகளில் இயற்கை’** என்னும் கட்டுரையில் கவிஞர் ஜோ.வென்ஸ் எழுதிய விழியோரக் கவிதைகள் என்னும் நூலிலிருந்து, நிலாதரும் இன்பம், மேகம், விண்வெளி, வெண்மை நிறம், கன்னியாகுமரி, கண்ணீர் மல்லிகை மரல், பிறப்பு இறப்பு போன்ற தலைப்புகள் ஆராயப்பட்டு இயற்கையை பற்றிய கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. தாசன் மு. தொல்காப்பியக் களஞ்சியம், ப.273, அபிலா பதிப்பகம் மேல்ப்பொட்டக்குழி 2011
2. கீர்த்தி. பாரதிதாசன் கவிதைகள், ப.169, அருணா பதிப்பகம், சென்னை. 2008.
3. வென்ஸ், ஜோ, விழியோரக் கவிதைகள், ப.113, கவிஞன் பதிப்பகம் முகிலன் குடியிருப்பு அகஸ்தீஸ்வரம்.2017
4. மேலது ப.5
5. சுரேத்திரன், தி.பா., அமுதாமொமி, ப.51 சிவாஆப்செட், பருத்திக் காட்டுவிளை 2011
6. சுவாமிதாஸ் பெ, கவிச்சரம் ப.17, கவிஞன் பதிப்பகம் முகிலன் குடியிருப்பு, 2023
7. தமிழினியன், கூண்டுக்குள் வானம், ப.46, கவிஞன் பதிப்பகம், முகிலன் குடியிப்பு 2023.
8. வென்ஸ், ஜோ, விழியோரக் கவிதைகள், ப.163 கவிஞன் பதிப்பகம்.

9. சுரேத்திரன், தி.பா., அமுதாமொமி, ப.45 சிவாஆப்செட், பருத்திக் காட்டுவிளை 2011
10. வென்ஸ், ஜோ, விழியோரக் கவிதைகள், ப.81 கவிஞன் பதிப்பகம், முகிலன் குடியிருப்பு அகஸ்தீஸ்வரம். 2017
11. மேலது.ப.115
12. மேலது. ப.53
13. மேலது. ப.79
14. மேலது. ப.76
15. மேலது. ப.34
16. வளன் அரசு, பா.இ திருக்குறள் விளக்கம். நூ.எண் 339, சூர்யா பதிப்பகம் திருநெல்வேலி

# சங்க இலக்கியங்களில் காணப்படும் தாவரவியல் சிந்தனைகள்

**சு. கோபாலகிருஷ்ணன்**
*முதுகலைத் தமிழாசிரியர்*
*அரசினர் மேல்நிலைப்பள்ளி, கருவாக்குறிச்சி, மன்னார்குடி*

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியம் என்பது வெறும் இரசனைக்குரிய ஒன்றாக மட்டும் இல்லாமல் அனுபவமும், அறிவியலும் கலந்து சிறந்த படைப்புகளாகவே புலவர்கள் அளித்துள்ளனர். அவர்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்து தம்மைச் சுற்றியிருந்த உலகத்தில் கண்ட உண்மைகளையெல்லாம் தங்களது பாடல்களில் வடித்துக் கொடுத்துள்ளார்கள். சங்கத்தமிழ் இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களுள் 210 மரம், செடி, கொடிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. செடி கொடிகளின் வேர், அடிமரம், பட்டை, இலை, பூ, பூந்தாது, காய், பழம், விதை ஆகியவற்றைப் பற்றிய பல சிந்தனைகள் சங்க இலக்கிய நூல்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் தாவரங்களில் காணப்படும் புல்லுருவித் தன்மை, பூக்கள் கதிரவனை நோக்கித் திரும்பும் தன்மை, நிழலில் வளரும் செடிகளின் இலைகள் இலைப்பச்சை இழந்து விளரிப்போதல், இரவு மகரந்தச்சேர்க்கை, அனுகரணம், இதழ்கள் ஒன்றோடொன்று பொருந்தும் அமைப்பு போன்ற நுட்பமான கருத்துகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களை அறிவியல் கண்ணோட்டத்தோடு ஆய்வு செய்தால் இன்னும் பல புதிய கண்டுபிடிப்புகளுக்கு வித்திடலாம் என்பதை உணர்த்துவதே நோக்கமாகும்.*

**முன்னுரை**

ஆதிகாலத்தில் காடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் தன் இரண்டு கால்களையும் ஊன்றி நடக்கத் தொடங்கிய அன்றே அறிவியல் துளிர்விடத் தொடங்கி விட்டது. பண்டைக்காலம் தொட்டு அறிவியல் அறிவும், அறிவியல் சிந்தனையும் தமிழர் சமுதாயத்தில் நிலவி வந்திருக்கிறது. அறிவியல் அறிவும், உணர்வும் தமிழர்களின் வாழ்க்கையை உந்திக் கொண்டிருந்தன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த செந்நாப்புலவர்களின் விழுமிய கருத்துக் கனிகளாய் மிளிரும் பாடல்கள் சங்ககால நூல்களிலுள்ளன. தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று கூறியது அடிப்படைத் தமிழே. இப்படியாக எம் தாய்மொழியாம் தமிழ்மொழி அறிவியல் மொழியாக விளங்கியது தமிழ் மொழியின் தனிச் சிறப்பாகும். கற்பனை வளம் மிக்க தமிழ்ப் புலவர்களாக அவர்கள் விளங்கிய போதும் இயற்கையையும், சூழலையும் உற்றுநோக்கி தாம் கண்ட உண்மைகளைத் தத்தம் பாடல்களில் பொதித்து வைத்துள்ளனர். சங்க இலக்கியங்களில் ஏராளமான தாவரங்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சில தாவரங்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**கமுகு (பாக்கு) மரம்**

கீழ்க்காணும் சங்க இலக்கியப் பாடலில் கமுகின் அடிமரம், கழுத்து, பாளை, அரும்பு, முதிர்ந்த பூ, காய், பழம், பழத்தின் சுவை போன்றவற்றை புலவர் வர்ணித்துள்ளார்.

**நீடுவெயில் உழந்த குறியிறைக் கணைக் கால்**
**தொடை யமை பல்மலர்த் தோடு பொதிந்து யாத்த**
**குடை ஓரன்ன கோள்அமை எருத்தின்**
**பாளை பற்று அழிந்து ஒழியப் புறஞ்சேர்பு**
**வாள் வடித்த அன்ன வயிறுடைப் பொதிய**
**நாள் உறத் தோன்றிய நயவரு வனப்பின்**
**ஆரத்து அன்ன அணிகிளர்ப் புதுப்பூ**
**வார்உறுக் கவரியின் வண்டு உண விரிய**
**முத்தின் அன்ன வெள் வீ தாஅய்**
**அலகின் அன்ன அரிநிறத்து ஆலி**
**நகைநனி வளர்க்கும் சிறப்பின் தகைமிகப்**
**பூவொடு வளர்ந்த மூவாப் பசுங் காய்**
**(அகம்: 335)**

கமுகு மரத்தின் பாகங்களை விளக்கும் இப்பாடல் மட்டுமே கமுகு மரம் பற்றி எழுதப்பட்ட ஒரே சங்க இலக்கியப் பாடலாகும். இதன்

வாயிலாக கமுகைப் பயிரிடும் வழக்கம் சங்க காலத்தில் தோன்றியது தெளிவாகின்றது.

**சண்பக மரம்**

சண்பக மரம் திருக்குற்றாலத்தில் நன்கு வளர்ந்து பெரிய மரமாகக் காணப்படுகிறது. இளவேனிற்காலத்தில் சண்பகமலர் மஞ்சள் நிறத்தில் நல்ல நறுமணமுடைய பூவாக திருக்குற்றாலத்தில் பூக்கிறது. பத்துப்பாட்டில் நக்கீரரும், கபிலரும், பரிபாடலில் நல்லந்துவனாரும் "பெருந்தண்சண்பகம்" என்று குறிப்பிட்டுள்ளனர்.

**துவர முடித்த துகள் அரும்முச்சி**
**பெருந்தண் சண்பகம் செரீஇ**
**(திருமு. 26-27)**

**செருந்தி அதிரல் பெருந்தண் சண்பகம்**
**(குறிஞ். 75)**

**அரும்பெறல் ஆதிரையாண் அணிபெற மலர்ந்த**
**பெருந்தண் சண்பகம் போல**
**(கலி. 150: 20-21)**

**புங்கை மரம்**

இலைகளின் உருவம், மென்மை முதலியனவும், மற்றும் இலைகளின் ஓரம், நிறம் முதலியனவும் சங்க நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. புங்கை மரத்தின் இலை அழகாகவும், மென்மையாகவும் இருப்பதை 'பொரிப்பூம் புன்கின் எழில்தகை ஒண்முறி' (நற்றி-9) என்று குறிக்கப்பட்டு இருக்கின்றது. புன்னையின் இலை கரும்பச்சை நிறமாகவும், பளபளப்பாகவும் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். இதனைக் கீழ்காணும் பாடலில் சங்ககாலப் புலவர் பாராட்டியுள்ளார்.

**மின்இலைப் பொலிந்த விளங்குஇணர் அவிழ்பொன்**
**தண்நறும் பைந்தாது உறைக்கும்**
**புன்னை அம்கானல் பகல் வநிதீமே**
**(அகம்-80)**

**புளியமரம்**

தொல்காப்பியத்தில் 245ஆவது சூத்திரம் புளியைக் குறிப்பிட்டுள்ளது. மலைபடுகடாம் (178-182), நற்றிணை (374) இக்கால வழக்கத்திலிருக்கும் புளிய மரத்தைக் குறிக்கின்றன. புளிய மரம் ஆப்பிரிக்காவிலிருந்து வந்ததாக அறிவியலார் குறிப்பிடுவர். ஆனால் புளியமரம் சங்க காலத்திற்கு முன்னரே வந்துவிட்டது என்பதை உணரவேண்டும்.

**முருக்க மரம்**

முருக்க மரங்கள் அடர்ந்து கிடக்கும் காடுகளில் வேனிற்காலத்தில் இலைகளை முற்றிலும் உதிர்த்து விட்டுப் பூத்திருப்பது ஒரே சிவப்பாகக் காடு பற்றி எரிவது போல காட்டைப் பாதுகாக்கும் அலுவலர்களுக்கும் ஏமாற்றத்தை அளிக்குமாறு இருக்குமாம். அதனால் இம்மரத்தை "காட்டுத்தீ" என்று ஆங்கிலத்தில் பெயரிட்டுள்ளனர். இதன் சிவந்த வளைந்த பூவைக் கண்ட காளிதாசர் தன் காவியத்தில் இதை கிளி மூக்குக்கு ஒப்பிட்டுப் பாடியுள்ளார். இதனைச் சங்க நூல்களும் குறிப்பிட்டுள்ளன.

**கருநனை யவிழ்ந்த வூழுறு முருக்கி**
**னெரிமருள் பூஞ்சினை இனச்சித ரார்ப்**
**(அகம்: பாலை, 41)**

**பொங்கழல் முருக்கி னொண்குரல் மாந்தி**
**(அகம்:277)**

**"யா"மரம்**

'யா' என்ற மரம் சங்கஇலக்கியங்களில் குறிப்பிட்டுள்ள மரமாகும். நீடுநிலை யா (அகம் 59), நெடுநிலை யா (நற்:186), நெடுந்தாள் யா (அகம்:193) என்று அழைக்கப்பட்டுள்ளது. இந்த மரத்தை 'ஆ' என்றும் 'ஆச்சா' என்றும் நிகண்டுகள் கூறியுள்ளன. 'செந்நிலை யா' (அகம்:33), 'கருங்காள் யா' (அகம்:397) என்று சங்க இலக்கியங்களிலும், தொல்காப்பியமும் குறிப்பிடப்பட்டுள்ள 'யா' என்ற மரமும் 'ஆச்சா' என்ற மரமும் ஒன்றே என்று அறிவியல் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

**கொன்றை மரம்**

சங்க இலக்கியங்களில் பேசப்படும் அழகிய பூக்களுடைய மரங்களில் கொன்றையும் ஒன்றாகும். சரம் சரமாக மஞ்சள் நிறத்தில் மாலைகள் தொங்கினாற் போன்று பூத்துக் குலுங்கும் தன்மையுடையது கொன்றை.

அரும்பும், மொக்கும் பூவுமாக மாலையில் கோர்க்கப்பட்டதுபோல் தொங்கியிருப்பதால், கொன்றையின் பூங்கொத்து சங்க இலக்கியங்களில் பொன்னிழைக்கும், பொன் மாலைக்கும் ஒப்பிட்டுப் பலவிடங்களில் பாடப்பட்டிருக்கின்றது.

**இழையணி மகளிரின் விழைதகப் பூத்த**
**நீடுசுரி யிணர சுடர்வீக் கொன்றைக்**
**காடுகவின் பூத்த வாயினு நன்றும்**
**(நற்றி: 302)**

என்று வரும் நற்றிணைப் பாடலில் கொன்றை மலர் பொன் மாலைகள் அணிந்த மகளிரைப் போல நீண்ட சுடர்விடும் பூக்கொத்துகளுடன் காண்பதாகக் கூறுவது மிகவும் இனிமை. கொன்றையின் பூ சுடு பொன்னுக்கும், அடர் பொன்னுக்கும் உவமித்து பின்வரும் ஐங்குறுநூற்றுப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

**அடர்பொன் னென்னச் சுடரிதழ் பகரும்**
**(ஐங்: 430)**
**அடர்பொன் னென்ன கொன்றை சூடி**
**(ஐங்: 432)**

கொன்றையின் பூக்கள் ஒன்றோடொன்று சேர்ந்து பூத்திருக்கும் கொத்தை சங்கப் பாடல்களில் கொடியிணர் என்று அழைக்கப்படுவதைக் கீழ்க்காணும் பாடல்களில் காணலாம்.

**கொம்புசேர் கொடியிண ரூழ்த்த**
**(குறு: 66)**
**கொன்றை கொடியின ரூழ்ப்**
**(பரி- 8:24)**

சங்க இலக்கியத்தில் இயற்கையை உள்ளது உள்ளபடியே படம் பிடித்தாற்போல பாடிய புலவர்கள் பலர் உள்ளனர்.

### தாழை

தாழையைப் பற்றிப் பல புலவர்கள் பாடியுள்ளனர். தாழையின் அடிமரம், இலை, பூ, வாழும் சூழ்நிலை ஆகியவை பற்றி சங்க இலக்கியத்தில் பல செய்திகள் உள்ளன. இவை அனைத்தும் செடிநூலில் கூறப்படும் செய்திகளோடு ஒத்துப்போகின்றன. 'தடந்தாள் தாழை' (நற்றிணை: 131, 230, 270), 'தடவு நிலைத்தாழை' (குறுந்தொகை:219) என்று தாழையின் அடி மரம் நேராக இல்லாமல் வளைந்துள்ளதைக் குறிப்பிடுகின்றது. 'பிணர் அரைத்தாழை' (அகம்:130), 'பிணர்படு தடவுமுதல்' (நற்றிணை:19, 235) என்ற தாழையின் சுரசுரப்பான அடிமரம் விளக்கப்பட்டுள்ளது. 'வீழ்தாட் டாழைப் பூக்கமழ் கானல்' (நற்:78), 'வீழ் தாழைத் தாள் தாழ்ந்த' (பட்டினப்பாலை:84) என்று தாழையின் விழுது வேர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தென்னை மரமும் தாழை என்றே சங்க நூலில் அழைக்கப்படுகின்றது. அதை 'வீழில் தாழை' என்று குறிப்பிட்டனர்.

### கரும்பின் பூ

சங்கப் புலவர்கள் பெரிதும் தாவரங்களின் மலர்களைப் பற்றியே குறிப்பிடுகின்றனர். கீழ்க்காணும் பாடலில் கரும்பின் பூ மணமற்றதாக இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. இதனைத் தாவர நூலிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்**
**நாறா வெண்பூ கொழுதும் (குறுந்-85)**

### தளா

தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரத்தில், புணரியலில் 'தளா' என்று குறிப்பிடப்பட்டுள்ளதைச் செம்முல்லை என்று உரை எழுதியவர்கள் கூறியுள்ளனர். முல்லையின் ஒரு வகையான செம்முல்லையின் அரும்பு ஐங்குறுநூற்றிலும், நற்றினையிலும் மீன்கொத்தியின் செந்நிற அலகுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. கவுதாரியின் கால்விரல் முள்ளுக்கும் இதன் பூ ஒப்பிடப்பட்டுள்ளது.

### கருவிளம், கூவிளம்

சங்க நூல்களில் விளாமரம் என்பதையே விளவு, விளம், வெள்ளில் என்று அழைத்தனர். விளவிற்குப் பந்து போன்று உருண்டையான பழம் உண்டு. கம்பலத்தை விரித்தாலொத்த பசிய பயிரின்கண் ஆடுதலொழிந்து பந்து கிடப்பது போல விளாம்பழம் பரவி

இருக்குமென்று நற்றிணை (பா.24) ல் கூறப்பட்டுள்ளது. விளாம்பழத்தின் இனிய புளிப்புச் சுவையைப் பழந்தமிழர்கள் விரும்பினர். தயிரில் காணும் முடை தீர தயிர்த்தாழியில் விளாம்பழத்தை இட்டு வைத்தனர் என்று நற்றிணை (பா.12) ல் கூறப்பட்டுள்ளது. விளா மரத்தை மன்றத்திலும், வீட்டு முற்றத்திலும் வளர்த்தனர் என்பதும், வீட்டில் வளர்க்கும் விலங்குகளை அம்மரத்தில் கட்டும் வழக்கத்தையும் கொண்டிருந்தனர் என்பதை புறநானூற்றின் கீழ்க்காணும் பாடல் தெளிவாக உணர்த்துகிறது.

**மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்**
**கருங்க னெயிற்றி காதன் மகனொடு**
**கான விரும்பிடிக் கன்றுதலைக் கொள்ளும்**
**பெருங்குறும் புடுத்த வன்புல விருக்கை.**
**(புறம்:181)**

மரத்தின் கண்ணே இருந்த விளாமரத்தின் பழம் மனையிடத்தே வீழ்ந்து கிடக்க அதைக் கரிய பிடியினது கன்று வந்து எடுத்ததாகப் புறப்பாடல் கூறுகின்றது. யானை விளவினது பழத்தை உண்பதுண்டு என்பதைச் சங்கப் புலவர்கள் தெரிந்து இருந்தனர். விளாமரத்தின் பட்டை பொரிந்து கிடப்பதைக் குறிப்பாக ‘பொரியரை விளவின்’ என்று அகநானூறு கூறுகின்றது. விளாமரத்தை பாலையிலும், முல்லையிலும் சங்க நூல்கள் கூறியுள்ளன. செடி நூலார் விளாமரம் இயற்கையாக வறட்சியான காடுகளிலும், வறண்ட சூழ்நிலைகளிலும் வளரும் என்பது சங்க நூல்களின் கருத்துக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது. விளாமரத்திற்கு முள் இருப்பதால் பல பழங்கள் இருந்தாலும் வௌவால் அதை நாடுவதில்லை. விளாமரத்தை விட மிக அரிதாகச் சொல்லப்படுவது கூவிளம் ஆகும். இதைக் கூவிரம் என்று குறிஞ்சிப்பாட்டு (66) கூறுகின்றது. ‘கூவிள விறகி னாக்குவரி நுடங்கல்’ என்று புறநானூற்றுப் பாடல்(372)ல் கூவிளத்தின் விறகை எரிக்கப் பயன்படுத்தியதாகக் கூறுகின்றது. கூவிளத்தைப் பிற்காலத்தில் வில்வம் என்றனர்.

**பாதிரி**

பாதிரி என்றொரு மரத்தின் மணம் மிகுந்த பூவைப் பற்றிச் சங்க நூல்களில் சில இடங்களில் கூறப்பட்டுள்ளன. கீழ்க்காணும் பாடலில் மணத்துக்காகத் தங்கள் கூந்தலில் பாதிரி மலரை அணிந்த்தாகக் கூறப்பட்டுள்ளது.

**மாக்கொடி யதிரர் பூவொடு பாதிரித்**
**தூத்தகட் டெதிர்மலர் வேய்ந்த கூந்தல்**
**(நற்: 52)**

பாதிரி மலர் நறுமணமுடையது என்று செடிநூலும் கூறுகின்றது. அலரியிதழோடு பாதிரிமலரை இடைஇடையே கட்டிய மாலை அணிந்ததாக அகநானூற்றுப் பாடல் (191) கூறுகின்றது. பாதிரிமலர் மிகுந்த குளிர்ச்சியைத் தருவதாகக் கருதினர். ‘அந்தண் பாதிரி’ என்று அகப்பாடல் 99 பாதிரியின் குளிர்ந்த பூவைக் குறிப்பிடுகின்றது.

பழங்களின் நிறம், உருவம், அமைப்பு, சுவை முதலியவை பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. பைம்பாகல் பழந்துணர செஞ்சுளைய னிமாந்தி (பொரு- 190-2) பாகற்கொடி பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. பாலையில் வளரும் மரங்களுக்கு வேர்கள் நீண்டு இருந்தால்தான் மிக ஆழத்தில் இருக்கும் நீரை உறிஞ்ச முடியும். இதனை ‘அளிநிலைப் பெறாஅது அமரிய முகத்தள்’ எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடல்(பா.5)ல் பாலை நிலங்களில் மரங்களின் வேர்கள் மிக நீண்டு இருப்பதைக் குறிப்பிட்டுள்ளது. தற்காலத்தில் அறிஞர்கள் ஆய்வு செய்து இச்செய்தியை தாவரவியல் நூலில் குறிப்பிட்டுள்ளனர்.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் இலக்கிய நயம் ஒரு பகுதி என்றால், அறிவியல் விளக்கம் மற்றொரு பகுதி என்பதை உணர்ந்தால்தான் சங்க இலக்கியத்தின் முழு உருவத்தையும் காண முடியும். பண்டைத் தமிழ் மக்களும், சங்க காலத்துச் சான்றோர்களும் பல்துறை அறிவைப் பெற்றிருந்தனர். இன்று நம் வாழ்வின் அறிவியல் வளர்ச்சியின் ஆணிவேராக

பழந்தமிழரின் வாழ்க்கை அமைந்தது என்றால் அது மிகையாகாது. தமிழ்மொழியின் பழம் பெரும் கருவூலம் ‘சங்க இலக்கியம்’. அக்கடலில் மூழ்க மூழ்க முத்துக்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

**துணை நூல் பட்டியல்**

1. சங்க இலக்கியத்தில் அறிவியற் கலை, பி.எல்.சாமி, 1991, சேகர் பதிப்பகம், 66-1, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை-78.,
2. சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம், பி.எல்.சாமி, 1967, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி.

# சிலப்பதிகாரத்தில் இயற்கை

**முனைவர் தா. லதா**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழாய்வுத் துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி*

**ஆய்வுச் சுருக்கம்**
*இரட்டைக் காப்பியங்களில் முதற்காப்பியமான சிலப்பதிகாரத்தில் இயற்கைக் காட்சிகளை எடுத்து இயம்புவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். இயற்கையையும் மனிதனையும் பிரிக்க இயலாது. இயற்கையைப் பேணி வாழ்ந்த சேர, சோழ, பாண்டிய நாடுகளைச் சார்ந்த மனிதர்களும், இயற்கை வழிகளும், ஆறு, மலை, கடல் போன்றவையும் வியக்கத் தக்க வகையில் வளமுடன் இருந்ததை சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது.*

**முன்னுரை**

தமிழ் இன மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர் என்பதற்கு மிகச் சிறந்ததொரு சான்றாக சங்க இலக்கியம் அமைந்துள்ளது. உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்னும் உண்மையை

**"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"[1]**
**(தொல்காப்பியம் 1589:1-2)**

என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதன் வழியாக இயற்கையையும், மனிதனையும் பிரிக்க இயலாது என்பதை அறிய முடிகிறது. காப்பியங்களின் முதல் நூலான சிலப்பதிகாரத்திலும் இளங்கோவடிகள் மூன்று நாடுகளை இணைத்து கதையை நகர்த்தும் பொழுதும், சேர, சோழ, பாண்டிய நாடுகளில் இயற்கையினை அழகாக காட்சிப் படுத்துகிறார். இயற்கை இல்லையேல் உயிரினம் இல்லை என்றவொரு கருத்தினையும், மனிதன் நலமுடன் வாழ இயற்கை அவசியம் என்பதையும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இயற்கை வழிபாடு**

இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் இயற்கை பரவியுள்ளதை வெளிப்படுத்தும் விதமாக அமைவதே அதனுடைய கடவுள் வாழ்த்து பகுதியாகும்.

**"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்**
**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்"[2]**
**(சிலப்பதிகாரம் 1-10)**

சிலப்பதிகாரக் காப்பியத்தில் சைவ, வைணவ சமண சமயக் கருத்துக்களும், வழிபாட்டு நெறிகளும் சாற்றப்படுவதாயினும், கடவுள் வாழ்த்து என்பது இயற்கையின் வழிபாடாக விளங்குகிறது. வெண்கொற்றக் குடையை வெண்ணிலவுக்கு உவமையாகவும், சோழ மன்னனின் ஆட்சிச் சக்கரத்திற்கு சூரியனை உவமையாகவும், கூறியுள்ளார் இதனையே வள்ளுவரும்,

**"வானின் றுலகம் வழங்கி வருதலால்**
**தாமிழ்தம் என்றுணரற் பாற்று"[3]**
**(திருக்குறள் 11)**

மழையே அமிர்தமாக விளங்கி மண்ணுயிர்களைக் காப்பதாகக் கூறுகிறார்.

**மதுரையின் வழி**

கவுந்தியடிகள் மதுரைக்கு கோவலனையும், கண்ணகியையும் வழிநடத்தும் போது வெப்பம் மிகுந்த வழியை விடுத்து,

**"உதிர் பூஞ் செம்மலின் ஒதுங்கினர் கழிவோர்**
**முதிர்தேம் பழம்பகை முட்டினும் முட்டும்"[4] (நாடுகாண்காதை 73, 74)**

பூக்கள் நிறைந்த சோலையின் வழியே சென்றால் அங்கு வள்ளிக் கிழங்குகளைத் தோண்டி எடுத்த குழிப் பள்ளங்கள் இருக்கும் என்றும், அவை வெளியே தெரியாதபடி

அப்பள்ளங்களை பூக்கள் மலர்ந்து மறைத்திருக்கும் எனவும், வேறு புறமாகச் சென்றால் தேன் ஒழுகும் பலாப் பழங்களின் முட்கள் பாதங்களைக் குத்தி வருத்தும். மேலும், மஞ்சளும் இஞ்சியும் கலந்த தோட்டத்தில் சிதறிக் கிடக்கும் பலாப் பழத்தின் கொட்டைகள் கல் போல குத்தி வருத்தும் என்று கூறுவதன் வழி, பூக்களும், பழங்களும் வளமையும் நிறைந்திருந்ததை அறிய முடிகிறது. மேலும்,

**"கரும்பில் தொடுத்த பெருந்தேன் சிதைந்து**
**சுரும்பு சூழ் பொய்கைத் தூநீர் கலக்கும்" பக் 156**
**(நாடு காண் காதை 82-83)**

கரும்புத் தோட்டத்தில் உள்ள தேனடைகள் சிதைந்து தேனானது ஒழுகி, வண்டுகள் நிறைந்த குளத்து நீரோடு கலக்கும். எனது இயற்கையை உரைப்பதோடு

**"குறுநர் இட்ட குவளை அம்போதொடு**
**பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை**
**நெறிசெல் வருத்தத்து நீர் அஞர் எய்தி**
**அறியாது அடி ஆங்கு இடுதலும் கூடும்"[5]**
**(நாடுகாண் காதை 86-89 பக் 156)**

களையெடுப்பவர்கள் பறித்துப் போட்ட வரப்புகளில் கிடக்கும் குவளைப் பூக்களில் வண்டினங்கள் மொய்த்துக் கிடக்கும். இவற்றைக் கவனமாகக் கொண்டு நடக்கவில்லையென்றால் உயர்க்கொலை செய்த பாவமும் உண்டாக நேரிடும். எனக் கூறி வழி நடத்துகிறார்.

**கோவலன் கண்ணகியைப் புகழ்தல்**

மனையறம் படுத்த காதையில் கோவலன் கண்ணகி மீது பேரன்பு கொண்டவனாகப்

**"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே**
**காசறு விரையே! கரும்பே தேனே**
**......... ........... ............ ..........**
**............ ......... ......... .........**
**மலையிடைப் பிறவா மணியே என்கோ!**
**அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!**
**யாழிடைப் பிறவா இசையே என்கோ!"[6]**
**(மனையறம் படுத்த காதை 73:80 பக் 45)**

மாசுமருவற்று விளங்கும் பசும் பொன்னாகவும் வலம்புரிச் சங்கில் பிறந்த வளமான முத்தாகவும், கட்டிக் கரும்பு, தேன், அமுதம், நல்மருந்து மலையில் பிறவாத மாணிக்கம், யாழில் தோன்றாத இன்னிசை, கடலில் தோன்றாத அமிர்தம் என பலவாறு பாராட்டுகிறான்.

மனைவியின் அழகை வருணிக்கும் பொழுது கோவலனுக்கு இயற்கைப் பொருட்களே உதாரணத்திற்கு வந்துள்ளமை பாராட்டுக்குரியது.

**அன்னப்பறவை**

கடற்கரையின் அழகினையும், நெய்தல் நிலப் பெண்ணின் அழகினையும் எடுத்துரைக்கும் கோவலன்,

**"சேரல் மட அன்னம்! சேரல் நடை ஒவ்வாய்**
**ஊர்திரை நீர்வேல் உழக்கித் திரிவான்பின்"[7]**
**(கானல்வரி 104-106 பக் 120)**

அன்னப் பறவைகளே! நீங்கள் அந்த நங்கையோடு சேராதீர்கள். அவள் தன்னுடைய அழகால் உலகினை வெற்றி கொள்பவள் என கோவலன் யாழினை இசைத்து அன்னப் பறவையிடம் பேசுகிறான்.

**மாதவி தோழியருடன் விளையாடும் இடம்**

கோவலனும், மாதவியும் கடற்கரையை அடைந்த பொழுது மாதவி, தன் தோழியுடன் கடற்கரையில் விளையாடச் செல்லும் இடமானது

**"இடிக்கலப்பு அன்ன ஈர் அயிர் மருங்கில்**
**கடிப்பகை காணும் காட்சி அது ஆகிய**
**விரைமலர்த் தாமரை வீங்கு நீர்ப் பரப்பின்**
**மருத வேலியின் மாண்புறத் தோன்றும்**
**கைதை வேலி நெய்தல் அம் கானல்"[8]**
**(கடல் ஆடு காதை 146-150 பக் 106)**

தெளிந்த மாவுப் படுகை போன்று வெண்மணற் பரப்பு ஒளிமயமாய் விளங்கிற்று.

தாமரைப் பொய்கையே வேலியாக அமைந்த மருத நிலம் போன்று தாழைமலர் வேலியாக விளங்கக் கடற்கரைச் சோலையில் மாதவி விளையாடினாள். கடற்கரையின் அழகும் தாழை மலர் சூழ்ந்திருந்த வனப்பும் சுட்டப்பட்டுள்ளது.

**பொழுது புலர்தல்**

அரங்கேற்று காதையில் இரவுப் பொழுது மறைந்து, பகல் தோன்றும் வேளையை இயற்கையோடு அழகாகக் காட்சிப் படுத்துகிறார் இளங்கோவடிகள்.

**"அன்னம் மென்னடை நன்னீர்ப் பொய்கை**
**ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவரைத்**
**…………. ……………. ………… ……**
**……….. ………. ………. ……….. ….**
**காண்வரு குவளைக் கண்மலர் விழிப்பப்**
**புள்வாய் முரசொடு பொறிமயிர் வாரணத்து**
**முள்வாய்ச் சங்கம் முறைமுறை ஆர்ப்ப**
**உரவு நீர்ப்பரப்பின் ஊர்துயில் எடுப்பி**
**இரவுத் தலைப்பெயரும் வைகறை காறும்"[9]**

**(அரங்கேற்று காதை 71-80 பக் 73)**

அன்னப் பறவைகள் நடைபயிலும் இனிய நீர்ப் பொய்கையில் பெண்களின் கண் போல விளங்கும் ஆம்பல் பூக்கள் மலரவும், தாமரை மலர்ந்து சிவந்த வாய் போன்று திகழ நெளிந்து செல்லும் தண்ணீரின் அலைகள் சுருண்ட கூந்தலை நினைவூட்டின. இசைபாடும் வண்டுகள் காலைப் பண்ணைப் பாட அதனைக் கேட்டுக் குவளை மலர்கள் கண் விழித்து மலர்ந்தன. புள்ளிகள் பொருந்திய சிறகுகளையுடைய சேவற்கோழி தன் கூர்மையான வாய் கொண்டு கூவிக் கொத்தரித்தது எப்படி இருந்தது எனில் சங்கு முழங்குவது போல் இருந்ததாம். அவ்வொலி உறங்கிக் கிடந்த புகார் நகரை துயில் எழுப்பியது.

**நிலமகள் துயில் களைதல்**

மருவூர்ப் பாக்கத்தின் சிறப்பினைக் கூறும் பொழுது, அந்நில மகளானவள்

**"அலைநீர் ஆடை மலைமுலை ஆகத்து**
**ஆரப் போரியாற்று மாரிக் கூந்தல்**
**கண்ணகன் பரப்பி மண்ணக மடந்தை**
**புதை இருள் படாஅம் போக நீங்கி**
**உதய மால்வரை உச்சித் தோன்றி"[10]**
**(இந்திர விழா ஊர் எடுத்த காதை 1-5 பக் 76)**

அலைகளை உடைய கடலை ஆடையாகவும், மலை முகடுகளை மார்பகமாகவும், மலையிலிருந்து விழும் அருவியே முத்து மாலையாகவும், மலைமீது தவழும் கரிய மேகமே கூந்தலாகவும் கொண்டு விளங்கும் நிலமடந்தை இரவில் போர்வையெனப் போர்த்திருந்த இருள் நீங்கும் வகையில் உதயகிரியின் உச்சியில் ஒளிக் கதிர்களை பரப்பியவாறு சூரியன் தோன்றினான்.

இரவு முடிந்த பகல் உதிக்கும் இயற்கையை அற்புதமாக வடித்துள்ளார் இளங்கோவடிகள்.

**குறவர்கள்**

மலை உச்சியில் நின்ற கண்ணகியை குறவர்கள் கண்டனர் எனக் கூறும் பொழுது,

**"குருவி ஒப்பியும், கிளி கடிந்தும்**
**குன்றத்துச் சென்று வைகி**
**அருவி ஆடியும், சுனை குடைந்தும்**
**அலவுற்று வருவேம் முன்"[11]**

**(குன்றக்குரவை 1-4 பக் 340)**

மலையின் மீதுள்ள குருவிகளையும், கிளிகளையும் விரட்டியும், நீர்ச் சுனைகளிலும் அருவிகளிலும் நீராடி வாழும் மலைவாழ் மக்களாகிய குறவர்கள் எனக் குறிப்பிடுவதன் மூலம் குறவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர் என அறிய முடிகிறது. மேலும்

**"அஞ்சனப் பூழி அரிதாரத்து இன்இடியல்**
**சிந்துறச் சுண்ணம் செறியத்தாய்த் தேம் கமழ்ந்து**

**இந்திர வில்லின் எழில் கொண்டு**
**வந்து ஈங்கு இழியும் மலையருவி**
**ஆடுதுமே!"[12]**

**(குன்றக்குரவை 26-29 பக் 343)**

அருவி நீரானது அரிதாரமும், சிந்தூரப் பொடியும் கலந்து நறுமணம் வீசவும், இந்திர வில்லையொத்த வண்ணம் உடைய இந்த அருவியில் நீராடுவோம். அழகு நலம் கவர்ந்த வெண்மேகம் சூழ்ந்த சோலை திகழும் மலையருவியில் நீராடி மகிழ்வோம் என்பதால், மலை வானளவு உயர்ந்து இருந்ததையும், மூலிகையின் இயற்கை மணத்தையும் அருவி நீரில் கலந்திருந்ததையும் அறியலாம்.

**ஐந்நில மக்கள்**

சேர மன்னனின் வெற்றியைப் பாடும் ஐந்நில மக்களைக் குறிப்பிடும் பொழுது அவர்களின் இயற்கை வாழ்வியல் சுட்டப்பட்டுள்ளது.

**குறிஞ்சி**

**"ஓங்கிய யானை தூங்கு துயில் எய்த**
**வாகை தும்பை வடதிசைச் சூடிய"[13]**

**(நீர்படைக் காதை 220-221 பக் 404)**

வேட்டுவ வீரன் கள் அருந்திய காரணத்தால் தினைப் புனத்தில் கவண் கற்களை எறிய மறந்தான். அதனால் நிறைய தினைகளை உண்ட யானைகள் வயிறு புடைக்க உண்டு படுத்து உறங்கின.

**முல்லை நிலம்**

**"வண்ணமும், சுண்ணமும், மலரும், பரந்து**
**விண்ணுறை வில்போல் விளங்கிய பெருந்துறை**
**வண்டுஉண மலர்ந்த மணித்தோட்டுக்குவளை**
**முண்டகக் கோதையோடு முடித்த குஞ்சியின்"[14]**

**(நீர்படைக் காதை 231-234 பக் 405)**

குளிர்ச்சி மேவும் பொருணை நதியில் நீராடும் மக்கள் வண்ண மலர்கள் விரவி வருதலாய், வானவில் போன்றுள்ள அத்துறையில் மலர்களில் உள்ள தேனை உண்பதற்கு வண்டுகள் மொய்க்க, அவை நீலமணி போன்று விளங்கின. குவளைப் பூக்களோடு முள்ளிப் பூக்களையும் சேர்த்து முடித்த கூந்தலில் நறுமணம் கமழும் தாமரை மலர்களைச் சூடி இருந்தனர்.

**முடிவுரை**

வேங்கடமலை முதல் குமரிக்கடல் வரை எல்லையாகக் கொண்டு அழகிய தமிழ் பேசும் செந்தமிழ் நாட்டில் படைக்கப் பட்ட முதற்காப்பியமான சிலப்பதிகாரத்தில் இயற்கை காட்சிகள் பரந்து பட்டுக் கிடந்ததை அறியலாம்.

**தொகுப்புரை**

இளங்கோவடிகளின் தமிழ் சிறந்த புலமைக்கும் அறத்தின் மேன்மைக்கும் சமய பொது நோக்கிற்கும் மணிமகுடமாக விளங்கும் சிலப்பதிகாரத்தில் இயற்கைக் காட்சிகள் விரவியுள்ளன. உதாரணமாக விடியற்பொழுது, இரவுக்காட்சி, கடற்கரை, அன்னப் பறவை, சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாடு செல்லும் வழி ஆகியவை அனைத்து இடங்களிலும் இயற்கையே நிரம்பியுள்ளது என்னும் கருத்திற்கு சான்றாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**சான்றெண் விளக்கம்**


1. தொல்காப்பியம் - 1589 : 1-2
2. சிலப்பதிகாரம் - 1-10
3. திருக்குறள் - 11
4. நாடுகாண்காதை - 73, 74, ப.156
5. நாடுகாண்காதை - 86-89 ப.156
6. மனையறம் படுத்த காதை - 73-80 ப.45
7. கானல்வரி - 104-106 ப.120
8. கடல் ஆடு காதை - 146-150 ப.106
9. அரங்கேற்று காதை - 71-80 ப.73
10. இந்திரவிழா ஊர் எடுத்த காதை - 1-5 ப.76
11. குன்றக்குரவை - 1-4 ப.340
12. குன்றக்குரவை - 26-29 ப.343

13. நீர்படைக்காதை - 220-221 ப.404
14. நீர்படைக்காதை - 231-234 ப.405

**நூல்**


1. சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்
2. சிலப்பதிகாரம் - மூலமும் உரையும் வ.த.இராம சுப்பிரமணியம், பதிப்பகம் - பூம்புகார் பதிப்பகம் 127 (ப.எண் 63), பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை – 600108, பதிப்பக ஆண்டு - இரண்டாம் பதிப்பு, ஜூன் 2018

# சங்க இலக்கியத்தில் இயற்கையின் மேன்மை

**முனைவர் செ. சுகவனேஸ்வரன்**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி*

**ஆய்வுச்சுருக்கம்**

*'சங்க இலக்கியத்தில் இயற்கையின் மேன்மை, என்பது கட்டுரையின் தலைப்பு ஆகும். இவற்றில் புறப்பாட்டு என்று அழைக்கப்படும் புறநானூற்றில் இயற்கையின் இயல்புகளோடு மன்னர்களின் செயல்கள் ஒப்பிடப்பட்டுள்ளதை இக்கட்டுரைச் சுட்டுகிறது. அதுமட்டுமல்லாது இயற்கையோடு மனிதன் பிரிக்க முடியாத உறவு கொண்டிருந்தான் என்றும், இயற்கையைவிட பெரியசக்தி எதுவும் இல்லை எனவும் இயற்கையோடு இயைந்த வாழ்வே சிறந்தது என்பதையும் இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.*

## முன்னுரை

பாட்டும் தொகையும் என்பன சங்க இலக்கியம். இது அகம் புறம் என்னும் பொருண்மைகளைக் கொண்டது. மனித வாழ்வியலே இயற்கைப் பற்றுக்கோடாகக் கொண்டது. நம் தமிழ் அக இலக்கிய மரபே முப்பொருள் நிலைக்கலனாகக் கொண்டது. அந்த முப்பொருள், இயற்கையை நிலைகலனாகக் கொண்டது. எனவே சங்க இலக்கியத்தில் இயற்கை என்னும் தலைப்பு சங்க இலக்கியம் அகம் புறம் என்ற பாடல் வைப்பு முறையிலும், சங்க மக்களின் வாழ்வியல் முறைகளிலும் இயல்பாய் பொருந்தக்கூடியதாகவும் (பொருத்திப் பார்க்கக் கூடியதாகவும்) அமைகிறது. எனவே இதனை விவரிக்கும் பொருட்டு இக்கட்டுரை அமைகிறது.

## இயற்கை

மனிதன் வாழ்விற்கு அடிப்படை ஆதாரமே இயற்கையாகும். அதில் நிலம், நீர், நெருப்பு, வான், காற்று போன்ற ஐம்பூதங்களும் குறிப்பிடத் தகுந்தவை. இவ்வுலகில் இயற்கையே முதன்மையாகத் தோன்றியிருக்க வேண்டும். அதன் பிறகே இற்கைச் சூழலுக்குத் தகுந்தார் போல மனிதன் வாழ்க் கற்றுக் கொண்டலும் மனித வாழ்விற்கு இயற்கை பங்களிப்புச் செய்ததும் நடந்தேறியது. மனிதன் பக்குவம் அடைந்த பின்பே இலக்கணம் இலக்கியம் போன்ற படைப்புகளையும் பலவற்றையும் படைத்துத் தனது இருப்பை தக்க வைத்துக் கொண்டான். மனிதன் படைத்த கலைகளில் இன்றியமையாதது இலக்கியம் ஆகும். அவ்விலக்கியங்களில் இயற்கையும் சிறப்பிடம் பெறுகின்றது. அதனை சங்க இலக்கியத்தின் வழி அறியலாம்.

## இயற்கையே வலிமையானது

புறமாகிய போர் பற்றியச் செய்திகளை புறப்பாட்டாகிய புறநானூறு சிறப்பாக எடுத்துக்கூறும். குறிப்பாக, பாண்டியன் கூடகராகத்துத் துஞ்சிய மாறன் வழுதியை ஐயூர் முடவனார் புறம் 51-ஆவது பாடலில் இயற்கையின் செயல்களோடு மன்னனின் செயல்பாடகளை ஒப்பிட்டுக் கூறுகிறார். பகை நாட்டு அரசர்கள் எல்லாம் திறை கொடுக்க மறுத்தால் ஒருநாள்கூட உயிருடன் வாழ முடியாது என்கிறார். அதற்குச் சான்றாக நீர் மிகுதியானால் அதை நாம் சிறைப்படுத்தவும் முடியாது. தீ மிகுதியானால் உலகத்தில் எந்த உயிரும் வாழ முடியாது அனைத்தும் அழிந்துவிடும், வளி (காற்று) அதிகமானாலும் அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய வலிமை யாரிடத்தும் இல்லை. அந்த இயற்கையைப் போல (நீர், தீ, வளி) பாண்டியன் கூடகராத்து துஞ்சிய மாறன் வழுதியும் வலிமை வாய்ந்தவனாவான்.

திறையைக் கேட்பதற்கு முன்பாகவே கொடுத்துவிட்ட மன்னர்கள் நடுக்கம் அடையத் தேவையில்லை, அப்படி கொடுக்காத மன்னர்கள் செம்புற்றிலிருந்து வெளியேறும் ஈசல்களைப் போல ஒரு பகல்கூட முழுவதும் வாழமுடியாது! என்று அறிவுறுத்துகிறார். இதனை,

**நீர்மிகன், சிறையும் இல்லை, தீ மிகின்**
**மன்உயிர் நிழற்றும் நிழலும் இல்லை**
**வளிமிகின், வலியும் இல்லை; ஒளி மிக்கு**
**அவற்றுஓர் அன்ன சினப்போர் வழுதி,**
**தண்தமிழ் பொதுவெனப் பொறாஅன், போர் எதிர்ந்து**
**கொண்டி வேண்டுவன் ஆயின், கொள்க எனக்**
**கொடுத்த மன்னர் நடுக்கு அற்றனரே;**
**அளியரோ அளியர், அவன் அளி இழந்தோரே**
**நுண்பல சிதலை அரிது முயன்று எடுத்த செம்புற்று ஈயல்போல**
**ஒருபகல் வாழ்க்கைக்கு உலமருவோரே!** [1]

என்ற புறப்பாடல் சுட்டுகிறது. மனிதனின் வீரத்தை மதிப்பிட, அன்பினை அளவிட, ஈகையை வலியுறுத்த கருணையினைக் காட்ட இயற்கையை உவமையாக (அ) எடுத்துக்காடாகச் சொல்லுதல் தமிழ் இலக்கியங்களின் மரபாக உள்ளது என்பதை இப்புறப்பாடல் சுட்டுகிது. இதற்குச் சான்றாக எம்ஜிஆர் அவர்களுக்கு புலமைப்பித்தன் எழுதிய திரையிசைப் பாட்டைச் சொல்லலாம்.

**நதியைப் போல நாமும் நடந்து பயன்தரவேண்டும்**
**கடலைப் போல விரிந்த இதயம் இருந்திட வேண்டும்**
**வானம் போல பிறருக்காக அழுதிடல் வேண்டும்**
**வாழும் வாழ்க்கை உலகில் என்றும் விளங்கிட வேண்டும்**[2]

என்ற புலமைப்பித்தனின் பாடல் இயற்கையின் செயல்களோடு மனிதனின் செயல்கள் மதிப்பிடப்பட வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. எனவே மனிதனின் வாழ்வில் இயற்கை தவிர்க்க முடியாத காரணி என்பதை நாம் அறிவுறுத்த வேண்டிய அவசியமில்லை.

### எனக்கவள் தங்கை

நற்றிணையில் 172-ஆவது பாடல் சங்க கால மக்கள் இயற்கையோடு கொண்டிருந்த உறவுமுறையை, நேசத்தைக் குறிப்பிடுகிறது. தலைவி தோழிகளோடு விளையாடிக் கொண்டிருந்தாள். புன்னை மர விதை ஒன்றை ஈர மணலில் விளையாட்டுக்காக நட்டுவைத்தாள். அது மரமாக வளர்ந்து அவள் தாயும் புன்னையின் சிறப்பறிந்து நெய்யும் பாலும் ஊட்டி வளர்க்கச் சொன்னாள், மரமும் வளர்ந்தது, தலைவியும் வளர்ந்தாள். தாய் தலைவியைப் பார்த்து அப்புன்னை உன் தங்கையெனச் சொன்னதால் தலைவியும் தங்கையாகவே கருதினாள். அதனால் தலைவனோடு அம்மர நிழலில் பேசவும் நாணினாள். இதனை நற்றிணை பாடல் குறிப்பிடுகிறது.

**விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்தகாழ் முளை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று**
**அன்னை கூறினள், புன்னையது நலனே**
**அம்ம! நாணுதும், நும்மொடு நகையே**[3]

மேற்கூறிய பாடல் வரிகள் வழி இயற்கையைத் தன்னுடன் பிறந்த உறவாக கருதி வாழ்ந்த பழங்கால மக்களின் உயர்ந்த உள்ளம் கொண்ட வாழ்வியல் முறையை அறிய முடிகிறது. அதுபோலவே சங்க இலக்கியங்களில் பலப்பாடல்களில் புன்னை மரம் குறித்தப் பதிவுகள் நிறைய உண்டு. காதலர்கள் கதைபேசி மகிழ புன்னை நிழல் பயன்பட்டு இருந்திருக்கிறது. தமிழ் சினிமாக்களிலும் பல இடங்களில் புன்னை மரம் பற்றியச் செய்திகள் காதல்

பாடல்களில் இடம் பெற்றுள்ளன. புன்னை மரங்களிலும் பலவகை உண்டு என சமகால அறிவியல் உலகமும் சுட்டுகிறது. கவிஞர் வாலி அவர்கள்,

**பாய்விரிக்க புன்னை மரமிருக்க**
**வாய் ருசிக்க அள்ளி நான்கொடுக்க**
**கையோடு நெய் வழிய**
**கண்ணோடு மை வழிய**
**அத்தானுக்கு முத்தாடத் தான்**
**ஆசையிருக்காதோ**
**ஆசையிருக்காதோ.....**[4]

என்ற வரிகள் ‘உரிமைக் குரல், என்ற படத்திற்காக எழுதினார். மேலும் சங்க இலக்கியத்தில் நெய்தற்திணைப் பாடல்களிலும் புன்னை மரம் பற்றிய செய்திகள் நிறைய உண்டு.

**ஞாயிறும் திங்களும் போன்றவன்**

பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியை காரிக் கிழார் புறநானூற்றில் 6 ஆவது பாடலில் பாடியுள்ளார். அதில் முதுகுடுமியின் நாடு இயற்கையான மலை வளங்களைக் கொண்டு விளங்குவதாகப் பாடுகிறார்.

**வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்**
**தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்**
**குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்**
**குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்**
**கீழது முப்புணர் அடுக்கிய முறைமுதற்கட்டின்**[5]

என்ற வரிகளில் வடக்கில் இமயமலையும், தெற்கில் கன்னியாறும் மேற்கிலும் கிழக்கிலும் கடல்களும் எல்லைகளாக உள்ளன. உனது புகழ் நிலம், வான், சுவர்க்கம் ஆகிய மூவுலகத்திலும், பாதாள உலகத்திலும் பரவி உள்ளது. எனவே, பலவெற்றிகள் பெற்றும் செருக்கடையாமல் அடக்கமும் வண்மையும் நிறைந்து வாழும் குடுமியே! நீ குளிர் நிலவு போலவும் காய்கதிர்க் செல்வன் (சூரியன்) போலவும் நிலைபெற்று வாழ்க என்று புலவர் காரிக்கிழார் முதுகுடுமியைப் பாடுகிறார். எனவே புறப்பாடலாக இருந்தாலும் அகப்பாடலாயினும் இயற்கையைத் தவிர்த்து விட்டு பாடமுடியாது என்பதை சங்கப் பாடல்கொண்டு விளங்கலாம்.

**உழவு செழிக்க வேண்டும்!**

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் காரணமாய் இருப்பது அந்நாட்டின் விவசாயம் ஆகும். இந்திய நாடும் எழுபது சதவிகித வேளாண்மையை நம்பி இருக்கிறது. ஒரு நாட்டில் விவசாயம் சிறப்புற்றிருந்தால்தான் அனைத்துத் தொழில்புரிவோரும் சிறப்பாக வாழ முடியும். ஏனென்றல் உணவு என்பது அனைவருக்கும் அடிப்படைத்தேவை. போர்க்களத்திலே இருக்கும் போர்வீரனுக்கும் - ஏவல் வேலை செய்யும் சாதாரண மனிதனுக்கும் உணவு என்பது அடிப்படைத் தேவை, எனவே அத்தகைய உணவை உற்பத்திச் செய்கிற உழவர்கள் நலனை ஒரு அரசாங்கம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். என்ற கருத்து அல்லது அரசுக்குக் கூறும் அறிவுரை காலந்தோறும் சான்றோர்களால் சொல்லப்பட்டுக் கொண்டே வருகிறது. குறிப்பாகச் சங்கப் புறப்பாடல்களில் அரசனுக்கு அறிவுரைக் கூறும் பாடல்கள் நிறைய உண்டு. சான்றாகச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் செவியறிவுறூஉ துறையில் புலவர் ‘வெள்ளைக்குடி நாகனார், பாடிய பாடல் புறநானூறு 35 ஆவது பாடலாகும்.

இப்பாடலில் கிள்ளிவளவனைப் பாராட்டும் புலவர் அவனுக்குச் சில அறிவுரைகளையும் சொல்கிறார். ‘கடலால் சூழப்பட்டதும் வானத்திற்குக் கீழே இருப்பதுமாகிய இந்த உலகில் உள்ள குளிர்ந்த தமிழ்நாட்டிற்குரிய மூவேந்தரில் அரசெனப் படுவது உன்னுடைய அரசே! என்று குறிப்பிடகிறார். இப்பாடலில் (புறம்.35) இயற்கை எவ்வளவு இன்றியமையாதது என்பதைப் பதிவு செய்திருக்கும் புலவர். வேளாண்மை பற்றி அதன் முக்கியத்துவத்தைச்

சுட்டுகிறார். மழை பெய்யும் காலத்துப் பெய்யாமல் பொய்த்தாலும், விளைவு (வருவாய்) குறைந்தாலும் மக்களின் தொழில் வளம் குன்றினாலும் இவற்றுக்கெல்லாம் காரணம் அரசனே என்றும் உலகம் சொல்லும். எனவே கோள் சொல்வார் பேச்சைக் கேட்காமல் உழவுத்தொழில் உடையாரையும் காக்க வேண்டும். அப்படிச் செய்தால் பகைவர் உனக்கு அடங்கி உன்னைப் போற்றுவர், என்று இயற்கை சார்ந்த தொழில்புரியும் உழவர்களை பாதுகாக்கச் சொல்லும் புலவரின் அறிவுரை இன்றைய நவீன உலகிற்கும் ஆட்சியாளர்க்கும் பொருந்தக்கூடியதாகவே அமைகிறது. மேலும், போர்க்களத்தில் படை வீரர்கள் மாற்றாரை வெற்றி கொண்டு ஆர்பரித்துக் கொண்டாடுவதற்கு மூல காரணம் உன் நாட்டு உழவர்கள் நிலத்தில் ஆழ உழுது உழுது விளைவித்த நெற் குவியலே ஆகும் என்கிறார் புலவர் வெள்ளைக்குடி நாகனார்.

**வருபடைத் தாங்கிப் பெயர்புறந்து ஆர்த்துப்**
**பொருபடை தருஉம் கொற்றமும் உழுபடை**
**ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனேஷ**
**மாரிபொய்ப்பினும் வாரி குன்றினும்**
**இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்**
**காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்**
**அதுநற்கு அறிந்தனை ஆயினும் நீயும்**
**நொதுமல் ஆளர் பொதுமொழி கொள்ளாது**
**பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்**
**குடிபுறந் தருகுவை ஆயின்**
**அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே**[6]

என்ற அடிகளில் புலவர் வெள்ளைக்குடி நாகனார் உழவர்களின் உரிமைகளையும் அவர்கள் தம் பெருமைகளையும் சிறப்பாகப் பாடி இருக்கிறார். வள்ளுவரும் உழவுத் தொழீன் மேன்மையைச் சுட்டுமிடத்து,

**சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை**[7]

என்று எத்தனை தொழில்கள் நாட்டில் இருந்தாலும் அந்த தொழிலின் பின்னேதான் நாம் சுற்ற வேண்டியிருக்கிறது என்றும் சுட்டுகிறார்.

சங்க கால சமூகம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது என்பதை சங்கச் சமுதாயம் உணவு உற்பத்தி செய்யும் சமுதாயமாக உடைமைச் சமுதாயமாக மாறிய சூழலில் நிலமே அடிப்படை ஆதாரமாய் அமைகின்றது. இந்நிலையில் நிலத்தை மையப்படுத்தியே சமுதாய வாழ்விலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. நால்வேறு திணைகளிலும் வேளாண் சமுதாயம் அந்தந்த நிலச் சூழலுக்கு ஏற்ப ஆளுமை பெறுகிறது.[8] பெ.மாதையன் அவர்கள் சுட்டுகிறார்.

### நல்ல நிலம்

மக்கள் வாழும் நிலப்பரப்பு வளமான நாடாக இருந்தாலும் மரங்கள் அடர்ந்த காடாக இருந்தாலும், பள்ளமாக இருந்தாலும் மேடாக இருந்தாலும் அதனால் அதற்குப் பெருமை இல்லை. நற்பண்புகளும் நற்செயல்களும் கொண்ட ஆடவர்கள் நிரம்பியுள்ள பகுதியே நல்ல நிலமாகும். நிலமே நீ வாழ்க. இக்கருத்துடைய பாடல் ஔவையார் பாடிய புறநானூறு 187 ஆவது பாடலாகும். நிலம் நன்றாக இருந்தாலும் மக்கள் ஒழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும் அப்போதுதான் அந்நிலத்திற்குப் பெருமை என்று குறிப்பிடுகிறார்.

**நாடா கொன்றோ; காடா கொன்றோ**
**அவலா கொன்றோ; மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை; வாழிய நிலனே!** [9]

என்ற பாடலில் ஆடவர் ஒழுக்கம் உடையவராக இருக்க வேண்டும் என்று சுட்டுகிறது. ஆண் - பெண் சமத்துவம் பேசுகிற இக்காலத்தில் நிலம் சிறப்படைய ஆண்மட்டும் சரியாக இருந்தால் போதும் என்ற பொருளில் ஔவையார் குறிப்பிடக் காரணம் பழங்காலத்தில், 'வினை செய்வதற்கு ஆடவரே உரியவர், என்ற கருத்திருந்தது.

அதனால்தான் ‘வினையே ஆடவர்க்கு உயிரே’ என்ற பாடல் தோன்றியது. சமகாலத்தில் ஆண் - பெண் என்று கருதாமல் உண்மையான குடும்பமும், நேர்மையான நாடும் மக்களும் திகழ இயற்கையோடு இயந்த வாழ்வே அனைவருக்கும் சிறப்பைத் தரும்! எனவே இயற்கையோடு வாழ்வோம் வளம் பெறுவோம்.

## முடிவுரை

சங்க இலக்கியத்தில் இயற்கையின் மேன்மை என்ற தலைப்பிலே புறநானூறு, நற்றிணை போன்ற தொகை நூற்களில் இடம்பெற்ற பாடல்கள் மூலம் இயற்கையின் சிறப்பினையும் மனித வாழ்வியலோடு பொருந்தக்கூடிய தனித்துவத்தையும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. மனிதன் இயற்கையோடு சேர்ந்து வாழ்வதுதான் மனிதனுக்கு நல்லது என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

இவ்வாய்வில் புறப்பாடல்கள் பெரிதும் பயின்று வந்துள்ளது. அதற்குக் காரணம் புறப்பாட்டின் பெருட்செறிவாகும். இதற்குச் சான்றாக ரா.பி.சேதுபிள்ளையின் கருத்தைக் குறிப்பிடலாம். “புறநானூற்றிலே படைத்திறம் உடைய பெரு வேந்தரைக் காணலாம். கொடைத்திறம் வாய்ந்த கொற்றவரைக் காணலாம். கற்றறிந்தடங்கிய சான்றோரைக் காணலாம். சுருங்கச் சொல்லின் கலைமகளும் திருமகளும் களிநடம் புரிந்த பண்டைத் தமிழ்நாட்டைப் புறநானூற்றிலே காணலாம்” என்பார். ரா.பி.சேதுபிள்ளை.

## தொகுப்புரை

மன்னர்களை புலவர்கள் சிறப்பித்துப் பாடும்போது இயற்கையின் செயல்களோடு ஒப்பிட்டுப்பாடுகின்றனர். இதனால் இயற்கையைத் தவிர்த்து மனிதன் வாழ்வு முழுமை அடையாது என்பது விளங்குகிறது.

- உழவுத் தொழிலே அனைவரின் வாழ்விற்கும் அடிப்படை என்பதை இவ்வாய்வுக் கட்டுரை குறிப்பிடுகிறது. இதனால் உணவை உற்பத்தி செய்யும் உழவனின் (விவசாயி) செயல் சிறப்பிக்கப்படுகிறது.
- சங்க கால மக்கள் இயற்கையைத் தன் உடன்பிறப்புகளாக எண்ணியமையை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.
- நாடு செழிக்க, மக்கள் நலம்பெற இயற்கை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.
- இயற்கையும், ஆட்சிமுறையும் நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவை என்பதை சங்க அகப் புறப்பாடல்கள் மூலம் இக்கட்டுரை உறுதிப்படுத்துகிறது.

## அடிக்குறிப்புகள்

1. புறம். 51
2. https://www.vovigal.com/d331586d36
3. நற்றிணை. 172
4. https://www.smudue.com/song/
5. புறம். 6
6. புறம்.35
7. குறள்.1031
8. மாதையன்.பெ.சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், ப.112
9. புறம்.187
10. ரா.பி.சேதுபிள்ளை, தமிழ் விருந்து, ப.35

## பார்வை நூல்கள்


1. ரா.பி.சேதுபிள்ளை, சீதைபதிப்பகம், 17/1 தாச்சி அருணாச்சலம் தெரு, மயிலாப்பூர், சென்னை, 600004, முதற்பதிப்பு.2009
2. பெ.மாதையன், சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41, பி, சிட்கோ, இண்டஸ்ரியஸ், அம்பத்தூர், சென்னை எஸ்டேட், முதற்பதிப்பு, 2004, இரண்டாம் பதிப்பு, 2010
3. அ.ப.பாலையன் (உ.ஆ), புறநானூறு, சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை-14, முதற்பதிப்பு, 2008
4. நற்றிணை நானூறு, கழக வெளியிடு, மூலமும் உரையும் (உ.ஆ) பின்னதூர் நாராயணசாமி ஐயர், முதற்பதிப்பு மார்ச் 1952

# பரிபாடலில் இயற்கை

**முனைவர் கா. சந்தானலெட்சுமி**
இணைப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரி, சிவகங்கை

**ஆய்வுச் சுருக்கம்**
இசையோடு எழுதப்பட்ட இலக்கியம் பரிபாடல் ஆகும். திருமால், வையை, செவ்வேள் பற்றிய *22* பாடல்களே இன்று கிடைப்பனவாக உள்ளன. அப்பாடல்களின் வாயிலாக சங்ககால மக்களின் இறைவழிபாடு, இயற்கையோடு இணைந்த இறைவழிபாடு பண்பாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றைக் காண முடிகிறது. இயற்கை எழில் சார்ந்த திருமால் உறைவிடம், செவ்வேள் உறைவிடம், புதுப்புனல் வையை நீராடல் ஆகியன இயற்கை சார் வாழ்வியலை அழகுற எடுத்துக்காட்டுவனவான பாடல்கள் பரிபாடலில் அமைந்துள்ளன. இயற்கை வெளிபாடு இலக்கிய உத்தியாக அமைவதையும் பரிபாடல் வாயிலாக அறியமுடிகிறது. இறைமையை இயற்கையாகப் போற்றினர், இயற்கையை இறைமையாக வழிபட்டதை 'பூவினுள் நாற்றம் நீ' என்ற சொல்லாடல்கள் காட்டும். தண்பரங்குன்றம் என்று பரங்குன்றத்து குளிர்ச்சி உணர்த்தப்படுகிறது. நடந்தாய் வாழி காவிரி என சிலம்பில் காவிரி போற்றப்படுவதைப் போல மதுரையம்பதியில் வையை வளம் போற்றப்படுகிறது. மக்கள் மகிழ்வின் ஒரு அங்கமாகவே வையை இடம் பெறுகிறது. வையை நீராடல் மதுரை மக்களின் பண்பாட்டின் அடையாளமாக இருந்துள்ளதை பரிபாடல் வாயிலாக அறியமுடிகிறது. நிலம் சார்ந்த தமிழின பண்பாட்டினை பரிபாடலில் இடம் பெறும் இயற்கை வருணைகள் வாயிலாக உணர்ந்து இன்புற முடியும். பரிபாடலில் எவ்விதம் இயற்கை சார் கருத்தியல்கள் முன் வைக்கப்படுகின்றன என்பதை அழகியல் ஆய்வு மற்றும் சமூகவியல் ஆய்வு அணுகுமுறையில் இக்கட்டுரை காண விழைகிறது.

**கருச்சொற்கள்:** தண்பரங்.குன்றம், புனல், செவ்வேள், கடம்பம், காந்தள், புதுப்புனல், நாற்றம், தெறல் வெறியாட்டு, சூள், சுரும்பு.

**முன்னுரை**

இயற்கை இயல்பானது. பிறருக்கு பயன்படுவது அசுத்தங்களை சுத்தமாக்கும் அற்புதப் படைப்பு இயற்கையாகும். இறைமையின் அமுதப்படைப்பாக இயற்கை இலங்குகிறது. மனித நாகரிகத்தோடு இணைந்தது ஆகும். ஐந்நிலப் பாகுப்பாட்டில் தனது வாழ்வியலை அடையாளப்படுத்திய தமிழனம் இயற்கை வாழ்வியலை பின்பற்றியது அதன் வெளிப்பாடாகவே பரிபாடலில் காணப்படும் இயற்கைச் சார் கருத்துக்கள் அமைகின்றன. இக்கருத்துக்களை அழகியல் ஆய்வு மற்றும் சமூகவியல் ஆய்வு அணுகுமுறையில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பரிபாடலின் தனிச்சிறப்புக்கள்**

சங்க இலக்கியங்களில் முழுமையாக கிடைக்கப் பெறாத இலக்கியமாக பரிபாடல் இருக்கின்றது. இந்நூலின் அமைப்பும் நூலில் கிடைக்கின்ற குறிப்புகளும் வையை ஆறு பற்றிய பரிபாடலின் பாடல்கள் வீரயுகத்திற்குப் பின்னரும் அறநெறிக் காலத்திற்கு முன்னரும் தோன்றியுள்ளன என்று முடிவு உறத்துணை செய்கின்றன'[1] பரிபாடலில் இடம்பெறும் பல்வேறு கருத்தியல்கள் இயற்கை வாழ்வியல் முறைகள் இன்றுவரை தொடர்வது சிறப்பாகும்.

**மைவரை உலகம்**

மலை, மலை சார்ந்த பகுதிகளை மைவரை உலகம் என்று குறிப்பிடுகின்றனர். 'சேயோன்

மேய மைவரை உலகமும்'[2] என்பதில் வரையின் வழிபாட்டுக் கடவுளாக செவ்வேள் கூறப்படுகிறார். செவ்வேள் வழிபாடு இன்று முருகன் வழிபாடாக மேற்கொள்ளப்படுகிறது. முருக வழிபாடு சிந்துவெளி நாகரிகத்தில் சிறப்பிடம் பெற்றிருந்ததற்குரிய பலதடயங்கள் நமக்குக் கிடைத்துள்ளன.[3] இயற்கை சார் அழகு என்ற பொருள்படும் படியாக முருகவழிபாடு பண்டைய காலம் தொட்டு இன்று வரை மேற்கொள்ளப்படுகிறது.

வாழ்வை நோக்கும் வகையாகவும் இலக்கியத்தின் இயல்பாகவும் கூறப்படும் அழகியல் வாழ்வினை பிரதிபலிப்பன. இலக்கியத்தைப் பற்றிப் பேசும் திறனாய்விற்கும் அடிப்படை ஆகிறது. செவ்வியல் புனைவியல் போன்று அழகியலும் ஓர் இலக்கிய கோட்பாடாகித் திறனாய்வு அணுமுறையாக அமைகிறது[4].

இயற்கைசார் இருப்பிடமும் இயற்கைசார் பொருட்களையே வழிபாட்டிற்குரியனவாக இருந்தமையை செவ்வேள் வழிபாடு காட்டுகிறது. கடம்ப மரத்தடியில் வீற்றிருக்கும் செவ்வேளுக்கு கடம்பமலர்களைச் சூடி வழிப்பாடு செய்துள்ளனர். நிலம், நிலம் சார்ந்த தமிழரின் இயற்கை வாழ்வியல் இதன் மூலம் புலனாகிறது. மதுரைக்கு கடம்பவனம் என்றதொரு பெயரும் உண்டு. இயற்கை வாழ்வியல் தன்னிறைவினைத் தரும் என்பதால் தங்கள் நிலவியல் பொருள்களைக் கொண்டே இறைவனை வழிபட்டுள்ளதை பரிபாடல் காட்டுகிறது.

**தேம்படு மலர் குழை பூந்துகில் வடிமணி**
**ஏந்திலை சுமந்து சாந்தம் விரைஇ**
**விடையரை அசைத்த வேலன் கடிமரம் பரவினர்**

(பரிபாடல் – 17)

என்ற வரிகளில் மக்கள் தேன் சிந்தும் மலர் கொண்டு செவ்வேளை வழிபாடு செய்துள்ளது புலனாகிறது. ஆடை கூட பூக்களால் வரையப்பட்டுள்ளது. வேலன் இருக்கின்ற கடிமரத்தினையும், கடம்பமரத்தினையும் மக்கள் வழிபாடு செய்துள்ளனர். இதுவே இன்றும் 'தலவிருட்சமாக' கோயில்களில் வழிப்படப்படுவதைக் காணமுடிகிறது. இறைமை கல்லில் மட்டுமல்ல இயற்கையிலும் உண்டு என்பதையே இவ்வழிபாடு காட்டுகிறது. இயற்கையோடு இணைந்த திருநாமங்களையே இறைமையும் கொண்டுள்ளது.

ஏகாம்பரேஸ்வரி, பூவண்ண நாதர், செங்கமலத்தாயார் முல்லை வனநாதர், திருத்தனி நாதர், மலைக்கொழுந்து ஈசர் போன்ற பெயர்களைச் சான்றாகக் கொள்ளலாம்.

## இறைவழிபாடும் பிரபஞ்ச வாழ்வியலும்

இறைவழிபாட்டின் நோக்கமே அன்பும் மகிழ்வும் பெறுவதே ஆகும். இறையடியவர்கள் செவ்வேளை வணங்கச் செல்லும் போது கண்ணில் காணும் உயிர்களுக்கெல்லாம் உணவளித்து உள்ளனர்.

**'குரங்கடுத்து பண்ணியம் கொடுப்போரும்**
**கரும்பு கருமுகம் கணக்களிப்போரும்'**

(பரிபாடல்-19)

என்ற பாடல் வரிகளில் குரங்குகளுக்கு அடியவர்கள் உணவளித்துள்ளதைக் காண முடிகிறது. இந்நிகழ்வு இன்றுவரை நடைபெறுவது தமிழர் வாழ்வியலின் சிறப்பாகும் அழகர்மலை. குற்றாலமலையில் உள்ள குரங்கள் தனக்கு தரப்படும் உணவை உண்பதனை காணும்போது மனம் மகிழ்வடையும் இந்த மனமகிழ்வே இறைவழிபாடாகும். இதனையே திருமூலரும் 'யாவருக்கும் ஒரு வாயுறை'என்று கூறியுள்ளார். இதனைப் போன்றே வள்ளலாரும் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று கூறுகிறார்.

அஃறிணை உயிர்களும் இறைவனை வழிபாடு செய்துள்ளமைக்கு திருவானைக்கா தக்க சான்றாகும். பாம்புபுரீஈசர் எரும்பீசா, என்ற இறைவனும் அஃறிணை உயிர்களின் பெயர்களால் அழைக்கப்படுவதை காண முடிகிறது. குரங்கு முகம் கொண்ட சிவனின் ருத்ரமுகமே அனுமாராக வழிபாடு செய்யப்படுகிறார். வேழ

முக உடையவராக விநாயகர் முழுமுதற்கடவுளாக வண்ப்படுகிறார். பரங்குன்றத்தில் அடியவர்கள் யானைகளுக்கு உணவளித்துள்ளனர். யானை உண்ட மிச்சிலை பெண்கள் உண்டுள்ளனர் என்பதை பரிபாடல் குறிப்பிடுகிறது.

**கொடியேற்று வாரணம் கொள் கவிழ மிச்சில**
**மறுமற்ற மைந்தர் தோள் எய்தார் – மணந்தார்**
**முறுவல் தலையளி எய்தார் – நின்குன்றம்**
**குறுசிச் சிறப்புரைக்கால் (பரிபாடல் – 19)**

இந்த பரிபாடலில் குறிப்பிடப்படும் பிரபஞ்ச வாழ்வியல் சூழல் காலத்திற்கு ஏற்ப மாற்றம் பெற்று இன்றும் தொடர்வதைக் காண முடிகிறது. யானை தும்பிக்கையால் நீர் அடித்தல், யானைகளுக்கு உணவு தருதல், யானை முடியை அணிந்து கொள்ளுதல் போன்றவை எல்லாம் மனிதர்கள் இயற்கையோடு கொண்டுள்ள பிரபஞ்ச வாழ்வியலையே பிரதிபலிக்கிறது. ஏனெனில், சமூக சூழ்நிலை மண்டல வாழ்வியலில், அனைத்து உயிர்களும் ஏதோநொரு விதத்தில் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக உள்ளன என்பதே உண்மையாகும்.

**பரங்குன்றத்துச் சிறப்புகள்**

மகிழ்ச்சியை நல்கும் தண்பரங்குன்றம் என்று பரங்குன்றம் வருணிக்கப்படுகிறது.

**மகிழ்மறிப் பறியாது நல்கும்**
**சிறப்பிற்றே தன் பரங்குன்று**
**(பரிபாடல் 8-44-45)**

என பரிபாடல் சுட்டுகிறது பரங்குன்றின் மீது சூளுரைக்காதே என்று தலைவி கூறுகிறாள்

**ஐயா சூளின் அடிதொடு குன்றொடு**
**வையைக்குத் தக்கமறைசீர் சூள் கூறல்**
**(பரிபாடல் 8-69-70)**

என்று தலைவி பாடுவதிலிருந்தே பரங்குன்றின் மேன்மை புலனாகும் 'நனிமலர் பெருவழி' (8-94) என பரங்குன்றத்து பெருவழியை மலர்ப் பாதையாக அடியவர்கள் மாற்றியதை காண முடிகிறது. அதிகாலை இருளை கூட அடியவர்கள் அணிந்துள்ள மலர்மாலைகளின் ஒளி வெளிச்சமாக்குகிறது என்ற பரிபாடல் கருத்து இயற்கையை தமக்குரிய தாக்கிக் கொண்ட தமிழர்களின் வாழ்வியலைச் சுட்டுகிறது.

'பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்' (பரிபாடல் 8-11) என்று கூறியுள்ளதால் அனைத்து தெய்வங்கள் தேவர்களின் இருப்பிடமாக பரங்குன்றம் திகழ்ந்ததை உணரமுடிகிறது.

**ஒருநிலைப் பொய்கையோ டொக்கும் நின்குன்றின்**
**அருவிதழ் மலைச்சுனை**
**(பரிபாடல் 8-15-16)**

என்பதில் சரவண பொய்கையுடை பரங்குன்றத்தில் அருவிகள் வீழ்ந்தபடி உள்ளமையை பரிபாடல் வருணிக்கிறது சுனை நீராடிய மாந்தரின் ஆரவாரம் கண்டு வண்டுகளும் தாதுண்ண விரும்பாது சுனையை அடையாதிருந்த பரங்குன்றம் என்பதை பரிபாடல் (17 -38 – 39) வரிகள் புலப்படுத்துகின்றன.

குன்றம் பூதனார் கேசவனார் நல்லழிசியார் ஆகியோர் பரங்குன்றத்தை இயற்கையோடு வருணிக்கிறார்கள் தண் பரங்குன்றம் பாடியதனால் குன்றம் பூதனார் என்ற பெயரைப் பெற்றார். மேலும், நல்லச்சுதனார் இசைகளின் செய்கைகளின் அடிப்படையில் பரங்குன்றத்து இயற்கை எழிலை வட்டிகைச் செய்தியாக வடித்துள்ளார்.

**பாணர் வண்டினம் யாழிசைப் பிறக்கப்**
**பாணி முழவிசை யருவி நீர்ததும்ப**
**ஒருங்கு பரந்தவை யெல்லா யொலிக்கும்**
**இரங்கு முரசினான் குன்று**
**(பரிபாடல் 18-26-29)**

என்ற பரிபாடல் வரிகள் இயற்கை காட்சிகளை ஒளி ஒளி அமைப்புடன் காட்சிப்படுத்தியுள்ளன.

இமயக் குன்றிடத்துள்ள பொய்கையை விட சிறந்ததாக சரவணப் பொய்கையை பரிபாடல் கூறுகிறது. தாமலை பூங்கொத்துகள், மின்னல் ஒளி போன்று ஒளிவீசக் கூடியதாக உள்ளன. மயக்கம் தரும் சுனைகளில் அருவிநீர் விழுந்த வண்ணம் இருக்கும் என்பதை

**ஒருநிலைப் பொய்கையோடொக்கும் நின்குன்றின்**
**அருவிதாழ் மாலைச் சுனை (பரிபாடல் – 8)**

என்ற பாடல் வரிகளில் காணமுடிகிறது. மலைபடுகடாம் பாடல் கருத்தோடு இக்கருத்து ஒப்பு நோக்கத்தக்கவனவாக உள்ளன.

**மதநனி வாரணம் மாறுமாறு அதிர்ப்ப**
**எதிர் குதி ராகின்று அதிர்ப்ப மலைமுழை**

(பரிபாடல் 8)

என்பதில் யானையின் முழக்கங்கள் மலைகளில் எதிரொலியாக முழங்கப்படுவதை பரிபாடல் 'அதிர்பு'என்ற சொல்லாட்சியால் அறிவிக்கிறது. அதிர்பு, மலைமுழை என்ற சொல்லாடல்கள் ஆசிரியரின் இயற்கைசார் இசை நுட்பத்தை வெளிப்படுத்துகிறது. இதுவே தமிழின் வளமாகும் தமிழின் வளமையும் செழுமையும் இயற்கையை காட்சிப் படுத்துவதில் ஒருங்கே விரிவதைக் காண முடிகிறது.

காதலின் தூதாக வண்டுகள் சென்று கூடல் வாய் நகர் அலர் பரப்பியதை பரிபாடல் காட்டுகிறது. இயற்கையோடு இயைந்த மாந்தர் வாழ்வியலை

**தூதேய வண்டின் தொழுதி முரல்லவர்**
**காதல் மூதூர் மதில் கம்பலைத்தன்று**

(பரிபாடல்-8)

இயற்கையின் உணர்வினை தலைவியும், தலைவியின் உணர்வினை இயற்கையும் புரிந்து கொள்வதை உணரமுடிகிறது.

### செவ்வேள் வழிபாட்டு முறைகள்

யானையை உடைய நெடியோய் நின் காவல் சூழ்ந்த மலையைச் சந்திநன் சுற்றி வருதல் போலவே பாண்டியனும் சுற்றி வருகிறான் என்று பரிபாடல் கூறுவதிலிருந்து பண்டைக் காலத்திலே பௌர்ணமி தினத்தில் கிரிவலம் செல்வது மக்களின் பண்பாடாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது. பண்டைய பழங்குடி மக்களால் குறிப்பாக மலைகளிலும் மலை சார்ந்த நிலமாகிய குறிஞ்சிப் பகுதியில் வாழ்ந்தவர்களால் கடைப்பிடிக்கப்பட்ட இயற்கை வழிபாடு முருகவழிபாடே என்பதை திரு.வி.க.வின் 'முருகன் அல்லது அழகு' என்ற படைப்பு உணர்த்துகிறது[5].

அதிகாலை முதல் மக்கள் வழிபாடு செய்துள்ளதை பரிபாடலின்

**புலத்தினும் போரினும் போர் தோலாக் கூடல்**
**கலப்போடு இயைந்த இரவுதீர் எல்லை**
**அறம்பெரிதாற்றி அதன் பயன் கொண்மார்**
**சிறந்தோர் உலகம் படருநர் போல**

(பரிபாடல் 19-9-12)

என்ற பரிபாடல் வரிகள் காட்டுகின்றன. இல்லற வாழ்வினை அறத்தோடு மேற்கொண்டு வாழ்பவர்கள் வானவர் உலகம் காண்பர் என்ற வாழ்க்கை நெறியினையும் பரிபாடல் உணர்த்துகிறது. இக்கருத்து வள்ளுவத்தோடு ஒப்பு நோக்கத்தக்கது.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள்வைக்கப்படும்.** (குறள்-50)

என அறநெறியில் செல்லும் அடியவர் கூட்டமானது குன்றத்தோடு கூடலையும் இணைத்தது. இதனை பரிபாடல்

**குன்றொடு கூடல் இடையெல்லாம் ஒன்றுபு**
**நேர்பு நிறைபெய்து இருநிலம் பூட்டிய**
**தார் போலும் மாலை தலைநிறையால் தன்மணல்**
**ஆர் வேலையாத்திரை செல்யாறு**

(பரிபாடல் 19-15-18)

என்ற வரிகளில் புலப்படுத்துகிறது. அடியவர் கூட்டம் மக்கள் கடவுளாம் செவ்வேளின் பேரருளை வெளிக்காட்டுகிறது.

### செவ்வேளிடம் வேண்டுதல்

தமிழர் வாழ்வியல் இயற்கை வாழ்வியலோடு இரண்டறக் கலந்தது என்பதை செவ்வேள் வழிபாடு உணர்த்துகிறது.

**'கனவில் தொட்டது கைபிழையாகாது'**

(பரிபாடல் 8)

இருக்க அடியவள், செவ்வேளிடம் புதுப்புனல் வர வேண்டுகிறார். கணவனோடு கனவில் புதுப்புனல் ஆடியது நினைவாக வேண்டுமென்ற வேண்டுதலில் அடியவளின் வேண்டுதலோடு சமூக நலனும் இணைந்து உள்ளதைக் காணலாம். நீர்வரத்து இருக்கும் போது தான் வாழ்விடங்கள் வளமாகும் என்ற சமூக அறிவு இங்கே புலப்படுத்தப்படுகிறது.

நனிமலர்ப் பெருவழி என்ற சொல்லாடல் வழி அகுளாளர்கள் நடந்து செல்லும் பாதை. எத்தகைய இயற்கை எழில் சூழ்ந்ததாக அமைந்திருத்தது என்பதைக் காண முடிகிறது. இயற்கை என்பது தமிழிலக்கியங்களில் தனித்ததொரு பாடுபொருளாக அமையாமல் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் இணை பிரியாது கலந்து இருந்துள்ளதை பரிபாடல் பாடல்வரிகள் மூலம் உணர முடிகிறது. இயற்கை சார் வாழ்வியல் மனித வாழ்வியலின் அழகினையும் அமைதியையும் அருளையும் வெளிப்படுத்துவன உள்ளன.

**பரிபாடலின் தமிழரின் இயற்கை சார் வாழ்வியல்**

தண்பரங்குன்றம், தக்கமணல் இரவுதீர் எல்லை புதுப்புனல், நனிமலர்ப் பெருவழி என்பன போன்ற சொல்லாடல்கள் தமிழரின் இயற்கை சார் வாழ்வியலைப் புலப்படுத்துகிறது. பரங்குன்றின் சிறப்பே அதன் தண்மையிலே இருக்கிறது. அத்தகைய குளிர்ச்சி பொருந்திய மலையாக பரங்குன்றம் இருப்பதற்கு அங்குள்ள சுனைகளும், சோலைகளும், அருவிகளுமே காரணமாகின்றன.

இரவுதீர் எல்லைப் பொழுதிலே வழிபாடு தொடங்கியுள்ளது. அதிகாலை வேலை 'பிரம்மமுகூர்த்தம்' என அழைக்கப்படுகிறது. அவ்வேலையில் வழிபாடு செய்யும் பொழுது மனஅமைதியும் ஒருங்கிணைப்பும் கிடைக்கின்றது.

புதுப்புனல் நீராடல் பண்டைத் தமிழரின் பண்பாட்டின் வெளிப்பாடாகும். நீராடல் மட்டுமின்றி வழிபடலும் உண்டு இன்றுவரை ஆடிப்பெருக்கன்று நீர்நிலைகளில் வழிபாடு செய்வது தமிழரின் இயற்கைசார் வாழ்வியலை உணர்த்தும்.

**முடிவுரை**

நோயற்ற வாழ்வியலுக்காக இயற்கைசார் வாழ்வியலாக தமிழர் வாழ்வியல் திகழ்ந்ததை பரிபாடல் காட்டுகிறது. தமிழரின் இயற்கை வாழ்வியல் இறைமையோடு இணைந்து இறைமை வாழ்வியலாகி மக்களின் வாழ்வியலாகி பிரபஞ்சத்திற்கே இன்றுவரை பயன்பட்டு வருவதை இவ்வாய்வு உறுதி செய்கிறது. இயற்கை வாழ்வியலே எதிர்கால வாழ்வியலுக்கான ஆதாரம் என்பதை இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. ஜி. ஜான் சாமுவேல், செவ்வேளும் செந்தமிழும்.
2. தொல்காப்பியம் அகத்திணையியல் நூற்பா 5.
3. ஜி. ஜான் சாமுவேல், மேலது ப.12.
4. மீனாட்சி முருகரத்தினம், அழகியல் ப.41
5. Swamy.uyirmei.wordpress.com
6. முருகன் அல்லது அழகு – திரு.வி.க.

**பயன்பட்ட நூற்கள்**


1. இளம்பூரணர், தொல்காப்பியம் பொருளதிகாரம், (உரையாசிரியர்), கழகவெளியீடு, மறுதிறப்பு – 1969
2. கந்தையா. ஆ, செவ்வேள், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் 1985.
3. மீனாட்சி முருகரத்தினம், அழகியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. முதற்பதிப்பு 1992.
4. ஜான் சாமுவேல். ஜி - செவ்வேறும் செந்தமிழும், ஆசியவியல் நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு – 1998.

# சு.வேணுகோபால் சிறுகதைகளில் இயற்கை செழிப்பும் அழிப்பும்

**மா. ரோஹித்குமார்**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை*

***ஆய்வுச்சுருக்கம்***
*இயற்கை என்பது இயல்பாகத் தானாக உருவானது. அது தன்னுடைய இயல்பிலிருந்து மாறாதது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதன், தன்னுடைய சிந்தனைகளிலும் அதனைப் பிணைத்துக் கொண்டான். அதன் விளைவாக மனிதன் படைத்த இலக்கியங்களிலும் இயற்கையை இணைந்தே படைத்தான். இயற்கை மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகும். காலங்கள் மாறமாற மனிதன் தன்னுடைய பொருளாதாரத் தேவைகளுக்காக இயற்கையை மறந்து இயந்திர வாழ்க்கை வாழத் தொடங்கினான். இயந்திர வாழ்வின் அடிப்படையில் தோன்றிய பல்வேறு தொழிற்சாலைகளும், அவற்றிலிருந்து வெளியான கழிவுகளும் இயற்கையின் தன்மையை பாழாக்கி வருகின்றன. மனிதனுடைய வாழ்வையும் அவை மிகவும் பாதிக்கின்றன. எனவே இயற்கையின் அழகை வர்ணித்ததோடு மட்டுமின்றி, இயற்கையைக் காப்பது குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதன் இன்றைய தேவையை எடுத்துக்கூறும் விதமாகவும் தற்காலத்தில் இலக்கியங்கள் பல எழுதப்பட்டு வருகின்றன. அவ்வகையில் சு.வேணுகோபால் அவர்கள் எழுதிய சிறுகதைகளின் வாயிலாக செழிப்பாக இருந்த இயற்கை குறித்தும், மனிதன் தன்னுடைய தேவைகளுக்காக அதனைச் சுரண்டியது மற்றும் மாசுபடுத்தியது குறித்தும் ஆய்ந்து இயற்கையைக் காப்பது குறித்தான அவசியத்தை எடுத்தியம்புவது இக்கட்டுரையாகும்.*

**முன்னுரை**

சங்ககாலம் தொட்டு தற்காலம் வரை எழுதப்பட்ட இலக்கியங்களில் மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்த ஒன்றாக அறியப்படுவது இயற்கை ஆகும். மனிதனின் பல்வேறு தேவைகளைத் தீர்க்கும் மூலமாக இருந்த இயற்கையை மனிதன் தன்னுடைய ஆடம்பரத் தேவைகளுக்காக சுரண்டியதோடு, அதனை மாசுபடுத்தி அழித்தும் வருகிறான். இயற்கை என்றாலே அழகு என்ற நிலை மாறி, இன்று அது குப்பைகளைக் கொட்டி வைக்கும் குப்பைத் தொட்டியாக மாற்றப்பட்டு வருகின்றது. அவ்வகையில் தற்காலத்தில் இயற்கையின் நிலை குறித்தும், அது காக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் சு.வேணுகோபால் அவர்களின் சிறுகதைகளின் வழி ஆராய்ந்து கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இயற்கை என்னும் அழகு**

மனிதனால் உருவாக்கப்படாமல், தானாகவே இயல்பாகத் தோன்றிய அனைத்தும் இயற்கை என்னும் சொல்லில் அடங்கும். நிலம் முதலான ஐம்பூதங்கள், மலைகள், காடுகள், தாவரங்கள், உயிர்கள் என அனைத்துமே இயற்கை என்று கூறலாம்.

***“தமிழில் பாரதிதாசன் முதன் முதலில் உலகப் புறத்தோற்றத்தைக் குறிக்கும் படியாக இயற்கை என்ற சொல்லைக் கையாள்கிறார்”*** [சோ.குருசாமி, இலக்கியங்களில் இயற்கை, ப.59] என்கிற செய்தியினை முனைவர் சோ.குருசாமி அவர்கள் தன்னுடைய ‘இலக்கியங்களில் இயற்கை’ என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

இயற்கையின் பேரழகைக் காணும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அதனுடைய இன்ப ஊற்றுக்கள் தோன்றாதிருப்பதில்லை. இயற்கையின் பால் உள்ளம் இலயித்து அதனைக் காணும்போது இயல்பாகவே மனிதன் கவிஞனாகின்றான். கல்லாதவனாயினும், கற்றவனாயினும் இயற்கையின் மீது தீராக் காதல் கொண்டவனாகவே இருக்கின்றான்.

***“இயற்கை கவிஞனை நெகிழ வைத்து உள்ளெழுச்சி ஊட்டுவது என்பதைப்***

***பாரதிக்குப் பின்வந்த கவிஞர்களே தம் சொற்கள் மூலம் கூறுகின்றனர். பாரதியே முதலில் தொடங்கி வைக்கிறான்"*** [துரை.சீனிச்சாமி, இலக்கியத்தில் இயற்கை, ப.16].

ஒரு கவிஞனை மனம் நெகிழ வைத்து அவனுடைய உள்ளத்துக்கு எழுச்சி ஊட்டி, அவனை படைப்பாளியாக்கப் பெரிதும் பங்காற்றுவது இயற்கையே ஆகும் என்பதை துரை.சீனிச்சாமி அவர்கள் தன்னுடைய 'இலக்கியத்தில் இயற்கை' என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

**சாக்கடையில் மிதக்கும் இயற்கையின் சரீரம்**

பஞ்ச பூதங்களில் ஒன்றாக விளங்குவது நீர். இந்நீரானது மனிதனின் உயிர் வாழ்விற்கும் அனைத்து உயிர்களின் நல்வாழ்விற்கும் அத்தியாவசியமாகிறது. இதனைத் திருவள்ளுவர், 'நீரின்றி அமையாது உலகு' என்கிறார்.

இந்நீரானது ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் எனப் பல்வேறு பெயர்களில் நமக்குப் பயன் தருகிறது. விவசாயமே நமது நாட்டின் முதுகெலும்பு என்று காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார். விளைநிலங்களுக்கான நீர்த்தேவையைக் கிணறுகளே பெரிதும் தீர்க்கின்றன. அத்தகைய வாழ்வின் ஆதாரமாக விளங்குகின்ற கிணற்றுப் பாசனம் பற்றிக் கூறும்போது,

***"4 கமலை வைத்து 108 கிணறளவு கொண்ட செவ்வக வடிவக் கிணறு. எப்போதும் சுவரோரங்களில் ஈரநேமல்... இது ஒரு காமதேனு. நீரைப் போன்ற ஜீவகளை ததும்பும் திரவம் வேறு உண்டா?"*** [சு.வே. பூமிக்குள் ஓடுகிறது நதி (சி.தொ), ப.29] என்கின்ற வரிகளில் நீர், கரையைத் தொடும் அளவிற்கு உயர்ந்து நிற்கும் காட்சியை ஆசிரியர் சு.வேணுகோபால் அவர்கள் குறிப்பிடுகிறார். இதனால் குறைவில்லாத விளைச்சலும், பொய்த்துப் போகாத இயற்கை வளமும் நம்மிடம் இருந்துள்ள சூழ்நிலையை எடுத்துக்காட்டியுள்ளார்.

வேளாண்மை மெல்ல மெல்ல அழிக்கப்பட்டு ஆலைகளும், கழிவு நீரும், காற்று மாசும் ஏற்பட்டு உலகை அழித்துக் கொண்டு வருவதை,

***"தோல் பதனிடும் தொழிற்சாலை வந்த பின்பும் சிறிது காலம் நன்றாகத்தான் இருந்தது. பூமியின் அடியாளத்தில் ஒளிந்திருக்கும் சூதாடிகள் யார்? இடைவிடாது சுரக்கும் காமதேனுவின் காம்புகளில் லேசான மஞ்சள் கலரில் வழிய ஆரம்பித்தது. நீரோட்டங்களைக் கற்பழித்துக் கொண்டிருக்கும் அரக்கன் யாரெனத் தெரியவில்லை. குளிப்பவர்களுக்கு முதலில் லேசான அரிப்பு ஏற்பட்டது. வடியும் நீர்த்துளிகளில் நுரையோடு கூடிய மூத்திர நிறம் அதிகரிக்க, துர்நாற்றம் எழுந்தது..."*** [சு.வே.பூமிக்குள் ஓடுகிறது நதி (சி.தொ), ப.30].

மிகுந்த செழிப்புடனும் எழில் கொஞ்சும் இயற்கை வளத்துடனும் இருந்த கிராமம், தோல் பதனிடும் தொழிற்சாலையின் வருகையால் சாக்கடையாக மாறிய அவலநிலையினை 'உற்பத்தி' என்னும் சிறுகதையின் வழி ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கொண்டு வரப்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகள், அங்கு வேலை பார்ப்பவர்களை எப்படி பாதித்தது என்பதை ஆசிரியர் சு.வேணுகோபால் அவர்கள் தனது 'பதனிட்ட பிஞ்சுக்கரங்கள்' என்னும் சிறுகதையின் வாயிலாக எடுத்துரைக்கிறார். இதனை,

***"லாரி வந்தால் பெரும்பாலும் சிவசாமி தன் குஷ்டரோகக்கைகளைக் காண்பித்து, 'பசங்களா இந்த வேலைக்குப் போகாதீங்க. என்னமாதிரி விரலெல்லாம் உதுந்து மொட்டையாகிடும்' என்று கத்துவான்"*** [சு.வே.பூமிக்குள் ஓடுகிறது நதி (சி.தொ), ப.93] என்கிற வரிகளால் மனிதன் இரசாயனக் கழிவுகளால் தோல் நோயினால் பாதிக்கப்பட்ட அவலநிலையை எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் தன்னுடைய தேவைகளைக்கூடத்

தன்னால் செய்து கொள்ள இயலாத அவல நிலையையும் பதிவு செய்துள்ளார்.

### இயற்கையின் இரத்தத்தில் குளிர்பானம்

விவசாயத்திற்குத் தேவையான நீரை மட்டும் எடுத்துப் பயன்படுத்தியபோது பெருமளவில் நீர்த்தட்டுப்பாடோ, வறட்சியோ ஏதும் ஏற்படவில்லை. உறிஞ்சிய நீரை சுவையேற்றி, பாட்டில்களில் நிரப்பி விதவிதமான குளிர்பானங்களாக வெளியில் விற்கத் தொடங்கிய போதுதான் இயற்கையின் இரத்தம் உறிஞ்சப்பட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.

***"ஓராண்டுக்கு முன் ஒரு மாத இடைவெளியில் டக்டக்கென்று தண்ணீர் கீழிறங்கி வறண்டுவிட்டது. திரிவேணி ஓடைக்கு வடக்கால் கோககோலா கம்பெனி வந்த பிறகுதான் சுத்து வட்டாரக் கிணறுகள் எல்லாம் காய்ந்து போய்விட்டன"*** [சு.வே., வெண்ணிலை (சி.தொ), ப.10] என்னும் வரிகளின் வழி, பூமித்தாய் தன்னுடைய குழந்தைகளுக்கு பாலமுதாகத் தந்த நீர் போதாதென்று அவளுடைய இரத்தத்தையும் சேர்த்து உறிஞ்சி விற்கும் அவலநிலையினை ஆசிரியர் 'உயிர்ச்சுனை' என்னும் சிறுகதையில் படம்பிடித்துக் காட்டுகிறார்.

அத்தோடு மட்டுமின்றி இத்தகைய தொழிற்சாலைகள் அதிகளவில் நீரை உறிஞ்சியதனால் ஆயிரம் அடிகளுக்கும் அதிகமான ஆழம் சென்றும் ஆழ்துளைக் கிணறுகளில் நீர் இல்லாமல் வற்றி நிற்கும் வறட்சி நிலையினை 'கார் காலம்' என்னும் சிறுகதையில் இடம்பெறச் செய்துள்ளார்.

***"ரொம்ப நாளாகவே இந்த சவுரி மரத்தோட்டம் தரிசாகவே கிடக்கிறது. ஆழ்குழாயில் தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. தண்ணீர் பூமிக்கடியில் வாய்த்தால்தான்"***[7] [சு.வே., தாயுமானவள் (சி.தொ), ப.146] என்கிற வரிகளின் வாயிலாக இயற்கையாகச் செழித்துக் கிடந்த நிலங்கள் ஆழ்துளைக் கிணறுகளின் வழியாக நீர் உறிஞ்சப்பட்டு வறண்டு போனதால் பூமி மலடாகிப் போன காட்சியைப் பதிவு செய்துள்ளதை அறியமுடிகின்றது.

### இயற்கை வளங்கள் சுரண்டப்படுதல்

பூமிக்கு அடியில் இயற்கையை அழித்ததோடு மட்டுமின்றி அதன் மேற்பரப்பிலும் காடுகளை அழித்தல், மரங்களை வெட்டுதல், நீர்நிலைகளை மாசுபடுத்துதல் மற்றும் அவற்றிலுள்ள மணலை அள்ளி எடுத்து ஓடைகளில் வறட்சியை உண்டாக்குதல் எனப் பல்வேறு விதங்களிலும் நாம் இயற்கையை அழித்து வருகிறோம்.

நூல் ஆலைகளுக்காக காடுகள் அழிக்கப்பட்ட செய்தியினை, ***"ஜின்னிங் பேக்டரி வந்த பிறகு வனம் பின்னகர்ந்து பின்னகர்ந்து குரவன் கரடைத் தொட்டது. எங்கு பார்த்தாலும் ஜின்னிங் பேக்டரி. மேலே மொட்டையடித்து முடியவும், இப்போது கீழே..."*** [சு.வே., உருமால்கட்டு (சி.தொ), ப.13] என்கிற வரிகள் மூலமாகவும்,

ஆற்றுப்படுகைகளில் நீரை நிலைநிறுத்தி வைத்த மணலைச் சுரண்டி எடுத்து நீர்வளத்தை இல்லாமல் செய்த செய்தியினை, ***"ஓடையில் வெள்ளம் போனால் கிணற்றில் நீர் ததும்பும். இப்போது, ஒரு சொட்டுகூட நீர் சொட்டுவதில்லை. டவுனுக்கு லாரி லாரியாக இங்கிருந்துதான் மணலை அள்ளிக் கொண்டு போனார்கள். இப்போது ஓடை இருபதடி பள்ளத்தில் கிடக்கிறது"*** [சு.வே., உருமால்கட்டு (சி.தொ), ப.14] என்கின்ற வரிகள் மூலமாகவும் இயற்கையின் வளங்கள் சுரண்டப்பட்ட நிலையினை ஆசிரியர் தனது 'உயிர்ச்சுனை' என்னும் சிறுகதையின் மூலம் அறிவுறுத்துகிறார்.

### வறட்சி

இயற்கை அன்னையின் இறுதி நாட்கள் எண்ணப்படுவதன் அடையாளமே வறட்சி என்னும் நிலையாகும். அத்தகைய ஒரு வறட்சி நிலையில், ஒரு விவசாயி வளர்க்கின்ற லட்சுமி என்னும் பெயர் கொண்ட சினைமாடு பட்டதுன்பங்கள் குறித்தும் அதற்கு உணவிட

அந்த ஏழை விவசாயி பட்டதுயரங்கள் குறித்தும் ஆசிரியர் 'புத்துயிர்ப்பு' என்னும் சிறுகதையில்,

***"கொட்டத்திற்குள் சைக்கிள் சத்தத்தைக் கேட்டு லட்சுமி திரும்பிப் பார்த்தது. நிறைசினைப் பசு அவனைப் பார்த்ததும் நாக்கை நீட்டி சப்புக் கொட்டியது. கேரியரில் சொருகி இருந்த காய்ந்த ஒருபிடி புல்லை எடுத்து வந்து நீட்டினான். நாக்கில் வளைத்து ஒரே வாயில் மென்றது. காடியில் ஒரு பொட்டுத் தீவனமில்லை"*** [சு.வே., உருமால்கட்டு (சி.தொ), ப.143] என்னும் வரிகளில் உணவுத் தேவை மனிதர்களுக்கு மட்டுமல்ல. ஆடு, மாடு முதலான அனைத்து உயிர்களுக்கும் இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளதைக் குறிப்பிடுகிறார். காடுகளை அழித்துக் கட்டிடங்களை எழுப்புவதன் வாயிலாக பசுமையாக இருந்த புல்தரைகளெல்லாம் கான்ங்ரீட் தளங்களாக மாற்றப்பட்டு வரும் சூழல் ஏற்பட்டுள்ளது.

மனிதன் உணவுக்காக வெறும் மருந்துகளையும் மாத்திரைகளையும் உண்டு வாழும் கொடுமையான காலம் வந்துவிடுமோ? என்ற ஐயப்பாடு அனைவர் மனதிலும்எழத் தொடங்கியுள்ளது. உணவின்றி கால்நடைகள் இன்று தெருவின் ஓரங்களிலும், சாலைகளிலும் கிடக்கும் காகிதங்கள், குப்பை கூலங்கள் போன்றவற்றை உண்டு வருவதைக் கண்கூடாக நாம் காண்கிறோம். இத்தகைய அவலநிலை ஏற்பட நாம் இயற்கையை அழித்து வருவதே காரணம். எனவே, அனைவரும் இயற்கையைக் காப்பது குறித்தான விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

## முடிவுரை

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்கிறது மணிமேகலைக் காப்பியம். அவ்வகையில் நோக்கினால் உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் உணவு கொடுத்து வாழ வைப்பது இயற்கையே ஆகும். ஆனால் நாம் இயற்கையைப் பாதுகாக்காமல், நம்முடைய ஆடம்பரத் தேவைகளுக்காக அதனுடைய வளங்களை சுரண்டுவதோடு மாசுபடுத்தவும் செய்கிறோம். இந்நிலை நீடித்தால் இந்த பூமியில் எந்தவொரு உயிரும் வாழ முடியாத நிலை ஏற்பட்டுவிடும். எனவே இயற்கையைக் காப்பாற்றி அது இழந்து கொண்டிருக்கும் வளத்தையும், உயிர்களின் ஆரோக்கியத்தையும் பெறச் செய்வோம், மனித சமுதாயத்தின் நல்வாழ்விற்கும் வழி செய்வோம் என்னும் அறக்கருத்துக்களை முன் வைத்து இயற்கையைப் பாதுகாப்பது குறித்தான விழிப்புணர்வை சு.வேணுகோபால் அவர்களின் சிறுகதைகள் மக்கள் மனதில் ஏற்படுத்துவதாக அமைவதை இக்கட்டுரை எடுத்துக் காட்டியுள்ளது.

## தொகுப்புரை

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதன், தன்னுடைய படைப்புகளிலும் அதனை வெளிக்காட்டினான். இயற்கையானது மனிதனின் மனதில் உள்ளெழுச்சியை ஏற்படுத்தி அவனைக் கவிஞனாக்கியது.

தற்காலத்தில் இயற்கையின் நிலையினை எடுத்துக்கூறும் வகையில் இலக்கியங்கள் இயற்றப்படுகின்றன. அவ்வகையில் சு.வேணுகோபால் அவர்களும் வறட்சி, வளங்கள் சுரண்டப்படுதல், உணவுப் பற்றாமை முதலான பல்வேறு இயற்கையின் அழிவுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

பிள்ளையின் பசிதீர்க்க பாலமுது கொடுத்த தாயின் இரத்தத்தையும் சேர்த்து உறிஞ்சிய கதையாக மனிதன், இயற்கை அன்னையின் வளங்களை தன்னுடைய ஆடம்பரத் தேவைகளுக்காக அளவிற்கு அதிகமாக சுரண்டினான். அத்தோடு மட்டுமின்றி உயிருக்கு ஆபத்தான, கேடு தரக்கூடிய இரசாயனங்களாலும் கழிவுகளாலும் இயற்கையை மாசுபடுத்துகிறான். இவற்றால் இயற்கை தனது பொழிவினை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறது.

இயற்கையின் இத்தகைய தற்கால நிலையினை மக்களிடம் சுட்டிக்காட்டி, மக்களின் மனதில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இக்காலத்தில் தோன்றும் இலக்கியங்களும்

எழுதப்படுகின்றன. எனவே மக்கள் இயற்கையின் நிலையறிந்து விழிப்புணர்வுடன் இருந்து அதனைப் பாதுகாக்க வேண்டும்.

**நூற்பட்டியல்**


1. குருசாமி, சோ.,… இலக்கியங்களில் இயற்கை அறிவுப் பதிப்பகம், முதல்பதிப்பு, டிசம்பர் - 2012, சென்னை.
2. சீனிச்சாமி, துரை., … இலக்கியத்தில் இயற்கை, அருசா பதிப்பகம், முதற்பதிப்பு, அக்டோபர் - 1977, மதுரை - 1.
3. வேணுகோபால், சு., … பூமிக்குள் ஓடுகிறது நதி (சி.தொ), தமிழினி, மூன்றாம் பதிப்பு - 2021, சென்னை - 51.
4. வேணுகோபால், சு., … வெண்ணிலை (சி.தொ), தமிழினி, மூன்றாம் பதிப்பு - 2017, சென்னை - 51.
5. வேணுகோபால், சு., … தாயுமானவள் (சி.தொ), தமிழினி, முதல் பதிப்பு - ஜனவரி 2020, சென்னை - 51.
6. வேணுகோபால், சு., … உருமால்கட்டு (சி.தொ), பவித்ரா பதிப்பகம், முதல் பதிப்பு - செப்டம்பர் 2018, கோவை.

# அழகின் சிரிப்பில் இயற்கை

**முனைவர் ஜே. மார்க்ரெட்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி*

## முன்னுரை

பாரதிதாசனின் ‘அழகின் சிரிப்பு’ என்ற படைப்பு தமிழிலக்கியத்தில் அழகு செய்யும் பாடல்களைக் கொண்டது. எல்லாம் இயற்கையின் அழகைப் பாடுவனவே: இயற்கையை அதன் அழகுவிருந்து பற்றியே போற்றிப் பாடும் தமிழ்ப் பாடல்களில் இவற்றிற்கு இணையானவை இல்லை எனலாம்.

**நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்**
**நல்லழகுவசப்பட்டால் துன்பம் இல்லை**

என்ற கவிஞரின் இக்கருத்தோட்டமே அவரது அழகின் சிரிப்பின் உள்ளோட்டம் எனலாம்.

## அழகின் களிநடம்

“இயற்கை அனைத்தும் அழகே. அந்த அழகு செந்தாமரை என்றும் நிலவென்றும், கதிரென்றும் சிரித்தது” என எடுத்துரைக்கின்றார் கவிஞர். அழகை தமிழ் மகளாக புனைவு செய்து, காலையிளம் பருதி, கடற்பரப்பு, ஒளிப்புனல், சோலை, மலர், தளிர், சுடர், கிளை, கிளி இவைகளில் எல்லாம் ஒளிருவதைக் குறிப்பிடுகின்றார். தொடர்ந்து அழகு எங்கும் நிறைந்து களிநடம் புரியும் காட்சியை,

**சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்**
**திருவிளக்கிற் சிரிக்கின்றாள்**
**பசையுள்ள பொருளிலெல்லாம் பசையவள் காண்**
**பழமையினால் சாகாத இளையவள் காண்!**

**(அழகின் சிரிப்பு- அழகு 2)**

சாகாவரம் பெற்ற அழகு மகளை அடையாளம் காட்டுகின்றார் கவிஞர்.

## வியப்புத் தோரணை

பாரதிதாசன் இயற்கையில் ஈடுபட்டுப் பாடும் போதுபெரிதும் வியப்புத் தோரணையில் தம் பாடல்களை அமைக்கின்றார். கடலாயினும், காற்றாயினும், கிளியாயினும் அழகின் எழுச்சியில் வியப்புணர்ச்சி கொள்கிறார்.

**எழுந்தது செங்கதிர் தான்**
**கடல்மிசை அடடா எங்கும்**
**விழுந்தது தங்கத் தூற்றல்**

**(அழகின் சிரிப்பு– கடல் 4)**

என்று கடலைக் கதிரோன் சமைக்கும் கோலங்கண்டு வியப்பவர், தென்றலின் ஆற்றலைக் கண்ணுற்று,

**திண்குன்றைத் தூள் தூளாகச்**
**செய்யினும் செய்வாய் நீஓர்**
**துண்துளிஅனிச்சப் பூவும்**
**நோகாது நுழைந்தும் செல்வாய்**

**(அழகின் சிரிப்பு–தென்றல் 1)**

என்று திறனுரைத்து நிற்பதைக் காணலாம்.

## இன்பம் பருகுதல்

புலன்களால் இயற்கையின் அழகை முகந்து இன்பம் பருகுதல் பாரதிதாசன் பாடற் பண்பாகும் ஐம்புலன்களுக்கும் ஆராஅமுதாக இயற்கை அமைவதை தெளிவாகக் காட்டும். செந்தாமரையின் அழகில் இன்பம் பருகும் என்பதை,

**என்னை நான் இழந்தேன் இன்ப**
**உலகத்தில் வாழலுற்றேன்**

**(அழகின் சிரிப்பு–செந்தாமரை 10)**

பொன்துகள் புதுமணபூக்களின் தெவிட்டாத எழிலில் மயங்கிநிற்பதையும் உணரலாம்.

## நடப்பியல் பார்வை

பாரதிதாசன் இயற்கைக் கவிஞராகப் பாடும்போது, இயற்கையை நடப்பியல் பார்வையில் அணுகமுயன்று வெற்றியையும் பெற்றுள்ளார்.

**தென்னைதான் ஊஞ்சல் விண்தான்**
**திருவுலாவீதி (அழகின் சிரிப்பு–கிளி 6)**

என்று பாடும்போது கவிஞரின் நடப்பியல் பார்வைநயம் சிறக்கின்றது. திருநாட்டை வையமாகக் கொண்டு புன்னைக்காய் தலையில் செம்மை முடி புனைந்துபறக்கும் கிளியில் அவரது பார்வை பதிந்து சிறக்கின்றதை அறியலாம்.

### புனைவியல் பாங்கு

புனைவியல் பாங்கிலும் புரட்சிக்கவிஞர் இயற்கையின் அழகுக்கு அழகு செய்து புரட்சி செய்தி நிற்கின்றார். ஒரு கற்பனைக் காட்சி, கோழியைத் துரத்தியசேவல் தன் வாலை ஆட்டியதாம். அதனால் கொசுக்கள் அடிபட்டு ஒரே கூட்டமாய் மேகம் போல் மொய்த்தனவாம். மேகமோ என அங்கிருந்த மயில்கள் தொகைவிரிக்க, அதனால் தேனடையிலிருந்து தேன் வழிய, தேனைக் குடிக்க வந்த கரடிமயிலை வாழ்த்திய தாம். மயிலுக்குக் கரடி வாழ்த்துக் கூறும் இந்த கற்பனைக் காட்சியை,

**மகிழ்ந்துநான் ஏகும் போதில்**
**காடுதன் மயிலைஏவி**
**அகவலால் வரவேற் பொன்றை**
**அனுப்பிற்றுகொன்றைக் காய்க்கு**
**நிகரானவாலைஆட்டிக்**
**காரெலிநின்றுநின்று**
**நகர்ந்தது கூடச் சென்றேன்**
**நற்பாதைகாட்டும் என்றே**
**(அழகின் சிரிப்புகாடு 9)**

### உருவகம்

இயற்கையை உருவகப்படுத்தும் நெறியையும் கவிஞர் உவந்து ஏற்றுள்ளார். சந்திரச் சேவல் நாற்றிசையும் கூறிநல்லொளிப் பாய்ச்சி விண்மீன் குஞ்சுகளைக் காத்து பூனையிருட்டை வெளுத்தும் தள்ளும் உருவகக் காட்சியை சித்தரிக்கின்றார்.

**நீலமுக் காட்டுக் காரி**
**நிலாப்பெண்ணாள் வற்றக் காய்ந்த**
**பாலிலேஉறைமோர் ஊற்றிப்**
**பருமத்தால் கடைந்துபானை**
**மேலுற்றவெண்ணெய் அள்ளிக்**
**குன்றின் மேல் வீசிவிட்டாள்**
**ஏழுமட்டுந்தோழாநீ**
**எடுத்துண்பாய் எழிலைஎல்லாம்**
**(அழகின் சிரிப்புகுன்றம் 9)**

நிலவை உருவகப்படுத்தி கூறுகின்றார்.

### உவமை

மரபு வழி உவமைகளை நயமுறப் பயன்படுத்தும் ஆற்றலும், புதுவகை உவமைகளைப் படைத்துக் காட்டும் ஆற்றல் படைத்தவர் கவிஞர். அழகின் சிரிப்பில் ஆங்காங்கே உவமைத்திறன் மிளிர்ந்து விளங்குகின்றது.

**பெருங்கடல் ஓரமெல்லாம்**
**கீரியின் உடல் வண்ணம் போலப்**
**மணல் மெத்தைஅம்மெத்தைமேல்**
**நேரிடும் அலையோகல்வி**
**நிலையத்தின் இளைஞர் போலப்**
**பூரிப்பால் ஏறும் வீழும்**
**(அழகின் சிரிப்பு கடல்1)**

என்று கூறி, மணல் மெத்தைக்கும், கடலலைகளுக்கும் புது உவமைகளை அளிக்கின்றார். சிற்றூரில் மந்தையின் அருகில் இருபக்கத்திலும் அமையும் சோளக் கொல்லையினை,

**கொந்திடும் அணிலின் வால்போல்**
**குலைமுத்துச் சோளக் கொல்லை**

புதுமைநயம்பட, உவமைப் பொருள் சிறக்கபடைத்துக் காட்டுகின்றார்.

### கற்பனை

இயற்கைப் பொருட்களோடு கற்பனை உரையாடல் நிகழ்ந்துவதன் மூலம், நெருக்கமான இயற்கைப் பாசத்தை வெளிக்கொணருகிறார் கவிஞர். வழியோடு வந்த காற்று வழக்கம்போல் இன்பத்தை அளித்ததோடல்லாமல், எழுதிய நாட்களைக் குறும்புடன் கிளப்பிச் சென்றது. கவிஞர் உரையாடலின் மூலம் தென்றலோடு உறவாடுகின்றார்.

**எழுதியதாளைநீஏன்**
**கிளப்பினைஎன்று**
**புழுதியைத் துடைத்தேன்**
**(அழகின் சிரிப்புதென்றல் 8)**

எங்கு செல்கின்றாய் என்று பரிதியை கவிஞர் ஒருநாள் கேட்க, அவன் கங்குலை ஒழிக்க என பதிலிறுத்தான். இந்தச் செய்தியை இருளிடத்தில் உரையாடும் கவிஞர், நிகழ்ச்சியைக் கூறி

**அங்குன்னைதொடர்ந்தான் நீயோ**
**அகல்வதாய் நினைத்தான் என்னே**
**எங்கனும் நிறைந்தநீர் நீ**
**அதில் கதிர் சுழல் வண்டன்றோ! நீ**
**(அழகின் சிரிப்பு இருள் 3)**

என இருளின் மாட்சியையும் போற்றிக் கூறுகின்றார்.

### தமிழ் அழகு

தமிழுணர்ச்சிமிக்கவர் பாரதிதாசன் ஆதலின் தமிழையும் அழகாகவே கொண்டு, தமிழுக்கும் பத்துப் பாடல்களைக் காணிக்கையாக்குகிறார். இயற்கைப் பொருட்களிலும் தனது தாய்மொழியாம் தமிழை உயிர் மொழியாகக் காண்பவர் புரட்சிக் கவிஞர், ஆதலால் தென்றலைப் பாடி, பயனை அறிவுறுத்தும் போது,

**கமழ்கின்றசந்தனங்கள்**
**சமைக்கின்றபொதிகைஅன்னை**
**உனைத் தந்தாள் தமிழைத் தந்தாள்**
**(அழகின் சிரிப்புதென்றல் 9)**

எனப்பாடி தமிழ் அழகை காட்டுகின்றார். செந்தாமரையில் தேன் பற்றிப் பாடும்போது, தமிழ்நயம் சிறக்க,

**தேடியதமிழுணர்வைத்**
**தின்னவேபலர்க்கும் தந்து**
**வாடாதபுலவர் போலவோ**
**அரும்பின் மலர்ந்தபூக்கள்**
**(அழகின் சிரிப்புசெந்தாமரை 8)**

என இதயம் பூரித்துபாடுகின்றார். தமிழுணர்வில் ஒன்றிதிளைத்துப்பாடும் போது,

**அளபிலாஉவகைஆடல்**
**தமிழேநீஎன்றன் ஆவி**

என்றுதமிழில் இணைந்தும்,

**கன்னர் பொருள்தரும் தமிழேநீஓர்**
**பூக்காடுநானோர் தும்பி**
**(அழகின் சிரிப்புதமிழ் 10)**

என்று தமிழோடு உறவாடியும் அழகின் சிரிப்பை முடிகின்றார்.

### முடிவுரை

பாரதிதாசனின் அழகின் இயற்கை வளமிக்க படைப்பாகும். அழகுகளிடம் புரியும் இடங்கள் கவித்திறனோடு எடுத்துரைக்கப்படுகின்றன. அப்பாடல்கள் வியப்புத் தோரணையில் புனையப்பட்டுள்ளன. இன்பம் பருகல் என்பதே கவிதைக்குப் புலனாகின்றது. நடப்பியல் பார்வையும், புனைவியல் பாங்கும் கவிதைக்கு வளம் சேர்க்கின்றன. உருவக, உவமை நயத்தாலும் கவிதைவனப்புமிகுகின்றது. கற்பனை உரையாடல்கள் இயற்கையிடம் கவிஞரின் நெருக்கத்தை உணர்த்துகின்றன. கவிஞரின் தமிழ் அழகு இயற்கையைப் பாடும்போதுமெய் சிலிர்க்க வைக்கின்றது. இச்செய்திகளால் பாரதிதாசனின் கவிதை வளமும், இயற்கை வனப்பும் போற்றத்தக்கவை என்பது புலனாகும்.

### துணை நூற்பட்டியல்

1. பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், முதற்பதிப்பு 2016.
2. கமலா முருகன், அழகின் சிரிப்பு மூலமும் உரையும், பாவை பதிப்பகம் முதற்பதிப்பு 2006.

# ஐங்குறுநூற்றில் இயற்கை நிகழ்வுகள்

**கோ. செ. ஷீலாபெனடிட்**
*உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை,*
*விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்*

***ஆய்வுச் சுருக்கம்***
*பழந்தமிழ் இலக்கியங்களில் தமிழ் மக்களின் வாழ்வியல் முறைகள் பற்றி சொல்லப்பட்டுள்ளது. சங்ககா லமக்கள் இயற்கையைப் போற்றிப் பாதுகாத்ததோடு நில்லாமல் பேணும் முறையையும் உலகிற்குக் கற்றுக் கொடுத்துள்ளனர். ஐந்குறுநூற்றுப் பாடல்களில் சங்ககால மக்களின் அன்றாட வாழ்க்கையில் பின்னிப்பிணைந்த எண்ணிலடங்கா இயற்கை வளங்கள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## முன்னுரை

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்கள் தமிழர்களின் பண்பாட்டுக் களஞ்சியமாகத் திகழ்கிறது. சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். அவர்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த வாழ்வியல் முறைகளை ஐங்குறுநூற்றுப் புலவர்கள் பல பாடல்கள் வாயிலாக மிக அழகாக எடுத்துக்காட்டி உள்ளனர். அதன் சிறப்பை இங்குக் காணலாம்.

## இயற்கை வளம்

இயற்கை வளங்கள் சுற்றுச்சூழலில் இருந்து கிடைப்பதாகும். இவற்றில் பெரும்பான்மை நம் தேவைகளுக்குப் பயன்படக்கூடியவைகளாக காணப்படுகின்றன. இயற்கையில் காணப்படுவதும் மனித குலத்திற்குப் பயன்படுவதுமான நீர் நிலைகளுள் சுனையும் ஒரு வகையாகும். சுனைகள் மலைப்பகுதிகளில் வாழ்ந்த விலங்கினங்களுக்கு நீராதாரமாக விளங்கியுள்ளது. இது மலைப்பகுதியின் வளத்தை வெளிப்படுத்துகிறது.

## ஐந்திணை அமைப்பு

சங்க இலக்கியம் உணர்த்தும் மக்களின் வாழ்க்கைமுறை நில அடிப்படையிலேயே அமைந்துள்ளது. ஆனால் சங்கத்தமிழர் இயற்கையோடு இயைந்த நிலப்பகுதியைக் கண்டுவியப்புற்றனர். அந்நிலப்பகுதியின் இயல்பை,

***"மாயோன்மேய காடுறையுலகமுஞ்***
***சேயோன் மேயமை வரையுலகமும்***
***வேந்தன் மேய தீம்புனலுலகமும்***
***முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்***
***சொல்லிய முறையார் சொல்லவும் படுமே"[1]***

என்று தொல்காப்பியர் பாகுபடுத்தியுள்ளார். இவ்வாறு மக்கள் வாழும் சூழலுக்கு ஏற்ற நிலப்பகுதிகளை "நானிலம்" என்று உலகிற்கு உணர்த்தினார் பழந்தமிழர். மேலும் பருவ மாறுபாட்டினால் குறிஞ்சியும் முல்லையும் வளம் குறைந்து பாலை தோன்றியது என்பதை,

***"முல்லையும் குறிஞ்சியும் முறையின் திரிந்து***
***நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உற்றுப்***
***பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"[2]***

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இயற்கைச் சூழலோடு அமைந்த நிலப்பரப்புகளுக்கு மேலும் அழகு சேர்ப்பதாக கருப்பொருட்கள் காணப்படுகின்றன. இதைத் தொல்காப்பியர்,

***"தெய்வம் உணவே மாமரம்புட்பறை***
***செய்தியாழின் பகுதியொடு தொகைஇ"[3]***

என்று குறிப்பிடுகிறார். இதன் அடிப்படையிலேயே ஒவ்வொரு திணை மக்களும் தங்களின் உணவு உறைவிடம். தொழில் தெய்வ வழிபாடு பழக்கவழக்கங்கள் போன்றவற்றை இயற்கைச் சூழலோடு அமைத்துக் கொண்டனர்.

## மருத நிலம்

ஆகாயத்தில் இருந்து மழைத்துளி விழுந்தால் தான் பூமியில் பசும் புற்கள் தழைத்து வளரும் என்பதை,

***"விசும்பின் துளிவீழின அல்லால் மற்று ஆங்கே***
***பசும்புல் தலை காண்பு அரிது"[4]***

என்கிறார் வள்ளுவர். அதற்கு ஏற்ப நீர்வளம் மிகுந்த பகுதியாக மருதநிலம் காணப்பபட்டது.

இந்நிலத்தின் முக்கிய தொழில் வேளாண்மை. இது மற்ற நிலங்களைக்காட்டிலும் செல்வ வளத்தில் சிறந்து விளங்கியது. வண்ண மலர்கள், முதலை, மீன் போன்ற உயிரினங்களைக் கொண்ட குளிர்ந்த நீர்நிலைகளைக் கொண்டு விளங்கியதை,

*“பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும் தண்துறை ஊரன்*
*முதலை போத்துமுழுமீன் ஆரும் தண்டுறை ஊரன்”*[5]

போன்ற பாடலடிகள் விளக்குகின்றன.

*“இருஞ்சாய் அன்ன செருந்தியோடுவேழம்*
*கரும்பின் அலமருங்கழனி ஊரன்”*

மருத நிலத்திற்குச் சிறப்பு நெல்லும் கரும்பும் இதனை “நிலத்திற்கு அணியென்ப நெல்லும் கரும்பும்” என்று நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது.

காஞ்சி, மருது, கமுகு முதலான மரங்களும் பிரப்பங்கொடியும் மருதநிலத்திற்கு எழிலூட்டும் பசுமைக் காட்சிகளாகத் திகழ்கின்றன. எருமை, குருகு, மயில், நாரை, நண்டு போன்ற உயிரினங்களும் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது. வயல் வரப்புகளை உறைவிடமாகக் கொள்ளும் நண்டுகளின் வாழ்க்கையை,

*“அள்ளல் ஆடிய புள்ளிக் கள்வன்*
*முள்ளி வேரளைச ் செல்லும்”*[6]

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளக்காட்சியினை,

*“புனல் ஆடுமகளிர்க்குப்புணர் துணை உதவும்*
*வேடமூதூர் ஊரன்”*[7]

எனும் பாடலடி குறிப்பிடுகிறது.

## நெய்தல் திணை

கடலில் கிடைக்கும் பொருள்களைக கொண்டு நாட்டு வாணிகமும் கடல் வாணிகமும் செய்து செல்வவளத்தைப் பெருக்கும் பரதவர் வாழ்க்கையைக் கொண்டது நெய்தல் திணை. சிப்பியில் பிறக்கும் முத்தை விட சங்கில் பிறக்கும் முத்து தான் சிறந்தது. கடற்கரையில் வாழும் பரதவர்கள் தாம் கண்டெடுத்த சங்குகளில் இருந்து கிடைக்கும் முத்துக்களை ஏனைய நிலத்தில் வாழும் மக்களுக்கு விற்பனை செய்வார் என்பதை,

*“வளைபடு முத்தம் பரதவர் பகிரும்”*[8]

என்ற வரி இயற்கை வளத்தைக்காட்டுகிறது.

புன்னை மர நிழலில் சுறா மீன்களை உணர்த்துதல் பரதவ சிறுவர்கள் படகேறிச் சென்று சுறா மீன்களையும் பிற மீன்களையும் கொண்டுவருதல், ஞாழல் மலர்களுடன் நண்டு விளையாடுதல் கடற்கரைச் சோலையில் தாழையும் புன்னையும் மலர்ந்திருத்தல் உப்பு விளைவித்தல் போன்ற இயற்கை நிகழ்வுகள் காணப்படுகின்றன.

## குறிஞ்சியில் இயற்கை

குறிஞ்சி நில மக்கள் மலைகளைத் தங்கள் வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் அமைத்திருந்த குடிசைகளை மலைகள் மறைப்பது போன்று காணப்படும். இந்நிகழ்வானது மலையின் மேல்மேகம் இறங்குவதாகும். இத்தகைய இயற்கைச்சூழல் அமைந்த மலைகளில் குறவர்கள் வாழ்ந்தனர். இதனை,

**“குன்றக்குறவன் புல்வேய்க் குரம்பை**
**மன்று ஆடு இளமழை மறைக்கும் நாடன்”**[9]

என்ற பாடல் மூலம் அறியலாம். பெரிய மலைப்பக்கத்தில் சிறுகுடி அமைந்திருந்ததை,

*“குன்றகத்ததுவே குழிமிளைச் சிறூர்*
*எருவை நீடிய பெருவரைச் சிறுகுடி”*[10]

என்று குறிஞ்சி நிலத்தாரின் இயற்கை சார்ந்த இருப்பிடச்சூழலை நற்றிணைப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. இத்திணை மக்கள் தேனும் தினையும் உண்டு விலங்குகளை வேட்டையாடி வாழும் வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். மாவடுக்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு பயன்படுத்துவர். என்பதை,

*“நறுவடிமா அத்து மூகிறுபு உதிர்ந்த*
*ஈர்ந்தண் பெருவடு பாலையில்”*[11]

என குறிப்பிடுகிறார். உணவுப்பொருள் இல்லாத போது யானை மருப்புகளை விலைக்கு விற்று உண்பர். என குறுந்தொகை மூலம் அறிய முடிகிறது. மலையில் காணப்பட்ட சுனைநீரில் மக்கள் விளையாடி மகிழ்ந்தனர். இதனை,

*“மணிநிறங்கொண்ட மாமலை வெற்பில்*
*துணிநீர் அருவி நம்மோடு ஆடல்”*[12]

என்பதன் மூலம் அறியலாம். இவைத் தவிர ஓங்கி வளர்ந்த மரங்களும், செடி கொடிகளும், பறவைகளும், விலங்குகளும், பல வகையான பூக்கள் என குறிஞ்சியின் இயற்கை அழகு சிறப்புடையதாகும்.

### முல்லையின் இயற்கைச்சூழல்

பல் வகை மரம் செடி கொடிகளோடு அடர்ந்த காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லையாகும். இங்கு முல்லை, தோன்றி, காயா, பிடவம் போன்ற மலர்கள் கானகம் அழகுறக் காட்சியளிக்கிறது என்று கானகத்தின் செழிப்பை முல்லைத் திணைப்பாட்டு குறிப்பிடுகின்றது.

> ***"காயா கொன்றை நெய்தல் முல்லை***
> ***போதவிழ் தளவொடுபிட வலர்ந்துகவினிப்***
> ***பூவணி கொண்டன்றால் புறவே"***[13]

முல்லை நிலம் மழை வளம் பெற்று செழித்தோங்கி இருந்தது என்பதை,

> ***"சென்னில் மருங்கின் பல் மலர்தா அய்ப்***
> ***புலம் தீர்ந்து இனிய ஆயின புறவே"***[14]

என்ற பாடல் வரி மூலம் அறியமுடிகிறது. அழகிய மலர்களின் தேனை உண்டு வண்டுகள் களித்திருந்தன. இவ்வாறு முல்லை நில இயற்கை காட்சிகள் வர்ணிக்கப்பட்டுள்ளது. மான் முயல் போன்ற விலங்கினங்களும் பலவகையான மரம் செடிகொடிகளும் முல்லை நிலத்திற்கு அழகு சேர்க்கக் கூடியதாகக் காணப்படுகிறது.

### நிறைவுரை

சங்ககால புலவர்களுக்கு இயற்கையின் மேல் இருந்த ஈடுபாடும் இயற்கையைச் செய்யுளுக்குப் பின்னணியாக அமைத்த முறையும் வியப்பைத் தருகின்றன. மானிட உணர்வுகளோடு இயற்கையின் எழிலை இயைபுறச் செய்வது பண்டைத்தமிழிலக்கியமரபாகும். அத்தகைய இயற்கையை பேணிக்காப்பது நமது கடமையாகும்.

### தொகுப்புரை

ஐங்குறுநூற்றில் நானிலத்தில் சொல்லப்பட்டுள்ள இயற்கை நிகழ்ச்சிகளை இனங்கண்டு பகுத்தும் தொகுத்தும் தரப்பட்டுள்ளது. இன்றைய சூழலில் பருவநிலை மாறிக்கொண்டே வருகிறது. ஆதலால் அடுத்த தலைமுறையினருக்கு இலக்கியங்களின் வழி இயற்கையை உணர்த்துவதோடு கால நிலைக்கு ஏற்றவாறு இயற்கையை பாதுகாக்கவும் கற்றுத் தரவேண்டும். நாமும் இயற்கையோடு இயைந்து வாழவேண்டும்.

### அடிக்குறிப்பு

1. தொல்காப்பியம், தமிழண்ணல், தொல் பொருள் எ. 951 பக்.22, செல்லப்பா பதிப்பகம் 48, தானப்ப முதலித்தெரு, மதுரை.
2. சிலம்பு காடு காண் காதை பக்.64-66.
3. மேலது, பா .964, பக் .28.
4. திருக்குறள் பா.16, பக்.5, பேராசிரியர் ப. முருகன், அறத்துப்பால் பா.16 பக் 5 பத்தாவது பதிப்பு -2009, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்.
5. ஐங்குறுநூறு, பேராசிரியர்புலவர் அ. மாணிக்கம். ஐங்குறுநூறு மருதம், பா.2, பக். 28, முதற்பதிப்பு, வர்த்தமானன் பதிப்பகம், இராமகிருஷ்ணா தெரு, தியாகராயர்நகர், சென்னை -17.
6. மேலது, பா 18 பக் 61.
7. மேலது, பா.22 பக்.70.
8. மேலது, பா 15 பக். 55.
9. மேலது.
10. நெய்தல் பா.195 பக்.362.
11. மேலது, பா.252 பக்.85.
12. நற்றிணை, புலவர் அ. மாணிக்கம், பா.95-7 பக்.182 குறிஞ்சி வர்த்தமானன் பதிப்பகம்
13. இராமகிருஷ்ணாதெரு தியாகராயர்நகர் சென்னை -17.
14. ஐங்குறுநூறு குறிஞ்சி பா.213 பக்.25.
15. மேலது, பா.412 பக்.321.
16. மேலது, பா.495 பக்.435.

# சங்க இலக்கியத்தில் மரங்கள்

**முனைவர் சு. முருகவேல்**
*தமிழ் உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி*
*தெ.கள்ளிகுளம், திருநெல்வேலி*

***ஆய்வுச்சுருக்கம்***
*காதலையும் வீரத்தையும் பாடிய சங்கப் புலவர்கள் இயற்கையோடு இணைந்த மனித வாழ்வையே பாடியுள்ளனர். மனிதன் இல்லாமல் இயற்கை வாழும். ஆனால், இயற்கை இல்லாமல் மனிதனால் வாழவே முடியாது. எனவே மனிதன் வாழ்வில் இயற்கை பெரும்பங்கு வகிப்பதனால் சங்கப் புலவர்கள் மரங்கள், செடி, கொடிகள், மலர்கள் என பற்பல தாவரங்கள் சார்ந்த பாடல்களைப் பாடியுள்ளனர். அவற்றுள் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் மரங்களைப் பற்றி ஆராய்வது இக்கட்டுரையாகும்.*

**முன்னுரை**

சங்க இலக்கியத்தின் மையம் மானிட வாழ்வே. இயற்கை அதற்கு உறுதுணையாய் இரண்டாம் இடம்பெற்றாலும், சிறப்பில் குறையாதனவாய் இருக்கிறது. சங்க இலக்கியத்தில் மனித வாழ்வுக்குப் பின்னிட்ட நிலையில் அமைந்துள்ள இயற்கைக் காட்சிகளும் சிறப்பான தகுதியுடையவனாய் இருக்கின்றதைக் காணமுடிகிறது. சங்ககாலப் புலவர்கள் உணர்ச்சிகளையும் உண்மைகளையும் தெளிவுறுத்துங்கால் இயற்கைக் காட்சிகளை வன்மைமிக்க கருவிகளாக பயன்படுத்தியுள்ளனர். அந்தவகையில் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் மரங்களைக் குறித்து ஆராய இக்கட்டுரை விழைகிறது.

**சங்க இலக்கியத்தில் இயற்கை**

சங்க இலக்கியத்தின பாடுபொருளே காதலும், வீரமும் தான். மனித உணர்வான காதலைப் பாடிய புலவர்கள் இயற்கையோடு இணைத்தே பாடியுள்ளனர். “மனித வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தது இயற்கையே. இயற்கை இன்பம் மனித உள்ளத்தை மாசன்றித் தூய்மையாக்கி மகிழ்ச்சியோடு வாழ வழிசெய்கிறது.”[1]

“பண்டையத் தமிழ்ச் சான்றோர்கள் இயற்கையைத் தனியொரு பொருளாகக் கருதிப் பாடினாரல்லர். காதல் வீரம் என்பவற்றைத் தலைமைக் கூறுகளாகக் கொண்டு பிற பல கூறுகளையும் துணையாகப் பெற்றுள்ளது மனித வாழ்க்கை. அத்தகைய மனித வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் வருணித்துத் தெளிவுபடுத்துவதற்காகவே பண்டைத் தமிழ்ச்சான்றோர் இயற்கையைப் பயன்படுத்தினர். சுருங்கச்சொன்னால், மனித இதயத்தின் உணர்வுகளையும், இயற்கையின் கவர்ச்சி நிறைந்த எழிலையும் நெருங்கிப் பிணைப்புடையவனாய் இனிய உறவுடையனவாய் இணைத்தனர் எனலாம்.”[2]

**சங்க இலக்கியத்தில் மரங்கள்**

சங்க இலக்கியத்தில் பல வகையான மரங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அம்மரங்களில் பல இன்று இல்லை. இருப்பினும் சில மரங்கள் இன்றைய காலகட்டத்திலும் வளர்க்கப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் சில மரங்களைப் பற்றி இக்கட்டுரை விரிகிறது.

**வேங்கை மரம்**

சங்க நூல்களில் வேங்கை மரம் அதிக பாடல்களில் கூறப்பட்டுள்ளது. வேங்கை இலை மிகுந்த பச்சையாக இருக்கும். மலர் மஞ்சளாக இருக்கும். “வேங்கை பூக்கும்போது அரும்பின்றி ஒரே சமயத்தில் மலரும் தன்மையுடையது என்று நற்றிணை கூறியுள்ளது.”[3]

> **“…………………….. கொல்லன்**
> **ஏறி பொன் பிதிரின் சிறுபல தாஅய்**
> **வேங்கை வீஉகும் ஓங்கு மலைக்கட்சி”[4]**

கொல்லன் தன் உலையில் ஊதும் போது வெளியே தெரிக்கும் தீப்பொறி போல, வேங்கை மரத்தின் பூக்கள் உதிருகின்றன. சங்ககால மக்களின் வாழ்வியலில் மரங்கள் இணைந்து உள்ளதை சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

**“வீததா் வேங்கைய வியல் நெடும் புறவின்**

**இம்மென் பறவை ஈண்டுகிளை இரிய”[5]**

ஓர் நாட்டின் அரசனின் போர் பெருமையினைக் கூறி அவ்வரசனின் காட்டு வனத்தினைப் பற்றியும் குறிப்பிடுகிறாா் ஆசிரியா். மிகுதியாக விளங்குகின்ற வேங்கை மரத்தினை கொண்ட அடத்தியான காட்டில் வேங்கை மரத்தின் பூக்களில் வண்டுகள் தேனை உட்கொள்ளும் பொருட்டு இம்மென்று ஒலித்துக் கொண்டு இருக்கிறது.

**சந்தன மரம்**

சந்தனமரம் சங்க நூல்களில் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளது. ‘சிறியிலை சாத்தம்’ என நற்றிணை கூறுகிறது. “மற்ற மரங்களின் இலைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது சந்தன மரத்தின் இலைகள் சிறியவைதாம்.”[6]

**“சாத்த மரத்தி பூழில் எழுபுகை**

**கூட்டு விரை கமழும் நாடன்**

**அறவற் கெவனோ நமகல் வன்னாய்?”[7]**

சந்தன மரங்கள் நிறைந்த காட்டில் சந்தனத்தின் மணம் முழுவதுமாக நிறைந்து இருக்கிறது. அவ்வாறு இருக்க அகில் கட்டையினை வெட்டி எரிக்கும் போது அகிற்புகை சந்தனத்தின் மணம் இரண்டும் சேர்ந்து மணம் வீசுகிறது. இதே போன்று தான் கணவனும் மனைவியும் இல்லற வாழ்வினை நடத்த வேண்டும் எனக் கூறுகின்றது.

**கொன்றை மரம்**

சங்கக் காலத்தில் முல்லை நிலத்துக்குரிய மரமாக கொன்றை விளங்கியது. தங்க மழை பொழிவதைப் போன்ற தோற்றத்தை உடையது.

**“பொன் கொன்றை மணிக்காயா**

**நல்புறவின் நடை முனையின்”[8]**

கொன்றை மரத்தின் பூவினைப் பொன் போன்றது எனவும் காயா மரத்தின் பூவினை நீலமணி போன்றது எனவும் பொருநராற்றுப்படை கூறுகிறது.

**மருத மரம்**

ஆற்றோரங்களிலும் வயலோரங்களிலும் செழித்து வளரக்கூடியது. பசுமையாக காட்சியளிக்கக் கூடியது. இம்மரத்தை பற்றிய குறிப்பு ஐங்குறுநூறு பாடலில் காணப்படுகிறது.

**“உளைப்பூ மருதத்துக் கிளைக்குருகிருக்கும்**

**தண்துறை யுரன் தன்னூர்க்**

**கொண்டனன் செல்க என வேட்டேமே!”[9]**

எனும் பாடலில் மருத மரத்தின் கிளையில் இருக்கும் குருகு தன் இனத்துடன் இருப்பது போல தலைவன் தலைவியும் இணைந்து இல்லறம் நடத்த வேண்டும் என்பதை உணா்த்துகிறது.

**“துறை நணி மருதம் ஏறி தெதறுமாா்**

**எல்வளை மகளிா் தெள்விளி இசைப்பின்**

**பழனக்காவில் பசுமயில் ஆலும்”[10]**

வளையல் நிறைந்த கைகளையுடையவள் மருத நில மகளிா். அவா்கள் குவளை மலரால் ஆன மாலையினை கூந்தலில் சூடி அழகுற நின்றனா். வயலின் அருகில் நீா்துறையில் மருதமரம் உள்ளது. அதில் மயில் தன் தோகையினை விரித்து அம்மரக்கிளையில் அமா்ந்திருந்தது என்னும் இயற்கை காட்சியில் மருதமரம் இடம்பெற்றதைக் காணமுடிகிறது. இம்மரத்தைக் குறித்து, “அருச்சுன மரத்தை இக்காலத்தில் பாமர மக்கள் கரு மருது வெள்ளை மருது, கலிமருது என்றழைக்கின்றனா். இதை அடிப்படையாகக் கொண்டே சென்னைப் பல்கலைக்கழக அகராதி, மருதத்திற்கு அருச்சுனம் என்று பொருள் கூறியுள்ளது. ஆனால், மணி மருது, பூமருது என்று தமிழ்நாட்டில் அருகி வழங்கும் மருதே சங்க இலக்கிய மருதம் என்பதை அவா்கள் உணரவில்லை. அருச்சுன மரத்தின் பூக்கள் அழகற்றவை. பசுமை கலந்த வெண்மையான மிகச் சிறுகிய பூக்களை உடையது. ஆனால், சங்க நூல்களில் கூறப்பட்ட மருதம், சிவந்த

பூக்களை உடையது. முடக்காஞ்சி செம்மருதின் என்று பொருநராற்றுப் படையில் கூறப்பட்டுள்ளது"[11] என்று கூறியுள்ளார் பி.எல்.சாமி.

**தாழை மரம்**

பட்டினப்பாலையில், ஒரு மீனவர் குடியிருப்பு எவ்வாறு இருக்கிறது என்பதை விளக்கும் போது தாழை மரம் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது.

> **"வால் இணர் மடல் தாழை**
> **வேல் அழிவியன் தெருவில்**
> **நல் இறைவன் பொருள் காக்கும்"[12]**

வெண்மையான பூங்கொத்துகளையும் கூர்மையான முட்களையுமுடைய மடலினையும் கொண்டது தாழை மரம். கடற்கரையின் ஓரத்தில் வளர்ந்து காணப்படுகிறது. இதன் அருகில் பரதவக் குடியிருப்புகள் அமைந்திருந்தன.

**கடப்ப மரம்**

பாலை நிலத்தின் வழியின் கொடுமையினைப் பற்றி சிறுபாணாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

> **"காலை ஞாயிற்று கதிர் கடாவுறுப்ப**
> **பாலை நின்ற பாலை நெடுவழிச்**
> **சுரன் முதல் மரா அத்த வரி நிழல் அசைஇ"[13]**

பாலை நிலத்தின் வெம்மையால் பாலை வழியில் இருக்கும் பரற்கற்கள் வழியில் நடந்து செல்வோரின் காலில் கிழிக்கின்றன. அங்குள்ள கடப்ப மரம் கிளைகள் இல்லாத மரமாக காட்சி அளிக்கின்றன. அந்நிழலில் சிறுபாணனின் குடும்பம் தங்கி இருக்கிறார்கள் என்னும் காட்சியை விவரிக்கும் பாடலில் கடப்பமரம் இடம்பெறுவதை அறியமுடிகிறது.

**வாகை மரம்**

வாகைமரம் வறட்சியான இலையுதிர்க் காடுகளில் மிகுதியாகக் காணப்படுகின்றது. இதன் பூவில் இளம்பச்சை நிறமுள்ள மகரந்தத் தாள்கள் கம்பிபோல நீண்டு குஞ்சமாகக் காணப்படும். வாகையின் பூவை மயில் தலையில் உள்ள உச்சி இறகு மயிருக்கு ஒப்பிட்டு 'வாகை ஒண் பூ புரையு முச்சிய தோகை' என்று குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது.

> **"அகழ் சூழ் பயம்பின் அகத்து ஒளித்து ஒடுக்கி,**
> **புகழா வாகைப் பூவின் அன்ன"[14]**

பன்றிகள் இரவில் குளங்களை நோக்கி நீர்ப் பருக வரும்போது கானவர்கள் குழியினைத் தோண்டி அதனின் மேல் வாகை மரத்தின் அருகில் ஒளிந்து கொள்வார்கள் என்று பெரும்பாணாற்றுப்படையில் பாடியுள்ளார் சங்கப்புலவர்.

**யா மரம்**

பாலை நிலத்தின் வெம்மையால் யானையின் நீர் வேட்கையினைப் போக்க யாமரத்தின் பட்டையினைக் கிழித்து அதிலிருக்கும் நீரினைத் தன்னுடைய பெடைக்குக் கொடுக்கும் என்கிறது குறுந்தொகை.

> **"பிடிகளை இய பெருங்கை வேழம்**
> **மென் சினை யாஅம் பொளிக்கும்"[15]**

தலைவன் தலைவியின் இல்வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் விதமாக இப்பாடல் அமைகிறது.

**புன்னை மரம்**

சங்கப் புலவர்களில் புன்னைமரத்தைப் பற்றியும் அதன் இருள்நிற நீழல் பற்றியும் பலபட விரிவாகப் பாடியவர் உலோச்சனாரே ஆவார். பல பாடல்களில் புன்னை மர ஓவியங்களைத் தீட்டியுள்ளார். கடற்கரையின் வெண்மணற் குவை மீது பொலிவு பெறத் தோற்றமளிக்கும் புன்னை மரத்தின் இனிய நிழல் தம் உள்ளத்தைக் கவர்கின்றது. இவ்வோவியத்தை அவர் தீட்டிக் காட்டும்போது மணற்பரப்பின் தூய வெண்ணிறமும், புன்னைமரத்தின் கீழ் உள்ள நிழலின் கருமையும் நம் உள்ளத்தே ஒருவகை முரண் நயத்தைத் தோற்றுவிக்கின்றன.

> **"எக்கர்ப் புன்னை இன்னிழல்...**
> **நிலவுமணல்"[16]**
> **"கானல் நண்ணிய வார்மணல் முன்றில்**
> **எல்லி அன்ன இருள்நிறப் புன்னை"[17]**

எப்போதும் புதுமை மாறாத் தூய்மையுடையதாய்ப் பொலியும் மணற்பரப்பின் மீது புன்னையின் பொன்னிற மகரந்தப்பொடி உதிர்ந்து கிடப்பது அழகான காட்சி. அவ்வழகிய காட்சிக்குக் காரணமான மகரந்தப்பொடி கீழ்க்காற்றினால் அடித்துச் செல்லப்பட்டு ஆங்கிருந்த நாரையின் வெண்புறத்தை மறைக்கும் காட்சியைக் கீழ்க்கண்ட பாடல் விவரிக்கின்றது.

**"புதுமணற் கானல் புன்னை நுண் தாது**
**கொண்டல் அசைவளி தூக்குதொறும் குருகின்**
**வெண்புறம் மொசிய வார்க்கும்"[18]**

### இலவ மரம்

கோடைக்காலத்தில் இலவமரத்தின் இலை ஒன்று கூட இல்லை. இலை இல்லையே தவிர, மரம் நிறைய மலர் விரிந்துள்ளது. செந்நிறப் பூக்கள் மலர்ந்துள்ள இலவமரங்களின் சூழல்பெற்ற மலையைத் தொலைவிலிருந்து பார்க்கிறார் புலவர். காட்டுத் தீப் பற்றிப் பரவத் தொடங்கியிருப்பது போல் உள்ளதாக காட்சிப்படுத்துகிறார்.

**"இலையில மலர்ந்த ஓங்குநிலை இலவம்**
**மலையுறு தீயின் சுரமுதல் தோன்றும்"[19]**

விரைவொடு வீசலால் ஒலி கிளப்பி வேனிலால் வெதும்பும் காற்று இலவ மரத்தினது செந்நிறப் பூக்களை உதிர்த்து விடுகின்றது. அவ்வாற ஒலிக்கும் காற்றால் உதிர்கின்ற செந்நிறப் பூவின் காட்சி, புலவர் என்றோ கண்ட இடியொடு தோன்றிய நெருப்பின் காட்சியை நினைவூட்டுகின்றது.

**"முன்அரை இலவத்து ஒள்இணர் வான்பூ**
**முழங்கழல் அசைவளி எடுப்ப வானத்து**
**உருமுப்படு கனலின் இருநிலத்து உறைக்கும்"[20]**

### முடிவுரை

இயற்கை மனிதனின் வாழ்வியல் இரண்டறக் கலந்தவை. அவற்றுள் மரங்கள் மிகவும் மனிதனுக்கு அவசியமானவை. மனிதன் உயிர்வாழ உயிர்வளியைத் தருவதில் மரங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. சங்க இலக்கிய பாடல்களில் மரங்களைப் பற்ற பாடாத புலவர்களே இல்லை என்பதும், சங்க காலத்தில் காணப்பட்ட சில மரங்கள் இன்று அருகி வருகின்றன என்பதும் இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது. சங்க இலக்கியத்தில் பற்பல மரங்கள் பற்றியக் குறிப்புகள் காணப்பட்டாலும் சில மரங்கள் பற்றி மட்டும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டது.

### தொகுப்புரை

வேங்கை மரம், சந்தன மரம், கொன்றை மரம், மருத மரம், தாழை மரம், கடப்ப மரம், வாகை மரம், யா மரம், புன்னை மரம், இலவ மரம் போன்ற பல மரங்கள் சங்க இலக்கியத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது. சங்க காலத்தில், இதுமட்டுமல்லாது இன்னும் பற்பல மரங்கள் இருந்ததற்கான குறிப்புகளும் காணப்படுகின்றன.

### குறிப்புகள்


1. ஜே.ஜெயரதி பொன்மலர் (தொ.ஆ.), பன்முக நோக்கில் சங்க இலக்கியங்கள், ப.515, பாவை பப்ளிகேஷன்ஸ், இராயப்பேட்டை, சென்னை, 2012.
2. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.21, பாரி நிலையம், சென்னை, 2018.
3. பி.எல்.சாமி, சங்க நூல்களில் மரங்கள், ப.177, திருக்குறள் பதிப்பகம், எம்.ஜி.ஆர். நகர், சென்னை, 1992.
4. நாராயணசாமி ஐயர்.அ., (உ.ஆ.), நற்றிணை: பா.எ.13, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், திருநெல்வேலி-6, 1967.
5. நற்றிணை, பா.எ.161
6. பி.எல்.சாமி, மு.க.நூ., ப.65
7. சோமசுந்தரனார்.பொ.வே. (உ.ஆ.), ஐங்குறுநூறு பா.எ.22, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்

கழகம், லிமிடெட், திருநெல்வேலி-6, சென்னை-1, 1966.
8. பொருநராற்றுப்படை, பா.எ.201
9. ஐங்குநுறூறு, பா.எ.7
10. பதிற்றுப்பத்து, பா.எ.27:8, சுப்பிரமணியன் ச.வே., தமிழ்ச் செவ்வியல் நூல்கள், மெய்ப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.
11. பி.எல்.சாமி, சங்க நூல்களில் மரங்கள், ப.136
12. பட்டினப்பாலை, பா.எ.118
13. சிறுபாணாற்றுப்படை, பா.எ.141
14. பெரும்பாணாற்றுப்படை, பா.எ.109
15. சோமசுந்தரனார்., பொ.வே. (உ_.ஆ.), குறுந்தொகை, பா.எ.37, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி-6, சென்னை-1, 1965
16. வேங்கடசாமி நாட்டார் ந.மு.(உ_.ஆ.), அகநானூறு, பா.எ.20, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி-6, சென்னை-1, 1965
17. நற்றிணை. பா.எ.354
18. நற்றிணை. பா.எ.74
19. ஐங்குறுநூறு, 338
20. ஐங்குறுநூறு, 320

# வேள்பாரிநாவலில் இயற்கை

**முனைவர் செ. சாந்தி**
*தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி*

***ஆய்வுச் சுருக்கம்***

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்பதே வேள்பாரி நாவலின் அடிநாதமாக இருக்கிறது. இயற்கைக்கும் மனித பேராசைக்கும் இடையில் நடக்கும் போராட்டத்தின் ஆதிவடிவாகவே இந்நாவல் திகழ்கிறது. இயற்கை, காடுகள், உயிரினங்களைப் பற்றிய அறிவை மலைவாழ் இனத்தவரைக் காட்டிலும் வேறு எவரும் இவ்வுலகில் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இயற்கை மற்றும் நிலவியல் சூழலைப் பயன்படுத்தி எதிரிகளை எதிர்கொண்ட பாரியின் வீரத்தையும் அவனின் நுண்ணிய மதிநுட்பத்தையும் பற்றி கூறிச் செல்கின்றது இந்நாவல். தன்னலமற்ற கொடை உள்ளதாலும், அன்பு வழிபட்ட வாழ்வியல் மரபாலும் பாரியின் புகழ் தமிழ் நிலம் எங்கும் பரவியது. தமிழக வேந்தர்களான சேர சோழ பாண்டியர்கள் மூவரும் அவன் புகழ்கண்டும், பறம்பு நாட்டின் இயற்கை வளம் கண்டும் வெதும்பி அவனை வீழ்த்த வேண்டி ஒன்றிணைந்தனர். வேள்பாரி நாவல்வழிப் பறம்புநாட்டின் இயற்கை சூழலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.*

**முன்னுரை**

இயற்கையோடு இயைந்த பெருமையுடையது தமிழ் மரபு. ஐம்பூதங்கள், தாவரங்கள், விலங்குகள், உயிரிகள், உயிரற்ற பொருட்கள் எனயாவற்றையும் தன்னுள் அடக்கி வாழ்வியலை முதன்மைப்படுத்தின தமிழ் இலக்கியங்கள். இலக்கணமும் இலக்கியமும் இயற்கையைப் போற்றின. நிலமும் பொழுதுமாகப் பகுபடும் அதன் வகைமையில் மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிறைந்து விளங்கும் பெருமை உடையது தமிழ் கூறும் நல்லுலகம்.

‘வடவேங்கடம்’ எனத் தொல்காப்பியமும், ‘நெடியோன் குன்றம்’ என இளங்கோவடிகளும், குறிப்பிடும் எல்லையாகவும், ‘பொருப்பிலே பிறந்து’ என்று தமிழ் தோன்றிய இடமாகவும், ‘மலையத்திருந்தவன்’ என அகத்தியருக்குப் பெயர் தந்ததாகவும் காலத்தால் நிலைத்து விளங்குவன மலைகளே!

**“அளக்கலாகஅளவும் பொருளும்**
**துளக்கலாகநிலையும் தோற்றமும்”**[1]

என்று ஆசிரியனுடைய நிலைப்புக்குச் சான்றாக மலையை நன்னூலார் சுட்டுகிறார். நிலையின் திரியாது அடங்கியவன் தோற்றத்தை மலையினும் பெரிதாக்கிக் கூறுகிறது திருக்குறள்.

தமிழ் இலக்கண இலக்கியமரபில், மலையைப் பற்றி மட்டும் ஓங்கல், வரை, அடுக்கல், குன்றம், குன்று என நாற்பத்து இரண்டு வகையான பெயர்கள் சங்க இலக்கியத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறாகத் தமிழர் வாழ்வின் தனித்த பதிவாகத் திகழ்ந்து, இன்றும் நிலைத்து நிற்பது மலையாகும். இன்றைய காலத்தில் வரலாற்றுக் களங்களாகவும், ஆன்மீகத் தலங்களாகவும், சுற்றுலா மையங்களாகவும் விளங்கும் மலைகள் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் நீங்கா இடம்பிடித்த பெருமைக்குரியன. பறம்பு என்றதும் பறம்பிற்கோமான், கடையெழு வள்ளல்களில் ஒருவனாகியப் பாரியும், பாரியைப் புகழ்ந்தேத்திய குறிஞ்சிக்குரிய புலவன் எனப் பெயர் விளங்கிய கபிலரும், கபிலரையும் பாரியையும் இணைத்த இணைப்புப் பாலமாகிய முல்லைக் கொடியும், தேரும் உடன் நினைவுக்கு வருவர். அத்தகைய பறம்பு மலையின் இயற்கை சூழலை ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**விவசாயமும் வேட்டையாடலும்**

பறம்புநாட்டில் மனிதன் உழைத்து விளைவிக்கக் கூடிய எந்த ஒரு பொருளும் இல்லை.

**"நாடென்ப நாடாவளத்தன நாடல்ல**

**நாட வளர்ந்தருநாடு"[2]**

என்ற குறளுக்கு ஏற்பதிணை வகைகள், பழ வகைகள், காய்கறி வகைகள் எல்லாம் இயற்கையில் தாமாகவே விளைகின்றன. உணவு என்பது சேகரிப்பு தானே தவிர, உற்பத்தி அல்ல. பிற நாடுகளைப் போல் மக்கள் உணவு உற்பத்திக்காகப் பெரும் உழைப்பைச் செலுத்த வேண்டிய தேவையில்லை. பிறநாடுகளில் பெரும்பகுதி மக்கள் செய்யும் வேலைக்கு இங்கு சிறுபொழுது மட்டுமே செலவழிக்கப்படுகிறது. ஆனால் ஆண்களின் வாழ்வு முழுவதும் ஆயுதங்களோடு தான் கழிகிறது. வேட்டை தொடங்கி போர்வரை எல்லாவிதமான ஆயுதங்களையும் பயன்படுத்தும் அசாதாரணமான கலையை ஒவ்வொருவரும் கற்றிருக்கின்றனர். இயற்கையை அறிதல், தாவரங்கள், விலங்குகள், பறவைகள், கால நிலைகள் ஆகியவற்றைப் பற்றிப் பறம்பினருக்கு இருக்கும் பேரறிவுக்கு இணையான அறிவு வேறு எவருக்கும் இல்லை.

எல்லோரும் காட்டை அழித்து விளை நிலமாக்கிய போது, காட்டைப்பற்றி அறிந்து, நிலத்தை விளைய வைத்தவர்கள் கூடல்வாசிகள். வண்டல் மண்ணுக்கு, இறுகிய மண்ணுக்கு, இளம் மண்ணுக்கு என உழுபடைகளை வகைப்படுத்தி உருவாக்கினர். தாளி மரமும், வேலா மரமும், வெக்காளி மரமும் கொண்டு கலப்பைகள் செய்து, மண்ணின் தன்மைக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்தினர். காடுகொன்று, நாடு ஆக்கி, குளம் தொட்டு, வளம் பெருக்கிய போது இவர்கள் தள்ளா விளைநில மாக்கினார்கள்.

**சூரிய உதயக் காட்சி**

பாரி அதிகாலைப் பொழுதில்,நண்பர் கபிலரை அழைத்துக் கொண்டுகாணக் கிடைக்காத காட்சியைக் காண உச்சிப்பாறைக்குச் சென்றார்.

'இருள் விலகி வெளிச்சம் மெல்ல மெல்லப்பரவிக் கொண்டிருந்தது. கீச்கீச்செனப் பறவைகளின் குரல் கேட்கத் தொடங்கியது. உச்சிப் பாறையில் இருந்து நாற்புறமும் பார்த்தார் கபிலர். இயற்கையான பாறை அமைப்புகளுக்கு ஏற்ப, மடித்து மடித்துக் கட்டப்பட்ட வீடுகள், இங்கொன்றும் அங்கொன்றுமாக கிளைபரப்பி நிற்கும் பெருமரங்கள், கரும்பறைகளை அரணாகக் கொண்டு கட்டி எழுப்பப்பட்டுள்ள மாளிகை என மாறுபட்ட பல காட்சிகளுடைய நகரின் அழகில் தன்னை மறந்தார்' என மலைப்பாறையில் இயற்கை அழகு மிளிர அமைந்த வீடுகளைக் கூறிச் செல்கின்றார் ஆசிரியர்.

வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடியது. தீபத்தின் உச்சியில் இருந்து அடி பெருத்த அகல் விளக்கைப் பார்ப்பதைப் போன்று இருந்தது அந்தநகரம். கிழக்கு திசையைப் பார்த்து நின்று கொண்டிருந்த பாரி, அவரின் தோள் தொட்டுத் திருப்பினான். கபிலர் கிழக்குப் பக்கமாகத் திரும்பும் போது பாரி சொன்னான், 'இப்போது நீங்கள் காணப் போவது தான் காணக் கிடைக்காத காட்சி'. கபிலர் இன்முகத்தோடு கிழக்குத் திசையைப் பார்த்தார். அவர்கள் செய்த தவத்தால் பொழுது புலர்ந்தது.

கிழக்குத் திசையில் ஆதிமலைக்குநடுவே இருந்த மெல்லிய பிளவின் வழியே சூரியனின் செந்நிறக்கதிர் வெளிவரத் துவங்கியது. பார்க்கும் கணத்தில் ஒளி பெருகிவாள் போல் பாய்ந்து வந்தது. கபிலர் இமைக்கொட்டாமல் பார்க்கின்றார். எவ்வியூரின் கிழக்குப் பகுதி இருளை இரண்டு துண்டாக்கியது. 'காணக் கிடைக்காத காட்சி' என்று கபிலர் வியப்படைகின்றார். சூரிய உதயத்தைக் கண்டு கொண்டிருக்கும் போது அந்தக் சூரிய ஒளிவாள் கபிலரின் மார்பில் இறங்கியது. கபிலரின் நாடி நரம்புகள் எல்லாம் சிலிர்த்தன. மெய்மறந்து இரு கைகளையும் மேலே உயர்த்தினார். எவ்வியூரின் அடிவாரம் வரை

இரு திசைகளும் அவரது கரங்களின் நிழல் படர்ந்து அசைந்தது. கதிரவனைப் பார்த்து அவர் கைகளை உயர்த்தி வணங்கினார்.

இளம்பரிதியை வரவேற்பது போல பெருங்குலவை ஒலி எவ்வியூர் முழுக்கக் கேட்டது. பறைகள் முழங்கின. மக்கள் எல்லோரும் தங்களின் வீடுகளின் மேலேறிக் குலவையிட்டு அவ்வருங்காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

கண நேரத்துக்குள் பிளவின் மேல் விழும்பைச் சூரியன் தொட்டவுடன் அந்த ஒளிவாள் மறைந்தது. எங்கும் புலர்மஞ்சள் நிரம்பியது. கபிலர் உறைந்துபோய் நின்றார். நான்குஆண்டுகளுக்குஒருமுறைஅரைநாழிகை நேரம் மட்டுமேநிகழும் ஒளிவாளின் கோலக் காட்சியைநாளும் நேரமும் தவறாமல்,எப்படி இவர்கள் கணக்கிட்டனர்? அடுத்தடுத்து எழுந்த கேள்விகள் கபிலரைத் திக்கு முக்காடச் செய்தன.

**“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையதரண்”[3]**

தெளிந்தநீர், வெட்டவெளியான நிலம், உயர்ந்தமலை, அடர்ந்தகாடு என்னும் இவையே நீர் அரண், நில அரண், மலை அரண், காட்டு அரண் என இயற்கை அரண்களாகும். இந்நான்கு அரண்களை பாரியின் பறம்புமலை கொண்டிருந்ததால் எதிரிகளால் எளிதில் நுழைய முடியவில்லை.

### நாகப்பச்சை வேலி

காட்டில் வாழும் உயிரினங்கள் அங்கு வளர்ந்துள்ள செடிகொடிகளை உண்டே உயிர் வாழ்கின்றன. அதில் அவைகள் தின்னக்கூடிய தாவரங்களும் உண்டு; தின்னக்கூடாத தாவரங்களும் காணப்படுகின்றன; ஆடுகள் தின்னாததாவரம் ஆடு தின்னாப் பாளை எனப்படுகிறது. நுகரக்கூடியதும், நுகரக் கூடாததுமானப் பச்சிலைகள் காணப்படுகின்றன. பற்றக்கூடியதும், பற்றக்கூடாததுமான செடி, கொடிகள் உண்டு. காட்டு உயிரினங்கள் நுகரவும் நெருங்கவும் பற்றவும் முடியாத தாவரங்களைக் கண்டு, அவற்றினால் பெரும் வேலியைப் பறம்பினர் அமைத்துள்ளனர். தலைமுறைத் தலைமுறையாகச் சேகரித்த தாவர அறிவின் துணைக் கொண்டு நாகப்பச்சைவேலியை அமைக்கின்றனர்.

வெறிமணம் கொண்டசெடி, கொடி, மரங்களால் சூழ்ந்து கிடக்கின்றன இந்த வேலியின் வெளிப்புறம். நடுப்பகுதியோ, புற வைரமும் அக வைரமும் பாய்ந்தோடும் மரங்கள் ஒன்றை ஒன்று பின்னிக் கிடப்பதைப் போல நன்கு திட்டமிட்டு வளர்க்கப்பட்டுள்ளன. வெளிநஞ்சு மற்றும் உள்நஞ்சுத் தாவரங்களால் தழைத்துக் கிடக்கின்றன. இதன் முதல் பகுதி. இந்த மூன்று பகுதிகளின் இடைவெளிகளிலும் நஞ்சேறிய அலறி வேர் கொண்டுச் சுருக்குவலை பின்னப்பட்டுள்ளது.

நச்சுப்பிசின் வழியும் மருவு, தொடரிப் பட்டைகள் இடைவிடாதிருக்கும். ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து பின்னிப் பிணைந்து உருவாக்கப்படும் பிணையல் மாலையைப் போலத் தாவரப் பச்சிலைகளோடு பிணைந்து கட்டிக் கிடக்கிறது. அதன் கணுக்கள் தோறும் வேர்களை உண்டாக்கி, அந்தப் பச்சிலைச் செடிகள் தழைத்தபடி இருக்கின்றன.

இந்த வேலிக்குள் உருவாக்கப்பட்டுள்ள அனைத்துத் தாவரங்களின் மீதும் குறுக்கும் நெடுக்குமாகப் படர்ந்து கிடக்கும் எண்ணிலடங்காத படர்க்கொடிகளும் சுற்றுக் கொடிகளும் தான் இந்த நாகப்பச்சை வேலியின் உயிர் நாடி. வலப்புறம் சுற்றும் கொடியும் இடப்புறம் சுற்றும் கொடியும் ஒன்றுமாற்றி ஒன்றாகப் படர்ந்து கொண்டே இருக்கின்றன. சுருண்டு எழும் அவற்றின் ஊசிநாவுகள் எதிரெதிர் திசையில் ஒருசேரப் பின்னிய படியே மேலே எழுகின்றன. உதிர்ந்து கொண்டிருக்கும் இலையைக் கூட இந்தவேலி அந்தரத்தில் நிறுத்தி விடுகிறது.

விலங்கின் நாசியை வெகு தொலைவிலேயே இந்த வெறி மணம் தாக்கி விடுகிறது. அதையும் கடந்துஉள்நுழையும் உயிரினம் விசமுள்ளாலோ, நச்சுக் கணுக்களாலோ, நாவில்படுகிற பச்சிலையாலோ, சற்றேமயங்கி

அமரும். அந்தகணத்தில் அதன் மயிர்க் கால்கள் ஒவ்வொன்றையும் பற்றி உள்ளிழுக்கின்றன சுருட்கொடிகள். அந்த உயிரினத்தின் இயக்கத்தை மிக விரைவாகத் தனது கட்டுக்குள் கொண்டு வந்து விடுகிறது இந்தநாகப் பச்சைவேலி. அதன் பிறகு அந்த விலங்கு அமர்ந்த இடத்தில் உள்ள தாவரமும் கரையான்களும் எறும்புகளும் சிலந்திகளும் சற்றே கூடுதல் செழிப்புக் கொள்கின்றன.

தாமரை இதழை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி, அதன் மேல் ஊன்றப்படும் வேலம் முள், முதல் இதழுக்குள் இறங்கும் நேரம்தான் கணப்பொழுது. மூன்றாம் இதழைக் கடக்கும் நேரம்தான் இமைப்பொழுது, ஆறாம் இதழுக்குள் நுழையும் நேரம் தான் விநாடிப் பொழுது. எந்த ஒரு விலங்கின் இயக்கத்தையும் வேலம் முள் ஆறாம் இதழைக் கடக்கும் பொழுதுக்குள் நிறுத்திவிடும் ஆற்றல் இந்த நாகப்பச்சை வேலிக்கு உண்டு என்று பறம்பின் முன்னோர் கூறுவர்.

காட்டு விலங்குகளால் உடைத்து நொறுக்கவும், தாவிக் கடக்கவும் முடியாத கோட்டை மதிலை மனிதனால் கட்டுவது அரிது. கார்காலத்தில் மூன்று ‘குளகு’ தின்ற ஒரு பெண் யானை, எவ்வளவு பெரிய கற்கோட்டையையும் தகர்க்கும். அதிங்கத்தைத் தின்ற ஆண் யானைக் கூட்டம் உள் நுழைந்தால், பெரும்மலையும் கிடுகிடுக்கும். மரமேறி உயிரினங்களால் தாவிக் கடக்க முடியாத தடுப்புச் சுவரைஎழுப்ப இயலாது. பறம்பு மலைத்தொடர் வடதிசையிலும் தென் திசையிலும் எவ்வளவு தொலைவு நீண்டு கிடக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. இடையில் ஒரு பகுதியில் பறம்புநாடு இருக்கிறது. எண்ணிக்கையில் அடங்காத விலங்குக் கூட்டங்கள் நாள்தோறும் இடமும் வலமும் பறம்பினரைக் கடக்கின்றன. இவற்றிடம் இருந்து பாதுகாக்க எத்தனையோ முறைகளைக் கையாண்ட பறம்பின் முன்னோர்கள், இறுதியாக இந்த நாகப்பச்சை வேலியைப் பெருங்கோட்டையாக எழுப்பினர். இங்குள்ள தாவரங்கள் எல்லாம், தாமாக முளைத்தவை அல்ல’ உலகெங்கிலும் இருந்தும் கொண்டுவந்து, இங்கு முளைக்க வைத்தவை. இவ்வாறு காற்றுக் கூட உள்நுழைய முடியாத இந்தக் கானகத்தில் ஓரிருவீரர்கள் காவல் காக்க மக்கள் நாள்தோறும் பயமின்றித் தூங்கி, உயிரோடு எழும்புவதற்கு உறுதுணையாக இருக்கின்றது நாகப்பச்சைவேலி.

### கார்த்திகை பெயர்க்காரணம்

அழகிய வடிவு கொண்டு வளைந்திருக்கும் ஆறு விண்மீன் கூட்டமே கார்த்திகை விண்மீன் கூட்டம். இந்த ஆறு விண்மீன் கூட்டத்தோடு நிலவு இணைந்திருந்த காலத்தில் தான் கார்மேகங்கள் வானமெங்கும் நிறைந்திருக்கும். பெருமழை விடாதுகொட்டித் தீர்த்து விடுகிறது. ‘கார்த்திகைப் பின்னால் மழையும் இல்லை. கர்ணனுக்குப் பின்னால் கொடையும் இல்லை’ என்ற செய்தியை நாட்டுப்புற மக்கள் பழமொழியாக வழங்குகின்றனர். அதேபோல இந்த ஆறு விண்மீன் கூட்டத்தோடு கதிரவன் இணைந்திருக்கும் இக்காலத்தில் சுடுவெயில் தீயனவிடாது பொழியும். நீரும் ஒளியும் தான் மலரென வடிவம் கொள்கின்றன. அதனால் தான் பிறகாலங்களை விட இவ்விரு காலங்களிலும் மலர்கள் அதிகமாக மலர்கின்றன. இம்மலர்தலுக்குக் காரணம் வளைவு கொண்ட அந்த ஆறு விண்மீன்கள் தான்.

கார்மேகம் மழையைக் கொட்டித் தீர்ப்பதற்கும், தீயாய் வெயில் சுட்டெரிப்பதற்கும் இவ்விண்மீன் கூட்டமே காரணம். எனவே அதனைக் கார்த்தீ எனப் பெயரிட்டான் வேடர் குலத் தலைவனான முருகன். இந்த ஆறு விண்மீன்களின் அடிப்படையில்தான் காலமும் ஆறுகூறுகளாகப் பகுக்கப்பட்டன. கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் என ஆறு பெரும் பொழுதுகளும், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என ஆறு சிறுபொழுதுகளும் இதன் அடிப்படையிலேயே பகுக்கப்பட்டன. இவ்வாறு

பறம்பு குலத்தினருக்கு வானியல் அறிவும் வசப்பட்டது. பறம்புமீது படையெடுக்கும் பகைவர்கள் அங்குநிலவும் பருவகால நிலையை அறிந்திருந்து படையெடுக்க வேண்டும். இல்லையெனில் தோல்வியைத் தழுவுவது உறுதி என்பதனை இந்நாவல் வழி அறிய முடிகிறது.

**மரவயது அறிதல்**

உதிரும் இலையின் நுனிப்பகுதிகீழ் நோக்கி வருகிறதா, அடிப்பகுதி கீழ்நோக்கி வருகிறதா அல்லது சமஎடையுடன் காற்றை வெட்டிவெட்டி மிதந்து வருகிறதா என்பதை இலையின் கீழ்ப்புறமுள்ள நரம்பின் தன்மையே தீர்மானிக்கிறது. அதன் வயதைக் கணிப்பது எளிதன்று தாவரங்கள் அற்புதமானவை; அவை உயிரோடு இருக்கும் வரை பசுமையான இலைகளைத் தோற்றுவித்து வளர்கின்றன; பூக்கின்றன; காய்கின்றன; அவைகளுக்கு முதுமை என்பது கிடையாது.

மரங்களுக்கு வயது ஆக ஆக நரம்பின் பிடிமானமும், கன அளவும் மாறுகிறது. அது மாறமாற உதிரும் இலையின் தன்மையும் மாறுகிறது. எனவே உதிரும் இலை எந்த நிலையில் உதிர்கிறது என்பதை வைத்து மரத்தின் வயதையும் ஆற்றலையும் சொல்லிவிடுவர் மலை மக்கள். இவ்வாறு இயற்கை சூழலோடு இணைந்த வாழ்வியலைக் கொண்டிருந்தனர் பறம்பினர்.

**கள் உண்ணும் மரபு**

காட்டில் விழா என்றால், அதன் முதல் வெளிப்பாடு வேட்டை தான். பெரும் உற்சாகத்தோடு பல குழுக்கள் வேட்டைக்குப் புறப்பட்டுப் போகின்றன. சொல்லி வைத்த பொழுதுக்குள் ஊர் வந்து சேரவேண்டும். வேட்டையில் சிக்கும் சிறந்த விலங்கு எதுவோ, அது தான் அன்றைய விருந்தைத் தீர்மானிக்கிறது.

ஒவ்வொரு விலங்கின் சுவைக்கும் ஏற்ற மதுவகை உண்டு. மதுவின் தன்மைக்கு ஏற்றப்படியே இசை முழங்குகிறது. இசைக்கு ஏற்பவே ஆட்டம். அன்றைய ஆட்டத்தின் ஆரம்பம் வேட்டையாடப்படுகிற விலங்கில் இருந்தே தொடங்குகிறது. அது மானாட்டமா, மயில் ஆட்டமா, மிளாகூத்தா, காட்டெருமையின் கொம்பாட்டமா என்பது மதுவோடும், உணவோடும், இசையோடும், ஆட்டத்தோடும் கலந்தது.

மான் கறிக்கு ஈச்சங் கள் எடுபடாது. பறவைக் கறிக்குத் தென்னங் கள் பொருந்தாது. ஈனா கெடாரிக்கு மூன்றாம் நாள் பனங்கள் தான் சிறந்தது. அத்தி மதுவுக்கும் அறுபதாங் கோழியின் கறிக்கும் ஈடு இவ்வுலகில் கிடையாது.

பொதினித் தலைவனுக்குக் கொடுப்பதற்காகப் பறம்பின் ஆதிக்கள்ளான ஆலாப் பனைக் கள்ளினை மூங்கில் குடவை நிறைய எடுத்து வந்திருந்தனர் பறம்பினர். பொதினித் தலைவனான மேழகனோ அவர்களது பூர்வக் கள்ளான ஐஞ்சுவைக் கள்ளினைக் கொடுத்தான் என்ற செய்தியும் நாவலில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கள்ளுண்டுகளிக்கும் மரபு சங்க காலம் முதற்கொண்டே காணப்படுகிறது. இது குற்றமாகக் கடியப்படவில்லை. உலகப் பொதுமறை தந்த வள்ளுவர் மது அருந்துவதை நஞ்சுண்ணுதலுக்கு இணையாக வைத்துக் கடிகின்றார்.

> **“துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**
> **நஞ்சுண்பார் கள்ளுண் பவர்”[4]**

என அறிவற்றவர்களே கள்ளுண்பார்கள் என்கிறார் வள்ளுவர்.

**தேன் சாப்பிடும் முறை**

தேன் மருத்துவக் குணம் நிறைந்தது. இதனை வயிற்றின் நண்பன் என்று கூறுவார்கள். தேனீதனது கூட்டுக்குள் முதலில் தேனைக் கட்டியாகத்தான் வைத்திருக்கிறது. பின்னர் தான் தேனாக்குகிறது. மலைமக்கள் தேன் கட்டியைத்தான் எடுகின்றனர். தேனைப் பிழிந்து எடுக்கும் பழக்கம் அவர்களுக்கு இல்லை. அதுவும் எந்தவகைப் பூவிலிருந்துதேன் எடுத்து இந்தக் கட்டியை தேனீ உருவாக்கி இருக்கிறது என்பதைப் பொறுத்து தான் அந்தக் கட்டியை எடுக்கலாமா வேண்டாமா என்பதனை முடிவு செய்கின்றனர்.

அந்தப் பகுதியில் அந்தப் பருவத்தில் எந்தப் பூ அதிகம் பூத்திருக்கிறதோ அந்தப் பூவின் சுவைதான் தேன் கட்டியிலும் இருக்கும். நாவற்பழப் பூந்தேன் துவர்க்கும்; வேப்பம் பழப்பூந்தேன் கசக்கும்; கள்ளிப்பூந்தேன் இனிக்கும்; கோட்டைப் பழப் பூந்தேனையும் அத்திப் பூந்தேனையும் சுவை பிரித்தறிவது மிகக் கடினம். இதில் மிகச்சிறந்த சுவை கொண்டது, எவ்வளவு சாப்பிட்டாலும் இன்னும் இன்னும் என்றுகேட்டுக் கொண்டே இருக்கச் சொல்லுவது பொங்கப்பழப் பூந்தேன். அந்தத் தேன் கட்டியை எடுத்து வந்து அடுக்கு வாழை இலையில் வைத்துக் கொடுத்தால், கட்டிச்சோறு கணக்கின்றி உள்ளிறங்குகிறது. இவ்வாறு தேனின் சுவையையும், அதனைச் சாப்பிடும் முறையையும் பறம்பினர் நன்கு அறிந்திருந்தனர்.

‘ஆற்றோடு தண்ணி அலைமோதிப் போனாலும் நாய் நக்கித்தான் குடிக்க வேண்டும்’ என்பர். அதுபோல் தேனிற்குஅடர் தன்மை அதிகம். அதனையும் நக்கி தான் சாப்பிட வேண்டும். அப்படியே குடித்தால் உயிருக்கு ஆபத்தை விளைவித்துவிடும்.

**இயற்கை சூழலும், அன்பும்**

**“தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு”[5]**

என்று குறள் கூறும் நிலவளத்தைப் பறம்புநாடு கொண்டிருந்தது. பறம்பு மலையில் நிலவுவது அமைதியான சூழல்.

**“நீரின்றி அமையாது உலகுயார்யார்க்கும்**
**வானின்றி அமையாது ஒழுக்கு”[6]**

என்பதற்கு ஏற்ப நாட்டின் நீர் வளத்திற்கு, மலையில் மழைபொழிகின்றது. ஓங்கி உயர்ந்த மலை உச்சியில் இருந்து அருவி மிக வேகமாக ஓசையுடன் ஓடிவருகிறது.

**“அருவிகள் வைரத் தொங்கல்!**
**அடர்கொடிபச்சைப் பட்டே!**
**குருவிகள் தங்கக் கட்டி!**
**குளிர்மலர் மணியின் குப்பை!”[7]**

என்ற வரிகளுக்கு ஏற்ப அருவிகளும், அடர் கொடிகளும், செடிகளும், மலர்களும் நிறைந்து பறம்புமலை வளம் மிக்கதாகக் காட்சி தருகிறது.

காட்டின் அழகை ரசிக்கச் சென்ற பாரியும் ஆதினியும் தேரினை ஓரிடம் நிறுத்தி வைத்து விட்டுச் சென்றனர். காட்டுப் பயணம் முடிந்து திரும்ப வந்து பார்க்கும் போது, தேர்ச்சக்கரத்தின் ஆரக்காலில் முல்லைக்கொடி ஒன்று முழுச்சுற்று சுற்றித் தலையை வெளிப்புறமாக நீட்டியபடி இருந்தது. இன்னொரு கொடிபக்கத்திலிருந்த ஆரக்காலில் பாதிசுற்றி, தலைநீட்டி இருந்தது ‘தேரை எடுத்தால் இரு கொடிகளும் அறுந்துவிட வாய்ப்புள்ளது. இந்த முல்லைக் கொடியைப் பக்குவமாகப் பின்னோக்கி சுழற்றி வெளியில் எடுத்துவிடலாமா?’ எனக் கேட்டாள் ஆதினி. காற்றுபெரும் வேகத்தோடு வீசியது. நின்றதேர், சற்றே அசைந்து கொடுத்தது. சட்டெனச் சக்கரத்தை இறுகப் பிடிக்க முயன்றாள் ஆதினி. ஆனால் பாரியின் கை அதைப் பிடித்துக் கொண்டிருந்தது. ‘தேர் முல்லைக்கானது’ என்று கூறினான் பாரி. இவ்வாறு கூறிவிட்டு குதிரைகளைகையில் பிடித்துக் கொண்டு நடந்து சென்றனர் பாரியும் ஆதினியும். மரம், செடி, கொடிகள் நிறைந்த மலைப்பகுதியை வாழ்விடமாகக் கொண்டவர்கள் பாரி - ஆதினி. பசுமையைக் கண்டால் அவர்கள் மனம் ஆனந்தத்தில் பரவசமாகி விடுகின்றது. அதனால் முல்லைக் கொடிக்கு வாழ்வளிக்கிறான். வேள்பாரியால் காப்பாற்றப்பட்டது செடியல்ல. பசுமை காப்பாற்றப்பட்டது. பயிர், செடி கொடிகள் வாழ்விற்கு அவசியமானதாகிறது. பசுமை அடுத்தடுத்த தலைமுறைக்குக் கடத்தப்பட வேண்டும் என்பதனைக் காட்டவே தேரை அளிக்கிறான் வேள்பாரி. ஆளுடைய நம்பி என்று புகழப்பெற்ற சுந்தரர் திருத்தொண்டத் தொகை என்ற புகழ்பெற்ற பதிகத்தைப் பாடியவர். அவர் பாரியையே கொடைக்கு எல்லையாகச் சுட்டுகின்றார். ‘கொடுக்கிலாதனைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை’ எனப்படுகின்றார். இவ்வாறு இயற்கையை

மதிக்கும் பண்பு கொண்டவர்களாக பறம்பினர் காணப்பட்டனர். இயற்கை சூழலோடு தம் வாழ்வை பிணைத்துக் கொண்டவர்களாக மலை மக்கள் விளங்கினர் என்பதை இந்நாவல் எடுத்துக் கூறுகிறது.

## முடிவுரை

அன்பினாலும் அறத்தினாலும் பறம்புநாட்டை ஆளும் பாரியின் மலைவளத்தை அடைய விரும்பி, மூவேந்தர்களும் பறம்பு நோக்கிப் படையெடுத்து தோற்றோடினர். பறம்பின் நிலவியல் சூழலும் இயற்கை அரணுமே மூவேந்தர்கள் தோற்றோட காரணமாக அமைந்திருந்தது.

பறம்பு மக்களின் இயற்கை அறிவு மூவேந்தர்களை வியப்பில் ஆழ்த்தியது. பறம்பினர் ஒவ்வொருவருக்கும் தனித்த சொத்தும் எப்பாடுபட்டாலும் அதை சேமித்துப் பெருக்க வேண்டும் என்ற பெரும் தாகமும் இல்லை. இயற்கை பிற உயிரினங்களுக்கு வடிவமைத்த குண எல்லைகளை பறம்பினர் கடந்து போகவில்லை. மழை வந்ததும் செழிப்புறத் தழைத்து, வெயில் காலத்தில் வாடித் துவண்டு, மலரும் போது நறுமணம் வீசி, கனியும்போது அள்ளி வழங்கி, உதிரும் போது ஓசை இன்றி மண்ணில் மக்கி, தம்மை உரமாக்கிய படி பயணத்தை முடித்துக் கொள்ளும் இந்த பறம்பினரின் இயற்கை வாழ்வியல் கபிலரை மண்டியிட்டு வணங்க வைத்தது. வாழ்க்கையின் இன்ப துன்பங்களைக் கடந்து அதனை அழகோடும் அறத்தோடும் நேசிக்கும் அன்பு உள்ளங்களாய் வாழ்ந்த பறம்பினரின் இயற்கையோடு இனணந்த வாழ்வு தமிழர்களின் தனித்த அடையாளமாக விளங்குகிறது.

## தொகுப்புரை

காணக் கிடைக்காதஅரியக் காட்சியான பறம்பின் சூரிய உதயக் காட்சி மற்றும் காட்டு உயிரினங்களைப் பறம்பினுள் அண்டவிடாது காக்கும் நாகப்பச்சைவேலி ஆகியவற்றைப் பற்றி அறியலாகிறது.

கார்த்திகை நட்சத்திரத்திற்கு முருகன் பெயரிட்டமை மற்றும் மரத்தின் வயதையும், ஆற்றலையும் கணிக்கும் பறம்பினரின் இயற்கை அறிவு ஆகியவற்றை அறியலாகிறது.

கள் உண்ணும் மரபு மற்றும் தேன் சாப்பிடும்முறை போன்றவற்றையும் அறியலாகிறது. முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியின் இயற்கை அன்பினையும், பறம்பினர்கள் இயற்கையை மதிக்கும் பண்பு கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதையும் அறியலாகிறது

## அடிக்குறிப்புகள்

1. பவணந்திமுனிவர்., நன்னூல் கழக வெளியீடு, சென்னை, பதிப்பாண்டு–1962
2. நாராயணவேலுப்பிள்ளை.எம்.இ, திருக்குறள், நர்மதா பதிப்பகம், சென்னை, பதிப்பாண்டு - 2005
3. மேலது
4. மேலது
5. மேலது
6. மேலது
7. பாரதிதாசன்., அழகின் சிரிப்பு, பாவை பிரிண்டர்ஸ், சென்னை, முதற்பதிப்பு-1999

## துணைநூல்

1. வெங்கடேசன். சு., வீரயுகநாயகன் வேள்பாரி, விகடன் பிரசுரம், சென்னை, முதற்பதிப்பு 2018.

Bodhi International Journal is assigned by ISSN National Centre, India National Science Library, New Delhi

Journal Indexed and Impact Factor by International Institute of Organized Research (I2OR)

## Information of Bodhi Journal

### Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, entrepreneurship, bioscience, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

### Hosted by

**TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE**

**T.Kallikulam**

(Accredited by NAAC with 'A' Grade)

(Affiliated to Manomaniam Sundaranar University)

(Co-Educational Institution)



Impact Factor 4.650

Articles should be mailed to bodhijournal@gmail.com

**BODHI**

**International Journal of Research in Humanities, Arts and Science**

www.bodhijournals.com

Powered & Published by

**Center for Resource, Research and Publication Services (CRRPS) India.**

www.crrps.in